
4-4

ஜோதி உபதேச மாலை

ஜோதி உபதேச மாலை -

ஔவைக்குறள் (உரையுடன்)



4-4

உ

ஜோதி உபதேச மாலை

ஔவைக்குறள் - உரையுடன்

பாடல் தொகுப்பு – விளக்கவுரை

வள்ளிமலை

ஜோதி நித்தியானந்த சுவாமிகள்

ஜோதி குருஞான சபை

வள்ளிமலை - 632 520

வ. ஆர்க்காடு மாவட்டம்

உ

அருட்பெருஞ்சோதி

திருவருட் பிரகாச வள்ளலார்

அருளிய

விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின், ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம், முதலிய உலகசாரசங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல்வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள், எக்காலத்தும் எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை
அருட்பெருஞ் சோதி ஆண்டவரே!
தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு
வந்தனம்! வந்தனம்!!

முன்னுரை

அகிலாண்ட கோடி பிரம்மாண்டங்களுக்கெல்லாம் ஒளி வடிவாகநின்று - ஜோதிரூபமாக நிலைத்து, கருணை புரியும் ஆண்டவரின் திருவடிகட்கு என் வணக்கங்கள்.

சென்னையில் உறையும் ஸ்ரீ ஜோதி நித்தியானந்தா சுவாமிகளின் 'ஜோதி உபதேச மாலை' என்னும் இந்நூல், இவ்வுலகில் வாழ்ந்து உய்வு பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்ட பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு - மனித இனத் திற்குப் பெரிதும் நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில் மணிவாசகரின் திருவாசகமும், அதற்கான புத்துரையாகிய ஞானவுரையும், இன்றியமையாத திருமந் திரப் பாக்களும், செவ்வை வழிகாட்டும் ஔவையின் மொழி யாம் 'ஔவைக்குறளு'ம், மிடுக்கு நடை கொண்ட 'அடுக்கு நிலை போதம்' என்னும் அகத்தியர் வாய்மொழி யும் இடம் பெறுகின்றன.

ஞான வழிகாட்டும் 'பொதுத் திரட்டு' என்னும் உரை நடைப்பகுதியும், 'உபநிடதமும் ஒளி வழிபாடும்' என்ற உயர்ந்த நெறி செலுத்தும் பகுதியும் இதில் இடம் பெறுகின் றன. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நோக்கில் ஸ்ரீ ஜோதி நித்தியானந்தா சுவாமிகள் அனுபவத் தில் பெற்ற அருள் நிலையை அனைவரும் பெற வேண்டும் என்ற நோக்குடன் தொகுத்தளித்துள்ளார்கள். அவர்கட்கு இவ்வுலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

திருச்சி
21-4-90 } புலவர். எஸ். சந்தர் எம். ஏ.,



தவத்திரு

ஞானசித்தர் ஜோதி இராமசாமி தேசிகர்

தோற்றம்: 10—12—1918 சித்தி: 7—5—1988

திருவே தெள்ளமுதே—அருட்—சித்தசிகாமணியே
கருவே ரற்றிடவே—களை—கின்றவென் கண்ணுதலே
மருவே மாமலரே—மலர்—வாழ்கின்ற வானவனும்
உருவே யென்குருவே—யெனக்—குண்மை யுரைத்தருளே.

அணிந்துரை

ஹரிஓம் நன்றாக குருவாழ்க.

குருவே துணை

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

இப் பூவுலகின் கண் பல ஞானிகள் அவதரித்து தாம் நடமாடும் திருமேனி தாங்கி இவ்வையகத்தில் பாமர மக்களுக்கு நல்லறிவுரை களையும், ஞான மார்க்கங்களையும் போதித்து வந்தார்கள். அவ்வழித் தோன்றல்களுள் கடைசி காலத்தில் அவதரித்தவர் திருக்குறளை இயற் றிய திருவள்ளுவர் ஆவார். அவர்கள் மரபில் பாலையானந்தரும் அவர் வழி ஞானத் தோன்றல்களுள் திருச்சி தில்லையம்பதியில் அவதரித்த ஞான சித்தர் ஜோதி இராமசாமி தேசிகர் ஆவார்.

அவர்கள் ஜீவித கைவல்யத்திற்குப் பிறகு சென்னை, அயன் புரம் திருமிகு. ஜானகிராமன் என்னும் நித்தியானந்த ஜோதியும் ஆவர். இந்நூலாசிரியரான திருமிகு. ஜோதி நித்தியானந்த சுவாமி கள், தாம் கூறும் கருத்துக்களும், அனுபவமும் காணுங்கால் தான் பெற்ற ஞான முதிர்ச்சியின் திறமையே புலப்படுகின்றது.

சற்குருவால் பெறப்பட்ட மகாவாக்கியமாகிய ஒரு சொல்லினால் நான்கு வேதங்களும், நான்கு உபவேதங்களும், ஆறங்கங்களும், முப்பத்திரண்டு உபநிடதங்களும், 28 ஆகமங்களும், 9 உப ஆகமங் களும், சப்த கோடி மகா மந்திரங்களும், ஆறு சாஸ்திரங்களும், பதி னெண் புராணங்களும், பதினெட்டு உப புராணங்களும் இரண்டு இதி காசமான பாரத இராமாயணங்களும் சொல்லுகின்ற கருத்துக்களெல் லாம் ஒழிந்துபோம் என்பதாம். அதன் உட்பொருள் இறைவன் ஒருவனே, அவன் அருட்பெருஞ்சோதி ஆண்டவனே. இவ்வுண்மையை நாம் பல பிறவி எடுத்தும் பெறாமல் இருக்கிறோம். கடைசி பிறவியும், பெரிய அரிய பிறவியுமாகிய இம்மனிதப் பிறவியிலேயே வீடு பேறு பெற வேண்டுமென்பதாம்.

உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியர் அர்ச்சிக்கு மாறு.

என்னும் ஔவையாரின் பொன்மொழிக்கிணங்க, தன்மனதைப் பீடமாக வும், அறிவைச் சிவலிங்கமாகவும், அறிவுடையோர்கள் வணங்கினார் கள் என்பதுஉண்மை. இதுபோலஇறவாப் பெருநெறி அடைந்தமகான்

கள் அநேக சான்றுகள் நமக்கு நூல்கள் வாயிலாகப் பத்திரப்படுத்தி திருமந்திரம், திருவாசகம், திருக்குறள் எனப் பத்திரமாகத் தந்துள்ளார்கள். அப்பத்திரங்களுள் பல சான்றுகளையும், தான் அனுபவித்த உண்மைகளையும், திரு. நித்தியானந்த ஜோதி சுவாமிகள் இந்நூலின்கண் தக்க விளக்கங் கொடுத்து விளக்குகிறார் என்றால் என்னே அவர் ஞான முதிர்ச்சியும், அனுபவமும்! இந்நூல் எளிய நிலையில் ஞானத்தைக் கூறும் பளிங்குக்கண்ணாடியாகும்!

நிதியே யென்னுள்ள நிறைவே பொதுவில் நிறைந்த சிவ
பதியே அருட்பெருஞ் சோதியனே அம்பலம் விளங்குங்
கதியே யென்கண்ணும் கருத்துங் களிக்கக் கலந்து கொண்ட
மதியே அமுத மழையே நின் பேரருள் வாழியவே!

[திருவருட்பா]

சந்திபுரம்
சென்னை - 600 062

ஞான சித்தர் ஸ்ரீ விஸ்வ ஜோதி
ஸ்ரீ குரு மகா சன்னிதானம்

ஜோதி குருஞான சபையாரின் வணக்கவுரை

இந்நூல் ஆசிரியர் தவத்திரு ஜோதி நித்தியானந்த சுவாமிகள், சென்னை அயன்புரத்தில் 10-6-1931ல் பிறந்து வளர்ந்து சுமார் பத்து வயதிலிருந்தே ஞான வேட்கை ஏற்பட்டு முருகன் மீது அன்பு கொண்டு திருப்புகழ் தனக்குள் பாடி அகமகிழ்கிறவர்.

அவர் சென்னை திருவள்ளுவர் பஸ் போக்குவரத்துக் கழகத்தில் போக்குவரத்துக் கண்காணிப்பாளராகச் சென்னையில் பணிபுரிந்து கொண்டு மனைவி மக்களுடன் இல்லறம் நடத்தி வந்தார். ஞான வேட்கை மிகுதியால் அப்போதே திருமந்திரம், திருவாசகம், பட்டி னத்தார் போன்ற ஞான நூல்களைப் படித்து ஞானமடைய முனைந் தார்கள். ஆனால் அந்நூல்களில் அவர்கண்ட உண்மை என்னவெனில், எவ்வளவுதான் நூல்கள் படித்தாலும் ஞான குரு மூலம் ''தொட்டுக் காட்டாதவித்தை சுட்டுப்போட்டாலும்வராது'' என்பதனை உணர்ந்த தேயாகும்.

அதன்படி உண்மை ஆத்ம ஞானமடைய சற்குருவைத் தேடி இராம கிருஷ்ண மடம், திருவண்ணாமலை, ஹரித்துவார், ரிஷிகேஷ் போன்ற இடங்களுக்குச் சென்று ஏமாற்றம் அடைந்தார்.

ஞான வேட்கையைத் தணிக்கும் ஞான அமுதம்எங்கே, எப்போது, எப்படிப் பெறுவது என்று சதா சித்தத்தைச் சிவன்மேல் வைத்துக் கொண்டிருந்தார். மேலும் அவருக்கு வாழ்நாளில் ஏற்பட்ட இன்ப துன் பங்களையும், அனுபவங்களையும் சிந்தனை செய்ததில், எல்லாம் இறைவனின் செயல்படிதான் நடக்கிறது என்ற உண்மையினை இறை வனால் நன்கு உணர்த்தப் பெற்றார். அதனால் 'நான்' என்னும் அகங்காரப் பேயை விரட்ட ஞான மார்க்கமே உகந்தது என்பதை உறுதி செய்து கொண்டார்.

> இன்னவினை இன்னதலத்து இன்னபொழுது இன்னபடி
> இன்னதனால் எய்தும்என அறிந்தே - அன்னவினை
> அன்னதலத்து அன்னபொழுது அன்னபடி அன்னதனால்
> பின்னமறக் கூட்டும் பிரான்.
>
> (சிவபோக சாரம்)

என்ற இப்பாடலைச் சிந்தித்துச் சிந்தித்து மன அமைதி பெறுவார். மேலும் இறைவனே வந்து குருவாகத் தனக்கு உபதேசிப்பார் என்று நூல்களில் எழுதியுள்ளதை மனப்பூர்வமாக நம்பி இருந்தார். தன்னை

முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். எல்லாச் செயல்களிலும் அவன் அருளையே கண்டார். நாம் யார்? நம்மை இயக்குபவன் யார்? அவன் எங்கிருந்து நம்மையும் உலக உயிர்களையும், இவ்வுலகத்தையும் இயக்குகின்றான்? என்பதனைச் சிந்திக்கத் தொடங்கினார்.

மெய்ஞ்ஞானிகள் எழுதி வைத்துள்ள நூல்களின் மறை பொருள் என்ன? என்ற வினாக்களை எழுப்பிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அத்தருணம், திருக்கைலாய பரம்பரையில் திருவள்ளுவனார் மரபில் உதித்த ஸ்ரீ பாலையானந்த சுவாமிகள் மெய் கோசத்திலுதித்த திரிசிரபுரம் ஸ்ரீ ஜெயவீர ஆதி நாயக சுவாமிகளின் தவச்செல்வர் திருச்சி ஞான சித்தர் ஸ்ரீ ஜோதி இராமசாமி தேசிகர் ஐயா அவர்களைச் சற்குருவாகப் பெற்றது அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் தனிப்பெருங் கருணை யாகும்.

அமைதியைத் தேடும் அந்த ஆன்மாவிற்குத் திருவருள் சம்மதத்தால் ஐயா அவர்களைச் சற்குருவாகக் கூட்டி வைத்ததைப் பேரின்பமாகப் பெற்றார். அவர் சற்குருவின் திருவடி பணிந்து பிரம்மோபதேசம் பெற்ற அந்நாள் முதல் உருவமும் நிழலும் போல் அவர் குருநாதரின் அகத்தேயும், புறத்தேயும் இடம் பிடித்துக் கொண்டார். தீவிர சாதனை செய்து வந்தார். சாதனையின் காலத்தில் அவருக்கு ஏற்படும் அனுபவங்களை அவ்வப்போது கேட்டு விளக்கி கொள்வார்கள். அப்போதே ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற முதுமொழிக் கிணங்க, அநேகம் அன்பர்களுக்கு ஞானோபதேசம் பெற்றுத் தந்துள்ளார்கள்.

ஜோதி நித்தியானந்த சுவாமிகளுக்குத் தியானம் சித்தித்தது. சித்தர்கள் பரிபாஷைகளால் மறைக்கப்பட்ட தெய்வீக ஞான இரகசியங்கள் குருமுகமாகப் பெற்ற ஞானத்தால் வெட்ட வெளியாக விளங்கியது. குருபிரானோடு அடிக்கடி தொடர்பு கொண்டார். இவரது அதி தீவிர பக்குவத்தையும், வைராக்கிய சித்தியையும் கண்டு குருபிரானே வியந்து பாராட்டியுள்ளார்.

திரு ஞான சித்தர் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஜீவ சமாதி கொள்ள எண்ணங்கொண்டு தனதுமனைவியாரிடம் திருச்சி T.D. ஜோதி கோவிந்தராஜ், திரு ஜோதி சிவ. செல்வராஜ் (நாகர் கோயில்) அவர்களின் முன்னிலையில் தமது பிரதம சீடராகிய ஜானகிராமன் என வழங்கும் திரு ஜோதி நித்தியானந்த சுவாமி (சென்னை) அவர்களையும், திரு ஜோதி சிவ. செல்வராஜ் (நாகர்கோயில்) அவர்களையும் குரு பீடமேற்கும்படி அருளாசி வழங்கியும், தமக்கு ஜீவ சமாதிக்

கான ஏற்பாட்டினைச் செய்யும்படியும் கூறி 7-5-1988 அன்று இரவு 8-00 மணியளவில் ஜீவ சமாதி யடைந்தார்.

சற்குருவின் அருள் வாக்கிற்கிணங்க, ஜீவ சமாதியுற்ற முதலாண்டு நினைவு தினமான 7-5-1989 அன்று இராயவேலூர் அடுத்த வள்ளி மலையில் குருபிரான் திருவருளாணையின் படி, ஜோதி குரு ஞான சபையின் பிரதம சீடராக விளங்கிய திரு ஜானகிராமன் என வழங்கும் தவத்திரு ஜோதிநித்தியானந்தசுவாமி அவர்களைக் குருபரம்பரை விளங் கும் வண்ணம், நாகர் கோயில், அருப்புக்கோட்டை, தஞ்சை, திருச்சி, வேலூர், சென்னை, ஜோதி குரு ஞான சபையின் ஆன்ம நேய அன்பர் களும், மற்றும் பொதுமக்களும் ஒருங்கிணைந்து குருபீடத்தில் அமர்த்தி அருளாசி பெற்றும், விழாவினைச் சிறப்பாக நடத்தியும் வைத்தனர்.

ஜோதி குரு ஞான சபையின் அன்பர்களும், மற்றும் ஆன்மதாகம் உள்ள அனைத்து ஆன்ம நேய அன்பர்களும் வாழ்க்கையில் எல்லா ஞான நூல்களையும், சித்தர் நூல்களையும் பெற்று இக்கால நெருக் கடியில் படிக்க இயலாது என உணர்ந்து எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய, ஞானப்பாக்களையும், கருத்துரைகளையும் தொகுத்துத்தரும்படி மெய்யன்பர்கள் வேண்டுகோளுக் கிணங்கி, தவத்திரு ஜோதி நித்தியானந்த சுவாமி அவர்கள் தம் ஞான அனுபவ விளக்கங்களுடன் தொகுத்துத் தந்துள்ள இந்த ஞானநூல் ஒரு புதையலாகும்.

இக்கிடைத்தற்கரிய ஞான நூலை மெய்யன்பர்கள் பெற்றுப் பயின்று, ஞானமும், பேரின்பமும் அடைய அருட் பெருஞ் ஜோதி ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆன்ம நேய அன்பர்கள், ஜோதி குரு ஞான சபையின் சத்சங்கக் கூட்டத்திற்கு வரும் பொழுது இந்நூலைத் தவறாமல் கொண்டு வரும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

வள்ளிமலை
16-9-1989

இங்ஙனம்,
மெய்யன்பர்கள்,

ஜோதி குருஞான சபை

இறைவன் துணை

வள்ளிமலை ஜோதி நித்தியானந்த சுவாமி அவர்களுடைய சீடர்களுள் ஒருவராகிய திரு. G. விநாயகம் அவர்களின் குருவணக்கம்.
(14, 4-வது தெரு, ஆண்டவர் நகர், சென்னை-24)

எழில்மிகு சென்னை அயன்புர மூரில்
இற்றைக் கைம்பத்தெட் டாண்டுகள் முன்னம்
அழகுறப் பிறந்தார் எங்கட் குருமணி
அப்பா சிதம்பரம் அம்மா விசாலாட்சி
மழலையின் பெயரோ ஜானகி ராமன்
சக்தியும் சிவமும் சேர்ந்த பெயர்கள்
மழலையில் தொடங்கி மாணவ நிலையில்
பக்தியும் பாடலும் பற்றிக் கொண்டன.

வளர்ந்தது வயது வந்தது வாலிபம்
''வா'' வென் றழைத்தது வாழ்க்கைத் துணைநலம்
மலர்ந்தனர் மதலைகள் நால்வர், ஆனால்
மங்கைத் துணையோ மறைந்தது, அந்தோ?!
தளர்ந்தது உடலம், திகைத்தது நினைவு
தாங்கிப் பிடித்தன பக்தியும் பாடலும்
வளர்ந்தது மனது, விரைந்தது அறிவு
வேண்டி அலைந்தது இறைவன் ஞானம்.

இறைவனைத் தேடி அலையும் வேளை
ஏட்டுச்சாமியர் இடையே பட்டனர்,
மறைநூல் ஓதும் மந்திர மனிதர்
கிடைக்க வில்லை குறையும் உற்றனர்,
இறையே உந்தன் அருளென் றெல்லாம்
இறைவனுக் கென்றே அளித்த காலை
மறைநூல் ஓதும் குருமணி ஜோதி
இராமசாமி தேகிகர் வந்தார்.

அறிவுக் கண்கள் திறந்தார் ஆங்கே
ஆலய வாசல் தெளிவாய்த் தெரிந்தது
இறைவன் உறையும் மாளிகை செல்லும்
எழில்மிகு பாதை நன்றே புரிந்தது
மறையும் நூலும் சான்றுக ளாக்கி
சாதகம் செய்வதை செயல்து வாக்கி

மறைபொருள் வசிக்கும் மணிபுரி தேடி
குருமணி பயணம் தொடங்கி விட்டார்.

மறைநூல் முழுதும் மறைந்தி ருந்த
பொருளினில் ஞானப் புதையல் கண்டார்
இறைவன் அருளால் இறைவன் வாழும்
இல்லத் தைதன் உடலில் கண்டார்
முருகன் திருமால் அயன் முதலாக
மனதில் அனைவர் உலகம் கண்டார்
புரியா மொழிகள் புரிந்தார் தன்னுள்
புகுந்தார் பெரிதோர் இன்பம் கண்டார்.

ஆசான் ஜீவ சமாதி யான
ஆண்டின் நிறைவில் விழாவை எடுத்து
பேசாத் திறமுடை ஈசன் வாழும்
பேரூர் காட்டும் பெரியோ ரானார்
நேசக் கரங்கள் நீட்டி ஜோதி
நித்தி யானந்த சுவாமிக ளானார்
பாசம், பற்று, ஆசை நீக்கும்
பரமா னந்தப் போதக ரானார்.

ஏது மறியா வெங்கள் ஊனக்
கண்கள் திறந்த இறைவா போற்றி!
எளிது மினிதும் வலிதும் பெரிதும்
எடுத்துக் காட்டிய மறையே போற்றி!
ஒளியின் வடிவே இறைவன் என்று
வடித்துக் காட்டிய முனிவா போற்றி!
என்றும் உங்கள் பாதம் தொழுதே
இறைவன் மலரடி தொழுவோம் போற்றி.

௴

ஜோதி குரு வணக்கம்

ஓம் நித்திய சுத்த பரிபூரண
ஆதியந்தம் கடந்த சுயம்பிரகாசரே!
எங்களுக்காக குருவடிவாகி குவலயத்தில்
வந்துதித்து, அஞ்ஞான மென்னும்
பெரும் பாறையினால் மூடப்பட்டிருந்த
எங்களுடைய கண்களைத் தங்களுடைய
திருவருட் செயலினால் திறந்த
ஜோதி நித்தியானந்த சுவாமி அவர்களே
தேவரீருடைய திருவடிக்கே

சரணம்! சரணம்!! சரணம்!!!

- சபை அன்பர்கள்.

ஜோதி குரு ஞானசபை
வள்ளிமலை வ. ஆ. மாவட்டம்

ஜோதி குரு ஞான சபை
30, சின்னக்கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி - 2.
Pincode No. 620 002.

ஜோதி குரு ஞான சபை
இராமலிங்க சுவாமி நிலையம்
ஆரல்வாய்மொழி
குமரி மாவட்டம்.

ஜோதி குரு ஞான சபை
10, சோம சுந்தரத் தேவர் 2-வது தெரு,
அயன்புரம், சென்னை-23.
Pincode - 600023.

ஜோதி குரு ஞான சபை
C/o. ஜோதி ந. தாமோதரன்
T.S. பாபு செட்டியார் சன்ஸ்,
D/28. லாங்கு பஜார், வேலூர் N. A.
Pincode - 632004.



தவத்திரு வள்ளிமலை

ஜோதி நித்தியானந்த சுவாமிகள்

ஆசிரியர் மெய்வழி உரை

பரத கண்டமாகிய இந்திய தேசம் ஒரு புண்ணிய பூமி, தெய்வீகம் பொருந்திய பூமி என்று மக்கள் சொல்லுகின்றார்கள். இதனை மெய்ப்பிக்கும் அளவில் இன்று நாடு முழுவதும் கோயில்களும், அன்னதானச் சத்திரங்களும், குளங்களும் இருந்து வருகின்றன.

திருவிழாக்கள் தொன்று தொட்டு நடந்து வருகின்றன. தெய்வ நம்பிக்கையுடன் மக்கள், நன்னெறியில் வாழ்வது மட்டுமல்லாமல் தான தருமங்கள்செய்து தெய்வத்தை வழிபடுகின்றனர். இந்த உண்மையான பக்தி நெறியை எந்தச் சமயமும் அசட்டை செய்ததில்லை. ஒவ்வொரு சமயமும் ஒருமுழுமையான, தெளிவான வாழ்க்கை முறையை வகுத்துக் காட்டி, அதைப் பின்பற்றினால், விரைவாகவும், எளிதாகவும் அந்த லட்சியத்தை அடைய முடியும் என்பதற்கு உத்திரவாதம் அளிக்கிறது.

நம் நாட்டு முன்னோர்களாகிய ஞானிகள் தம் தவ வலிமையால் இறை அனுபவங்களை

''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''

திருமந்திரம்

என்ற கருத்திற்கு இணங்க மகத்தான உண்மை ஞான தத்துவங்களும், வாழ்க்கைத் தத்துவங்களும் நிறைந்த மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் மூலம் மனித வாழ்க்கையில் தன்னைத் தானே மேம்படுத்திக் கொள்வதற்கான பல அறிவுரைகள் அகத்திற்கும் புறத்திற்குமாக விவரித்து இருக்கின்றார்கள். ஆனால் தன்னை அறியாத மனிதன் அகமாகிய பழத்தை அருந்தாமல் புறமாகிய தோலை அருந்துவது அவனுடைய அறியாமையாகும்.

வாசகர்களின் ''தத்துவ'' சிந்தனைக்குக் கீழே சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

மகாபாரதம்

1. குந்திதேவி சூரியனைத் தோத்திரம் செய்து கர்ணனைப் பெற்றாள்.

2. குந்திதேவியும், மாத்திரியும் தேவர்களைத் தோத்திரம் செய்து ஐந்து பிள்ளைகளை (பஞ்ச பாண்டவர்களை)ப் பெற்றனர்.

3. திரௌபதிக்கு ஐவரும் புருஷர்கள் ஆனார்கள்.

4. கௌரவர்கள் நூறு பேர், அவர்கள் பிறந்த விதம்.

இவைகள் உலகியல் அறிவுக்குப் பொருந்துமா என்று வாசகர்களை யோசிக்கக் கேட்டுக் கொள்கிறேன்,

புறப்பொருள்: இன்றைய உலகில் பஞ்ச பாண்டவர்கள் ஐவரும், கௌரவர்கள் நூறுபேரும் சகோதரர்கள். (பங்காளிகள்). துரியோதனன் சுயநலம், சூது, வாது, பொறாமை, பெருமை போன்ற தீய எண்ணங்கள் கொண்டவன் என்றும், தருமர் தரும சிந்தையுடன் நீதி நேர்மையாக வாழ முற்பட்ட பஞ்ச பாண்டவர்களைச் சேர்ந்தவர் என்றும் அறிவர். இவர்களுக்குள்ள நாட்டை இருபாகமாகப்பகிர்ந்து கொடுக்கத் தீய எண்ணமுள்ள துரியோதனன் மறுத்து விட்டான்.

கண்ணன், பீஷ்மர், துரோணர் போன்ற பெரியோர்கள் அறிவுரை கூறியும் மூர்க்கன் துரியோதனன் ஊசி முனையிடமும் தர மறுத்துப் போர் புரிந்து இறுதியில் மாண்டான் என்பதாம்.

கண்ணபிரான் துணை கொண்டு அதர்மத்தை அழிக்க தர்மப் போர் புரிந்து பஞ்ச பாண்டவர்கள் வெற்றியடைந்தனர் என்பதாகும்.

இக்கதையினை இன்று உலகில், சகோதரர்கள் (பங்காளிகள்) நிலபுலன்களுக்குச் சண்டையிட்டுக் கொள்ளும் போது தீய குணமுடையவனைத் துரியோதனன் என்றும், சாந்த குணமுடையவனைத் தருமர் என்றும் ஒப்பிட்டுச் சொல்வதைத்தான் பெரும்பாலும் இன்றைய மக்கள் அறிந்துள்ளார்கள். இதன் அகப்பொருளாகிய ஞானத்தை அறிந்தோமா எனில் ஒரு சிலரே இருப்பர் எனலாம்.

அகப்பொருள்: ஞானிகளின் கருத்து என்னவெனில் பஞ்ச பாண்டவர்கள் (Soul Conscious) ஆன்ம உணர்வு உடையவர்கள். கௌரவர்கள் (Body Conscious) சரீர உணர்வு உடையவர்கள்என்பதே ஆகும்.

இவ்வுலகம் பஞ்ச பூதங்களால் ஆனது, அதாவது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பதாகும். முறையே அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்றும் எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்றும் கூறுவர்.

ஆதலின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவை கருவிகளாகும். அண்டமாகிய இவ்வுலகு எப்படி பஞ்ச பூதக் கலப்பினாலும், சூரிய சந்திரர்களாலும் இயக்கப் படுகின்றதோ, அதுபோல் இவ்வுடல் பஞ்ச பூத சக்தியாகிய பஞ்சேந்திரியங்களினால் ஆனது என்பது விளங்கும்.

ஐம்புலன்களை (ஆன்ம உணர்வு) ஞானேந்திரியங்கள் என்றும், தத்துவத்தின்கண் பஞ்ச பாண்டவர்கள் என்றும் கொள்ள வேண்டும்.

சரீர உணர்வுள்ள (காமம் நிறைந்த) தேகம், கௌரவர்களுக்குத் தத்துவப் பெயராகும்.

இத்தேகத்தின்கண், சிரசில் உள்ள மெய், வாய், கண், செவி, மூக்கு ஆகிய ஞானப் புலன்களே இவ்வுடலைப் பேணும் அறிவாகும். (பாண்டவர்கள்) இவர்கள் தாய்மாமன் கண்ணன் (இறைவன், அறிவு என்பது தத்துவமாகும்.)

சரீர உணர்வுள்ள தேகமாகிய கௌரவர்கள் தாமே வாழ வேண்டும் (உடலை வளர்க்க வேண்டும்) என்றும், அறிவாகிய பஞ்சபாண்டவர் களுக்கு (அறிவுக்கு) ஊசி முனை இடமும் தர மாட்டேன் என்றும் கூறினர். இவர்களின் தாய்மாமனாகிய சகுனி (சூதன்=மனம்)யின் அறிவுரை கேட்டுப் போர் செய்து நாடு இழந்து மடிந்தனர்.

திரௌபதி : சத்தி என்றால் பெண் அம்சம் (பெண் தெய்வம்) இவ்வுடல் ஒரே சக்தியால் ஐம்புலன்களும் செயல் படுகின்றன. ஒரு புலன் செய்யும் வேலையை அடுத்த புலன் செய்வதில்லை, ஆதலின் திரௌபதி ஐவருக்கும் ஒரே பத்தினி என்பது ஞான தத்துவமாகும். மேலும் ஐந்து புலன்களும் ஐந்து பூத சக்தியின் செயல்களையுடையதால், தேவர் களுடைய குமாரர்கள் என்பதாகும்.

அன்றாடம் நம் வாழ்க்கையில் மனமும், புத்தியும், போராடிக் கொண்டே இருப்பதே பாரதப் போராகும். ஆன்ம அறிவின் தலைவனாகிய பரந்தாமன் கண்ணன் வழி நடந்த பாண்டவர் (நாடு=சரீரம்) நாடு ஆண்டார்கள். கௌரவர்கள் சூதனாகிய (மனம்=சகுனி) சகுனியைத் தலைவனாகக் கொண்டு சுயநலம், சூது, வாது, வஞ்சனை போன்ற அசுர அறிவுக்கு இடம் கொடுத்தும், ஞானிகளாகிய பீஷ்மர், துரோணர், கிருபர், கண்ணன் போன்றவர்களின் அறிவுரைகளை அறிந்தும், செவி மடுக்காது போர் புரிந்து மாண்டனர்.

(சரீரத்தை அழித்துக் கொள்வதாகும்) மேலும் விளக்கின் விரியுமென இத்துடன் நிறுத்திக் கொண்டு சிந்திக்கும் வாசகர்கள் ஆசாரியன் முன் விளங்கிக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இராமாயணம் :

இராமாயணத்தை நம் முன்னோர்கள் முடிவு பெறாத ஒன்று என உபமானப்படுத்திக் கூறுவது வழக்கம். ஏனெனில் அது நீண்டு கொண்டே போகும் என்பதாம். இருப்பினும் சிந்திக்கும் வாசகர்களுக்கு ஒரு சில கருத்துக்களை விளக்க விழைகிறேன்.

நம் முன்னோர்கள் இதனை இரண்டு அடிப்படைக் கருத்துடன் கூறியிருக்கின்றார்கள்.

1. காமம்= (ஆசை=மாயை). 2. விதி. (முன் கர்ம வினையை அனுபவித்தல்).

1. தசரத மன்னனுக்கு மூன்று மனைவிகள் இருந்தும் கைகேயி யிடம் இருந்த தனி காம இச்சையால் அவளுக்கு இரு வரங்கள் தந்து அறிவிழந்தான். அதனால் ஆசை மகனைக் காட்டுக்கு அனுப்பினான்.

2. நாட்டு மக்கள் போற்றும் அறிவுள்ள ஆசை மகன் இராம னுக்குப் பட்டாபிஷேகம் செய்ய முற்பட்ட போது பெண் ஆசையாகிய மாயை தடுத்து விட்டது.

3. இராமன் சீதையிடம் அளவற்ற ஆசை கொண்டு இருந்தான். அதனால் சீதையின் ஆசையை நிறைவேற்ற முற்பட்டபோது, லக்ஷ்மணன் ''விதியாக வந்துள்ளது மாரிசமான்'' எனக் கூறினான் விதி இராமன் மதியை மறைத்து இழுத்துச் சென்று விட்டது. சீதை மேலிருந்த ஆசையாகிய மாயை அவன் அறிவுக்குத் திரையிட்டு விட்டது.

4. மாரிசன் இராமன் போன்று அபயக்குரல் கொடுத்த போது லக்ஷ்மணன் ''பொய்க் குரல்' என்று சீதைக்கு எடுத்துக் கூறியும் ''இராமன் இறந்தபிறகு என்னை அடையலாம் என்ற எண்ணம் உள்ள வனே, கொடூரமான காம இச்சை யுடையவனே'' என்றும் விதியின் காரணத்தால் சீதை கடுமையாக லக்ஷ்மணனைத் தூற்றித்துரத்தினாள்.

5. சூர்ப்பனகை, இராம லக்ஷ்மணர் மீது ஆசை (காமம்) வைத்து மூக்கறுபட்டாள்.

6. வாலிக்கும், சுக்கிரீவனுக்கும் நாடு ஆளும் ஆசையால் பகை ஏற்பட்டுச் சுக்கிரீவனை வாலி அடித்துத் துரத்தி விட்டு அவன் மனைவி யைக் காமுற்றான்.

7. இராவணன் மிகவும் ஈஸ்வர பக்தனாகஇருந்தும் சூர்ப்பனகை யின் மூலம் சீதை ஓர் ''அழகி'' எனச் செவி வழி மூலம் அறிந்து காம இச்சையால் சீதை மேல் ஆசை கொண்டு விதி வசத்தால் நாடு, நகரம், மக்கள், மற்றும் தானும் அழியக் காரணமாக இருந்தது, காமம். காமம் என்ற ஆசையாகிய மாயை, அறிவை மாய்க்கும் இருளாகிய கருப்புத்திரை என உணரலாம் அல்லவா?

7. இராமாயண இதிகாசத்தில் பங்கேற்றுள்ள தசரதன், இராமன் சீதை, லக்ஷ்மணன் அறிவில் சிறந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நாள் குறித்த வசிட்டர், பிரம்ம

தேவர் மகன். அவர் முக்காலமும் உணர்ந்த பிரம்ம ரிஷியாவார். அப்படி இருந்தும் இறையருளால் பட்டாபிஷேகம் தடைப்பட்டதைவிதியின் வலிமை என்று கூறலாம் அல்லவா?

இதனை ஞானிகள்:

இன்னவினை இன்னதலத்து இன்னபொழுது இன்னபடி
இன்னதனால் எய்தும் என அறிந்தே - அன்னவினை
அன்னதலத்து அன்னபொழுது அன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான்.

அவரவருக் குள்ளபடி ஈசன ருளாலே
அவரவரைக் கொண்டியற்று மானால் - அவரவரை
நல்லார் பொல்லார் என்று நாடுவதென் நெஞ்சமே
எல்லாஞ்சிவன் செயலென் றெண். சிவபோகசாரம்

என்று கூறியிருக்கின்றனர்.

மகாபாரதம், இராமாயணம் இவ்விரு இதிகாசங்களிலுள்ள அகப்பொருளாகிய உண்மை என்னவெனில், இப்பூவுலகில், மக்கள் எவ்வளவுதான் அரசபோகம், அறிவு, செல்வம், உடல் வலிமை பெற்றிருந்தாலும் இறையருளை அடைதற்கு மேற் குறிப்பிட்டவை வலிமையைத் தாரா, எந்த நேரத்திலும் காமமாகிய ஆசையினால் மாயை ஏற்பட்டு அருளை அடைய வொட்டாமல் தடை செய்யுமென்பதனை உணர்த்தியுள்ளார்கள்.

குறிப்பாக, விசுவாமித்திரர் பன்னிரண்டு வருடங்கள் கடும் தவமிருந்து அருள் பெறும் சமயம் ''மேனகா'' என்ற பெண் மாயையால் கவரப்பட்டுத் தவப்பயனை இழந்தார். மீண்டும் அவர் பிரம்ம பட்டம் பெற கடும் தவமிருந்தபோது தேவர்கள் ஊர்வசியாகிய மாயையால் சோதித்தனர்.

ஆனால் மித்திரர் ''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்ற முதுமொழிக்கிணங்க, இறைவனை நினைத்து காமம், கோபம், சாபம் மறந்து பிரம்ம பட்டம் பெற்றார். மேலும் புறஅக வாழ்க்கைக்குத் தேவையான ஏராளமான கருத்துக்களை நமக்குக் கூறியுள்ளதை நாம் கூர்ந்து அறிந்தோமில்லை. மேலும், விளக்கின் விரியுமென இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

நம் முன்னோர்களாகிய ஞானிகள், திருமந்திரம், திருவாசகம், தாயுமானவர் திருப்பாடல்கள், திருவருட்பா, திருக்குறள், ஔவைக் குறள், கீதை மற்றும் எண்ணற்ற ,ான நூல்கள் நமக்குப் படைத்து இருக்கிறார்கள்.

ஞான நூல்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படித்தரங்களில் நமக்குப் பக்தி யூட்டுகின்றார்கள். அருணகிரிநாதர், பட்டினத்தார், மற்றும் சித்தர் நூல்களில் ஞானத்தை அடையும் மார்க்கமும் அதற்குத் தடையாக இருக்கும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலக் குற்றங்களைப் பற்றியும் எடுத்துரைத்திருக்கின்றார்கள். ஞானத்தைப் பற்றிய எண்ணற்ற நூல்கள் இருந்தும், மானிடர்களாகிய நாம் ஞான நூல்களின் உண்மைப் பொருள் என்னவென்பதை அறிய முற்படுவதில்லை. ஔவை பிராட்டியார் ''அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது, அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது'' என்றும்

''உடம்பினைப் பெற்ற பயனா வதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்''

என்றும் கூறுகிறார்கள்.

நம் பெற்றோர்களும், நமக்குச் சிறுவயதில் ''காலையில் எழுந்திரு; கை, கால் முகம் சுத்தம் செய்; திருநீறு அணிந்து கொள்; கடவுளைத் (கணபதியை) தொழக் கல்வி வரும்'' என்றெல்லாம் நமக்குச் சின்னஞ் சிறு வயதில் ஒழுக்கத்தையும், பக்தியையும் (சரியை, கிரியைகளை)ப் புகட்டி வளர்க்கின்றார்கள். அவை அனைத்தும் அச்சிறு கள்ளங் கபடமற்ற வயதிற்கு உரியதே. அச்சிறு வயதில் தெய்வ நம்பிக்கையை ஊட்டி வளர்த்து நன்னெறியாகிய ஒழுக்கங்களிலிருந்து தவறினால் கடவுள் அருள்பெற முடியாது என்று கூறி மனதைப் பண்படுத்தி மேல் நிலையாகிய ஞானத்திற்கு வித்திட்டார்கள். அவைகள் அவ்வயதிற்குப் பொருத்தமே,

பிறகு, மனிதன் காலத்தால் (வயதால்) அறிவின் முதிர்ச்சியால், நடை, உடை, பாவனைகளால், கள்ளங்கபட எண்ணங்களால், கல்வி, குடும்பம், தொழில், இனவிருத்தி போன்ற உலக ஆசார வாழ்க்கைக்கு ஏற்பத் தன்னைமாற்றிக் கொண்டான். ஆனால் அன்று பெற்றோர்கள் அறிமுகப்படுத்திய, கணபதியின் தொழுகையை ஆராய்ந்து அறிந்து அதை மட்டும் மாற்றிக் கொள்ளாதது ஏன்? இதனைச் சிறிது விளக்குவோம்.

கணபதி என்பவர் (கண பூதங்களுக்குத் தலைவர்) கணபூதங்களாகிய பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற முறையே, மண், நீர் நெருப்பு, காற்று, வானம் என்றும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்றும் விளங்கும். (இதனையே நம் முன்னோர்கள் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்றும், எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்றும்கூறினர்.) இப்பூதங்களுக்குத் தலைவனாகிய இறை

வன் (கணபதி) என்று நம் முன்னோர்கள் கற்பித்துள்ளார்கள் என்பது மேற்கூறியதிலிருந்து தெரிய வரும். அவனே உலகின் ஆதியும், அனாதியும் ஆவான். இவ்வுலகம் பஞ்சபூதசேர்க்கையால் ஆனது. மனிதனின் உடலும் பஞ்சபூத கலப்பால் சிருஷ்டிக்கப்பட்ட பூத உடல் ஆகும். இப்பூத உடலை ஐம்புலன்கள் மூலம் செயல் படுத்தும் சக்தி ஒன்றாகும். ஐம்புலன்களுக்கும் பதியாகி நடத்துவிக்கும் சக்திகள் ஆத்ம சக்தியும், ஜீவ சக்தியுமாகும். அச்சக்தியே நம்மை இயக்குவிக்கும் ஒளி சக்தியாகும். அச்சக்தியே அருட்பெருஞ்சோதி ஆண்டவரென்றும், அவர்நம் உள்ளத்திலே ஒளிர்கின்றார், அவரே நம் உள்ளத்தில் குடியிருக்கும் குமரன், குகன், சிவம், யேசு, அல்லா (அனைத்துலக தெய்வங்கள்) என்றும், அறிந்தோமா எனில் இல்லை.

இவ்விசாரணைகளைச் செய்வதற்கன்றோ நம் முன்னோர்களாகிய ஞானிகள் கீழ்வரும் நூல்களின் மூலம் இறைவன் புறத்தே இல்லை என்றும், அகத்தே தன்னுள் சுயம் பிரகாசராகவும், ஆத்ம ஒளியாகவும், ஜீவ ஒளியாகவும் இருக்கின்றான் என்றும் அவனைப்புறத்தே தேடுவது அறியாமை என்று விளக்கியுள்ளார்கள்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே. திருமந்திரம் 2356
என்றும்

நான் யார் என்ற விசாரணையின் மூலம் தன்னையறிய வேண்டும் என்றும் தன்னை அறிதலே, அறிவாகும். (அவ்வறிவு ஒளியே இறைவன்) அவ்வறிவையே நாம் அர்ச்சிக்க வேண்டும் என்கிறார்.

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்.
உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியர் அர்ச்சிக்குமாறு. ஔவையார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே.

திருமந்திரம் 1823.

ஆரூரார் இங்கிருக்க அவ்வூர் திருநாளென்று
ஊர்கள் தோறும் உழலுவீர் - நேரே
உளக்குறிப்பை நாடாத ஊமர்காள் நீவிர்
விளக்கிருக்கத் தீதேடு வீர். பட்டினத்தார்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தி ஆகி
அருளொடு நிறைந்தது எது?
அகிலாண்ட கோடி எல்லாம் தாயுமானவர்

திருவருட் பிரகாச வள்ளலார் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களிலும், சிவம் ''ஜோதி'' என்பதனை.

ஜோதி

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி யருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்.

வாம ஜோதி சோம ஜோதி வான ஜோதி ஞான ஜோதி
மாக ஜோதி யோக ஜோதி வாத ஜோதி நாத ஜோதி
ஏம ஜோதி வியோம ஜோதி யேறு ஜோதி வீறு ஜோதி
ஏக ஜோதி யேக ஜோதி யேக ஜோதி யேக ஜோதி

ஆதி நீதி வேதனே ஆடல் நீடு பாதனே
வாதி ஞான போதனே வாழ்க வாழ்க நாதனே.

என்று விளக்கியுள்ளார்.

''சாதியும் மதமும் சமயமும் காணா ஆதி அனாதியாம் அருட் பெருஞ்ஜோதி'' எனக் குறிப்பிட்டபடி பிற மதங்களிலும் இறைவன் ஜோதி ஒளியாக உள்ளான் எனக் கூறும் பாடல்களைக் காண்க.

திருச்சிற்றம்பலம்.

ஒளிவிளக்கு

அல்லாஹ் வானங்கள் பூமி (ஆகியவை)களின் பிரகாசமாக இருக்கின்றான். அவனுடைய பிரகாசத்திற்கு உதாரணம் விளக்கு இருக்கும் ஒரு மாடத்திற்கு ஒப்பபாகும். அவ்விளக்கு ஒரு பளிங்குக் கிண்ணத்தில் இருக்கிறது. அந்தக் கிண்ணமோ முத்தாலாகிய (பிரகாசிக்கும்) நட்சத்திரத்தைப் போல் (பிரகாசித்துக் கொண்டு) இருக்கிறது. பாக்கியம் பெற்ற ஜெய் தூண் மரத்தின் எண்ணைய் (அதில்) எரிக்கப்படுகின்றது. அது கீழ் நாட்டிலுள்ளதுமல்ல, மேல் நாட்டிலுள்ளது மல்ல, அந்த எண்ணைய் நெருப்புத் தொடாவிடினும் பிரகாசிக்கவே செய்கிறது. (அதுவும்) பிரகாசத்திற்குமேல் பிரகாசமாக (பிரகாசிக்கின்றது.)

அல்லாஹ் தன்னை நாடியவர்களைத் தன் பிரகாசத்தின் பால் செலுத்துகின்றான். மனிதர்களுக்கு அல்லாஹ் (தன்னுடைய) தன்மையை அறிவிக்கும் பொருட்டு இத்தகைய உதாரணங்களைக் கூறுகின்றான். அல்லாஹ் யாவற்றையும் மிக அறிந்தோன்.

அல்குர் ஆன் : 24:35

''நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கின்றேன். என்னைப் பின் பற்றுகின்றவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப் பான். யோவான் 8:12.

மேற்கூறிய பாடல்களில் இறைவன் ஒளியாக உள்ளான் என்பது விளங்கும்.

நம்முன்னோர்கள் பெறுதற்கரிய மனிததேகத்தில், இறைவனாகிய கள்வன், கண்ணன், சிவன், முருகன், அருட்பெருஞ்ஜோதியாக இருக் கின்றான் என்றும், அவன் எல்லா உயிர் இனங்களிலும் ஒளியாகக் காணுமிடத்தைப் பீடமாகக் கொண்டும் அறிவாகவும் இருக்கின்றான் என்றனர். பாரதப் போரில் கண்ணன் அர்ச்சுனனுக்குத் தேர் ஓட்டி வழி நடத்தியது போல், பரந்தாமனாகிய கண்ணன் நம்முன் இருந்து நம் அன்றாட வாழ்க்கையில் மனதிற்கும், புத்திக்கும் நடக்கும் போரை கண்காணிக்கின்றான். யார் அவனைச் சரண் அடைகின்றார்களோ அவர்கள் வாழ்க்கையில் வெற்றி அடைந்து ஆன்ம லாபம் பெறுகின் றனர் என்பதை கீதையும், மேற்படி ஞான நூல்களும் கூறுகின்றனர்.

அந்த ஆன்ம லாபமாகிய விளக்கை கையில் வைத்துக் கொண்டு புறத்தே தேடுவது, அறியாமை ஆகும். ஏனெனில் வாழையடி வாழை யாக வந்த நம் நாட்டு ஞானிகள் பலரும் உண்மை மெய்ஞ்ஞான அனுப வங்களைப் பரிபாஷைகளாகவும், மறை பொருளாகவும் காவியங்களில் வழங்கி உள்ளனர். ஆனால் இதனை இன்றைய சமுதாயத்தின் கல்வி ஞானிகள் (ஞான அனுபவமற்றவர்கள்) அவர்களின் அறிவுக்கேற்ப புறத்திற்கு மட்டுமே பொருள் கண்டனரே தவிர ஞானிகளின் உண்மை அகப்பொருளான மெய்ப் பொருளுக்கு விளக்கம் அறிகிலர். கல்வி ஞானிகளின் உண்மைத் தத்துவ விளக்கமும், அகப்பொருளான மெய்ப் பொருளுக்குத் தக்க ஞான விளக்கமும் கொடுக்காமையால் மக்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை சரியை, கிரியைகளிலேயே வீணே காலங்கழித்து விட்டு ஞானம் அடைய முடிவதில்லை.

ஏட்டிலே எழுதும் நூல்கள் எத்தனைப் படித்தும் நீதான்
காட்டிலே எரித்த திங்கள் கானலிற் சலம்போ லானாய்
நாட்டிலே தெய்வமென்று நடந்தலை யாமலுந்தன்
கூட்டினில் நாகை நாதர் குறிப்பறிந்து உணர்வாய் நெஞ்சே.

நெஞ்சறி விளக்கம். 23

ஞானிகளின் காவியங்களுக்கு உண்மை விளக்கம்
எழுத வேண்டின் ஞான அனுபவம் பெற வேண்டும்.
ஏட்டுப் படிப்பு பயன் தராது.

உள்ளொளியை ஞானாசிரியர் முகம் அறிந்து, உணர்ந்து, உயி ரொளி விளங்கிட மனதை ஒருமுகப்படுத்தித்தியானிக்க, மனம் ஒருமைப் படுமென்பது அனுபவமாகும்.

தினமும் தியானிக்க மும்மலமாகிய திரைகள் நீங்கி, அகத்தில் ஜோதி திருநடனத்தைக் காணலாம். இத்தூய தரிசனத்தை நம்முள் காணவே வள்ளற்பெருமான் வடலூரில் சாட்சிக்காக இன்று திரை விலக்கி ஒளிகாட்டி நினைவுப் படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இத் திருநாளை, 'தூய அருட் ஜோதி திருநடனம் காண்கின்ற நாள்'' என்றும் வள்ளற்பெருமான் அருளியுள்ளார்.

இப்பேரின்ப பேரொளியைக் காணும் இத்திருநாளையே சிதம்பர தரிசனம், நடராஜர் நடனம், திருக்கூத்து என்று வள்ளலாரும் ஏனைய ஞானிகளும் கற்பனையாக உருவகப்படுத்தி பக்தி வளர அறிமுகப் படுத்தியுள்ளார்கள். இந்த கற்பனையையே நாம் நிலையெனக் கொண்டு உண்மைக் கருத்தினைக் (ஞானத்தைக்) கைவிட்டு விட்டோம். அப்பரம்பொருளை அகத்திலேயே, ஒளி வடிவில் அகக் காட்சியாகக் காண்போமானால் மும்மலங்களும் எரிந்து சாம்பலாகி விடும். அருட்பெருஞ்சோதி ஆண்டவரைத் தரிசிக்கலாம்.

இதனையே ''முப்புரம் எரித்தனன் என்பர்கள் மூடர்கள். முப்புர மாவது மும்மல காரியம்'' என்று திருமூலர் மொழிந்துள்ளார். இத னால் ஒப்பற்ற சித்திகளைப் பெறலாம் என்கின்றார் திருமூலர்.

உள்ளத் தொருவனை உள்ளுறு ஜோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. திருமந்திரம்.

''ஜோதியை அகமுகம், கண்டானை கண்டவர்களை எத்துன் பமும் தொடரா; பயம் பற்றாது; அச்சம் அறுத்து மனசஞ்சலம் மருவிப் போகும். மேலும் ஊக்கமும், ஆக்கமும் உண்டாகும். மெய்யறிவு, மெய்ஞ்ஞான அறிவு, மெய்யன்பு மேவித் தழைத்துப் பேரருளும், பேரின்ப வாழ்வும் வாய்க்கும். அகத்தே ஒளி வடிவிலே பரம் பொருளை இடையறாது தியானிக்க உடற்பிணி, உயிர்ப்பிணி வாரா'' என்று வள்ளற் பெருமான் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

குருபரம்பரை: அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் திருவருட் சம்ம தத்தால், பேரின்பப் பேற்றையும், ஞான அனுபவமும் பெற்ற ஸ்ரீ திருவள்ளுவ நாயனார் மரபு ஸ்ரீ பாலையானந்த சுவாமிகள் மெய் கோசத்தில் உதித்த திரிசிரபுரம் ஸ்ரீ ஜெய வீர ஆதி நாயக சுவாமி களின் தவச் செல்வர் திருச்சி ஸ்ரீ ஜோதி இராமசாமி தேசிகராகிய எமது குருநாதரிடம் இந்த ஆன்மா பிரம்ம உபதேசம் பெற்று, அவரு

டனே இருந்து ஞான அனுபவங்களை ஐயம் திரிபு அற அறிந்தும், கேட்டும், சாதனை செய்தும் எமது குருநாதரின் பிரதம சீடரானமை இறைவனின் அருளாகும்.

ஆதலின், ஜோதி குருஞான சபையில் உபதேசம் பெற்று, குரு அருள் வாக்கிற் கிணங்கக்குருபீடமேற்று, குருபரம்பரை விளங்க நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனக் கருதி இந்த ''ஜோதி உபதேச மாலையும் - ஔவைக் குறளும்'' என்ற தத்துவ விளக்கத் தொகுப்பு நூலைத் திருவருள் சம்மதப்படி எனது குருநாதர் ஜோதி இராமசாமி தேசிகரின் இரண்டாவது வருட நினைவு நாள் அன்று வெளியிடுகின்றேன்.

ஏனெனில் ஞானமென்பது, ஓர் சொல்லின் பொருள் ஞான உபதேசம் பெற்று விட்டாலும் யுக்தி, சுருதி, அனுபவத்திற்குப் பொருந்த வேண்டும். அதன்படி குருமுகம்அறிந்த மெய்ப்பொருள் உண்மை ஞான நூல்களில் சொல்லப்பட்டு இருக்கின்றதா? என்பதனை நூல் பார்த்து ஐயம் திரிபு இன்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது வாழ்க்கையின் கால நெருக்கடியில் சாதகர்கள் எல்லா ஞான நூல்களையும், தனித்தனியே பெற்று அவைகளைக் கூர்ந்து படிக்கக் காலம் போதாது எனக் கருதி அனைத்து நூல்களிலிருந்தும் ஞானக் கருத்துக்களைத்தொகுத்து, இந்த ஆன்மா இச்சிறு நூலைவெளி யிடுகிறேன் இது திருவருள் சம்மதமாகும். நூல் ஆராய்ச்சியின் மூலம் சாதகர்கள் தம் அனுபவத்தை (யுக்தி, சுருதி, அனுபவம்) ஆத்மதிருப்தி யுடன் அடைய முடியும். அப்படி இல்லையேல் அக்குருவைக் குருவாகக் கொள்வதினால் பயன் ஏற்படாது என்பதாம்.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. திருமூலர்.

இந்நூலில் திருவருட்பா, ஔவைக் குறள், திருவாசகம், திருமந்திரம் மற்றும் சித்தர் நூல்களிலிருந்து ஞான விளக்கம் பெறப் கூடிய முக்கியமான பாடல்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இக் பாடல்களுக்கு எமது சொந்த அனுபவ உரையும், ஔவைக்குறளுக்கு ஸ்ரீ சுந்தர மாணிக்க யோகீஸ்வரர் அவர்களின் உரையைத் தழுவிய விளக்கமும் எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் சித்தர் நூல்களில் காணப் படும் பரிபாஷைகளுக்குத் திறவு கோலாக அமைந்துள்ளது. அத்துடன் ஏட்டுக் கல்வியின் மூலம் நாம் உண்மை ஞானத்தை அடைய முடியாது.

''குருஅருள் இல்லையேல் திருவ்ருள் இல்லை'' என்றும்,

குருவிலான் பெற்ற ஞானம் குமரியைக் குமரிகூடி
மருவிய இன்பயோக்கும் மண்ணிடை நம்போல் வந்த
குருவினால் பெற்ற ஞானங் குமரியை குமரன் கூடி
மருவிய இன்பமொக்கும் என்பர்கள் மதியுளோரே.

வள்ளலார்

ஆகலின் ஞான சாதனை புரிய விழையும் ஆன்ம நேய அன்பர்கள் குருமுகம் இருந்து, நெற்றிக் கண்ணைத் திறந்து கொண்டு, சாதனை செய்து இடை, பிங்கலை இரண்டு கலைகளையும் ஒன்று சேர்த்தால் சிவனை யடையலாம் என்பதாகும். இதன் அனுபவமே முத்தி பெறுதல் என்பதாம். இதனை ''மூவரும் ஒன்று சேர்ந்தால் முத்தீ'' என்றும்,

முச்சுடராகி ஒன்றாய் முடிந்ததோர்
ஜோதி பாதம் என்பர்.

திருவடி ஞானத்தைப் பலரும் அறியும் வண்ணம் ஆர்வமும், ஊக்கமும் காட்டி என்னை மிகவும் வற்புறுத்திய சபை அன்பர்களாகிய திரு. ரவிக்குமார் (சென்னை) திருமதி, புஷ்பா தாமோதரன் (வேலூர்) அவர்களுக்கும், கை எட்டுப் பிரதிகளைச் சரிபார்த்துப் பிரதி எடுக்க உதவியாக இருந்த குரு உபதேசம் பெற்ற எனது புதல்வியார் திருமதி மலர்க்கொடி மனோகரன் அவர்களுக்கும் மற்றும் சபை அன்பர் களுக்கும் எம் உளம் கனிந்த வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்குவதோடு மேலும் மேலும் சபையின் வளர்ச்சிக்கான காரியங் களைச் செய்ய திருவருள் கூட்டிவிப்பதாக!

இந்நூலினைச் சிறந்தமுறையில் அச்சிட்டு வழங்கிய எமதுகுருபிரான் அவர்களின் திருக்குமாரர்கள் திரு. இரா. சந்திரசேகரன், திரு. இரா. ஞானசேகரன் அவர்களுக்கும்சபையின் சார்பில் எமது நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்நூலிலைப் பார்த்துப் பிழை திருத்தம் செய்து செம்மையாக அச்சிட உதவிய புலவர் எஸ். சந்தர். எம். ஏ., அவர்கட்கும் எமது நன்றி உரித்தாகுக.

ஒளி ஓங்குக! சாந்தி நிலவுக! வளர்க ஞானம்!

வள்ளிமலை
16-9-1989

இங்ஙனம்,
வள்ளிமலை ஜோதி நித்தியானந்த சுவாமிகள்
ஜோதி குரு ஞான சபை,
வள்ளிமலை, வடஆர்க்காடு.

நூலின் உள்ளே ...

		பக்கம்
திருஅருட்பா	—	1
திருவாசகம் நூற்சிறப்பு	—	16
திருமந்திரம்	—	45
சித்தர் பாடல்கள்		
சிவ வாக்கியர்	—	65
பட்டினத்தடிகள்	—	67
பத்திரகிரியார்	—	70
இடைக்காட்டுச் சித்தர்		71
அகஸ்தியர் ஞானம்	—	71
நிஜானந்த போதம்	—	72
நெஞ்சறி விளக்கம்	—	72
சிவபோக சாரம்	—	74
பொதுத் திரட்டு	—	78
இறைவனின் சிரிப்பு	—	88
சுத்த சன்மார்க்க ஆகாரம்	—	90
ஔவைக் குறள்		
அ) வீட்டு நெறிப்பால்	—	93
ஆ) உடம்பின் பயன்	—	97
இ) உள்ளுடம்பின் நிலைமை	—	100
ஈ) நாடி தாரணை	--	104
உ) வாயு தாரணை	—	106
ஊ) அங்கி தாரணை	—	110
எ) அமுத தாரணை	—	113
ஏ) அர்ச்சனை	—	116
ஐ) உள்ளுணர்வு	—	120
ஒ) பத்தியுடைமை	—	124

II. திருவருட்பால்

அ) அருள் பெறுதல்	—	128
ஆ) நினைப்புறுதல்	—	131
இ) தெரிந்து தெளிதல்	—	135
ஈ) கலை ஞானம்	—	139
உ) உருவொன்றி நிற்றல்	—	143
ஊ) முத்தி காண்டல்	—	147
எ) உருபாதீதம்	—	149
ஏ) பிறப்பறுதல்	—	151
ஐ) தூயவொளி காண்டல்	—	155
ஒ) சதாசிவம்	—	158

III. தன்பால்

அ) குருவழி	—	162
ஆ) அங்கியிற் பஞ்சு	—	168
இ) மெய்யகம்	—	171
ஈ) கண்ணாடி	—	174
உ) சூனிய காலமறிதல்	—	177
ஊ) சிவயோக நிலை	—	181
எ) ஞான நிலை	—	186
ஏ) ஞானம் பிரியாமை	—	191
ஐ) மெய்ந்நெறி	—	193
ஒ) துரிய தரிசனம்	—	197
ஓ) உயர் ஞான தரிசனம்	—	199

அடுக்கு நிலைபோதம்	—	203
உபநிடதமும் ஒளிவழிபாடும்	—	206
பகவான் வைகுண்டர் அருள் நூல்	—	217

ஜோதி உபதேச மாலை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

சற்குரு வணக்கம்

திருக்கயிலாய பரம்பரையில்
திருவள்ளுவனாரின் மரபுதித்த
திருப்பாலயானந்த சுவாமிகளின்
திருவடிகள் யாம் போற்றுதுமே!
திருவடிகள் வழி திருசெயவீராதி
நாயக சுவாமிகள் பொற்பாதம்
திருமலர்த்தூவி போற்றுதுமே!
தமிழாலமுதால் போற்றுதுமே!
திருச்சிராப்பள்ளி திருச்சித்தர்
சின்னக்கடைத்தெரு பெருஞானி
அருட்பெருவள்ளல் எம்ஆசான்
சோதி ராமசாமி தேசிகரின்
திருவடிகள் சிர மேற்றி சோதி
நித்தியானந்தம் போற்றுதுமே!
அருட்பெருஞ்சோதி ஆண்டவனின்
அருளேயெம் துணை போற்றுதுமே!
நின்னைப் போற்றும் ஆற்றல் தன்னை
என்னுள் அளித்த இறைவா போற்றி!
பொன்னும் பொருளும் புகழும் இகமும்
எல்லாம்உன் விளையாடல் போற்றி!
மண்ணும் விண்ணும் தீயும் காற்றும்
தண்ணீர் ஆனாய் தலைவா போற்றி!
எண்ணில் சீவர்கள் கண்ணில் உறையும்
இறைவா போற்றி! போற்றி!! போற்றி!!!

திருஅருட்பா

வாரணத்தானை யயனை விண்ணோரை மலர்க்கரத்து
வாரணத்தானை மகத்து வென்றோன் மைந்தனைத் துவச
வாரணத்தானை துணைநயந்தானை வயலருணை
வாரணத்தானை திறைகொண்ட யானையை வாழ்த்துவனே.
எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே ஏத்து.

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்
றென்று வருமோ அறியேன் என்கோவே- துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்குஞ் சுகம்.

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்- கண்மணியாம்
நங்கள் இராமலிங்க நல்ல அருட்பா முறையைத்
துங்கமுற மாண தொழு.

சற்குருநாதா சற்குருநாதா சன்மார்க்க
சங்கம் தழைக்க அருள்தா தா.

ஜீவகாருண்யமே மோட்சத்தின் திறவுகோல்

உலகத்தில் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள், இந்தப் பிறப்பினால் அடையத்தக்கத் தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகத்தைக் காலமுள்ள பொழுதே விரைந்து அறிந்து அடைய வேண்டும்.

(1) மனித தேகம் மற்ற ஜீவதேகம் போல் இலேசிலே எடுக்கக் கூடாதாகலாலும், மனித தேகத்தில் ஆன்ம விளக்கமும், அருள் விளக்கமும் மிகவும் விளங்குதலாலும், (2) இந்த மனித தேகம் போனால், மீளவும் இந்தத்தேகம் வருமென்கிற நிச்சயமில்லாமையாலும், (3)இந்த மனிததேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும், (4) இந்த மனித தேகம் மாத்திரமே முதற் சிருஷ்டி தொடங்கி கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்தஅறிவுடைய தேகமாதலாலும், (5) மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற ஜீவகாருண்ய விதியைப் பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்க வேண்டுமென்றும், கடவுள் விதித்திருக்கின்ற படியால், பசியை ஆகாரத்தினால் நிவர்த்தி செய்விக்கின்ற ஜீவகாருண்ய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டுமென்றும் அறிய வேண்டும்.

ஒரு ஜீவனைக் கொன்று ஒரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருண்ய ஒழுக்கமேயல்லவென்றும் கடவுள் சம்மதமும் அல்லவென்றும் இவைகட்கு முழு விரோதமென்றும் அறிய வேண்டும்.

சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசிநிவர்த்தி செய்து கொள்ளத்தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது பசி நிவர்த்தி செய்விப்பதே-ஜீவகாருண்யம்.

ஆதலின் ஜீவகாருண்யமென்கிற மோட்ச வீட்டுத் திறவுக்கோலைக் காலமுள்ளபோதே சம்பாதித்துக்கொண்ட சமுசாரிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து, அவ்விட்டுக் கதவைத்

திறந்து கொண்டு, உள்ளே புகுந்து, நித்திய முக்தர்களாய் வாழ்வார்கள்.

ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுளருக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாகவும், நினைக்கப்படாது, ஜீவகாருண்யமில்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம் பிரயோஜனமில்லாத மாயாஜாலச் செய்கைகளேயாகும் என்று அறிய வேண்டும்.

ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகளும் அஜாக்கிரதையினாலும், ஊழ்வகையினாலும் சத்தியமாக வராது.

ஜீவகாருண்ய வொழுக்கம் உடையவர்களாகி ஜீவர்களை பசியென்கின்ற அபாயத்தில் நின்றும், நீங்கச் செய்கின்ற உத்தமர்கள் எந்த ஜாதியாராயினும், எந்த சமயத்தாராயினும், எந்த செய்கையையுடையவர்களாயினும், தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும், வணங்கத்தக்க சிறப்புடையர் ஆவார்களென்று சர்வ சக்தியையுடைய, கடவுள் சாட்சியாக சத்தியஞ் செய்யப்படுமென்று அறிய வேண்டும்.

உபதேச உண்மை

ஒளியே யவ்வொளியின்-நடு-உள்ளொளிக் குள்ளொளியே
வெளியே யெவ்வெளியு-மடங்-கின்ற வெறு வெளியே
தளியே யம்பலத்தே-நடஞ்-செய்யுந் தயாநிதியே
அளியே தந்தனையே-யரு-ளாரமு தந்தனையே.

கண்ணே கண்மணியே-கருத்-தேகருத் தின்கனிவே
விண்ணே விண்ணிறைவே-சிவ-மேதனி-மெய்ப்பொருளே
தண்ணே ரொண்மதியே-யெனைத்-தந்த தயாநிதியே
உண்ணே ருள்ளொளியே-யெனக்-குண்மை யுரைத்தருளே.

துப்பார் செஞ்சுடரே-யருட்-ஜோதி சுகக்கடலே
அப்பா வென்னரசே-திரு-வம்பலத் தாரமுதே
இப்பாரிற் பசிக்கே-தந்த-இன்சுவை நல்லுணவே
ஒப்பா வொப்பரியாய்-எனக்-குண்மை யுரைத்தருளே.

நந்நா லுங்கடந்தே-யொளிர்-ஞான சபாபதியே
பொன்னா ருஞ்சபையாய்-அருட்-பூரண புண்ணியனே

என்னா லாவதொன்றும்-உனக்-கில்லையெ னினு மெந்தாய்
உன்னால் வாழுகின்றேன்-எனக்-குண்மை யுரைத்தருளே.

சரணடைதல்

எண்ணா நின்றே னெண்ண மெலா மெய்த வருள்செய் கின்றதனித்
தண்ணா ரமுதே சிற்சபையிற் றனித்த தலைமைப் பெருவாழ்வே
கண்ணா ரொளியே யொளியெல்லாங் கலந்த வெளியே கருதுறுமென்
அண்ணா வையா வம்மாவென் னப்பா யானுன் னடைக்கலமே.

திரைசேர் மறைப்பைத் தீர்த்தெனக்கே தெரியாவெல்லாந் தெரிவித்துப்
பரைசேர் ஞானப் பெருவெளியிற் பழுத்த கொழுத்த பழந்தந்தே
கரைசே ரின்பக் காட்சியெலாங் காட்டிக் கொடுத்தே யெனையாண்ட
அரைசே யையா வம்மாவென் அப்பா யானுன் னடைக்கலமே.

தேனே யமுதே சிற்சபையிற் சிவமே தவமே செய்கின்றோர்
ஊனே புகுந்த வொளியேமெய் யுணர்வே யென்றனுயிர்க்குயிராம்
வானே யென்னைத் தானாக்கு வானே கோனே யெல்லாம்வல்
லானே யையா வம்மாவென் அப்பா யானுன் னடைக்கலமே.

கடையே னுள்ளக் கவலையெலாங் கழற்றிக் கருணை யமுதளித்தென்
புடையே யகத்தும் புறத்துமகப் புறத்தும் விளங்கும் புண்ணியனே
தடையே தவிர்க்குங் கனகசபைத் தலைவா ஞான சபாபதியே
அடியே னுலகை யுனையடைந்தேன் அடியே னுன்ற னடைக்கலமே.

இகத்தும் பரத்தும் பெரும்பலன்கள் எல்லாம் பெறுவித் திம்மையிலே
முகத்தும் முளத்தும் களிதுளும்ப மூவா வின்ப நிலையமர்த்திச்
சகத்து ள்ளவர்கண் மிகத்துதிப்பத் தக்கோ எனவைத் தென்னுடைய
அகத்தும் புறத்தும் விளங்குகின்றோய் அடியேனுன்ற னடைக்கலமே.

நீண்ட மறைக ளாகமங்கள் நெடுநாள் முயன்று வருந்தி நின்று
வேண்ட வவைகட் கொரு சிறிதும் விளங்கக் காட்டாதென் மொழியைப்
பூண்ட வடியை யென்றலைமேற்பொருந்தப் பொருத்தி யென்றன்னை
ஆண்ட கருணைப் பெருங்கடலே அடியே னுன்ற னடைக்கலமே.

பாடுஞ் சிறியேன் பாட்டனைத்தும் பலிக்கக் கருணை பாலித்துக்
கோடு மனப்பேய்க் குரங் காட்டங் குலைத்தே சீற்றக் கூற்றெழித்து
நீடு முலகி லழியாத நிலைமே எனைவைத் தென்னுளத்தே
ஆடுங் கருணைப் பெருவாழ்வே அடியே னுன்ற னடைக்கலமே.

கட்டுக் கடங்கா மனப்பரியைக் கட்டுமிடத்தே கட்டுவித்தென்
மட்டுக் கடங்கா வாங்கார மதமா வடங்க வடக்குவித்தே
எட்டுக் கிசைந்த விரண்டுமெனக் கிசைவித் தெல்லா வின்னமுதம்
அட்டுக் கொடுத்தே யருத்துகின்றோ யடியே னுன்ற னடைக்கலமே.

புல்லுங் களபப் புணர்முலையார் புணர்ப்பும் பொருளும் பூமியுமென்
தொல்லு முலகப் பேராசை யுவரி கடத்தி யெனது மனக்
கல்லுங் கனியக் கரைவித்துக் கருணை யமுதங் களித்தளித்தே
அல்லும் பகலு மெனதுளத்தே அமர்ந்தோ யானுன் னடைக்கலமே.

பிச்சங் கவரி நிழற்றியசைத் திடமால் யானைப் பிடரியின்மேல்
நிச்சம் பவனி வருகின்ற நிபுண ரெல்லாந் தொழுதேத்த
எச்சம் புரிவோர் போற்றவெனை ஏற்றா நிலைமே லேற்றுவித்தென்
அச்சம் தவிர்த்தே யாண்டு கொண்டாய் அடியே னுன்ற னடைக்கலமே.

இருளைக் கெடுத்தெ னெண்ணமெலாம் இனிது முடிய நிரம்புவித்து
மருளைத் தொலைத்து மெய்ஞ்ஞான வாழ்வையடையும் வகைபுரிந்து
தெருளைத் தெளிவித் தெல்லாஞ்செய் சித்தி நிலையைச் சேர்வித்தே
அருளைக்கொடுத்தென் றனையாண்டோய்அடியேனுன்றனடைக்கலமே

அனுபவமாலை

என்னிருகண் மணியனையா ரென்னுயிர் நாயகனார்
என்னுயிருக் கமுதானா ரெல்லாஞ்செய் வல்லார்
பொன்னணிபொற் சபையாளர் சிற்சபையா ரென்னைப்
புறம்புணர்ந்தா ரகம்புணர்ந்தார் புறத்தகத்தும் புணர்ந்தார்
அன்னியரல் லடியவரே யெனதுகுல தெய்வம்
அருந்தவத்தாற் கிடைத்தகுரு வாகுமது மட்டோ
மன்னுறுமென தனித்தாயுந் தந்தையுமங் கவரே
மக்கள் பொருள் மிக்கதிரு வொக்கலுமங் கவரே.

சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகளெல்லாம் பாத்திரமன் றெனவே
ஆதியிலென் னுளத்திருந்தே யறிவித்த படியே
அன்பாலின் றுண்மைநிலை யறிவிக்க வறிந்தேன்
ஓதியுணர்ந் தோர்புகழும் சமரச சன்மார்க்கம்
உற்றேன் சிற்சபைகாணப் பெற்றேன் மெய்ப் பொருளாஞ்
சோதி நடத் தரசையென்ற னுயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவையுள்ளே பெற்றுமகிழ்ந் தேனே.

அருட்பெருஞ்சோதி

மனமகிழ் தேன்மன மாயையை நீக்கினன் மாநிலத்தே
சினமொடுங் காமமுந் தீர்த்தேனெல் லாம் வல்லசித்தும் பெற்றேன்
இனமிகுஞ் சுத்தசன் மார்க்கப் பெருநெறி யெய்திநின்றேன்
கனமிகு மன்றி னருட்பெருஞ் ஜோதியைக் கண்டு கொண்டே.

கண்டேன் அருட்பெருஞ் சோதியைக் கண்களிற் கண்டுகளி
கொண்டேன் சிவானந்தக் கூத்தாடிக் கொண்டிக் குவலயத்தே
தொண்டே திருவம்ப லந்தனக் காக்கிச் சுகவமுதம்
உண்டே னுயிர்தழைத் தோங்குகின் றேனுள் ளுவப்புறவே.

ஒன்றே சிவமென் றுணர்ந்திவ் விலகமெலாம்
நன்றே யொருமையுற்று நண்ணியே-மன்றே
நடம்புரியும் பாதநளின மலர்க்குள்ளம்
இடம்புரிக வாழ்க விசைந்து.

- சமரசநிலை

கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேனெக் காலமுஞ் சாகாம லோங்குமொளி வடிவம்
பெற்றே னுயர்நிலை பெற்றே னுலகிற்பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேயென் பற்றெனப் பற்றினனே.

- வேண்டுகோள்.

அருட்பெருஞ் ஜோதியென் னாருயி ரிற்கலந் தாடுகின்ற
அருட்பெருஞ் ஜோதியெ னன்பிற் கலந்தறி வாய்விளங்கும்
அருட்பெருஞ் ஜோதிதென் னாரமு தாகியுள் அண்ணிக்கின்ற
அருட்பெருஞ் ஜோதிநின் னாசையொன் றேயென்னு ளார்கின்றதே.

கைம்மாறின்மை

கடுத்த மனத்தை யடக்கியொரு கணமு மிருக்க மாட்டாதே
படுத்த சிறியேன் குற்றமெலாம் பொறுத்தென் னறிவைப் பலநாளுந்
தடுத்த தடையைத் தவிர்த்தென்றுஞ் சாகா நலஞ்செய் தனியமுதங்
கொடுத்த குருவே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

மருவு முலக மதித்திடவே மரண பயந்தீர்த் தெழிலுறுநல்
உருவும் பொருளொன் றெனத்தெளிந்த வுணர்வுமென்று மூலவாத
திருவும் பரம சித்தியெனுஞ் சிறப்பு மியற்கைச் சிவமெனுமோர்
குருவுங் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மாறேது கொடுப்பேனே.

தோலைக் கருதித் தினந்தோறுஞ் சுழன்று சுழன்று மயங்குமந்த
வேலைக் கிசைந்த மனத்தைமுற்று மடக்கி ஞான மெய்ந்நெறியிற்
கோலைத் தொலைத்துக் கண்விளக்கங் கொடுத்து மேலும் வேகாத
காலைக் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

மண்ணுள் மயங்கிச் சுழன்றோடு மனத்தை யடக்கத் தெரியாதே
பெண்ணுள்மயலைப்பெருங்கடல்போல் பெருக்கித்திரிந்தேன் பேயேனை
விண்ணின் மணிபோன் றருட்ஜோதி விளைவித் தாண்ட வென்னுடைய
கண்ணுள் மணியே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

தனியே கிடந்து மனங்கலங்கித் தளர்ந்து தளர்ந்து சகத்தினிடை
இனியே துறுமோ யென்செய்வேன் எந்தா யெனது பிழை குறித்து
முனியே லெனநான் மொழிவதற்கு முன்னே கருணை யமுதளித்த
கனியே கரும்பே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

பெண்ணே பொருளே யெனச்சுழன்ற பேதைமனத்தாற் பெரிதுழன்று
புண்ணே யெனுமிப் புலையுடம்பிற் புகுந்து திரிந்த புலையேற்குத்
தண்ணேர் மதியின் னமுதளித்துச் சாகா வரந்தந் தாட்கொண்ட
கண்ணே மணியே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

நடராஜபதி மாலை

பேருற்ற வுலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப் புற்ற பிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென வுணர்ந்திடா துயிர்கள் பல
பேதமுற் றங்கு மிங்கும்
போருற் றிறந்துவீண் போயினா ரின்னும்வீண்
போகாத படிவி ரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை யுணர்த்தி யெல்லாம்
ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதி நீ
யென்பிள்ளை யாதலாலே
இவ்வேலை புரிகவென் றிட்டன மனத்தில்வே
றெண்ணற்க வென்ற குருவே
நீருற்ற வொள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திரு ளகற்று மொளியே
நிர்க்குணா னந்தபர நாதாந்த வரையோங்கு
நீதி நடராஜ பதியே.

எய்ப்பற வெனக்குக் கிடைத்த பெருநிதியமே
எல்லாஞ்செய் வல்லசித்தாய்
என்கையி லகப்பட்ட ஞானமணி யேயென்னை
எழுமையும் விடாத நட்பே
கைப்பறவெ னுள்ளே இனிக்கின்ற சர்க்கரைக்
கட்டியே கருணை யமுதே
கற்பக வனத்தே கனிந்தகனி யேயெனது
கண்காண வந்த கதியே
மெய்பய னளிக்கின்ற தந்தையே தாயேயென்
விளைவேயென் மெய்ம்மையுறவே
துய்ப்புறுமெ னன்பான துணையேயென் னின்பமே
சுத்தசன் மார்க்க நிலையே
துரியவெளி நடு நின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிநட ராஜ குருவே.

சற்குரு மணிமாலை

மாற்றறி யாத செழும்பசு பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாத பெருந்தவ ருள்ளக்
கோயி லிருந்த குணப்பெருங் குன்றே
வேற்ற றியாதசிற் றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறி யாதவென் சாற்றுங் களித்தாய்
தனிநட ராஜவென் சற்குரு மணியே.

கற்கரை யும்படி கரைவிக்குங் கருத்தே
கண்மணி யேமணி கலந்த கண்ணொளியே
சொற்கரை யின்றிய வொளியினுள் வொளியே
துரியமுங் கடந்திட்ட பெரியசெம் பொருளே
சிற்கரை திரையறு திருவருட் கடலே
தெள்ளமு தேகனி யேசெழும் பாகே
சர்க்கரை யேயது சார்ந்த செந்தேனே
தனிநட ராஜவென் சற்குரு மணியே.

என்னுயி ரேயென தின்னுயிர்க் குயிரே
என்னறி வேயென தறிவினுக் கறிவே
அன்னையி லினியவென் னம்பலத் தமுதே
அற்புத மேபத மேயென தன்பே

பொன்னினணி அடிமலர் முடிமிசை பொருந்தப்
பொருந்திய தயவுடைப் புண்ணியப் பொருளே
தன்னிய லறிவருஞ் சத்திய நிலையே
தனிநட ராஜவென் சற்குரு மணியே.

சாகாத தலையிது வேகாத காலாந்
தரமிது காணெனத் தயவுசெய் துரையே
போகாத புனலையுந் தெரிவித்தென் னுளத்தே
பொற்புற வமர்ந்தோ ரற்புதச் சுடரே
ஆகாத பேர்களுக் காகாத நினைவே
ஆகிய வெனக்கென்று மாகிய சுகமே
தாகாத லெனத்தருந் தரும சத்திரமே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே.

சந்திர சூரிய ரொளிபெற விளங்குந்
தனியருட் பெருவெளித் தலத்தெழுஞ் சுடரே
வந்திர விடையெனக் கருளமு தளித்தே
வாழ்கவென் றருளிய வாழ்முதற் பொருளே
மந்திர மேயெனை வளர்க்கின்ற மருந்தே
மாநிலத் திடையெனை வருவித்த பதியே
தந்திரம் யாவையு முடைய மெய்ப்பொருளே
தனிநட ராஜவென் சற்குரு மணியே.

தான் பெற்ற பேறு

மனமெனுமோர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போ லெனை நினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுறவென் சொல்வழியே யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடுநீ யென்சொல்வழி யேற்றிலையா னாலோ
தினையளவுன் னதிகாரஞ் செல்லவொட்டே னுலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் றிருவருளாற் கணத்தே
நனவிலெனை யறியாயோ யாரெனவிங் கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே.

அகங்கார மெனும் பொல்லா அடவாதிப் பயலே
அடுக்கடுக்கா யெடுக்கின்றா யடுத்துமுடுக் கின்றாய்
செகங்காணத் தலைகாலுந் தெரியாம லலைந்து
திரிகின்றாய் நின்செ பந்தான் சிறிதும்நட வாது
இகங்காண வடங்குகநீ யடங்காயேற் கணத்தே
இருந்த விடந்தெரியாதே யெரிந்திடச் செய்திடுவேன்

சுகங்காண வென்றனை நீயறியாயோ நான்றான்
சுத்த சிவ சன்மார்க்கம் பெற்ற பிள்ளை காணே.

உய்வகை கூறல்

ஆதி யுமந்தமு மில்லாதோ ரம்பலத் தாடும்
சோதி தன்னையே நினைமின்கள் சுகம்பெற விழைவீர்
நீதி கொண் டுரைத் தேனிது நீவிர்மே லேறும்
வீதி மற்றைய விதிகள் கீழ்ச்செலும் வீதி.

நாதஞ் சொல்கின்ற திருச்சிற்றம் பலத்திலே நடிக்கும்
பாதஞ் சொல்கின்ற பத்தரே நித்தரென் றறிமின்
வேதஞ் சொல்கின்ற பரிசிது மெய்ம்மையான் பக்க
வாதஞ் சொல்கிலே ன்நடுநின்று சொல்கிறேன் மதித்தே.

ஆக மாந்தமும் வேதத்தி னந்தமும் அறையும்
பாக மாம்பர வெளிநடம் பரவுவீ ருலகீர்
மோக மாந்தருக் குரைத்திலே னிதுசுக முன்னும்
யோக மாந்தர்க்குக் காலமுண் டாகவே யுரைத்தேன்.

அருள்வி ளங்கிய திருச்சிற்றம் பலத்திலே யழியாப்
பொருள்வி ளங்குதல் காண்மினோ காண்மினோ புவியீர்
மருள்உ ளங்கொளும் வாதனை தவிர்ந்தருள் வலத்தால்
தெருள்வி ளங்குவீர் ஞானசன் மார்க்கமே தெளிமின்.

உறுதி கூறல்

கட்டோட கனத்தோடே வாழ்கின்றோ மென்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவு நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே யிரண்டு சேர்த்தெண்ணவும் மறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

பண்ணாத தீமைகள் பண்ணுகின் றீரே
பகராத வன்மொழி பகருகின் றீரே
நண்ணாத தீயின் நண்ணுகின் றீரே.
நடவாத நடத்தைகள் நடக்க வந் தீரே.

கண்ணாகக் காக்கின்ற கருத்தினை நினைந்தே
கண்ணார நீர்விட்டுக் கருதறி யீரே
எண்ணாத தெண்ணவு நேருமோர் காலம்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே.

சுத்தசிவ நிலை

கண்ணிற் கலந்தான் கருத்திற் கலந்தானென்
எண்ணிற் கலந்தே யிருக்கின்றான் - பண்ணிற்
கலந்தானென் பாட்டிற் கலந்தா னுயிரிற்
கலந்தான் கருணை கலந்து

எல்லாநலமு மெனக்கே கொடுக்கின்றான்
எல்லாஞ்செய வல்லானெம் பெருமான் - எல்லாமாய்
நின்றான் பொதுவில் நிருத்தம் புரிகின்றான்
ஒன்றாகி நின்றா னுவந்து.

எண்ணுகின்றே னெண்ணங்க ளெல்லாந் தருகின்றான்
பண்ணுகின்றேன் பண்ணுவித்துப் பாடுகின்றான் - உண்ணுகின்றேன்
தெள்ளமுத முள்ளந் தெளியத் தருகின்றான்
வள்ளல்நட ராயன் மகிழ்ந்து.

சித்தியெலாந் தந்தே திருவம் பலத்தாடும்
நித்தியனென் னுள்ளே நிறைகின்றான்-சத்தியமீ
தந்தோ வுலகீ ரறியீரோ நீவிரெலாஞ்
சந்தோட மாயிருமின் சார்ந்து.

நானேவந் தென்னுளத்தே சார்ந்து கலந்துகொண்டான்
தானே யெனக்குத் தருகின்றான் - தானேநான்
ஆகப் புரிந்தானென் னப்பன் பெருங்கருணை
மேகத்திற் குண்டோ விளம்பு.

பாலுங் கொடுத்தான் பதிதிறக்கு மோர்திறவு
கோலுங் கொடுத்தான் குணங்கொடுத்தான் - காலுந்
தலையு மறியுந் தரமுங் கொடுத்தான்
நிலையுங் கொடுத்தா னிறைந்து.

நானே தவம்புரிந்தே னானிலத்தீ ரம்பலவன்
தானே வந்தென்னைத் தடுத்தாண்டான் - ஊனே
புகுந்தானென் னுள்ளம் புகுந்தா னுயிரிற்
புகுந்தான் கருணை புரிந்து.

ஒன்றே சிவமென் றுணர்ந்தே னுணர்ந் தாங்கு
நின்றே மெய்ஞ்ஞான நிலைபெற்றேன் - நன்றேமெய்ச்
சித்தியெலாம் பெற்றேன் திருவம் பலத்தாடி
பத்தியெலாம் பெற்ற பலன்.

தூக்கங் கெடுத்தான் சுகங்கொடுத்தா னென்னுளத்தே
ஏக்கந் தவிர்த்தா னிருளறுத்தான் - ஆக்கமிகத்
தந்தா னெனை யீன்ற தந்தையே யென்றழைக்க
வந்தா னென்னப்பன் மகிழ்ந்து.

சுத்த வடிவுஞ் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவு நிறைந்தோங்கு - சித்தெனுமோர்
ஞான வடிவுமிங்கே நான்பெற்றே னெங்கெங்கும்
தான விளை யாட்டியற்றத் தான்.

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்சொல் வார்த்தையன்றி
நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டீர்நான் - ஏனுரைப்பேன்
நானாரெனக் கெனவோர் ஞானவுணர் வேதுசிவம்
ஊனாடி நில்லா வுழி.

ஆரணமு மாகமமு மாங்காங் குரைக்கின்ற
காரணமுங் காரியமுங் காட்டு வித்தான் - தாரணியிற்
கண்டேன் களிக்கின்றேன் கங்குல்பக லற்றவிடத்
துண்டே னமுத முவந்து.

சாத்திரங்க ளெல்லாந் தடுமாற்றஞ் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே - நேத்திரங்கள்
சிற்றம்பலவன் திருவருள்சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிந்தே னுவந்து.

வேதா கமங்களென்று வீண்வாத மாடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்னவலா லுண்மைவெளி தோன்ற வுரைத்தலிலை
என்ன பயனோ விவை.

சாகாத கல்வித் தரமறிதல் வேண்டுமென்றும்
வேகாத காலுணர்தல் வேண்டுமுடன் - சாகாத்
தலையறிதல் வேண்டுந் தனியருளா லுண்மை
நிலையடைதல் வேண்டும் நிலத்து.

சிற்சபைக் கண்ணும் பொற்சபைக் கண்ணுந்
திரு நடம்புரியுந் திருநட ராஜ
எனக்கருள் புரிந்த நினக்கடி யேன்கைம்
மாற்றை யறிந்திலன் போற்றிநின் னருளே.

ஞான சரியை

கண்டதெலா மனித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலா மலமேயுட் கொண்டதெலாங் குறையே
உலகியலி ரிதுவரையு முண்மை யறிந்திலிரே
விண்டதனா லென்னினிநீர் சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியை கடைப்பிடித்து மெய்ப்பொருணன் குணர்ந்தே
எண்டகுசிற் றம்பலத்தே யெந்தையரு ளடைமின்
இறவாத வரம்பெறலா மின்பமுற லாமே.

திருநெறியொன் றேயதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமி னீண்டு
வருநெறியி லெனை யாட்கொண் டருளமுத மளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியவோர் வள்ளல்
பெருநெறியிற் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருண மிதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினாற் கருத்தொரு மித்துண்மை யுரைத்தேனே.

சத்தியவே தாந்தமெலாஞ் சித்தாந்த மெலாஞ்
தனித்தனிமே லுணர்ந்துணர்ந்துந் தனையுணர்ந்தற் கரிதாய்
நித்திய சிற்சபை நடுவே நிறைந்து நடம்புரியும்
நித்தபரி பூரணனைச் சித்த சிகா மணியை
அத்தகையோர் பெரும்பதியை யருமருந்தை யடியேன்
ஆவியையென் னாவியிலே யமர்ந்த தயாநிதியைச்
சித்தியெலா மெனக்களித்த சிவகதியை யுலகீர்
சிந்தை செய்து வாழ்த்துமினோ நிந்தையெலாந் தவிர்ந்தே.

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்றன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருண மிதுவே
வானுரைத்த மணிமன்றில் நடம்புரியெம் பெருமான்
வரவெதிர் கொண் டவனருளால் வரங்களெலாம் பெறவே
தேனுரைக்கு முளமினிக்க வெழுகின்றே னிவீர்
தெரிந்தடைந்தென் னுடனெழுமின் சித்திபெற லாகும்

ஏனுரைத்தே னிரக்கத்தா லெடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையுஞ் சுகத்தினைநீர் தானடைதல் குறித்தே.

அருள் விளக்க மாலை

கதிக்குவழி காட்டுகின்ற கண்ணேயென் கண்ணிற்
கலந்தமணி யேமணியிற் கலந்தகதி ரொளியே
விதிக்குமுல குயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே
மெய்யுணர்ந்தோர் கையகத்தே விளங்கியதீங் கனியே
மதிக்குமதிக் கப்புறம் போய் வயங்குதனி நிலையே
மறைமுடியா கமமுடிமேல் வயங்குமின்ப நிறைவே
துதிக்குமன்பர் தொழப்பொதுவில் நடம்புரியு மரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் தோளிலணிந் தருளே.

கண்களிக்கப் புகைசிறிதுங் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
பண் களிக்கப் பாடுகின்ற பாட்டில்விளை சுகமே
பத்தருளே தித்திக்கப் பழுத்த தனிப் பழமே
மண்களிக்க வான்களிக்க மணந்தசிவ காம
வல்லியென மறைகளெலாம் வாழ்த்துகின்ற வாமப்
பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே நினது
பெரும்புகழ்ச்சே வடிகளுக்கென் னரும்புமணிந் தருளே.

அறையாத மிகுபெருங்காற் றடித்தாலுஞ் சிறிதும்
அசையாதே யவியாதே யண்டபகி ரண்டத்
துறையாவும் பிண்டவகைத் துறைமுழுதும் விளங்கத்
தூண்டாதே விளங்குகின்ற ஜோதிமணி விளக்கே
மறையாதே குறையாதே களங்கமுமில் லாதே
மயக்காதே பனிக்காதே வயங்குகின்ற மதியே
இறையாய்எவ் வுயிரகத்து மகப்புறத்தும் புறத்தும்
இலங்குநடத் தரசேயென் னிசையு மணிந் தருளே.

ஒளி நிலையம் சுத்த ஞானியம்

இரவில் தீப மில்லாத இடத்தில் இருக்கக் கூடாது. அஃது பிராண நஷ்டம் பண்ணும்.

ஆதலால் நாம் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணை ஆசாரியர் அனுக்கிரகத்தால் திறக்கப் பெற்றுக் கொள்வது நலம். ஏனெனில்

மேற்படி நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப்பகல் போல் தெரியும்.
(ஆறாம் திருமுறை வசனபாகம்)

ஆனந்த மேலீடு

கையறவி லாதுநடுக் கண் புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு
ஐயர்மிக வுய்யும் வகை யப்பர் விளையாட்டு
ஆடுவதென் றேமறைகள் பாடுவது பாட்டு.

சிற்சபையும் பொற்சபையுஞ் சொந்தமென தாச்சு
தேவர்களு மூவர்களும் பேசுவதென் பேச்சு
இச்சமய வாழ் விலெனக் கென்னையினி யேச்சு
என் பிறப்புத் துன்பமெலா மின்றோட போச்சு.

ஐயரருட் ஜோதியர சாட்சியென தாச்சு
ஆரணமு மாகமமும் பேசுவதென் பேச்சு
எய்யுலக வாழ்விலெனக் கென்னையினி யேச்சு
என் பிறவித் துன்பமெலா மின்றாடே போச்சு.

ஈசனரு ளாற்கடலி லேற்றதொரு வோடம்
ஏறிக்கரை யேறினே னிருந்ததொரு மாடம்
தேசுறுமம் மாடநடுத் தெய்வ மணிப்பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்ந்ததுசந் தோடம்.

திருஅருட்பா முற்றிற்று.

திருவாசகம் நூற் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் எனும் தேன்.

ஞான எல்லையைச் சேர்ந்து நிற்பவர்களுக்கு ஞான வழியைக் காட்டும் வாதவூரராகிய எம் தலைவன் இடத்தில் நிற்கும் மணிவாசகரால் சொல்லப்பட்ட அழகியவாசகம் என்னும் இன்பத்தைக் கொடுக்கும் நூலானது, பழமையாக வந்து கொண்டிருக்கும் விலங்காகிய தடைகளை நீக்கித் துக்கத்தை ஒழித்து (என்னை) ஆனந்தமயமாக்கிவிட்டது.

குறிப்புரை: திருவாசகம் ஞான எல்லையை அடைந்தவர்களுக்கு ஞான வழியைக் காட்டி, பழமையாக வந்து கொண்டிருக்கும் சரீரத்தைச் சூழ்ந்து கொண்டு ஞான செல்வங்களை வெளிப்படுத்தாமல் பந்தித்துக் கொண்டிருக்கும் தடைகளை நீக்கித் துக்கத்தை ஒழித்து ஆனந்தமான இன்ப வெள்ளத்தில் என்னை மூழ்க வைத்தது என்பதாகும்.

ஞான எல்லை ஆசாரியன் காட்டும் இடமாகும். வாதவூர் நூலாசிரியர் தோன்றிய இடம். திருவாசகமே ஞானமணியைக் குறிக்கும். ஞான மணியின் இரகசியத்தைத் திருவாசகமாக அருளியதால் மணிவாசகர் என்ற பெயர் பொருத்தமாயிற்று.

திருவாசகம் I

ஈசன் அடிபோற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி.

பொழிப்புரை: (மேற்சொன்னபடி பெருமையை அடைந்துள்ள) சிவத்தினுடைய திருவடிகளைப் புகழ்கின்றேன். என் அப்பன் ஆகிய சிவனடியைப் புகழ்கின்றேன். தேசன் = தேஜஸை உடையவன். சீவர்களிடத்திலிருந்து அன்பையே எதிர்பார்த்து நின்ற மலம் அற்றவனாகிய சிவன் திருவடியைப் புகழ்கின்றேன். தெவிட்டாத இன்பத்தைக் கொடுக்கும் பிரணவ மலையைப் புகழ்கின்றேன்.

குறிப்பு : நேயம்=அன்பு, நிமலன்=மலம் இல்லாதவன். சீவர்கள் இடத்திலிருந்து அன்பைப் பெற்று அருளைச் சொரிபவன் ஆனதால், ''நேயத்தே நின்ற நிமலன்'' என்றார்.

கண்களிலுள்ள மாயாமலம் ஆகிய இருளானது, சீவர்களை அஞ்ஞானத்தில் ஈடுபட்டிடச் செய்வதனாலும், அஞ்ஞானத்திற்கு மூல வித்தாகிய இருட்டை ஒழிக்க சிவ ஒளியே காரணமாய் இருத்தலாலும், ''மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன்'' என்றார்.

தேசத்திற்கு ஒரு அரசன் இருப்பது போல, தேகத்திற்கு அரசன் சிவமாதலால் ''மன்னன்'' என்றார்.

பெருந்துறை=பெரிய வழி. அந்தப் பெரிய வழியைக் கண்டால் தான் தெய்வங்களையும், தெய்வ சத்திகளையும் தெய்வீகப் பொருள்களையும், சீவாத்ம பரமாத்ம சொரூபங்களையும் காண முடியும். அது இதயக்குகை, இருதய கமலம், உந்திக்கமலம், நாபிப்பிரதேசம், மணிபூரகம், நடுஎன்றும் சொல்லப்படுகின்றன. பிரணவத்தின் மத்திய பாகமாகிய ஆயிரத்தெட்டு இதழ்களோடு கூடிய சகஸ்ரார கமலமாகிய இருதயமாகும். அதை உலகத்தார்க்கு சாட்சியாகக் காட்டவே, பெருந்துறை என்னும் இடத்தைக்காட்டி இருக்கின்றார்கள். அதனையே, ''சீரார் பெருந்துறை நம் தேவன்'' என்றார்.

தெய்வப் பொருள்களும், தெய்வங்களும் உலகமும் கூடியுள்ள பிரணவ மேருவில் சாதகர்கள் சென்று அவற்றை வெளிப்படுத்திப் பார்ப்பதானால் அந்த பிரணவமானது தெவிட்டாத இன்பத்தைக் கொடுக்கிறது. இது பற்றியே, ''ஆராத இன்பம் அருளும் மலை'' என்றார்.

சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉணரப் பனியான்

பொழிப்புரை: சிவனாகிய அவன் என்னுடைய சித்தத்திற்கு உள்ளேயே நிற்பதனால் அவனுடைய அருட்பிரகாசத்தை அடக்கிக் கொண்டிருக்கும் திருவடிகளைக் கொண்டு ஞான கர்மத்தைச் செய்து அதனால் என் சிந்தையானது மகிழ்ச்சி அடையவும், சிவத்தின் பழமையாகிய ஞான முறைகள் வெளிப்படவும், பழவினைகள் முழுவதும் முடிவை அடையவும் ஒரு நூலைச் சொல்கின்றேன்.

2

குறிப்புரை : சிவ சிந்தையின் பலத்தினால் சிவன் சிந்தையில் கலந்து இருக்கின்றான் என்பது தோன்ற ''சிவன் அவன் என் சிந்தையுள் என்ற'' என்றார் திருவடிகளை வணங்குவது என்பது, திருவடிகளை அவற்றுள் அடங்கி இருக்கும் கலைகள் பிரகாசிக்குமாறு பக்குவமாக வெளிப்படுத்துவதே ஆகும். வணக்கம் என்ற பதமே வணங்குவது என்று பழக்கமாக வழங்கிக் கொண்டிருக்கிறது.

திருவடிகள் இரண்டு. அவை வாக்குக்கும், மனத்திற்கும் எட்டாதவை. ஆசாரியன் காட்டினால் தான் அவை பிரகாசத்தோடு தெரியும். கையினால் தொடுவதற்கு இலாதவை. தெய்வீகப் பொருள் ஆனதால், ''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்றார். திருவடிகளைப் பக்குவப்படுத்துவதனால் உண்டாகும் ஆனந்தத்தையே ''சிந்தை மகிழ'' என்றார்.

முந்தை வினை என்பது தன் உற்பத்திக்கு மூலகாரணமாய் இருந்த தகப்பன், பாட்டன், முப்பாட்டன் என வந்தவர்களின் வினையே ஆகும். 'முழுதும் என்பதனால்'' தன்னால் ஏற்பட்ட வினைகளும் பெறப்பட்டது. தன் வினையும், பழ வினைகளும் ஒழியச் செய்வதற்கு ஞான கர்மம் ஒன்றினால் மாத்திரம் முடியும். ஆகையால் அதற்காகத்தான் அனுபவித்த அனுபவங்களைத் திரட்டி சிவனுடைய வழியை ஞானிகள் கையாண்டு வந்திருக்கும் முறையில் சிவ புராணமாகச் சொல்கிறேன் என்பது தோன்ற ''சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுவதும் ஓய உரைப்பனியான்'' என்றார்.

வினைகளைப்பற்றி,

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே. 2611

என்றார் திருமூலர்.

கண்ணுதலான் தன் கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்.

பொழிப்புரை: நான் ஞான கர்மாவுக்காக ஏற்பட்ட பார்வையை உபயோகிக்கும்போது, நெற்றிக்கண்ணுடைய பரமசிவன் கிருபையுடன் என்னிடம் வந்து நிற்க மனத்திற்கு எட்டாத அழகு நிறைந்த திருவடி

களைக் கொண்டு ஞான கர்மத்தைச் செய்து, ஆகாயத்தில் நிறைந்தும், பூமியில் நிறைந்தும் மிகுதியாய் உள்ள இடங்களில் வியாபித்தும் விளங்குகின்ற ஒளிவடிவே! கணக்கும் முடிவும் இல்லாதசிவனே! உன்னுடைய பெருமை பொருந்திய சிறப்பை ஞான விரோதமான வினையையுடைய யான் புகழும் வழி ஒன்றும் அறியேன்.

குறிப்புரை: மனோ வாக்கிற்கு எட்டாமலும், ஆகாயம் பூமி இவற்றில் நிறைந்தும் நின்ற பரமனை இடையூறு இல்லாமல் முடிவு பெறத் துதித்தார்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

பொழிப்புரை: புல், பூண்டு, புழு, மரம், பலவகையான விலங்குகள், பறவைகள், பாம்புகள், கற்கள், மனிதர், பேய், கணங்கள், வல்லமையுள்ள அசுரர், முனிவர் அசையா நாட்டத்தவர் என்றும் இவ்விதமாக உதிப்பதும் ஒடுக்குவதுமாய் இருக்கின்ற இத்தாவர சங்கமங்களில் வேறு வேறாய்த் தோன்றுகின்ற எல்லாப் பிறப்புக்கும் வித்தாக இருக்கின்ற நாத விந்தாகிய யான் பிறந்து துன்பப்பட்டேன்.

குறிப்புரை: ஒரு சீவன் பலவிதமான புல், பூண்டு, புழு, மரங்கள், விலங்குகள், பறவைகள், பாம்புகள், கற்கள், மனிதர், கணங்கள், முனிவர்கள், தேவர்கள் ஆகிய பிறப்புகளில் தனித்தனியாகப் பிறப்பது என்றால்சுருதி, யுக்தி அனுபவங்களுக்குப் பொருத்தமாகத் தோன்றாது. இதனை மகான்கள் ஒவ்வொருவரும் உறுதியாகச் சொல்லி இருக்கின்றார்கள்.

இஃது அறிவிற்கு எட்டுவதற்காகவே, நான் யார் என்ற விசாரணையை நடத்த வேண்டும் என்றும், விசாரணையின் முடிவில்தான் இன்னான் என்று ஏற்படும் என்றும், தன்னை அறிந்தபின் தலைவனைக் காணலாம் என்றும் சொல்லும் கூற்றைப் புல்லாகிப் பூண்டாகி என்பவற்றோடு கலந்து அனுபவத்தோடு கூடிய விசாரணையை நடத்த வேண்டும். இந்த விசாரணை நூல்களை வாசித்ததிலிருந்து தாங்கள் கைக்கொண்டும், கருத்து வேறு பாடோடுகூடியதுமான வாசா கைங்கரியம் அல்ல, பயிற்சி அனுபவங்களைக் கொண்டே அறியும் விசாரணை ஆகும். கடவுளைக் காணவில்லையே என்ற கவலையினாலே ஏற்பட்ட

விசாரணையாகும். புகழை விரும்பி விசாரிக்கும் விசாரணை அன்று. அந்த விசாரணையில் ஏற்படுவது யாதெனில் சர அசரங்களுக்கு உற்பத்தி இடமான பஞ்ச பூதங்களும் அவற்றில் கலந்திருக்கும் கடவுள் தேஜஸீம் சேர்ந்து பஞ்சபூத அமைப்பு ஏற்பட்டது. அந்த அமைப்பில் பஞ்ச பூதங்களில் தனித்தனியாக ஒவ்வொரு பூதமும் மற்ற பூதங்களில் தூல சூக்கும தேஜசுகளைக் கால இடங்களுக்குத் தக்கபடி கைகொண்டு அந்த சக்திகள் பூமி, நீர் ஆகாயங்களின் உதவியையும் வாயு, அக்கினி இவற்றின் உதவியையும் பெற ஆகாயமானது சூரிய சந்திர நட்சத்திரங் களையும் நீரானது திமிங்கலம் முதலிய ஜீவஜலராசிகளையும், நவரத்தி னங்களையும் புல்முதலிய தாவரங்களையும் சீவகோடிகளையும் படைத் திருக்கின்றன. ஒரு பூதமானது வாயு அக்கினிகளின் கலைகளாகிய தேஜஸைக் கைக்கொள்ளும்போது இம்மூன்றினுடைய சேர்க்கையால் சுக்கில, சுரோணித ரஜஸ்களை உண்டாக்கி உற்பத்தியைச் செய் கின்றது.

அதில் பூமியானது அ, உ, ம ஆகிய பீஜங்களால் குறிப்பிடும் சுக்கில சுரோணித ரஜஸ் என்னும் நாத விந்து கலைகள் ஆகிய இம் மூன்றையும் அடக்கிக் கொண்டிருக்கும் மூலிகைகளை உற்பத்தி செய்து தன்னால் உற்பத்தியான சரம் அசரங்களுக்கு உதவுகின்றன.

அந்த மூலிகைகளில் இருந்து அன்னமும், அன்னத்திலிருந்து நாத விந்துக்களும் விருத்தியாகிக் கொண்டிருக்கின்றன.

இப்போது 'நான் யார்' பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண்டான நாத விந்து களை இவையே நான் ஆகும். நானாகிய நாத விந்து களை இவையேஉலகம். ஆகையால் நான் புல் பூண்டு, புழு' மரம், பல்வகை விலங்குகள், பறவைகள், ஊர்வன, பல்வகை கற்கள், மனிதர், பேய்கணங்கள், அசுரர்கள், தேவர் ஆகியும் ''பிறந்து இளைத் தேன்' என்றார்.

மெய்யே உன்பொன் அடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
'ஐயா' என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே.

பொழிப்புரை: ஓ என் பெருமானே! உன்னுடைய பொன் போன்று பிரகாசிக்கும் திருவடிகளைக் கண்டதனால் இன்று நீ இருக்கும் இடத்தை அடைந்தேன். இஃது உண்மையே ஆகும்.

நான் ஈடேறுவதற்காக எனக்குள் பிரணவ வடிவாய் நின்ற சத்திய மானவனே! அழுக்கு அற்றவனே! இடபத்தின் மீது ஏறிச் செல்பவனே!

வேதங்கள் உன்னை ஐயா என்று அழைக்க பிரணவ உச்சியில் ஏறி அதில் மறைந்து பரவி நின்ற சூக்குமப் பொருளே!

குறிப்புரை: சிவத்தின் திருவடிகள் பொன்நிறமாக இருப்பதற்கு காரணம் அவை மண் தத்துவத்தின் மூலமாக அன்னத்தில் சம்பந்தப் பட்டு அன்னம் விந்துவாக மாறி உற்பத்தியாவதனால் திருவடிகளும் மண் தத்துவ நிறமாகிய பொன் நிறத்தை அடைந்தன. மூலமலங் களால் மூடப்பட்டிருப்பதால் திருவடிகளில் இடை இடையே அழுக்கு படிந்திருக்கும். கர்மத்தினால் அழுக்கு நீங்கி சாம்பூநத (பொன்னை) உருக்கி வார்த்தது போல் இருப்பதால் பொன்னடிகள் என்றார். திரு வடிகளைக் காணா விட்டால் வீடு இல்லை என்பது தோன்ற ''பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்'' என்றார். இஃது உண்மை என்றுதோன்ற ''மெய்யே'' என்றார். திருவடிகளினால் ஓங்கார மாகிய பிரணவத்தைக் கண்டு அதனால் ஈடேற வேண்டும் என்பது தோன்ற "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற'' என்றார்.

சரீரத்தில் இருப்பவன் ஆனதால் ''மெய்யா'' என்றார். மும்மலம் அற்ற பிறகு பிரகாசிப்பவன் ஆனதால் ''விமலா'' என்றார்.

சரீரத்தில் உள்ள ஜீவன் பசுவாகச் சொல்லப்படுவது உலகம் அறிந்தது. அந்தச் சீவனாகிய பசுவைக் காப்பாற்றி வருவது விந்துவே ஆகும். அந்த விந்துவின் கலையை எருதாகப் பெரியோர்கள் சொல்லு கின்றார்கள். விந்து கலையானது பிரணவ உச்சியில் செல்லும்போது அதன் உச்சியில் சிவன் விளங்குவதையே இடபவூர்தி என்று சொல்லப் படும். இதுவே தத்புருடமுகம் ஆகும். இதை சைவ சித்தாந்திகள் பரம சிவனுக்கு முகம் என்பர். முகமாகச் சொல்வதை விட அதனுடைய முகத் தில் வெளிப்படுபவன் என்றால் உண்மை வெளியாகும். விந்துவின் கலை சிவ ஒளியினாலே பிரிக்கப்பட்டு அதன் உச்சியிலேயே சிவம் தோன்றுவதால், ''விடைப்பாகா!'' என்றார்.

அதுவித்தி லேநின்றங் கண்ணிக்கு நந்தி
இதுவித்தி லேயுள வாற்றை யுணரார்
மதுவித்தி லேமல ரன்னம தாகிப்
பொதுவித்தி லேநின்ற புண்ணியன்தானே. -திருமந்திரம்1931

பிரணவத்தின் உச்சியின் மீது செல்வதினால் ''ஓங்கி'' என்றும் மும் மலத்தினால் மறைப்பட்டு இருப்பதினால் 'அகன்ற' என்றும் அவன் சொருபமும், அவனைக் காணும் வழியும் ஞானகர்மமும் மிக நுட்பம் ஆனதினால் 'நுண்ணியனே' என்றார்.

வெய்யாய்! தணியாய்! இயமானனாம் விமலா
பொய்யா யினஎல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

பொழிப்புரை, வெப்பம் ஆனவனே! குளிர்ச்சி ஆனவனே! பிராணன் ஆகிய மலம் அற்றவனே!

பொய் ஆகிய மும்மலம் முதலிய அஞ்ஞான தத்துவங்கள் எல்லாம் என்னை விட்டு நீங்கியபின், வெளிப்பட்டு வந்து உண்மை ஞானமாய் பிரகாசிக்கின்ற சத்தியமான சுடரே, எந்த அறிவும் இலாது எனக்கு இன்பத்தைக் கொடுக்கும் சிவனே!

அஞ்ஞானத்தைப் போக்கடிக்கும் நல்ல அறிவே, அளவும் முடிவும் இல்லாத செல்வமே!

எல்லா உலகத்தையும் படைப்பாய், காப்பாய், அழிப்பாய் அருட் கலையை விசுவாய்.

உன்னை வெளிப்படுத்தும் ஞானத் தொண்டில் ஈடுபடச் செய்து என்னை உள்ளே நுழையும்படிச் செய்வாய். வாசனையைத் தடிப்பிக்கச் செய்பவனே! தூரத்தில் இருப்பவனே! சமீபத்திலும் இருப்பவனே. நான் மாறுதலை அடையச் செய்ய, மனத்தை என்னிடம் இருந்து நீக்கி, மறைந்து இருப்பவனே!

குறிப்புரை: சிவன் அக்கினி கலைகளால் சூழப்பட்டு வெளிப்படுவதால் "வெய்யாய்" என்றும், அழுக்கற்றுப் பிராணனைப் பிரகாசிக்கச் செய்வதால், "இயமானனாம் விமலா" என்று கூறினார்.

மூல மலங்களின் குணமே மாயை, காமியம், ஆணவம் ஆகும். மாயையின் மூலவித்து கண்ணில் உள்ள இருட்டாகிய பிரம்ம கிரந்தியும் காமியத்தின் மூலவித்து விஷ்ணு கிரந்தியும், ஆணவ குணத்தின் மூல வித்து உருத்திர கிரந்தியும் ஆகும். இம்மூன்றும் மூன்று திரைகளாக நின்று ஞானச் செல்வங்களையும், தெய்வ சக்திகளையும் பந்தித்து அஞ்ஞான குணங்களைச் சீவர்களுக்குக் கொடுத்துக் கொண்டு இருப்ப

தால் மெய்யை அறியமுடியவில்லை. மெய்யை அறிய வொட்டாது செய்வதால் பொய் ஆகும். இம்மலங்களை ஒழித்த பின்பே சிவன் வெளிப்படுவான் என்பது தோன்ற ''பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி'' என்றார். சரீரத்திலுள்ள அறிவையே, 'மெய்ஞ்ஞானம்' என்றார். அறிவே ஓங்கார வடிவமானதால் அந்த இடத்தில் பிரகாசிக்கின்ற சத்தியமான சுடராகும் என்பது தோன்ற 'மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே'' என்றார்.

எந்தவித ஞானமும் இல்லாத பாமரர்களுக்கும், இன்பத்தைக் கொடுக்கக் கூடியவன் சிவன் என்பது தோன்ற, ''எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே'' என்றார். சிவன்அருளாலேயே அஞ்ஞானம் நீங்கும் என்பது தோன்ற, ''அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல் அறிவே'' என்றார்.

ஞானச் செல்வத்திற்கு அழிவும், அளவும் கிடையாது என்பது தோன்ற ''ஆக்கம் அளவு இறுதி இல்லாய்'' என்றார்.

சிவன் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியமுத்தொழிலை உடையவன் என்பது தோன்ற '' அனைத்து உலகும் ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய்'' என்றார். இதை உலகப் பொதுவாகக் கூறினார்.

ஞான, சாதனை உடையவர்களை மாத்திரம் ஞானத் தொண்டில் ஈடுபடச் செய்து, அருளைக் கொடுத்து உள்நுழையும்படிச் செய்வாய் என்பது தோன்ற, ''அருள் தருவாய் போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்'' என்றார்.

ஞான, உலக வாசனைகள் இரண்டிலும் தடிப்பு உண்டாகும்படிச் செய்பவன் என்றும், உலக வாசனைத் தடிப்புள்ளவர்களுக்குத், தூரத்தில் உள்ளவனாயும், ஞான வாசனை உள்ளவர்களுக்குச் சமீபத்தில் நெருங்கி இருப்பவனாயும் இருக்கின்றாய் என்றும் தோன்ற,

''நாற்றத்தின் நேரியாய் சேயாய்நணியானே'' என்றார்.

மனனமாகிய சங்கற்பம் இருக்கும் வரை காண முடியாது, என்றும், மனனமற்று நிற்கும் காலமே சிவம் வெளிப்படும் காலம் என்பதும் தோன்ற ''மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே'' என்றார்.

வேதங்களால் புகழப்பட்டவன் ஆதலால், ''மறையோனே'' என்றார்.

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர்ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த

பொழிப்புரை : கறந்த பாலும், கரும்பின் சாறும், நெய்யும் கலந்தது போலச் சிறப்புள்ள திருவடிகளைக் கொண்டு ஞான கர்மத்தைச் செய்பவர்களின் சிந்தனைக்குள் இன்பத்தைப்பெருக்கிக் கலந்துநின்று ஆன்மாவோடு பிறந்த அஞ்ஞான கூட்டங்களின் உற்பத்தியை ஒழிக்கும் எங்களுடைய சிவனே, நீ ஐந்து நிறங்களை அடைந்து இருக்கின்றாய்.

குறிப்புரை: அமுதத்திற்குச் சமமான கறந்த பாலையும் நாத விந்துவுக்குச் சமானமாகச் சிவப்பு வெண்மைகளைக் காட்டுங் கரும்புக்கோலையும் அதனுடைய சாரத்திற்குச் சமானமாக நெய்யையும் உவமித்து ஞான சாதனையில் சிறந்த ஞானிகளின் சிந்தனையும் அந்த மூன்றும் தங்கி இன்பத்தை வெளிப்படுத்துவதையே, ''கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச் சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று'' என்றார்.

ஆன்மாவோடு கூடப்பிறந்த பாசமாகிய மும்மலங்களையே ''பிறந்த பிறப்பு'' என்றார். ''பதியினைப்போல்பசு, பாசம், அநாதி,'' என்றார் திருமூலர். **(115)**

சிவ ஒளியினாலேயே பாசம் ஆகிய மும்மலங்கள் ஒழியும். ஆனதால், ''பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்'' என்றார்.

சுத்த வெண்மை நிறமான அருட்கலை பிரகாசிக்கும் பரமசிவத்திற்கு ஐந்து நிறங்கள் கூறியதற்கு காரணம், இந்திரியங்களாகிய ஐந்தும், ஐந்து நிறங்களோடு கூடிய தத்துவங்கள் ஆனதால் அவற்றை ஓங்கார வடிவத்தில் சேர்க்க உபதேசிக்கும் ''ஓம் நமசிவாய'' என்னும் ஐந்து எழுத்து மந்திரமே போதுமானதாய் இருக்கும் என்று இந்த அளவில் நிறுத்துகின்றேன்.

சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க.

பொழிப்புரை: சித்தமானது செல்லமுடியாத தூரத்தில் இருப்பவனைக் காண்க. பத்தி என்று சொல்லப்படும் ஞான கர்ம வலையில் அகப்பட்டுக்

கொள்பவனைக் காண்க. சத்தியோடு சம்பந்தமில்லாத பரவிந்துவான சொருபனைக் காண்க. பரந்த உலகம் முழுவதும் பரவுகின்றவனைக் காண்க.

குறிப்புரை: சிவன் சக்தியோடு சம்பந்தப்பட்ட பிறகுதான் உருவத்தோடு தோன்றுபவன் என்பது தோற்றம். சக்தியோடு சம்பந்தப்படாத பரவிந்து சொருபனையே ''ஒருவன்'' என்றார்.

சேட்சியன் = சேய்மையானவன். அதாவது தூரத்தில் இருப்பவன். சித்தத்தை அவன்பால் வைக்க வகை தெரியாதவர்களுக்கே தூரத்திலிருப்பவன் என்பது தோன்ற, ''சித்தமுஞ்செல்லாச்சேட்சியன்'' என்றார்.

பத்தி இருவகைப்படும். மனதில் செய்யும் பத்தி ஒன்று, சரீரத்தால் செய்யும் பத்தி என்று ஒரு பொருளோடு இன்னொரு பொருளைச் சம்பந்தித்து நிற்றலேயாகும். அதனால் சிவமும், ஞானசெல்வங்களும் வெளிபட்டு நிற்கும்.

சிவத்தினிடம் மனம் லயித்திருப்பதே மனோபத்தியாகும். இதுவே சர்வ சங்க பரித்தியாகமாகும். இந்த பத்தியைச் சிலர் பத்திமான்களாகத் தம்மை உலகத்தார் அறியட்டும் என்னும் எண்ணத்தோடு, கண்ணீர் விட்டழுவதும், முழக்கு, சின்னங்கள், வேடங்கள் தரிப்பது ஆகிய இவைகளைப் பத்தியாக உபயோகப்படுத்துவதுமாக இருக்கின்றார்கள். இதில் சிவன் எப்படி அகப்பட முடியும்?

தவமகம் தீர்த்தஞ் சேவை அருச்சனை தானமாதி
அவமயக் கத்தால் நீணாள் விலங்குபோ லவத்தர் வாழ்வர்
பவமுறும் இவற்றைவிட்டுப் பரிசுத்த பரம போதங்
கவரறப் பற்றி எல்லாக் காதலும் நீக்கி நிற்பாய். - வாசிட்டம்

இதுவல்லவோ பத்தியாகும். சரீரத்தினால் உண்டாகும் பத்தியே ஆசாரியன் சிரசுக்கு மேல் காட்டும் திருவடிகளையும் ஒன்றுபடுத்துவதாகும்.

''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்றார் மாணிக்க வாசகரே.

அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க

மருவிஎப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க.

பொழிப்புரை : அணு சொருபமாகிய தன்னைச் சாதகனுக்குக் காட்டி கொடுக்கும் விதத்தில் ஐயென்னும் பீஜத்தால் குறிக்கப்படும் நேத்திரத்தின் மூலமாய்ச் சிவனைக் காண்க. அருமையாகிய திருவடிகளின் இணைப்பினால் உண்டாகிய பெருமையில் சிவனைக் காண்க. அருமையாகிய பொருள்களில் அருமையான நெல்லிலிருந்து உண்டாகும் அன்னத்தில் கலந்திருக்கும் சிவனைக் காண்க. தான் எந்தப் பொருள்களிலும் கலந்து அந்த பொருளை வளர்ப்பவனைக் காண்க. நூலை வாசித்து அதனால் அடைந்த அறிவினால் அறியப்படாத அதிநுட்பமானவனைக் காண்க.

குறிப்புரை :அணு சொருபத்தைக் காட்டும் தன்மையில் உள்ளது நேத்திரம். அந்த நேத்திரத்தையே ஐயென்னும் பீஜத்தால் பெரியோர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

நம்முடைய தமிழ் பாஷையை ஏற்படுத்திய காலத்திலேயே உயிர் பன்னிரெண்டும், மெய் பதினெட்டும், ஆய்தம் ஒன்றாக மூன்று பிரிவினையையும் தெய்வ சம்பந்தமான ஆத்ம வித்தைக்கு அனுசரணையாகவும், ஆத்ம வித்தையின் ஒவ்வொரு பாகத்தைக் காட்டும்படியாகவும், அதில் சூக்கும தத்துவத்தை உயிர்பீஜங்களாகவும், தூலதத்துவத்தை மெய்பீஜங்களாகவும் இரண்டு வகையாய்ப் பிரிந்திருப்பதும் சகல ஆத்ம பொருள்களையும் வெளிப்படுத்தும் இடத்தை ஆய்த பீஜமாகவும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதற்கு திருட்டாந்தமாக அடியில் காட்டியிருப்பதைக் கவனிக்கவும். இதைக் கல்வியின் செருக்காலாவது குருட்டு யுக்தியாலாவது சொல்லவரவில்லை. அனுபவித்துப் பார்த்து அன்பர்களுக்குக்காட்டி அவர்களும் அனுபவித்த பிறகேஎழுதப் பட்டது. அ. அ என்ற இந்த பீஜமானது ஒருசுழியையும் குறுக்கு நெடுக்காக உள்ள இரண்டு கோடுகளையும் காட்டுகின்றது. மேலிருக்குஞ் சுழியானது இருதய கமலத்தைக் காட்டும்படியானது. குறுக்காக நீட்டியக் கோடு இடது பக்கத்திலிருக்கும் சந்திரகலையை வலது பக்கத்திலிருக்கும் சூரிய கலையோடு சேர்க்க நமக்குக் காட்டுகின்றது. அவ்விதம் செய்வதினால் நமக்கு ஏற்படும் பலன் நெடுக்குக் கோடாகும். இந்த நெடுக்குக்கோடு பரவிந்துவின் கலையானது — மேற்செல்லும் என்று காட்டுகின்றது. அதற்குரிய சப்தமோ மேலிருக்கும் சுழியின் வாயைத் திறக்கும்படி செய்வதைக் காட்டுவதற்கு வாயைத் திறந்து காட்டும் சத்தமேயாகும்.

இடது பக்கத்திலிருக்கும் சந்திரகலையை வலது பக்கத்திலிருக்கும் சூரிய கலையோடு சேர்த்தால் அதோ முகத்திலிருந்து பிந்து கலை மேற் செல்லும். அவ்விதம் செல்வதால் பிரணவ மத்தியில் ஞான

செல்வங்களை அடக்கி வைத்திருக்கும் இருதய குகையானது திறக்கும் என்பதைக் காட்டுவதற்கே அகார சத்தத்தையும், அகாரவுருவையும் அமைத்திருக்கின்றனர்.

சைவ சித்தாந்திகள் திருநீற்றை நெற்றியில் இடது புறத்திலிருந்து இழுத்து வலப்புறம் வரை கொண்டு போவதையும் சந்திர கலையின் நிறத்தை விபூதி காட்டுகின்றதையும் வைணவர்கள் அதோ முகத்திலுள்ள வெண்மை நிறமாகிய விந்துகலையை மேற் செலுத்தி நாத கலையில் சேர்த்து விட்டால் இருதய கமலம் திறந்து சூரிய கலையோடு சந்திரகலை சம்பந்தித்துவிடும் என்னும் கொள்கையை அனுசரிக்கின்றதையும் கவனிக்க இது விசிதமாகும். இனி ஐ என்னும் பீஜத்தைப் பற்றி யோசிப்போம்.

ஐ. இடது நேத்திரத்தின் கடைப் பாகத்திலிருந்து கோட்டை ஆரம்பித்து அதன் குவளை வரையில் ஒரு வளைவும், வலது நேத்திரத்தின் குவளையிலிருந்து கடைக்கண் வரையில் ஒருவளைவும் போட்டுப் பார்த்தால் ஐ என்னும் பீஜத்தின் மேற்பாகமும் கண்களின் மேற்பாகமும் காட்டியிருப்பது போல் அடிப்பாகத்திலும் அமைத்துப் பார்க்க நேத்திரமும் ஐ என்னும் பீஜமும் ஒன்று என்று ஏற்படுவதோடு மத்திய கோடானது மேற்பாகத்தையும், கீழ்ப் பாகத்தையும் பிரித்துக் காட்டுகின்றது. அதனுடைய சத்தமோ மேற்பல்லையும், கீழ்ப் பல்லையும் ஒன்று சேர்த்து சத்தத்தை வெளிப்படுத்துவதாகும். இதில் அநேக பொருள்களைக் காட்டும் இரகசியம் அடங்கி இருக்கின்றது.

ஐ யென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவறி வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறின் அந்நிலம்
பொய்யொன்றும் இன்றிப் புகளி தாமே. -திருமந்திரம் 2870

சிவனைக் காண்பது அவனுடைய திருவடிகள் இரண்டையும் இணைப்பதினால் தான் முடியும். திருவடிகளே அருமையும், பெருமையும் உடையன. திருவடிகளையே ஆசாரியன் சிரசின் மேல் காட்டுவது. இவற்றைச் சிவனுடைய கால்கள் என்று நினைப்பவர்களுக்கு ஒரு பயனுங் கிடைக்காது. திருவடிகளைக் காணாதவர்கள் கடவுளைக் காண போவதில்லை. அவை நாத விந்துக்களை மூலவித்தாகத் தம்முள் அடக்கிக் கொண்டு சங்கு சக்கரமாகப் பிரகாசிக்கின்றன.
அதையே, ''இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க'' என்றார்.

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்

சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே. -திருமந்திரம் 1604

இதனால் திருவடியின் பெருமை விளங்குகின்றது.

பஞ்ச பூதங்களின் கூட்டுறவால் உண்டாகும் வித்தே வரியென்பதாகும். வரி என்பது நெல். நெல்லுக்குள் இருக்கும் வித்தில் சத்தியும் சிவனும் கலந்து இருக்கின்றபடியால் அதற்கு அரிசி என்னும் பெயர் அமைந்துள்ளது. அதுவே அன்னமாகும். அந்த அன்னத்திலிருந்து தான் நாத விந்துக்கள் உண்டாகின்றன. அந்த நாத விந்துகளில் பர நாதமும், பரவிந்துவும் சம்பந்தித்திருப்பதால் தைத்ரிய உபநிடதத்தில் பிருஹுவல்லியில் அன்னத்தையே சிவமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதுவே அருமையான பொருள்களிலும் அருமையானது. வரி என்பது நெல் அதற்குள்ளாகச் சிவன் கலந்திருப்பதால் 'வரியோன்' என்றார்.

சிவம் கலக்காத பொருள் வேறு கிடையாது, என்பது தோன்றவே ''மருவியெப் பொருளும் வளர்ப்போன்' என்றார்.

உலகத்திலுள்ள வித்வான்கள் எழுதிய நூல்களை அதிகமாகக் கற்று அவற்றின் மூலமாய் கடவுளைக் காணாது மயக்கம் அடைந்தவர்களால் காண முடியாதவன் என்பது தோன்ற, ''நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க'' என்றார்.

மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க.

பொழிப்புரை: பிரணவத்தின் உச்சியிலும். அதன் மேற்பாகத்திலும் பிரணவத்தின் கீழ்ப்பாகமாகிய அதோமுகத்திலும் கலை வடிவாக விரிந்தவனைக் காண்க. முதலாக நின்ற திருவடிகளிலும், சிவ ரூபமாக நின்ற முடிவிலும், சர்வக்ஞத்துவமாய் நின்றவனைக் காண்க. முத்தியையும் அதைப் பந்தித்திருக்கும் மும்மலங்களையும் உற்பத்தி செய்தவனைக் காண்க. அசைவற்ற நிலையில் (சாதகர்களிருக்கும் போது) நிற்பவனாயும், அசைவு உண்டாகும் போது மறைந்து போகுந்தன்மையை உடையவனாயு முள்ளவனைக் காண்க. கற்ப காலத்தையும், அதன் முடிவையுங் கண்டவனைக் காண்க.

குறிப்புரை : சிவ கலையானது அடியிலிருந்து எழும்பி, மேற்சென்று துவாதசாந்தம் வரையில், ''வியாபித்தலையே'' ''மேலொடு கீழாய் விரித்தோன்'' என்றார்.

ஞானச் செல்வங்களை மறைத்துப், பந்தித்து கொண்டிருக்கும் மும் மலங்களையே, 'பந்தம்' என்றார். பசுவை ஜீவனாகவும், பதியைச் சிவனாகவும், ஜீவனையும் சிவனையும் ஒன்று சேராமல் தடுக்கும் பந் தத்தைப் பாசமாகவும் கொள்ள வேண்டும்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நில்லாவே. - திருமந்திரம் 115

என்பதைகவனிக்கவும். உலகத்தில்குடும்பத்தைப் பந்தமென்று நினைப் பதானால் அதை விட்டுத் திரியும் சன்னியாசிகளுக்கும் விவாகமில்லாமல் திரியும் சோம்பேறிகளுக்கும் மோட்சம் சித்திக்குமா? அதை அடையும் பக்குவத்திலாவது இருக்கின்றார்களா? என்பதை யோசிக்கவும். வாசா ஞானத்தைப்பேசித்திரிகின்றவர்களேகுடும்பத்தைபந்தமென்கிறார்கள். துறவு என்பதை அறியாதவர்கள் குடும்பத்தை நீக்கியபின் அவர்களின் நடையுடை பாவனைகளைக் காண, பந்தம் நீக்கியவர்களாக யாருக்கா வது தோன்றுமா ? ஆகையால் சிவத்தையும் ஞானச் செல்வங்களையும் அறியும், அறிவைப் பந்தித்திருக்கும் பாசமாகிய குணங்களுக்கு மூல வித்தாக நிற்கும் மாயாமலமாகிய இருட்டையும், காமிய மலமாகிய விஷ்ணு கிரந்தியையும், ஆணவ மலமாகிய ருத்திர கிரந்தியையும் பெரி யோர்கள் பாசபந்தம் என்கிறார்கள்.

மேற்சொன்ன பந்தத்தையும், அதை நீக்கினால் ஏற்படும் பிரணவ வீட்டையும் உண்டாக்கியவனைக் காணுங்கள் என்பதைப், ''பந்தமும் வீடும் படைப்போன் காண்க'' என்றார். அசைவையும், அசைவற்ற நிலையையும் சிவன்தோன்றுவதற்கும், மறைவதற்கும் ஏற்பட்ட நிலை யுமே ''நிற்பதுஞ் செல்வது மானோன்'' என்றார்.

யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவனும் தானும் உடனே காண்க.

பொழிப்புரை: திருவடிகளைக் கொண்டு கர்மத்தைச் செய்பவர்கள் எந்த ஜாதியாயிருந்தாலும் சிவனை அடைவதற்குப் பொருந்துமான தினால் சிவனைக் காண்க. அடிகளைக் கொண்டு கர்மஞ் செய்யாதவர் கள் தேவர்களாயிருந்தாலும், அறிய முடியாத சிவனைக் காண்க. பெண் என்றும், ஆண் என்றும், இரண்டும் அற்ற அலியென்றும், பிறவி பேதத்தை உடையவனைக் காண்க. இவைகளை எல்லாம் என் கண் களாலே கண்டேன்; ஆகையால் இவற்றைக் காண்க. அருட்கலை யானது அமோகமாக எழும்பும் அமுதத் தன்மையுடைய சிவனைக் காண்க. கருணையின் பெருமையை அனுபவத்தால் கண்டேன்; ஆதலால் அதைக் காண்க. மண்ணின் மீதே சிவந்த திருவடிகளைப் பிடித்தே கர்மத்தைச் செய்தேன்; அதனைக் காண்க. சிவன் என்று தெளிந்து இருப்பதால் அவனைக் காண்க. அந்தச் சிவன் என்னை ஆட் கொண்டபடியால் அவனைக் காண்க. குவளை (கடையில்) இருபாகங் களையுடைய கண்ணின் சத்தியாகிய பார்வதியை ஒருபாகத்தில் அமைத்துக் கொண்டவனைக் காண்க. அந்தப் பார்வதியாகிய சத்தி யையும், தானாகிய சிவத்தையும் உடனே காண்க.

குறிப்புரை: குறுகிய வடிவோடு நின்று அருளை வீசியதாலும், காட்சி கொடுத்ததினாலும், நடனத்தைக் கண்டு சதா ஆனந்தத்தைப் பெற்ற தாலும் சிவனுடைய, ''கருணையின் பெருமையைக் கண்டேன்'' என்றார்.

உலகத்தார் சிவனைக் கண்டபோது தான் திருவடிகளில் நமஸ் காரஞ் செய்வதென்ற கொள்கையை உடையவர்களாதலால் இந்த உலகத்தில் கையினால் திருவடிகளைத் தீண்டி ஞானகர்மத்தைச் செய் தேன் என்பது தோன்ற, ''புவனியில் சேவடி தீண்டினன்'' என்றார். இது வரையில் சிவனைக் காணாதிருந்து கண்டவரானதால் சிவனைக் காண முடியாது என்று சொல்பவர்களுக்காகச் சிவன் இவன்தான் என்று தெளித்தேன் என்பதைச், ''சிவனென யானுந் தேறினன்'' என்றார்.

நேத்திரத்தைக் கொண்டு பார்க்குந் தந்திரம் மூன்று பாகமாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. கடைக்கண்ணால் பார்ப்பது, நடுக்கண்ணால் பார்ப்பது, குவளைக் கண்ணால் பார்ப்பது, மூக்கின் ஓரத்தில் உள்ள பாகமே குவளை என்பதாகும். கன்னிமூலையில் பார்வதியாகிய பார்வையின் சத்தியிருப்பதால் ஆசாரியன் மூலமாய்க் குவளைக் கண் பாகமாகப் பார்த்தால்தான் அவளுடைய உருவத்தைக் காணலாம்.

''குவளைக் குலாங்கண்ணி'' என்றார் திருமந்திர ஆசிரியர். ''காண்க'' என்பதெல்லாம் உலகத்தாரை நோக்கிக் கூறுவன.

''காண்க'' என்னும் பதத்திற்கு முன்னிருக்கும் சிவத்தின் பெயரைச் செயப்படும் பொருளாக்கிக் கொள்ள வேண்டியது.

காண்பவர்கள் சாதகர்கள்; காணப்படுவது சிவன்
பரமா னந்தப் பழங்கடல் அதுவே
கருமா முகிலின் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளரவு இரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை காப்ப
நீடெழில் தோன்றி வாளொளி மிளிர.

பொழிப்புரை: மேலே சொல்லி வந்தவைகள் பரமானந்தத்தைக் கொடுக்கும் நம் முன்னோர்களாகிய ஞானிகள் அனுபவித்த பழைமை யாகிய ஆனந்தக் கடலாகும். அதுவே இருளும், பெருமை பொருந்திய மேகக் கூட்டங்களாகிய கலைகளும் நிறைந்திருக்கும் இடத்திலிருந்து உதித்து அழகு நிறைந்த பெரிய துறையாகிய இருதய குகையுள்ள பிரணவ மலையின் உச்சியில் சென்று அழகு பொருந்தி மின்னும் ஒளி யானது எண் திசைகளிலும் விரிய, பஞ்சேந்திரிய சக்திகளையும், ஒளி வீசும்படியான குண்டலியையும் பந்தித்திருக்கும் மும்மலங்கள் அகன்று வெளியாக, வெப்பத்தைக் கொடுக்கும் வெயிலைப் போன்ற கானலானது பெருமை பொருந்திய சிரசை மறைக்க நீண்ட அழகானது உதித்துப் பிரகாசம் பொருந்திய ஒளியைக் காண்க.

குறிப்புரை: அண்டத்திலுள்ளதும் காணும்படியாகச் சொன்னதுமாகிய சின்னங்களோடு கூடிய சிவத்தின் நிலையே பரமானந்தத்தைக் கொடுக்கும் கடல் போன்றிருத்தலால், ''பரமானந்தப் பழங்கடல்'' என்றார்.

ஞானிகள் கண்டு வரும் பழமையானது என்பதினால் ''பழங்கடல்'' என்றார்.

அதோ முகத்தில் இருள் நிறைந்து கலைக் கூட்டங்கள் வெளிப் பட்டிருக்கும் இடத்திலிருந்து உதித்து என்பதையே, ''கருமா முகிலின் தோன்றி'' என்றார். ஏற்கனவே சொல்லியபடி, 'பெருந் துறை'' என்பது ஞானப் படியிலேறும் பெரிய வழியாகிய இருதயக் குகையையே குறிக்கும். அந்த இடம் பிரணவத்தின் மத்தியிலிருப்ப தால் பிரணவத்தை மேருவாகச்சொல்லும் மரபுப்படி, ''பெருந்துறை வரையில்'' என்றார்.

அதில் சென்றவுடன் அழகைக் கொடுக்கும் மின்னல் போன்ற ஒளி எண் திசைகளிலும் பரவி, மும்மலமானது அகன்று வழி தெரிய அவ் விடத்தில் பஞ்சேந்திரிய சத்திகளும், குண்டலியாகிய சர்ப்பமும், தோன்றச் சூரிய கலையினால் உண்டாகும் கானலானது சிரசை மறைத்துப் பிரகாசம் பொருந்திய ஒளியானது நீண்ட நேரம் அழகாகத் தோன்றி நிற்க என்பதையே ''வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப, நீடெழில் தோன்றி வாளொளி மிளிர'' என்றார்.

எந்தம் பிறவியில் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டம் கைய ஒங்கி
இருமுச் சமயத்து ஒரு பேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன.

பொழிப்புரை: அச்சமயத்தில் எம்முடைய அஞ்ஞான தத்துவங்கள் நிறைந்த இடத்தில் இந்திர கோபப் பூச்சிகளைப் போன்ற நிறமுள்ள ஒளிகளானவை அதிகமாக எழும்பி, பெருமை பொருந்திய பெருங் கருணையினால் பேரிகை சத்தத்தைப் போன்ற சத்தமானது, உதித்து ஒலிக்கப் பிரணவ மலரில் உள்ள துவாரங்களில் அழகிய அசைவோடு கார்த்திகை புஷ்பத்தைப் போன்ற கலைகள் தோன்ற குறைவற்ற இன்பத்தைக் கொடுக்கும் அருளானது சிறு துளிகளாக (சாதகனை வந்து) அடைய சிவந்த பிரகாசத்தையுடைய சுடர் வெள்ள மானது எண் திசைகளிலும் தேங்கி நிற்க, அந்தச் சுடரானது பிரணவ வரையின் உச்சியில் பொருந்த அழுந்தி நிற்கும் துக்கத்தை உண்டாக்கும் மும்மலமானது ஆழ்ந்து நின்று கைகளினால் சுத்தமாக மேல் எழும்ப, ஆறு சமயங்களிலும் சொல்லி இருக்கும் கானல் நீரைக் கண்டு நீர் வேட்கையுடன் அதனைப் பருக வரும் நீண்ட கண்களை யுடைய மான் கூட்டங்கள் வாயைத் திறந்து சோர்வை நீக்கும் நீரைக் காணாமல் தளர்வடைந்து குன்றி, தாகவிடாய் தீராமல் அவ்விடத்திலே அசைந்து கொண்டு நின்றன.

குறிப்புரை: சரீரத்திற்குள் தோன்றும் பல வர்ணங்களான கலைகள் இந்திர கோபப் பூச்சியின் நிறத்தை ஒத்திருப்பதால் ''எந்தம் பிறவியில் கோபம் மிகுத்து'' என்றார். சிவனுக்கு ஜீவன் பேரிலுள்ள கருணை யினால் தான் நடனத்திற்கு வெளிப்படுமுன் உண்டாகும் இடி

சப்தத்தை ''முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கி'' என்றார்.

மேற் சொல்லியிருக்கும் ஒளி வீசும்போது, பூ என்பது பிரணவ மலரையே குறிக்கும். புரை-துவாரம். இஃது இருதய குகையையும், பிரணவ உச்சியிலுள்ள சிறு துவாரத்தையுமே குறிக்கும்.

அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந்து உள்ளம் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம் .
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்

பொழிப்புரை: அன்பை உண்டாக்கும் சரீரத்தை உண்டு பண்ணியவனைப் புகழ்கின்றேன். (அளி=அன்பு. ஆக்கை=சரீரம்) ஊற்று நீரைப் போன்று என் உள்ளத்திலிருந்து ஆனந்த முண்டாக்கிய ஊற்றைத் திறந்து களிக்கும்படிச் செய்கின்றவனைப் புகழ்கின்றேன். பொறுத்தற்கரிய இன்ப வெள்ளமானது விரிந்து அலை மோத, அதனை அடைய மாட்டாத சரீரத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதை விரும்பமாட்டேன் பெருமை பொருந்திய கண்மணிகளின் கடைக் கணிப்பினாலே உண்டாகிய பச்சை மணிகளின் கும்பலில் மின்னலின் ஒளியைப்போன்ற அழகிய ஒளியானது, பிரகாசிக்க, தேடினவர்களாகிய திருமாலும், பிரம்மனும் சென்று பார்க்க அவர்களுக்கு மறைந்தும்,

குறிப்புரை: சரீரத்தை அடைந்த ஆத்ம பூதர்கள் ஆராய்ச்சியினால் கண்ட அன்பை உபயோகப்படுத்தும் கர்மத்தினால் உண்டாகிய ஆனந்தத்தை அடையும்போது சரீரம்புளகாங்கிதமுறுவது இயற்கை. இப்படிப் பட்ட அன்பை உடைய சரீரத்தை உண்டு பண்ணியவனைப் புகழ்கின்றேன் என்பதை, ''அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி'' என்றார்.

அளி என்பது அன்பேயாகும். அன்பு பரவாழ்க்கையைக் கொடுப்பது. ஆசை உலக வாழ்க்கையைக் கொடுப்பது. அன்பைக் காதலாகச் சொல்வது உலக வழக்கம். காதல் என்பதற்கு ஆசை என்றே பொருள் கொள்ள வேண்டும்.

திருஷ்டாந்தமாக, ஒரு பெண்ணின் இடத்தில் காதல் கொள்வது உலக வாழ்க்கையை இன்பத்தோடு நடத்திச் சற்புத்திரர்களை உன்

3

டாக்கும் ஆசையைப் பற்றியதேயாகும். அன்பு என்பது நிராசையோடு நின்று பரத்தினிடத்தில் ஒன்றும் கோராமலே மனமுங் கண்ணுங் கட்டுரையற்று நிற்பதேயாகும். அப்படி நிற்பதினால்அன்பானது சிவத்தைத் தன் வயப்படுத்திச் சீவனைச் சிவத்தோடு கலக்கச் செய்யும்.

இது வேண்டாம் என்பதைக் குறிக்கும். ஆசையோ வேண்டும் என்பதைக் குறிக்கும். இருதயகுகையிலிருந்து பிராண அபான வாயுக்களும், ஆத்ம ஒளி, ஜீவ ஒளி, மூலாக்கினி, தெய்வ ரூபங்கள், திருமால், இலட்சுமியாகிய இலட்சியத்தின் சத்தி, அஷ்டதள கமலம் ஆகிய இவைகள் உண்டாவதோடு மூலாக்கினியானது தன் கலைகளை இருந்திருந்து வெளிப்படுத்தும் தன்மையானது சீவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்கி வருவதால் அதனை 'ஊற்று' என்றார். குறைவற்ற இன்பத்தையே, 'ஆற்றா இன்பம்' என்றார் இன்ன விதமானது என்று சொல்ல முடியாமல் இன்பம் பரவி அலை மோத, அதனைப் போற்றாத சரீரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கமாட்டேன் என்பது தோன்ற, ''போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்'' என்றார்.

பெருமை பொருந்திய கண்மணியையே 'மாமணி' என்றார். பிறக்கம் — கடைக்கணிப்பு. கண்மணிகளின் கடைக் கணிப்பினால் உண்டாகும் மரகத மணிக்கு வித்தாகிய உந்திக்கமலம் சோபித்தலையே, ''மரகதக் குவாஅல்'' என்றார்.

மின்னல் போன்று தோன்றித் தோன்றி மறையும் ஒளியையே மின்னொளி என்றும், இந்த ஒளியின் அழகையே, ''பொன்னொளி திகழ'' என்றுங் கூறினார். தேடினர்க்கு என்பதினால் பிரம்மாவும், திருமாலுஞ் சேர்ந்து தேடியும் மறைந்து என்று பொருள் கொள்ள வேண்டும்.

> பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
> ஒளிக்கும் சோரனைக் கண்டனம்
> ஆர்மின் ஆர்மின்
> நாள்மலர்ப் பிணையலில் தாள்தலை இடுமின்
> சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
> பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்

பொழிப்புரை: பழமையாகப் பழகிவரும் ஞானகர்மத்தை இப்பொழுதே பழகுவதால், மறைந்திருக்கும் திருடனைக் கண்டோம். சதா மலர்ந்திருக்கும் நேத்திர மலர்களின் இணைப்பினால் நிரப்புங்கள்; நிரப்புங்கள். திருவடிக் கமலங்களை ஒன்றோடொன்று சேருங்கள். அதனைச்

சுற்றுங்கள்; சூழுங்கள். அதன்பின் செல்லுங்கள்; விடாதீர்கள்; பிடியுங்கள் என்று அவர்கள் பிடித்த பிடிப்பினால் பூரணமாகப் பிரகாசித்தும்.

குறிப்புரை: மஹரிஷிகளும், ஞானிகளும் பழமையாகவே அனுசரித்து வரும் அந்த முறையின் படியே காலம் அதி சீக்கிரமாய்ச் செல்வதால் ஆலசியஞ் செய்யாமல் இன்றே ஆரம்பித்து, பழகுந்தோறும் பிரகாசிக்கும் திருடனாகிய சிவனைக் கண்டோம் என்பதையே, ''பண்டே பயில் தொறும் இன்றே பயில் தொறும் ஒளிக்கும் சோரனைக் கண்டனம்'' என்றார்.

தினம் மலர்ந்திருக்கும் இரண்டுநேத்திரமலர்களையே 'நாள்மலர்ப் பிணையல்' என்றார். அதிலிருக்கும் சூரியகலை, சந்திரகலை, அக்கினி கலைகளை நிரப்புங்கள் நிரப்புங்கள் என்பதைப் ''பிணையலில் ஆர்மின், ஆர்மின்'' என்ற இரண்டு தடவை சொன்னார்.

ஞானத்தை அறிவிக்கும் தன்மையினால் ஞானேந்திரியங்கள் என்று முன்னோரால் சொல்லப்படும் இந்திரியங்களில் பிரஜைகளுக்குப் பதியாக இருக்கும் நேத்திரமே முதன்மையாயும், பரவித்தைக்கு வழிகாட்டியாயும் இருக்கின்றது.

அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி இல்லையே.

திருமந்திரம் 1871

நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்கு
அருக்கனுஞ் சோமனும் அங்கே அமருந்
திருத்தக்க மாலுந் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்து ளாரே. திருமந்திரம் 2315

என்றும் சொல்லி இருப்பதைக் கவனிக்கவும். திருவடிகளை இணைப்பதையே, ''தாள் தளையிடுமின்'' என்றார்.

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதுந் தானங்க ளாவதும்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே. திருமந்திரம் 1604

என்பதைக் கவனிக்கவும். திருவடிகளைக்கண்டு அதனைச்சுழற்றுங்கள் என்பதையே, ''சுற்றுமின்'' என்றார்.

சுழற்றிக் கொடுக்கவே சுத்திக் கழியும்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்து
உழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்கு
அழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே.

திருமந்திரம் 726

திருவடிகளிலுள்ள கலைகளை வெளிப்படுத்தித் திருவடிகளையும், சாதகர்களையும் சூழும்படி செய்யுங்கள் என்பதையே 'சூழ்மின்' என்றார். திருவடிகளைத் தொடர்ந்தே பார்வையையும், மனத்தையுஞ் செலுத்துவதையே, 'தொடர்மின்' என்றார்.

திருவடிகளைப் பற்றியிருப்பதை விடாதீர்கள் என்பதை 'விடேன் மின்' என்றார்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

திருச்சதகம்.

''பற்றுமின்'' என்று சொல்லிய அவர் பற்றுதலினாலேயே பூரண மாகப் பிரகாசித்தும் என்பதையே, 'பற்றுமுற்றொளித்தும்' என்றார்.

திருச்சதகம்

மெய்சாதனா வைராக்கிய விசித்திரம் உணர்தல்

இதில் ஞான சாதனைக்குவேண்டிய பக்குவங்களையும், இகபர வாழ்க்கையைச் சரியானபடி நடத்திக் கடவுளால் வினையை ஒழித்துச் சுகத்தை அடையச் செய் என்று மனதை வேண்டுவதையும், சிவன் ஆட்கொள்ளும் பெருமையையும், ஞான சாதனையை அடையாததால் உண்டாகும் இழிவையும், சிவனை வேண்டுதலையும், ஆனந்தத்தில் லயிப்பதையும், ஞான சாதனை ஆரம்பம் முதல் முறையாக நடனம் வரையில் தன்னை ஈடேற்றச் சிவனை வேண்டுவதையும் வெளியிடப்பட்டு இருக்கின்றது.

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

பொழிப்புரை: (சிவனே) ஞான வித்துக்கள் நிறைந்த உன்னுடைய திருவடிகளை வெளிப்படுத்துவதற்கு என் கைகளைச் சிரசின் மீது வைத்து அசைவை உண்டாக்கவும், அதனால் சத்தியமான பொருள் மலர்ந்து நின்று கண்ணீரைப் பெருக்கி நிற்கவும், என் மனமானது கிளர்ச்சியற்று நிற்கவும், அச்சமயத்தில் பொய்களாகிய மும்மலங்கள் என்னும் கிரந்தித்திரயங்களும், அஞ்ஞான தத்துவங்களும் ஒழிந்து உன்னைப் புகழவும், நீ என்னைக் காணும் வரையில் வெற்றிகளைக் கொடுத்து புகழுங் கைகளைக் கீழே தாழ்த்த மாட்டேன்.

குறிப்புரை : நாத பிந்துக்கள் நிறைந்திருக்கும் சிவனுடைய திருவடிகளையே, ''உன் விரையார்கழற்கு'' என்றார். அந்தத் திருவடிகளை வெளியில் கொண்டு வருவதற்கு முக்கிய சாதனமாகும் கைகளை சிரசில் வைக்கும் தந்திரத்தினையே, 'கைதான் தலை வைத்து' என்றார்.

கையை வைப்பதினால் சரீரமானது வேர்த்து நடுக்குண்டாவதையே, 'மெய்தா னரும்பி விதிர் விதிர்த்து' என்றார்.

மேற்சொன்ன காரணங்களால் மும்மலங்களும், காமக் குரோதாதிகளும் ஒழிந்து போவதால், 'பொய்தான் தவிர்த்து' என்றார்.

அஞ்ஞான தத்துவங்களாகிய பொய்கள் ஒழிந்ததினால் நீ எதிரில் தோன்றும் வரையில் உன்னைப் புகழ்ந்து வெற்றி பெறச் செய்த கைகளைத் தாழ்த்த மாட்டேன் என்பது தோன்ற, "உன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங் கைதா னெகிழ விடேனுடையா யென்னைக் கண்டு கொள்ளே'' என்றார்.

ஆசாரியன் சொல்லும் கைகாட்டும் தந்திரங்களையும், அவற்றால் ஏற்பட்ட குணங்களையும், சிவன் வெளிப்படுவதற்குக் காரணத்தையுஞ் சொல்லியிருக்கிறார்.

விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோருந்
தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்
செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே.

திருமந்திரம் 2744

மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டாருந் திறந்தறி வாரில்லை
பொய்த்தாள் இடும்பையைப் பொய்யற நீவிட்டங்
கத்தாள் திறக்கில் அரும்பேற தாமே. திருமந்திரம் 2605

கைகலந் தானைக் கருத்தினுள் நந்தியை
மெய்கலந் தான்தன்னை வேத முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமே. திருமந்திரம் 2604

அடிசார லாம்அண்ணல் பாத மிரண்டும்
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்
படிசார்ந்த இன்பப் பழவடி வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே.

திருமந்திரம் 1603

சாதனா காலத்தில் சரீரத்தின் தன்மையையும், பொய்யாகிய பொருள்களும், குணங்களும் ஒழிவதையும், திருவடியின் பெருமையையும், விளக்கிக் காட்டுவதை யோசித்துப் பார்க்கவும்.

கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினது அடி யாரொடுஅல் லால்நர கம்புகினும்

எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே.

பொழிப்புரை: அடியார்களாகிய எங்களுடைய உத்தமனாகிய சிவமே, உன்னைத்தவிர வேறு தெய்வங்களாகிய இந்திரன், விஷ்ணு, பிரம்மன் முதலியவர்களையும் அடையேன். என் வாழ்க்கை முழுகிப் போனாலும் உன்னுடைய அடியாரல்லாதவர்களை நேசிக்க மாட்டேன். நரகம் புகினும் அவர்களை நிந்திக்க மாட்டேன். பரமசிவனே, உன் திருவருளால் என் தேகம் அழியா நிலையை யடைந்தால் அப்படியே இருக்கின்றேன்.

குறிப்புரை : சுவர்க்க பதத்தையும், பிரம்ம பதத்தையும், விஷ்ணு பதத்தையும், இச்சிப்பதற்கு இஷ்டமில்லாமல் சுத்த சிவ வொளியில் இரமிக்கவும், சைவத்தை ஸ்தாபிதஞ் செய்பவும் எண்ணங்கொண்டவராதலால் ''கொள்ளேன் புரந்தரன் மாலயன்'' என்றார்.

அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அரிஅயற் காமே. திருமந்திரம் 103

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன் என்று
பேதித் தவரைப் பிதற்று கின்றாரே. திருமந்திரம் 110

உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊர் ஊர் திரிந்துஎவரும்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே.

பொழிப்புரை: உத்தமனாயும், சகல செல்வங்களுக்கும், எஜமானனாயுமுள்ள சிவனுடைய திருவடிகளையே நினைந்து, மனமுருகி, அசைவற்றமனதைப் பொருந்தி ஆலவிருட்சத்தைப்போல் இவன் என்று மனதில் தோன்றியதை இதற்கு ஒத்தபடிச் சொல்ல இது பொருந்தமானதே. ஊருராய்த் திரிந்துவரும்மற்றவர்களும் தங்கள்தங்கள்மனதில் தோன்றுவதை வாய்ஞானமாய்ப் பேசுவதால் எப்பொழுதும் மரணமே அவர்களுக்குப் புலனாகும்.

குறிப்புரை: ஜீவர்களிடம் சிவன் கலந்திருப்பதால் 'உத்தமன்' என்றும் ஞானச்செல்வங்களுக்குச் சிவனே எஜமானனானதால்'அத்தன்'என்றும்

கூறியிருக்கின்றார். திருவடிகளை உடையவன் ஆனதால், 'உடையான்' என்றார். திருவடிகளின் சிந்தனையையே 'அடியே நினைந்துருகி' என்றார். மனனமற்ற மனத்தையே 'மத்த மனத்தொடு' என்றார்.

ஆலமரமானது வளரும்போது தன்னைப் பலப்படுத்திக் கொள்ளக் கிளைகளிலிருந்து வேரை எழுப்பிப் பூமியில் இறக்கி ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு ஜீவ கோடிகளுக்கு நிழலைக் கொடுப்பது போல் ஞான சாதனையுடையவனை, 'ஆலிவனென்ன' என்றார்.

இவை மனதின் எண்ணத்திலும் பொருத்தமாய் ஒத்திருக்கின்றன என்பதையே, 'மன நினைவில் ஒத்தன' என்றார். உலகத்தில் உள்ளவர்கள் எவரும் ஊருராகத் திரிந்து ஞான ரகசியத்திற்கு ஒத்ததாகப் பேச வேண்டி என்பதையே, 'ஒத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்' என்றார்.

எப்பொழுதும் அவர்கள் தங்கள் தங்கள் மனதில் தோன்றியவாறு பேசுவது மரணத்திற்கே செல்வதாகும் என்பதை, 'தத்த மனத்தன பேச வெஞ்ஞான்று கொல் சாவதுவே' என்றார்.

திருவடிகளைக் கொண்டு ஞானத்தை அடைவது பொருத்தமாக நிற்க, உலகத்தார் வாயில் வந்தபடி வாய் ஞானம் பேசிச் சாகின்றார் என்பது கருத்து.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்யெனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

பொழிப்புரை: ஆகாயமாயும், பிருதிவியாயும், காற்றாயும், அக்கினியாயும், மாமிச பிண்டமாயும், பிராணனாயும், உண்மையாயும், இல்லாததாயும், இறைவனாயும், நான், என்னுடையது என்று ஒவ்வொருவரையும் ஆட்டி வைப்பவனாயும், நின்ற உன்னை என்னவென்று சொல்லிப் புகழ்கின்றது?

குறிப்புரை: பஞ்ச பூதியங்கள் ஜடமாயிருந்தும், சிவன் அதில் கலந்து அவைகள் ஒவ்வொன்றுக்குங் கூட்டுறவை உண்டாக்கியிருப்பதால் பூதங்களாகி என்பதையே, ''வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி'' என்றார்.

பூதியங்களின் கூட்டுறவால் பூமியின் மூலமாய் ஓஷதி ஏற்பட்டு அது அன்னமாகி, உண்டபின் பிந்துவாகி, அந்த பிந்துவிலிருந்து மாமிசத்தாலாகிய சரீரமும், உயிரும் ஏற்படுவதால், ''ஊனாகி உயிராகி'' என்றார். கண்ட ஞானிகளுக்கு உண்மையாயும், காணாத பாமரர்களுக்கு இல்லாதவனாயுமிருப்பதால், ''உண்மையுமாயின்மை யுமாய்'' என்றார். எல்லாவற்றையும் நடத்தி வைப்பவனானதால், ''கோனாகி'' என்றார்.

யான், என்னுடையது என்று யாவரையும் ஆட்டுவிப்பதால், ''யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு வானாகி நின்றாயை'' என்றார். உன்னைப் புகழ எதை முன்னிலையாய் வைத்துப் புகழ்கின் றது என்பது தோன்ற, ''என் சொல்லி வாழ்த்துவனே'' என்றார்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரம்முரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே.

பொழிப்புரை: தேவர்களாகிய தெய்வ தத்துவங்கள் வாழ வேண்டி வாழ்த்துவதாகும். மனம் உன்னிடம் நிற்க, உன்னை அதோ முகத்தில் காண்பதுவுங் பரமசிவன் பிரணவ உச்சியில் நிற்பதற்கும் காரணம் தன்னையும், எல்லாத் தெய்வ தத்துவங்களையும், தொழ வேண்டியே யாகும். கலைகள் வெளிப்பட்டு என்னைச் சூழும்படிச் செய்வதற்கே கரத்தையும், பள்ளத்தையும் கொடுத்த உன்னை நாயினுங் கடையவ னாகிய யான் பாழான பிறப்பாகிய அஞ்ஞான தத்துவங்களை ஒழிக்க வேண்டி உன்னை அடைகின்றேன்.

குறிப்புரை: சரீரத்தில் தெய்வ சம்பந்தமான ஞான தத்துவங்கள் இருக்கும் வரையில் சரீரத்திலுள்ள பிராணன் பிரியாது என்னும் கொள் கையின்படி, ''வாழ்த்துவதும் வானவர்கள்தாம் வாழ்வான்'' என்றார்.

மனமானது சிவனிடம் நிற்கும் போது அசைவற்ற நிலை வேண்டி யிருப்பதாகும். அசைவற்ற நிலைக்கு அதோ முகமே மனத்தை ஒழிப்ப தானதால் ''மனம் நின்பால் தாழ்த்துவதும்'' என்றார்.

அச்சோப் பதிகம்

அநுபவ வழி அறியாமை

அநுபவத்தின் பெருமையையும், அநுபவமிலாமையின் இழிவையும் விளக்கியிருக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அந்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

பொழிப்புரை: முத்தியை அடையும் வழியை அறியாமலிருக்கும் பிடிவாதக்காரரோடு சேர்ந்து முயற்சி செய்துகொண்டு வரும் எனக்குத் தொன்றுதொட்டு வரும் பழைய வினைகளை ஒழிக்கும்படியான பத்தியினால் ஏற்படும் வழியைத் தெளிவுபடுத்தி, சித்தத்தை மூடிக் கொண்டிருக்கும் மும்மலங்களின் வித்தாகிய கிரந்தித்திரயங்களை அறுத்து ஒழிந்துச் சிவசொரூபத்தைப் போல யான் விளங்கும்படி செய்து என்னை யாட்கொண்ட பரவிந்து சொருபன் எனக்கு அருளிய வழியை எவர் அடையப் போகின்றார்கள் ? அடைந்தால் அது ஆச்சரியமேயாகும்.

குறிப்புரை: மூன்றுதீயையே ''முத்தி'' என்றார். அது சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்றையும் சிரசுக்கு மேற்பாகத்தில் செலுத்துவதையே குறிப்பிடுகின்றது. அம்மூன்றினுடைய சேர்க்கையால் பஞ்சேந்திரிய சத்திகளும், பரவிந்துவும் கூடிப்பிரணவத்தை முகத்திற்குமுன் எழுப்பி நிற்க வைத்து அதன் மத்தியிலுள்ள இருதய குகையைத் திறந்து அதிலுள்ள பிராணன், அபானன், ஜீவஒளி, ஆத்மஒளி, மூலாக்கினி என்பவைகளை வெளிப்படுத்தி அவற்றின் உதவிகளைப் பெற்றுப் பிரணவ உச்சியிலுள்ள சுவர்க்கத்தைத்தாண்டி இராப்பகலற்ற துவாதசாந்த வெளியில் பார்வை, மனம் என்னும் இரண்டையும் செலுத்தி அவ்விடத்தில் தங்கியிருப்பதே முத்தி என்றும், மோட்சமென்றும் சொல்லப்படும். இதையே ''முத்தி நெறி'' என்றார்.

முத்தீக் கொளுவி முழுங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னாவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந் தன்று கொலையே.

திருமந்திரம் 344

என்பதினால் முத்தி இன்னது என்பதும், சிவன் வெளிப்படுவதும் ஏற்படும்.

ஆகம தத்தன ஐந்து களிறுள
ஆகம தத்தறி யோடணை கின்றில
பாகனு மெய்த்தவை தாமும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே. திருமந்திரம் 2023

என்பதினால் பஞ்சேந்திரியங்கள் பிரணவமாகிய தறியில் சம்பந்திக்க வேண்டுமென்பது ஏற்படும். இதனால் மௌனமாகிய இருதய குகையைத் திறக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றது. ஆகையால் முத்தி வழி இதுவேயாகும். விரிவு நோக்கி நிறுத்தினோம். நூல்களை வாசித்து, அவற்றிலுள்ள நுட்பப்பொருளை அறியாமல் தங்களுடைய யுக்தியினால் ஒரு குருட்டு வழியை ஏற்படுத்திக் கொண்டு பலனைத் தாங்களும் அடையாமல் பிறரையும் யோசித்துப் பார்க்க இடங்கொடாமல் செய்யும் வழியில் பிடிவாதத்தோடு நிற்பவர்களையே 'மூர்க்கர்' என்றார்.

பத்தி என்பது, சரீரத்தினால் செய்யப்படும் பத்தி, மனதினால் செய்யும் பத்தி என இருவகைப்படும். ஆசாரியன் காட்டும் ஒரு மொழியினால் ஏற்படுவது சரீரபத்தியாகும். மனதினால் ஏற்படும் பத்தியானது சித்தத்தை எழுப்பிக் கொண்டு இலட்சியப் பொருளில் மனது சதா இடைவிடாமல் தைலதாரை போல் நிற்றலே,

பத்தியையே 'பத்தி நெறி' என்றார். வம்ச பரம்பரையாய் வந்து கொண்டிருக்கும் வினைகளையே ''பழ வினைகள்'' என்றார்.

வினைகடிந் தாருள்ளத் துள்ளொளி மேவித்
தனையடைந் தோர்க்கெல்லாந் தத்துவ மாய்நிற்பள்
எனையடி மைகொண்ட ஏந்திழை ஈசன்
கணவனைக் காண அனாதியு மாமே. திருமந்திரம் 1123

என்பதினால் 'பழவினைகள் பாறும் வண்ணம்'' என்றார்.

உலகத்தார் கண்ணால் பார்த்தறியாதவையும், ஞான அப்பியாசிகள் தினம் அவற்றைக் கண்டு அவற்றோடு போராடும் தன்மையையுடையவையும், பிரம்மக்கிரந்தி, ருத்திரக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி என்னும் பெயரால் வழங்கப்பட்டவையும், ஞானச் செல்வங்களையும் ஞான ஆயுதங்களையும், சிவம் முதலிய தெய்வங்களையும் கண்ணுக்குத் தெரியவொட்டாதபடி முத்திரித்துத் திரைபோட்டு இருப்பது போல் நின்று முத்திரையென்னும் நாமம் தரித்துள்ளவையுமாகிய மாயை,

காமியம், ஆணவமென்னும் மூலமலங்களையே, 'சித்த மல மறுவித்து' என்றார்.

இவற்றை ஸ்காந்த ஆசிரியர் திரிபுரம் என்றார். இந்தத் திரிபுரத்து அரசர்களையே சூரபத்மன், ஆனைமுகாசூரன், சிம்மமுகாசூரன் என்பவர்களாய்க் கற்பித்திருக்கின்றனர்.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே. திருமந்திரம் 343

என்றும்,

மூன்றுள குற்ற முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே. திருமந்திரம் 2435

என்றும் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும்.

காமக்குரோதாதிகளுக்கு மூலவித்தாய் இருப்பவை அந்தக்கரணம். அந்தக்கரணங்களுக்கு மூலவித்தாய் இருப்பவை மூலமலங்களே ஆகும். அம்மூல மலங்கள் ஒழிந்தவுடன் சிவகலையாகிய அருட்கலை சாதகன் மீது வீசிச் சிவமயமாகிய வெண்மை நிறத்தோடு விளங்குவதையே ''சிவமாக்கி'' என்றார்.

பரவிந்து சொரூபனாய்ச் சிவமிருப்பதால், ''அத்தன்'' என்றார்.

அண்ணல் உடலாகி யவ்வனல் விந்துவும்
மண்ணிடை மாய்க்கும் பிராணனாம் விந்துவுங்
கண்ணுங் கனலிடைக் கட்டிக் கலந்தெரித்
துண்ணில் அமிர்தாகி யோகிக் கறிவாமே.

திருமந்திரம் 1951

தான் அடைந்த ஞானப் பெருமையை நோக்கி ''ஆர்பெறுவார் அச்சோவே'' என்றார்.

திருவாசகம்
முற்றிற்று.

திருமந்திரம்

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்ன நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை
கண்ணளந் தெங்கும் கடந்து நின்றானே. 13

கருத்து: மண்ணை அளந்த மாயவன்; அவனது உந்திக் கமலத்தில் உதித்த பிரமன் முதலாய தேவர்களும், சிவனை எண்ணத்தில் அகப் படுத்தி நினையாதிருக்கின்றனர். ஆகாயத்தில் விரிந்து விளங்கு பவனை மண்ணுலகோர் கடந்து சென்று அறியமுடியவில்லை. ஆனால் அவன் கண்ணில் கலந்தும் எங்கும் கடந்தும் விளங்குகின்றான்.

விளக்கம்: தேவர்கள் இன்பத்தில் திளைக்கின்றமையின், ''நினைக் கின்றிலர்'' என்றும், மக்கள் கண்டமான நிலையில் இருக்கின்றமையின் அகண்டப் பொருளை ''அளந்தாரில்லை'' என்றும் கூறினார். கண் அளந்தான் கண்ணொளியில் விளங்குபவன்.
தெளிவு: சிவன் கண்ணகத்தேயும் எங்கும் கடந்தும் விளங்கு கின்றான்.

மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
டண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. 31

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்இன்பந் தானே. 47

நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. 85

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித்த வரைப் பிதற்றுகின் றாரே. 110

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய் கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டி களிம்பறுத் தானே. 113

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. 131

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச்சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. 145

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. 148

விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்
றெண்ணி எழுதி இளைத்துவிட் டாரே. 315

அப் பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே. 343

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. 431

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல் எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அதுஇது வாமே. 443

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே. 440

உண்ணின்ற சோதி உறநின்ற ஓருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி மாபோத மாமே. 449

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதனைக் கண்டறி வாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கிற்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே. 603

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே. 606

மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத்துள்ளே மனோலய மாமே. 620

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. 724

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. 725

சுழற்றிக் கொடுக்கவே சுத்திக் கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்
கழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே. 726

சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாந்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ்
சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி ஆணையே. 730

அஞ்சுள வானை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே. 977

விரிவுரை: தேகமான காட்டில் ஐம்பொறிகளாகிய, காது, மூக்கு, கண், நாக்கு, மெய் யானைகள் போல் வாழ்ந்து வருகின்றன. அவைகளை அடக்க ஐந்து எழுத்து மந்திரமாகிய ''நமசிவாய'' அங்குசத்தால் அடக்கி ஒரு சேர வைப்பவர்கள், இந்திரிய சேஷ்டையைக் கடந்து, ஐந்துக்கும் முதல்வனாகிய ஆன்மாவிடம் புகமுடியும் என்பதாம்.

அறிவரு ஞானத் தெவரும் அறியார்
பொறிவழி தேடி புலம்புகின் றார்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலு மாமே. 1009

விரிவுரை: அறிவாகிய அகத்தை அறியாமல் புறத்தே பொறிவழி சென்று கிரியை செய்து அலைதலால் என்ன பயன்? இவ்வுடம்பினுள் மெய் வீடறிந்து நிலைபெற நோக்கினால் சிவ ஒளியைக் காணலாம் என்பதாம்.

அவளை யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகு மாறறி யேனே. 1053

விரிவுரை: இந்த அண்டத்திற்கும், பிண்டத்திற்கும் ஒளி மண்டல மயமான தேவியைப் பூசிக்காது, அவளுடைய ஒளி, பிரகாசமான சக்தியின்றி பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேசுரர், சதாசிவர் ஐவராலும் தொழிற்பட முடியாது என்பதாம். அவள் அருளே வீடு புகும் நெறியாகும்.

அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போலுள்ளே நோக்கித்

தெளியுறு வித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்யவுண் டாளே. 1064

கருத்துரை: ஆண், பெண், அலி என்ற வித்தியாசம் காண முடியாது. ஜீவர்களின் ஆன்மாவாக உள்ள பராசக்தி, ஜீவர்களின் பக்குவத்தை அருளால் அறிந்து ஆட்கொள்கிறாள். புளியம் பிஞ்சாக இருந்தபோது தோலும், சதையும் ஓடும் ஒன்றாக இருப்பதால் அபக்குவம் என்பதாம்.

அதுஇது என்னும் அவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகும்
மதிமல ராள்சொன்ன மண்டல மூன்றே. 1186

கருத்துரை: சந்திர மண்டலத்தில் உள்ள பராசக்தியைக் குவிந்த மனக்கண்ணாலே அவளைத் தியானிக்கில் விதியை வெல்லலாம் என்பதாம்.

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. 1452

கருத்துரை: மணம் கமழும் வாசனை திரவியங்களும், சிறந்த மலர்களுமிட்டு பூசித்தாலும், உடல் பற்றற விட்டுத் தியானிப்பவர்க்கன்றி, மற்றவர் திருவடி தரிசனம் அடையமுடியாது.

நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. 1457

கருத்துரை: குருவின் மூலம், அறிந்த மெய்ப்பொருள் மீது ஆடாது அசையாது நாட்டம் வைத்து, நாத சம்மியத்திலே நிலைத்து இருப்பார்க்குச் சிவனை அடைய முடியும் என்பதாம்.

வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
நேசத் திருந்த நினைவறி யாரே. 1506

கருத்துரை : இறைவனைத் தோத்திரம் செய்தும், வாசனை மலர் களிட்டும் பூசித்தாலும், பாசிக் குளத்தில் கல் எய்தால் - பாசி நீங்க மீண்டும் படர்வது போல், இறை உணர்வு மாறி விடும். ஆதலின் குரு அருளால், ஒளி பொருந்திய சிவத்தை அறிந்து அன்பினால் இடை விடாது மனத்தில் இருத்த அறியாதவர் அறியாதவரே யாவர்.

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே. 1514

கருத்துரை: மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி சத்தி, அஞ்ஞானத் தால் மூடப்பட்டிருக்கும் ஆன்மாவுக்கு ஞானம் உண்டாதற் பொருட்டு, உலக இன்ப துன்பங்களையும், சுகம், துக்கம் நித்தியம் அநித்தியங் களை அனுபவிக்கச் செய்தும் அதன்பின் ஆனந்த நித்தியமான சிவத்தை அடையும் ஆசையை உணர்த்தி, சிவத்தை அடையச் செய் தலே மணம் புரிதலாகும்.

அறிவுடன் கூடி அழைத்தோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டுங் கொடுவினை யாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே. 1554

கருத்துரை; எல்லா ஜீவர்களிடத்தும், கானுமிடத்தைப் பீடமாகவும், ஒளியாகவும், அறிவாகவும், திருவடியாகவும், இருந்து வழி நடத்துவது தோணியாகிய திருவடியாகும். இச்சிவமே வினைகளுக்குச் சேமிப்பான இக்காயமான காரண சரீரத்தை அழிக்கும் சக்தி என அறிந்தும் தீவினையாளர் நினைப்பதில்லையே!

ஆதலின், ஒளிபொருந்திய சிவத்தின் திருவடியைச் சீவன் அறிந்து அனுபவித்தல். பிரணவம் = திருவடி. தோணி. இத்தோணியே பிறவிக் கடலைக் கடக்கச் செய்யும் என்பதாம்.

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத் தெல்லாங்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே. 1589

கருத்துரை: இறைவன் எல்லாவுயிர்களிலும், கருவாக இருந்து அவரவர் வினைக்கேற்ப நடத்துவதை அறியாத நான் அவர் குருவாக

வும் வந்து ஜீவர்கள் அறியாவண்ணம் இடர்களைந்து காக்கும்ஈசனைக் கருவிலுள்ளான் எனக் கண்டு கொண்டேன்.

சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே. 1631

கருத்துரை: சாத்திரம் படித்தோம் என்ற பெருமையினை நீக்கி, (குருமுகம் அறிந்த திருவடியின் கண்) ஒருகண நேரம் அகமுகப் பார்வையில் அசையாது நிற்பின், அது பசுமரத்தில் அடித்த ஆணியை ஒக்கும். ஆதலின் பிறவியைப் போக்கும் என்பதாம்.

மனத்திடை நின்ற மதிவாள் உருவி
இனத்திடை நீக்கி இரண்டற வீர்த்துப்
புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால்
தவத்திடை யாரொளி தன்னொளி யாமே. 1638

கருத்துரை: ஞானேந்திரியங்களாகிய ஐம்புலன்களைப் புறத்தே விட்டால் பிரபஞ்ச வாசனையில் சென்று விஷத்தை அருந்தும். அஃதின்றி மனமாகிய உறையிலுள்ள புத்தியாகிய ஞானவாளால் மறித்தால் அதோ முகத்தில் தன்னொளியே சிவ ஒளியாகும் என்பதாம்.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. 1680

கருத்துரை: ஞானமறிந்த குருவின் மூலம் அறிவை அறிந்து அறியாமையைப் போக்கிக் கொள்ளாமல் அறியாமையில் மூழ்கி இருப்பவரைக் குருவாகக் கொண்டால், பக்குவமில்லாத குருவும் சீடரும் அறியாமைக் குழியில் வீழ்வர் என்பதாம். பக்குவமில்லாத சீடர் ஞான குருவைப் பெற்று அனுபவம் பெறாமல் கெடுவர்.

மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே. 1681

கருத்துரை: மனித மனம் ஆசை என்ற மாயையைக் கிரகித்துக் கொண்டு எண்ணற்ற எண்ணங்களை உருவகம் செய்து கொண்டே

இருக்கும். நினைத்துப் பார்ப்பின், அதன் அடிச் சுவடும், அடைய முடியாத பொய்த் தோற்றம் என்பது விளங்கும். ஆதலின், அவை வினைப் பயனால் எழும் எண்ணங்கள் என அறிந்து மாற்றிக் கொண்டு பக்குவத்தை அடையாமல் மேலும் அறியாமையில் அகப்பட்டு வீழ்வர் என்பதாம்.

வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து
நீயொன்று செய்யல் உறுதிநெ டுந்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளிகி லாரே. 1683

கருத்துரை: சிவாக்கனியைப் பெற்றவன், முக்கரண சுத்தியோடு தெளிந்து கூறுவர். செய்வர். ஆனால் பக்குவமில்லாதவர் மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரண செயல்களுக்கு உறுதியற்றவராய் இருப்பர் என்பதாகும்.

கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை இறைபால் இயற்கை அல்லவே. 1686

கருத்துரை : காமம், மதம், மாச்சரியம், லோபம் முதலிய உலகாசார வினைகளைச் செய்தல், இறைவன் பால் உற்றவர்க்குக் கூடாவாம். அபக்குவர்க்குரிய இயல்புகள் என்று அறிக.

விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே. 1818

கருத்துரை : ஞானகுருவின் முகம் ஞான விளக்கை ஏற்றிக் கொண்டு அகவொளியாகிய திருவடியின்கண் தியானிக்கில், மும்மலங்கள் நீங்கும். பின் சிவ ஒளி சிவ ஒளியில் கலந்து பேரொளியாகும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. 1823

கருத்துரை : ஊனாலாகிய உடம்பில், அலைகடலில் சூக்குமமாகிய மன மண்டலத்தில் இருதய குகையை ஆலயமாகக் கொண்டு ஆன்மா

ஜீவிக்கிறது. சரீர உணர்வாகிய ஜீவன் ஐம்பொறிகளின் உதவியுடன் தூல உடலைப் பேணுகிறது.ஆதலின்,தெளிந்தவர்கள் ஜீவன்தான் சிவ மென்பதை உணர்ந்து, ஐம்புலன்களையும் ஒன்று சேர்த்து அகமுகப் படுத்தினால் சூக்குமத்தில் ஒளி பொருந்திய சிவனைக் காணலாம்.

அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே. 1871

கருத்துரை: இப்பிரபஞ்சத்தின் கண் உள்ள அண்டங்களும், சர அசரமும், உயிர்களும் அவற்றின் குணங்களும் வேதங்களும் ஆதியில் இவை அனைத்தும் படைத்த ஒளி பொருந்திய சிவனும் என் கண்ணில் உள்ளான் என்பதாகும்.

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்று போய்
ஓர்க்கின்ற உள்ளம் உருக அழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே. 1937

கருத்துரை: சிவயோகி தன் தவவலிமையால் மூலாதாரத்திலே கனலை எழுப்பி, பார்வையின் சக்தியாகிய, பார்வதியின் அருளால் மலமாகிய, காமத்தை அழித்துச் சிவத்தை அடைவதாகும்.

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்குங் காணவொண் ணாத அரும்பொருள்
நீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவன்
ஆருக்கும் எட்டாதவ் வாதித்தன் தானே, என்றும் 1982

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரும் அறியார் அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழென்பர்
ஊரை யுணர்ந்தார் யுணர்ந்திருந் தாரே. 1984

கருத்துரை : அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது என்று ஞானிகள் கூறுவர். இப்பிரபஞ்சத்தில் பஞ்ச பூதத்தாலான பூமி என்றும், இயற்கையில் அனைத்து உயிரினங்களும் பஞ்சபூத கலப்பி னால், படைக்கப்பட்டது என்பது தெளிவு. மேலும் ''எண்சாண் உடம் பிற்கு சிரசே பிரதானம்'' என்பது எல்லோரும் அறிந்த உண்மை யாகும். அண்டத்திலே, சூரியன், சந்திரன் இரண்டு ஒளி தரும் கிரகங்

களைப் போல, இப்பிண்டத்திலே இடை, பிங்கலை(சந்திரன், சூரியன்) என்ற இரு அறிவுள்ள ஒளியுள்ள கிரகங்களைக் காண்கிறோம். (அறிவாகிய ஒளி வரும்போது, இருளாகிய அறியாமை மறையும்.) மேலும் ஞானிகள் நம் சிரசை மேருமலை என்றும், அங்கே சிவனும் கங்கையும் (கங்கை நீர் அம்சம்) இருப்பதாகக் கூறுவர். மேற்படி இப்பாடல்களில் ஞான ரகசியம் புதைந்து இருப்பதால் ஞானிகள் அண்டத்திலுள்ள சூரியனைப் போல பிண்டத்திலும் சூரியனை வழிபட்டனர் என்பதாகும். மேற்படி பாடல்களை ஒப்பிடும் திருமந்திரம்,

''அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியுங்
கண்ட சிவனும்என் கண்ணன்றி யில்லையே 1871

என்பதை கவனிக்கவும்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
கன்றாய நந்திக் கருத்துள் இருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே. 1985

கருத்துரை : இறைவனை எந்நேரமும், நின்றும், இருந்தும், கிடந்தும் நடந்தும் சிந்தை செய்யின் பிரணவ உச்சியில் கனல் ஏற்பட்டு மலங்கள் அகற்றப்பட்டு அறிவு ஒளி பிரகாசிக்கும் என்பதாகும்.

உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயமென் றறிந்துகொண் டேனே. - 2005

கருத்துரை: நினைத்த அளவில் உணரும் இறைவனை வேதநூல்களில் இடைவிடாது விளக்கி அருளும் பரம்பொருளை, என் அறிவில் ஒளிரும், மணிசுடர் விளக்கை, ஆன்மாவை நான் என உணர்ந்தேன்.

புலமைந்து புள்ளைந்து புட்சென்று மேயும்
நிலமைந்து நீரைந்து நீர்மையும் ஐந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலம்வந்து போம்வழி யொன்பது தானே. 2025

கருத்துரை: ஞானேந்திரியங்களாகிய ஐம்புலன்கள், பறவைகள் போல் திரிந்து ஆசையாகிய மாயா குளத்தில் அமிழ்ந்து விடாமல், ஆன்மாக்களை மேய்ப்போனாகிய கண்ணனின் அறிவாகிய கோலைக் கொண்டு இந்திரியங்கள் புறத்தே சென்று மாய்ந்து விடாமல் காக்க வேண்டும் என்பதாகும்.

விண்ணவ ராலும் அறிவறி யான்றன்னைக்
கண்ணற வுள்ளே கருதிடிற் காலையில்
எண்ணுற வாகமுப் போது மியற்றிநீ
பண்ணிடில் தன்மை பராபர னாமே. 2519

கருத்துரை: ஆகாய மண்டல வாசிகளாலும் (தேவர்கள்) அறிய முடியாத சிவத்தை, குரு உபதேசத்தால் இறைவனது திருவடியை (எப்போதும் காலை, மதியம், மாலை) அகத்தே அசையா நாட்டத்துடன் தியானிப்பின் சிவத்தை அடையலாம் என்பதாகும்.

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. 2550

கருத்துரை: நந்தியம் பெருமான் இவ்வுடலின் கண் அறிவு ஒளியாக இருந்து வழி நடத்துவதை அறியாது அறியாமையால் புறத்தே நாடு, நகரம், கோயில், குளம் சென்று தேடாமல் இக்காயத்தின்கண்ணுள்ள சிவத்தை அகத்தே வழிபடுவது அறிவுடைமையாகும்.

அற்ற துரைக்கில் அருளுப தேசங்கள்
குற்ற மறுத்தபொன் போலுங் கனலிடை
அற்றற வைத்திறை மாற்றற ஆற்றிடில்
செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே. 2595

கருத்துரை: அருள் உபதேசத்தால், சீவன், மூலத்தில் இடைவிடாது கனலை எழுப்பினால் நெருப்பிடை யிட்ட பொன் மாசு நீங்கி ஒளிர்வது போல், சீவனின் மலகுற்றம் நீங்கும். சிவத்தைஅடையும் என்பதாகும்.

தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே. 2611

கருத்துரை: தான் யார் என்ற தத்துவத்தை யுணர்ந்த ஞானிகள் தனக்கு முன்னும், பின்னும் ஏற்படக்கூடிய கர்மவினைகளைத் திருவடியின் கண்ணறிந்து அவ்வினைகளை அகற்றிக் கொள்வர் என்பதாகும்.

வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை

ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம்எளி தாமே. 2613

கருத்துரை: பிராணனையும், சுழுமுனையையும் என்ன என்பது அறியாது உலகத்தார் நினைத்துக் கொண்டு இருக்கும் கழிவு பதார்த்தமாகிய உஸ்வாச, நிஸ்வாசத்தை நிறுத்தி, மனதை ஒருமுகப்படுத்தி விடலாம் என்று பிதற்றிக் கொண்டிருத்தலால் அது இயலாது.

அனுபவமுள்ளவர்களை அணுகி அபானனை இன்னதென்று அறிந்து உந்திக் கமலமாகிய (ஊசி) சுழுமுனையில் கலக்க வைத்து மலத்தை அறுத்து ஆசையை விட்டவர் சிவத்தை அடைவர் என்பதாகும்.

நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடுஞ் சிவனது கொய்மலர்ச் சேவடி
தேட வரியன் சிறப்பிலி எம்மிறை
ஓடும் உலகுயி ராகிநின் றானே. 2651

கருத்துரை: பெருந்துறை; தேடிக் கண்டறிய முடியாத என் சிவனை ஒளி, ஒலியாகிய பிரகாசம் பொருந்திய இரு திருவடிகளை என் மன மண்டலமாகிய மூலத்தில் இருக்கும் ஜீவன் என்றும், ஆன்மா என்றும் அறிந்தேன். அறிவுக்கு அறிவாகிய ஒளியே பெருந்துறை என அறிந்து மற்றெல்லாவற்றையும் அறியும் அறிவை அறிந்தேன் என்பதாகும் (துறை=வழி)

ஒளியை யறியில் உருவும் ஒளியும்
ஒளியும் உருவம் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக உடனிருந் தானே. 2681

கருத்துரை: அருட் பெருஞ்சோதியாகிய ஆன்ம ஒளியைத் தன்னுள் அறிந்து, அவ்விடத்தே நாட்டம் அதுவாய் நின்றால் சரீர உணர்வாகிய நான் என்னும் ஆணவ இருளாகிய ஜீவஒளி - ஆன்ம ஒளியுடன் தோய்ந்து நின்றால் அதுவே சிவ ஒளியாக நின்று விடும்.

குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க
வரும்வழி மான மறுக்கவல் லார்கட்
கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. 2705

கருத்துரை : ஞானகுரு காட்டிய நெறியில் உணர்ந்து, தெளிந்து, பஞ்சாக்கர தியானத்தில் இருந்தால் நாதமும், ஒளியும் பெருகும், மேலும் பஞ்சாக்கர மனனமே அஞ்ஞான இருளை அகற்றி, பிறவியை ஒழிக்கும் என்பதாகும்.

சிவாய நமஎனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே. 2718

கருத்துரை: சிவாய சிவசிவ என்பது அதி சூக்கும பஞ்சாக்கரம். அதாவது இருளை விட்ட ஆன்மா சிவசக்தியைத் தாரகமாகக் கொண்டு அழிவற்ற நிலைபெறும் என்பதாம். ஒளியில் நினைப்பும் அற்று, அடங்கி நிற்றலே அதி சூக்கும பஞ்சாக்கர தரிசனமாகும்.

சிவாயநம என்றுசித்தத்தைப் புறத்தே செல்லாது அகநிலையாகிய ஓங்கார ஒளியை அறிந்து அவ்விடத்தே சிந்திக்கில் 'அவாய' எனும் துன்பந்தரும் ''ந'' ''ம'' க்களாகிய மலங்கள் சிவத்திடமிருந்து நீங்கி சிவாய சிவ சிவ என்ற சிவசத்தியோடு சேர்ந்து ஒளிமயமாகும்.

குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவது அந்த அருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாகும் உமையவள் தானே. 2762

கருத்துரை: ஞான குருவின் திருமேனியேயன்றித் தியானிக்கும் உருவம் ஒளிமயமான ஓங்காரமாகிய சிவமாகும். அதுவே அருவமும், உருவமுமாகிய சிவசத்தியாகும்.

உபாசனைக்கு ஓர் உருவம் வேண்டும். அஃது இரண்டு வகையாகும். ஒன்றுகாணப்படும் குருவின் திருமேனி. மற்றொன்று குருவினிடம் மறைந்துள்ள உபாசனா மூர்த்தத்தின் சொரூபம். பக்தி நெறியிலுள்ளோர் தமது குருவின் திருவுருவையே மூர்த்தமாகவும் கொள்வர். ஞான யோகத்தில் குருவினால் காட்டப்படுவது தமது சொரூபமாகும் அந்தச் சொரூபத்தில் சிவத்தினது சத்தியான உமையம்மையும். உள்ளாள். அதில் சிவமான குருவும் உள்ளது. ஓங்காரமாகிய ஒளியே நாத அறிவில் சக்தியும், விந்து அறிவில் சிவனும் உடையதாகும்.

விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி

விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை. யான்கழல் மேவலு மாமே. 2816

கருத்துரை: ஆன்மா ஒளிமயமானது என்று குருவால் உணர்த்தப் அவ்வழியில் உறுதியாக நின்று அசையா நாட்டம் வைத்தல் வேண்டும். அதனால் மனமாகிய ஜீவ ஒளியை ஆன்ம ஒளியில் அடிக்கடி சேர்ப்பதால் (தூண்டுவதாகும்) ஜீவ ஒளியை மூடிக் கொண்டிருக்கும் இருளாகிய மலங்கள் எரிக்கப்படும். சீவ ஒளியும் ஆன்ம ஒளியும் ஒரு சேர பிரகாசத்தைத் தூண்டி ஞானோதயம் பெறுவர் என்பதாகும்.

தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானே. 2817

கருத்துரை : அறிவு மயமான ஆன்மா ஜீவ தத்துவங்களோடு சேர்ந்த போதும், தாம் அறியப்படும் பொருளாகவும், சேராத போது அறியாதவையாகவும் (மயக்கநிலையில்) இருக்கிறது. உண்மை தத்துவ ஞானத்தின் தன்மையை அறிந்தபோது தான் அறியப்படுபவன் அல்ல, இவ்வுடலும் அல்ல, என்பதை அறிந்த ஆன்மா சிவத்துடன் சேர்ந்து சிவமயமாகும் என்பதாம்.

காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்குங்
காணவல் லார்க்குக் கடலின் அமுதொக்கும்
பேணவல் லார்க்குப் பிழைப்பிலன் பேர்நந்தி
ஆணவல் லார்க்கே அவன்துணை யாமே. 2823

கருத்துரை: திருவருளால் குருவருள் பேறு பெற்றவர்க்குச் சிவன் (சீவன்) கண்ணினுள் மணி போல் தன்னுள் இருந்து தன்னைக் காட்டுவதாகும். அவனை அறிந்து அன்புடன் நாட்டம் கொண்டவர்களுக்கு அமுதளித்து உறுதுணையாய் இருப்பான் என்பதாம்.

உருவன்றி யேநின் றுருவம் புணர்க்குங்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
அருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே. 2840

கருத்துரை: சிவம் அருவமானதாக இருந்து கொண்டு சகல உருவங்களையும் கூடியிருக்கும். தனக்கு ஒரு மூலமின்றித்தான் எல்லாவற்றுக்கும் மூலமாகும். அருவ நிலையையும் கடந்து விளங்கும் மாயப்

பிரான், அவனே குருவாகச் சீவனில் வெளிப்பட்டு அருளினாலன்றி யாராலும் கூடமுடியாது.

கருவன்றியே தான் கருவாதலாவது தனக்கென ஓர் எண்ணமின்றிச் சீவர்களது எண்ணத்துக்கேற்ப உருவம் அமைப்பவன் என்றபடி. குருவன்றிக் கூட வொண்ணாது என்பது. ஒளிமயமாகவோ-நாதமயமாகவோ வெளிப்பட்டு அருளினாலன்றிக் கூட முடியாது. சிவசொருபத்தை அவனது அருளாலன்றிக் கூட முடியாது.

தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோன்முன்னஞ் சென்னி குறிவழி யேசென்று
நான்முன்னஞ் செய்ததே நன்னில மானதே. 2848

கருத்துரை: ஜீவர்கள் தான் முற்பிறவியில் செய்த வினைவழி இன்பமும், துன்பமும் அமையுமேயன்றி இறைவன், முன்னே சீவர்களுக்கு நியமிக்கவில்லை. இன்பமும், துன்பமும் சீவர்கள் செய்யும் வினைப் பயனுக்கு ஏற்றவாறு அமையும் என்பதாகும்.

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பிரியகி லாவே. 2849

கருத்துரை : ஆற்றிலே இயல்பாக வந்து பொருந்திய நுண்ணிய மணலை அந்த ஆறே சுமக்காமல் பங்கு கொண்டு மேடு பள்ளங்களைத் தூர்ப்பார், பிறர் ஒருவரும் இல்லை. அதைப் போல நான் செய்த வினைக்குரிய அனுபவம் எனக்கே உண்டு என்று உணர்ந்த நான், சிவத்தைப் பெரும் பேறாகக் கொண்டு அவனை விட்டு நீங்காது இருப்பேன் என்றார்.

பெருவெள்ளம் ஆற்றில் சில இடங்களைப் பள்ளமாகவும் சில இடங்களை மேடாகவும் செய்து விடுகிறது. மற்றொரு வெள்ளம் வரும் போது மேடு பள்ளமாகவும், பள்ளம் மேடாகவும் ஆகி விடுகின்றன. பிறர் பள்ளத்தை மேடாகவும், மேட்டைப் பள்ளமாகவும் ஆக்குவதில்லை. அதுபோல் நமக்குற்ற இன்ப துன்பங்களை நாமே அனுபவிக்க வேண்டுமேயன்றிப் பிறர் அனுபவிப்பதில்லை என்பது உவமையால் விளங்கும். இன்ப துன்ப அனுபவத்தில் இறைவனை இடைவிடாது எண்ணியிருத்தல் வேண்டும்.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே. 2883

கருத்துரை : ஆன்மாவாகிய பார்ப்பானது உடம்பகத்தில் இந்திரியங்களாகிய கறவைப் பசுக்கள் ஐந்து உள்ளன. அவை அடக்குவாரின்றி விருப்பம் போல் புலன்களை நோக்கிச் செல்வன. ஆன்மாவைச் செலுத்தும் சிவமாகிய மேய்ப்பாரும் உண்டாகிப் புலன்கள் செல்லும் விருப்பத்தைத் தடுத்தால், ஆன்மாவிடம் பொருந்திய இந்திரியங்களாகிய பசுக்கள் பேரின்பமாகிய பாலைச் சொரியும் என்பதாகும்.

பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் வினோதகர் ஈரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்து நின்றாரே. 2888

கருத்துரை: தச நாடிகளாகிய பருமையான புலிபத்தும், பூதங்கள்-தன் மாத்திரைகள்-புலன்கள் ஆகிய யானை பதினைந்தும்

வித்தகர் ஐவர்-ஞானேந்திரியங்களாகிய ஐவர். வினோதகர் ஈரெண்மர்-தச வாயுக்களான பத்து. அத்தகு மூவர்-சத்துவம், ராஜஸம், தாமஸம் முக்குணம். மருத்துவர் அறுவர்-பிறத்தல், கற்றல், தேடல், கூடல், வாழ்வு, தாழ்வு.

அத்தலை ஐவர்- தேகத்தில் பொருந்தி ஆத்மா, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்தவத்தைப்படும்.
தசநாடிகள்: இடை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு என்பன.

தச வாயுக்கள்: பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்பன.

வித்தகர்: மாறுபாட்டைச் செய்பவர்.
வினோதகர்: அற்புதத்தைச் செய்பவர்.

ஆன்மாதச நாடிகள் உள்ள இவ்வுடம்பில் பொருந்தி ஐந்தவத்தைப் படும் இயல்பு உடையது.

தோணியொன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபஞ் செய்து வழங்கி வளர்மகன்

நீலிக் கிறையுமே நெஞ்சின் நிலைதளர்ந்
தாலிப்பழம் போல் அளிக்கின்ற அப்பே. 2915

கருத்துரை : பிரணவமாகிய (ஓங்கார ஒளியில்) தோணியில் ஏறிச் சிதாகாயமாகிய கடலில் சென்று, அறியாமையாகிய இருளை விற்றுவிட்டு அறிவாகிய ஞானச்செல்வத்தைப் (ஒளியை) பெற்று வாணிகத்தை விருத்தி செய்ய விரும்பிய சீடன் மாயா காரியமாகிய நீலியைப் பற்றுகின்ற மனத்தின் தன்மையைச் சிறிது சிறிதாக விடுத்து, தேனைப் பிலிற்றுகின்ற கனிபோல் இன்பம் நல்கும் தண்ணளியாகிய சந்திர மண்டல ஒளியில் திளைத்திருப்பான். பிரணவமாகிய தோணி பற்றி ஏறிச் சிரசின் மேல் செல்பவன் மாயா காரியத்தில் பற்றுக் கொள்ள மாட்டான்.

தோணியொன் றுண்டு துறையில் விடுவது
வாணி மிதித்துநின் றைவர்கோ லூன்றலும்
வாணிபஞ் செய்வார் வழியிடை யாற்றிடை
ஆணி கலங்கில் அதுவிது வாமே. 2935

கருத்துரை: சிதாகாயமாகிய, அறிவு பெருவெளியாகிய துறையில் சீவனைக் கொண்டு சேர்க்கப் பிரணவமாகிய தோணி ஒன்று உள்ளது. அத்தோணியாகிய பிரணவ ஒளி வெளிப்படாது. ஐவராகிய புலன்கள் ஊன்றி மறைத்துக்கொண்டிருக்கும், தன்னைக் கொடுத்துச் சிவத்தைக் கொள்ளும் வாணிபம் செய்யும். சீவன் சிதாகாயப் பெருவெளிக்குச் செல்லும் இடை வழியில் தேகப் பற்றாகிய ஆணி (ஆசை) கழன்றால் சிவம் பொருந்தி சீவன் சிவமாகும். சீவன் ஐவரது ஆட்சியினின்றும் விடுபடின் சிவமாகும்.

நின்றார் இருந்தார் கிடந்தார் என வில்லை
சென்றார்தருஞ் சித்தமோன சமாதியாம்
மன்றேயு மங்கே மறைப்பொரு ளொன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறே. 2939

பிரணவ யோகத்தில் நிற்கிறார்; இருக்கிறார்; கிடக்கிறார் என்பது இல்லை. சித்தம் நாதாந்த நாட்டத்திலே அடங்கி இருத்தலே ஒடுக்க நிலையாம். சிரசுக்கு மேல் சிதாகாயப் பெருவெளியில் சீவனது அறிவுக்குப் புலப்படாது சிவம் உள்ளது. அச்சிவத்தை நாத வழியிலே சென்று நாதாந்தத்தை அடைந்தவர் சேர்வர் என்பதாகும்.

ஆதனம், காலம், திக்கு முதலியவை பிரணவ யோகிக்கு இல்லையாதலின், ''நின்றார் இருந்தார் கிடந்தார் என வில்லை'' என்றார்.

மோன சமாதி கூடினவர் இடையின்றிச் சகச நிட்டையில் இருப்ப வராவார்.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்கனே. 2944

கருத்துரை: முகத்திலே உள்ள கண்களால் புறப்பொருளைக் கண்டு மகிழ்கின்ற மூடர்களே! அறிவுக்கண் கொண்டு அக உணர்வைக் (நெற்றிக்கண் மூலம்) காண்பதே உண்மையான சிவானந்தமாகும். ஒத்த உறுப்பும் நலனும் உடைய மகளுக்குத் தாயானவள் தன் கணவ னோடு பெற்ற இன்பத்தை மகள் சொல்லும்படி கேட்டால் தாய் வாயி னால் எப்படிச் சொல்ல இயலும்? முடியாது. அதுபோல்,

குருவின் சிவானுபவத்தைப் பற்றிச்சீடன் கேட்பது, தாயின் இன்ப அனுபவத்தைப் பற்றி மகள் கேட்பது போலாகும். மகள் சிற்றின்பத்தை அனுபவித்து உணர்வது போலச் சீடன் சிவானந்தத்தை அனுபவத்தால் உணர்வான்.

சிவானந்த அனுபவம் அக உணர்வில் கண்டு அனுபவிப்பதே தவிர பிறருக்கு உணர்த்த முடியாது.

மனமாயை மாயைஇம் மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே. 2956

கருத்துரை: மனோ சங்கற்பமே மாயை. இச்சங்கற்பமே மயக்கத்தைத் தரும். மனத்தால் சிருட்டிக்கப்பட்ட சங்கற்பம் கெடுவதற்கு மனம் கெடுவதைத் தவிர வேறொன்றும் கெடுவதற்கு இல்லை. அதனால் வீணாகப் பேசிக் காலத்தைக் கழிக்க வேண்டாம். ஆன்மா தன் உண்மை சொரூபத்தை ஆராய்ந்து அடங்கி இருப்பதே மேன்மை யாம். மனோ சங்கற்பம் கெட்டு ஆன்மா தனது யதார்த்த சொரூபத்தில் அடங்கி இருப்பதே எல்லை கடந்த பெருமையதாம். ''உள்ளத்தைக் கவிழுங்கள் நான் உள்ளே நுழைகிறேன்'' என்று தெய்வம் கூறுகிறது.

மனிதனுடைய எதிரி அவனுடைய மனதின் சிருஷ்டித்தான். இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணும் தவறினால் விளையும் பயங் கர உணர்ச்சிகளை அவன் அழுந்தப் புதைக்க வேண்டும்.

''எங்கே ஆசை இல்லையோ அங்கே மனம் இல்லை''
''மனம் ஒரு நல்ல வேலைக்காரன், ஆனால் ஓர் இரக்கமற்ற முதலாளி''

மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னாட்டிடைக் கண்டுகொண் டேனே. 2982

கருத்துரை: ஊனக் கண்ணுக்குப் புலப்படாத இறைவனாகிய கள்வனை அடைய மனமாகிய உயர்ந்த தேரில் ஏறி, அலைந்த நாட்டின் கணக்கைச் சொல்ல முடியாது புலம்புவர். நானும் அவ்வண்ணமே பல இடங்களுக்கு அலைந்து காணாது எங்கள் இறைவனை (குருவருளால்) மின்னல் போல் தோன்றி அழியும் இவ்வுடம்பாகிய நாட்டில் இறைவன் விளங்குவதைக் கண்டேன்.

விண்ணவ னாயுல கேழுக்கு மேலுளன்
மண்ணவ னாய்வலஞ் சூழ்கடல் ஏழுக்குந்
தண்ணவ னாயதுதன்மையின் நிற்பதோர்
கண்ணவ னாகிக்கலந்துநின் றானே. 3037

கருத்துரை: சிவன் ஆகாயமாயும், பூமியாயும், ஏழு உலகங்களுக்கும் அப்பால் உள்ளான் அதனைச் சூழ்ந்துள்ள ஏழு கடல்களுக்கும் குளிர்ச்சி தருபவனாயும், அக்கடலைப் போன்ற தன்மையுடைய வலக் கண்ணில் விளங்குபவனாய் சீவரோடு கலந்துள்ளான்.

உண்ணின் றொளிரும் உலவாப் பிராணனும்
விண்ணின் றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின் றியங்கும் வாயுவு மாய்நிற்குங்
கண்ணின் றிலங்குங் கருத்தவன் தானே. 3040

கருத்துரை: சீவரது உடம்பின் கண்ணே உள்ள கெடாத பிராணனும், அண்ட ஆகாயத்தில் விளங்கும் விரிந்த கிரணங்களையுடைய சந்திரனும், பூமித்தானத்தில் பொருந்தி இயங்கும் அபான வாயுவும் ஆகி நிற்பவன். கண்ணின் பார்வையில் விளங்கும் சிவமே யாகும்.

சிவன் பிராண அபானனை இயக்கும் ஜீவனாயும், கண்ணின் (ஒளியாக) பார்வையில் விளங்குபவனாய் உள்ளான்.

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணுந் திறனும் படைத்த பரமனைக்

கண்ணிற் கவரும் கருத்தில் அதுவிது
உண்ணின் றுருக்கியோர் ஆயமு மாமே. 3041

கருத்துரை: தியானத்துக்குரிய பிரணவத்தை (ஓங்கார ஒளியை) குரு காட்டிய வழியே, அச்சாதனையின் நெறியே செல்லும் வகையினையும், தோற்றுவித்தருளிய பரமசிவனை, அகக்கண் கொண்டு காணும் தன்மையில் அப்பொருள் சீவனும் உடம்பில் பொருந்தி அதன் தன்மையை மாற்றி ஒப்பற்ற சக்தியைக் கொடுப்பான் என்பதாம்.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

கருத்துரை: என் சிவகுரு நாதனாகிய நந்தியின் திருவடி வாழ்க. மலக்கட்டினை நீக்கியருளிய அவனது திருவடி வாழ்க. மல மறுத்தலோடு உண்மை ஞானத்தையும் அருளிய அவனது திருவடி வாழ்க.

நின்மலனாகிய அவனது திருவடி வாழ்க! இது குருவுக்குரிய வாழ்த்து. குருவே சிவமாதலின் சிவத்துக்கும் ஆம்.

திருச்சிற்றம்பலம்
திருமந்திரம்
முற்றிற்று.

சித்தர் பாடல்கள்

சிவ வாக்கியர்

என்னிலே யிருந்த தொன்றை யானறிந்த தில்லையே
என்னிலே யிருந்த தொன்றை யானறிந்து கொண்டபின்
என்னிலே யிருந்த தொன்றை யாவர்காண வல்லிரோ
என்னிலே யிருந் திருந்து யானுணர்ந்து கொண்டெனே.

அண்டர்கோ னிருப்பிட மறிந்துணர்ந்த ஞானிகள்
பண்டறிந்த பான்மை தன்னை யாரறிய வல்லரே?
விண்ட வேதப் பொருளையன்றி வேறுகூற வகையிலாக்
கண்ட கோவில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே.

மாறுபட்ட மணிதுலக்கி வண்டினெச்சில் கொண்டுபோய்
ஊறுபட்ட கல்லின்மீதே யூற்று கின்ற மூடரே
மாறுபட்ட தேவரு மறிந்து நோக்கு மென்னையும்
கூறுபட்டுத் தீர்க்கவோ குருக்கள் பாதம் வைத்ததே.

செங்கலுங் கருங்கலும் சிவந்த சாதி லிங்கமும்
செம்பிலும் தராவிலுஞ் சிவனி ருப்ப னென்கிறீர்
உம்பத மறிந்துநீ ரும்மைநீ ரறிந்தபின்
அம்பலம் நிறைந்த நாதராடல்பாட லாகுமே.

எத்திசைக்கு மெவ்வுயிர்க்கு மெங்களப்ப னெம்பிரான்
முத்தியான வித்துளே முளைத்தெழுந் தவச்சுடர்
சித்தமுந் தெளிந்துவேத கோயிலுந் திறந்தபின்
அத்தனாடல் கண்டபின் னடங்க லாடல் காணுமே.

மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாலநாடி யும்முளே நாழிகை யிருந்தபின்
பாலனாகி வாழலாம் பறந்துபோக யாக்கையும்
ஆலமுண்ட கண்டராணை யம்மையாணை யுண்மையே.

கடலிலே திரியுமாமை கரையிலேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்
மடலுளே யிருக்குமெங்கள் மணியரங்க சோதியை
உடலுளே நினைந்து நல்ல வுண்மையான வுண்மையே.

விண்ணிலுள்ள தேவர்க ளறியொணாத மெய்ப்பொருள்
கண்ணிலாணி யாகவே கலந்துநின்ற தெம்பிரான்;
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரு மெம்முளே யமர்ந்து வாழ்வ துண்மையே.

காலை மாலை நீரிலே மூழ்குமந்த மூடர்காள்!
காலை மாலை நீரிலே கிடந்த தேரை யென்பெறும்?
காலமே யெழுந்திருந்து கண்கள் மூன்றி லொன்றையும்
மூலமே நினைதி ராகில் முத்தி சித்தி யாகுமே.

ஊறிநின்ற தூமையை யுறைந்து நின்ற சீவனை
வேறு பேசி மூடரே விளைந்த வாற தேதடா!
நாறு கின்ற தூமை யல்லோ நற்குலங் களாவன?
சீறுகின்ற மூடரேயத் தூமை நின்ற கோலமே.

கண்ணிலே யிருப்பனே கருங்கடல் கடைந்தமால்;
விண்ணிலே யிருப்பனே மேவியங்கு நிற்பனே;
தன்னுளே யிருப்பனே தராதலம் படைத்தவன்;
என்னுளே யிருப்பனே யெங்குமாகி நிற்பனே.

புண்டரீக மத்தியி லுதித்தெழுந்த சோதியை
மண்டலங்கள் மூன்றொடு மன்னுகின்ற மாயனை
அண்டரண்ட மூடறுத்த றிந்துணர வல்லிரேல்
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே.

அண்ணலாவ தேதடா வறிந்துரைத்த மந்திரம்
தண்ணனாக வந்தவன் சகலபுராணங் கற்றவன்
கண்ணனாக வந்தவன்ன காரனைத் துதித்தவன்
ஒண்ணதாவ தேதடா வுண்மையான மந்திரம்.

விண்ணினின்று மின்னெழுந்து மின்னொடுங்கு மாறுபோல்
என்னுள்நின்று மெண்ணுமீ சனென்னகத் திருக்கையால்
கண்ணினின்று கண்ணில் தோன்றும் கண்ணறி விலாமையால்
என்னு ணின்ற வென்னையும் யானறிந்த தில்லையே.

காணவேண்டு மென்றுநீர் கடன்மலைக ளேறுவீர்;
ஆணவம்மஃ தல்லவோ அறிவிலாத மாந்தரே
வேணுமென்றவ் விசர்பாத மெய்யுளே தரிப்பிரேல்
தாணுவாக நின்ற சீவன் தான் சிவம தாகுமே.

பட்டினத்தடிகள்

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட,
தூதென்றெண் ணாமற் சுகமென்று நாடுமித் துர்ப்புத்தியை,
ஏதென் றெடுத்துரைப் பேனிறை வாகச்சி ஏகம்பனே.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை இடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சி ஏகம்பனே.

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும் புடவையொன் றில்லாத போது பகலிரவாய்
ஈயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவு பகல்
மாயும் மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே.

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்பு; பொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை; அடர்ந்த சந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை; வாழ்வைக் குடங்கவீழ்நீர்
ஓட்டமென் றேயிரு நெஞ்சே! உனக்குப தேசமிதே.

எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்குமொன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச் சுருட்டித்தம் கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே.

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்கு
எட்டாத புட்பம் இறையாத தீர்த்தம் இனிமுடிந்து
கட்டாத லிங்கம் கருதாத நெஞ்சம் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன் றோகுரு நாதன் மொழிந்ததுவே.

உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப்
புளியிட்ட செம்பையும்போற்று கிலேன்;உயர்பொன்னெனவே
ஒளியிட்ட தாளிரண்டுள் ளேயிருத்து வதுண்மை யென்று
வெளியிட் டடைத்துவைத் தேனினி மேலொன்றும் வேண்டிலனே.

கண்டங் கரியதாம்; கண்மூன் றுடையதாம்;
அண்டத்தைப் போல அழகியதாம் - தொண்டர்

உடலுருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

ஆரூர ரிங்கிருக்க அவ்வூர்த் திருநாளென்
றூரூர்க டோறு முழலுவீர் - நேரே
உளக்குறிப்பை நாடாத வூமர்காள்! நீவீர்
விளக்கிருக்கத் தீதேடு வீர்.

காலன் வருமுன்னே, கண்பஞ் சடைமுன்னே,
பாலுண் கடைவாய் படுமுன்னே - மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

பாலிருக்கும் தோல்தனத்தைப் பாராதே மங்கையர்கள்
காலிடுக்கை நத்திக் கரையாதே - கோலெடுத்து
வீர மறலி வருமுன் வினையறுக்கும்
பார வழியின் னருளைப் பார்.

சூத்திரத்தா லாடும் சுழுமுனையைத் தான்திறந்து
பார்த்திருந்தால் வாராது பாவமெலாம் - சூத்திரத்தைப்
பாராம லேயிருந்து பாவிமன மேபிறக்க
வாராம லேயிருக்க வா.

காலங் கழித்து கடைவாயில் பாலுறுமுன்
வேலங் கனைய விழிமடவார் - ஏலக்
குழியில் வைத்து மாரடித்துக் கூப்பிடுமுன் மாய்கைக்
கழியெடுத்து ப்போடுமுன்கண் ணால்.

கண்ணாலே ஞானம் கருதாமல் நெஞ்சேநீ
எண்ணாதமாய் கையெல்லா மெண்ணுகிறாய்-நண்ணாய்கேள்
பார்க்கவேண் டுந்தனையும் பத்தரைமாற் றுத்தங்கம்
ஆக்கப்போ காதோஉன் னால்.

உண்மை யிதுகாண்; ஒளியிருந்த விடதுகாண்;
உண்மை சிவனிருக்கும் ஊருகாண் - உண்மை

கருமை ஒளியேழ் கதியுள் பதங்கள்
மருவுதங்கி நீவருந்து மாறு.

மூலத் துதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள்
வாலைதனைப் போற்றாமல் மதிமறந்தேன் பூரணமே.

உந்திக் கமலத் துதித்து நின்ற பிரமாவை
சந்தித்துக் காணாமற் றட்டழிந்தேன் பூரணமே.

நாவிக் கமல நடுநெடுமால் காணாமல்
ஆவிகெட்டு யானு மறிவழிந்தேன் பூரணமே.

உருத்திரனை யிருதயத்தி லுண்மையுடன் பாராமல்
கருத்தழிந்து நானுங் கலங்கினேன் பூரணமே.

விசுத்தி மகேசுரனை விழிதிறந்து பாராமல்
பசித்துருகி நெஞ்சம் பதறினேன் பூரணமே.

நெற்றி விழியுடைய நிர்மல சதாசிவத்தைப்
புத்தியுடன் பாராமற் பொறியழிந்தேன் பூரணமே.

நாதவிந்து தன்னை நயமுடனே பாராமல்
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

உச்சி வெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுட னானு மறிவழிந்தேன் பூரணமே.

மூக்கு முனையை முழித்திருந்து பாராமல்
ஆக்கை கெட்டு நானு மறிவழிந்தேன் பூரணமே.

இடைபிங் கலையின் இயல்பறிய மாட்டாமல்
தடையுடனே யானுந் தயங்கினேன் பூரணமே.

ஊனாய் உடலுயிராய் உண்ணிறைந்த கண்ணொளியாய்த்
தேனாய் ருசியான திறமறியேன் பூரணமே.

ஊனுக்குள் நீநின் றுலாவினதைக் காணாமல்
நானென் றிருந்து நலமழிந்தேன் பூரணமே.

உடலுக்குள் நீநின் றுலாவினதைக் காணாமல்
கடமலை தோறுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

ஐவகையும் பெற்றுலக அண்டபகி ரண்ட மெல்லாந்
தெய்வமென நின்ற திறமறியேன் பூரணமே.

மனமாய்க் கனவாகி மாய்கையாய் உள்ளிருந்து
நினைவாகி நின்ற நிலையறியேன் பூரணமே.

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

அடர்ந்த மனக்காட்டை அஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்து தொடர்ந்து வெட்டிச் சுடுவதினி எக்காலம்.

ஐந்து பொறிவழிபோய் அலையுமிந்தப் பாழ்மனத்தை
வெந்துவிழப் பார்த்து விழிப்பதினி எக்காலம்.

ஒலி படருங் குண்டலியை உன்னியுணர் வாலெழுப்பிச்
சுழுமுனையின் தாள்திறந்து தூண்டுவது மெக்காலம்.

எண்ணாத தூரமெல்லாம் எண்ணியெண்ணிப் பாராமல்
கண்ணாடிக் குள்ளொளிபோற் கண்டறிவ தெக்காலம்,

மும்மலமுஞ் சேர்ந்து முளைத்தெழுந்த காயமிதை
நிர்மலமாய்க் கண்டுவினை நீக்கிநிற்ப தெக்காலம்.

கண்ணினொளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்து கொண்டதுவும்
விண்ணினொளி கண்டதுவுங் வெளிப்படுவ தெக்காலம்.

நினைக்கும் நினைவுதொறும் நிறைந்தபரி பூரணத்தை
முனைக்கு மேற்கண்டு கண்ணில் முத்துதிர்ப்பதெக்காலம்.

அருவாய் உருவாகி ஆதியந்த மாகிநின்ற
குருவாகி வந்தெனையாட் கொண்டருள்வ தெக்காலம்.

ஒளியிட்ட மெய்ப்பொருளை உள்வழியி லேயடைத்து
வெளியிட்டுச் சார்த்தி வைத்து வீடுறுவ தெக்காலம்.

ஆசை வலைப்பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணித் தீபத்தி லொன்றி நிற்ப தெக்காலம்.

இருளை ஒளி விழுங்கி ஏகவுருக் கொண்டாற்போல்
அருளை விழுங்குமிருள் அகன்று நிற்ப தெக்காலம்.

இடைக் காட்டுச் சித்தர்

கண்ணுள் கருமணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்
பெண்ணுருவப் பாதியனைப் பேசரிய முப்பொருளை
விண்ணின் அமுதை விளக்கொளியை வெங்கதிரைத்
தண்ணளியை யுள்ளில் வைத்துச் சாரூபஞ் சாருவனே.

கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை
விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே.

மூவர் முதலை முக்கனியைச் சர்க்கரையைத்
தேவர் பொருளைத் தெள்ளமுதைப் போற்றீரே.

பொய்ப்பொருளை விட்டுப் புலமறிய வொண்ணாத
மெய்ப்பொருளை நாளும் விருப்புற்றுப் போற்றீரே.

பொய்யான கல்விகற்றுப் பொருண்மயக்கங் கொள்ளாமல்
மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் நன்மனமே.

சாகா திருப்பதற்குத் தான்கற்ற கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறிநீ நன்மனமே.

கைவிளக்குக் கொண்டு கடலில்வீழ் வர்போல
மெய்விளக்குன் னுள்ளிருக்க வீழ்குவதேன் புல்லறிவே.

இருவினையாம் மாடுகளை ஏகவிடு கோனே - உன்
அடங்குமன மாடொன்றை யடக்கிவிடு கோனே.

அகங்கார மாடுகண்மூன் றகற்றிவிடு கோனே-நாளும்
அவத்தையெனும் மாடதைநீ யடக்கிவிடு கோனே.

சிரமதிற் கமலச் சேவை தெரிந்தெங்கள் கோனே
சித்திக்குந் தந்திரஞ் சித்தத் தறியெங்கென் கோனே

கண்ணாடி யினுள்ளே கண்டு பார்த்துக்கொள்ளுகோனே-
ஞானக்
கண்ணன்றிக் கண்ணாடி காணவொண்ணா தெங்கள்கோனே.

அகஸ்தியர் ஞானம்

ஒண்ணான உச்சிவெளி தாண்டி நின்று
உமையவளுங் கணபதியு முந்தி யாகி

விண்ணொளியாம் அம்பரம் ஓம் அவ்வும் உவ்வும்
விதித்தபரம் ஒருவருக்கு மெட்டா தப்பா
பண்ணான உன்னுயிர்தான் சிவமதாச்சு
பாற்கடலில் பள்ளி கொண்டோன் விண்டு வாச்சு
கண்ணான கணபதியைக் கண்ணில் கண்டால்
கலந்துருகி யாடுமடா ஞானம் முற்றே.

நிஜானந்த போதம்

சோதியென்ற சோதியிலே சோதி யானார்
சூழ்ந்ததடா அண்டமதில் நன்றாய்ப் பாரு
ஓதியதோர் மந்த்ரகலை சோதி யெல்லாம்
ஒளிவிளக்காய் நின்றதடா அங்கே பாரு
நீதியுடன் பார்க்கையிலே அண்டந் தன்னில்
நிறைந்துநின்ற நட்சத்திர சோதி யெல்லாம்
ஆதியென்ற நாதாக்கள் காந்தி, காந்தி
அண்டமதில் சூழ்ந்ததடா அங்கே பாரே.

பொய்யென்று சாத்திரத்தைச் சொல்வானாகில்
புழுவான பாழ்நரகில் வீழ்வான் பாவி
மெய்யென்று குருபதத்தைத் தொண்டு பண்ணி
வேதாந்தப் பலநூலும் விரித்துப் பார்த்துக்
கைமுறையும் குருமுகமாய்க் கண்டு தேறிக்
கற்றவரை வணங்கியே சொல்லக் கேட்டுப்
பொய்மறந்து மெய்யுகந்தே அறிவிற் கூடிப்
பூரணமே தெய்வமென்று போற்றி நில்லே.

உபநயனமென்பது, மூன்றாவது நேத்திரம். அறிவு, உணர்வு. அதனால் சந்தியா வந்தனமென்பது இரவிமதி தனதிடம் ஒற்றுமையாகும் காலம். உபதேசமாவது, பகிர்முக நோக்கு நீங்கி, ஞான தேகமாகிய அகமுக சுத்த வெளியிடமிருந்து ஜபதபங்களைச் செய்விக்கக் குரு திருவருள் புரிவது.

நெஞ்சறி விளக்கம்

வஞ்சக மனத்தி னாசை மாற்றிய பெரியோர் தாளில்
கஞ்சமா மலரிட் டோதுங் கணபதி தாசன் அன்பால்
நெஞ்சறி விளக்க ஞான நீதி நூல் நூறும் பாடக்
குஞ்சர முகத்து மூலக் குருபரன் காப்பு தாமே.

மனமெனும் பேயி னாலே மாய்கையாம் இருடான் மூடச்
சனமெனும் ஆசா பாசந் தலைமிசை ஏற்றிக் கொண்டு
கனமெனுஞ் சுமையைத் தூக்கிக் கவலையுற் றிட்டாய் நீயுற்
பனமெனும் நாகை நாதர் பதம்பணிந் தருள்சேர் நெஞ்சே.

உடலினை நிசமென் றெண்ணி உலகெலாம் ஓடி யாடிக்
கடல்மரக் கலப்பாய்க் கம்பக் காகம்போற் கலக்கமுற்றாய்
திடமருள் குருவின் பாதஞ் சிக்கெனப் பிடித்து நின்றால்
நடமிடு நாகை நாதர் நற்பதம் பணிவாய் நெஞ்சே.

வீட்டிருள் போக வென்றே விளக்கினை ஏற்றி வைத்தால்
வீட்டிருள் எங்கே போச்சு விளக்கொளி எங்கே போச்சு
கூட்டினுள் நடஞ்செய் ஈசன் குறிப்பறி யாமல் நீதான்
நர்ட்டினில் அலைந்தாய் நாகை நாதரை வணங்கு நெஞ்சே.

குளத்திலே கிடக்கும் ஆமை குளக்கரை முட்டையிட்டுக்
குளத்துநீர்க் குள்ளிருந்து குறிப்புடன் நினைக்கும்போது
குளத்திலே புதைந்த முட்டை கருவுரு ஆனாற் போலும்
உளத்திலே நாகை நாதர் உருவறிந் துணர்வாய் நெஞ்சே.

புல்லினுள் இருக்கும் பூச்சி பொருந்தவெண் ணுரையுண்டாக்கி
மெல்லிய தண்ணீர் வீட்டில் வெயிற்படாதிருக்கு மாபோல்,
சொல்லிலே நாகை நாதர் தோய்ந்திடச் சூட்சங் கண்டாற்
கல்லிலே தெய்வமில்லைக் கருத்திலே தெய்வம் நெஞ்சே.

ஏட்டிலே எழுதும் நூல்கள் எத்தனை படித்தும் நீதான்
காட்டிலே எறித்த திங்கள் கானலிற் சலம்போ லானாய்
நாட்டிலே தெய்வமென்று நடந்தலை யாம லுன்றன்
கூட்டிலே நாகை நாதர் குறிப்பறிந் துணர்வாய் நெஞ்சே.

நித்திரை வந்தபோது நினைவு தானிருந்த தெங்கே
புத்திரர் தாமு மெங்கே புணர்ந்திடும் மனைவி எங்கே
பத்திர பூசை எங்கே பல தொழில் செய்வதெங்கே
சிற்பர நாகை நாதர் செயலினை அறிவாய் நெஞ்சே.

கண்ணாடி தன்னிற் றோற்றுங் காரண உருவம் போல
உண்ணாடி மூலாதாரத் துதித்த சற்குருவைக் கண்டு
விண்ணாடிவெளியைப்பார்த்து விளக்கொளிமகிமைசேர்ந்தால்
மண்ணாடு நாகை நாதர் வந்துனை ஆள்வார் நெஞ்சே.

உருப்படுங் கல்லுஞ் செம்பும் உண்மையாய்த் தமய்வமென்றே
மருப்புனை மலரைச் சூட்டி மணியாட்டித் தூபங்காட்டி
விருப்பமுற் றலைந்தாய் அந்த வினைமயல் விட்டு நின்னுள்
இருப்பவர் நாகை நாதர் இணையடி பூசி நெஞ்சே.

ஆசையாம் பாச மாயை அறிவதை மயக்கி யுன்னுள்
ஈசனைத் தேடொட் டாமலிருக்குமவ் விருளைப் போக்கிக்
கோசமா குறியை நோக்கிக் குருபரன் வடிவைக் கண்டு
வாசமா மலரால் நாகை நாதரை வணங்கு நெஞ்சே.

ஊகத்தின் கண்ணிரண்டிற் காண்பதுங் கண்ணொன்றேபோல்
தேகத்தின் அறிவின்கண்ணைத் திடமுடன் அறிந்து கொண்டு
மோகத்தின் கனலில் வீழா முனைசுழி வாசி பார்த்தால்,
ஏகத்தால் நாகை நாத ரிணையடி சார்வாய் நெஞ்சே.

மித்திர குருக்கள் சொல்லை, மெய்யென்று கல்லை வைத்துப்
பத்திர புட்பஞ் சார்த்திப் பணிந்திடும் பாவை நீ தான்
சித்திரப் பதுமை போலுஞ் செய்தொழி லொடுங்கி நின்று
புத்தியாய் நாகை நாதர் பொன்னடி போற்று நெஞ்சே.

நாடகப் பெண்ணை ஆட்டும் நட்டுவன் போலே யுன்றன்
கூடகச் சடத்தை யாட்டுங் குருவைநீ அறிந்திடாமல்
மூடக மானாய் ஞான முதல்வனை அறிவால் தேடி
ஆடக நாகை நாதர் அடியிணை பணிவாய் நெஞ்சே.

மகத்துவம் அடைந்த நெஞ்சே மலமாயை கொண்ட நெஞ்சே
பகுத்தறிவில்லா நெஞ்சே பலநினை வான நெஞ்சே
மிகுத்திடு காம நெஞ்சே மெய்ப்பொருள் அறியா நெஞ்சே
செகத்தினில் நாகை நாதர் சீர்ப்பதந் தேடு நெஞ்சே.

உறக்கமும் விழிப்பும் போல உடல்பிறந் திறக்குந் தன்மை
சிறக்கவேஅறிந்து மிந்தச்செகவாழ்வை மெய்யென்றெண்ணிக்
குறித்தலை குலாமர் சொல்லைக் குறிப்புடன் நம்பலாமோ
மறக்கொணா நாகை நாதர் மலரடி வணங்கு நெஞ்சே.

சிவபோக சாரம்

பரவிமனம் போகாப் பரத்தடைய நாளும்
இரவுபகல் அற்ற இடத்தே - திரமாக
நில்லென்றான் கண்டஎல்லாம் நேதிபண்ணி மும்மலமும்
கொல்லென்றான் ஞான குரு.

மனையில்வரு போகத்தின் மாதர்மக்கள் பாச
வினையில் அழுந்தி விடாதே - உனைஇழந்து
காணாமற் கண்டானைக் காட்சியறக் கலந்து
பூணாமல் எப்பொழுதும் பூண்.

உள்ளம் கரைய உடல்கரைய ஆனந்த
வெள்ளம் கரைபுரண்டு மேலாகக் - கள்ளமலம்
பொய்யாக என்னுட் புகுந்தவா றென்கொலோ?
ஐயா தியாகவினோ தா.

ஈசன் அடியில் இருக்கையிலே எங்கெங்கும்
ஈசனடி தேடி இளைத்தேனே - பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் தன்னுடைய
நற்பதத்தைக் காணாமுன் நான்.

இன்பசுகத் துள்ளே இருக்கலாம் எப்போதும்
துன்பவினை யுன்னைத் தொடராது - வன்பா
மருட்டேக மாயடங்கி மாயாமல் நெஞ்சே
அருட்டேக மாயடக்கு வாய்.

தேகம் மறந்து திருவருளாய் நின்றசிவ
போகம் விளையப் புணர்நெஞ்சே - நோக
வருந்தாமல் தீவினையின் வாடாமல் துன்பம்
அருந்தாமல் நீபிறவா மல்.

அவரவருக் குள்ளபடி ஈசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மானால் - அவரவரை
நல்லார்பொல் லாரென்று நாடுவதென் நெஞ்சமே
எல்லாஞ் சிவன்செயலென் றெண்.

பூதாதி பாசமன் றோபூரணா னந்தமன்றோ
பேதமற நம்முட் பிரானன்றோ - வாதனைகள்
விட்டாற் சுகமன்றோ என்றுணர்வில் வேண்டுவதுங்
கெட்டாற் பிறப்புங் கெடும்.

எவ்வுயிருங் காக்கவோர் ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் நாமொருவர் அல்லவோ - வவ்விப்
பொருகுவதும் நெஞ்சே புழுங்குவதும் வேண்டாம்
வருகுவ்து தானே வரும்.

என்னிடத்தில் நின்செயலே இல்லையென்றால் யாதுறினும்
நின்னிடத்தில் நான்வேண்டல் நிச்சயமே - என்னிடத்தில்
இன்மை உயிர்க்குயிர் நீஇன்மை இருந்தியற்றின்
நன்மை திமைக்கேதுவோ நான்.

முன்னைவினைக் கீடா முதல்வன்அருள் நமைக்கொண்
டென்னவினை செய்ய இயற்றுமோ - இன்னவினை
செய்வோம் தவிர்வோம் திரிவோம் இருப்போம்இங்
குய்வோம் எனும்வகையே து.

ஊட்டும் வினையிருந்தால் உன்னாணை உன்பதத்தைப்
பூட்டிப் பிடித்துப் புசிப்பிக்கும் - கேட்டுத்
திரியாதே வந்துதில்லைத் தெய்வமே என்றென்
தெரியாதே நெஞ்சே இரு.

சத்துருவும் மித்துருவும் தாரணியில் வேறில்லை
சத்துருவும் மித்துருவும் தன்நெஞ்சே - பெத்தமலம்
வீட்டும் படிக்கு வினைக்கீ டுனைத்தனுவோ
டாட்டுஞ் சிவனென் றறி.

இன்னவினை இன்னதலத் தின்னபொழு தின்னபடி
இன்னதனால் எய்தும் எனஅறிந்தே - அன்னவினை
அன்னதலத் தன்னபொழு தன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான்.

அன்றே அனாதி அமைத்தபடி யல்லாதொன்
றின்றே புதிதாய் இயையுமோ - என்றுஞ்
சலியா தியற்றுவான் தன்னையே நோக்கி
மெலியா திருந்து விடு.

கள்ள அரனே கருணையுடன் என்னறிவில்
உள்ள சுகந்தந்துவிட ஒண்ணாதோ - மெள்ள
வருத்துவதுந் தீவினையில் வாட்டுவதும் ஞானம்
பொருத்துவதும் ஏன்தான் புகல்.

சும்மா தனுவருமோ சும்மா பிணி வருமோ
சும்மா வருமோ சுகதுக்கம் - நம்மான்முன்
செய்தவினைக் கீடாச் சிவனருள்செய் விப்பதென்றால்
எய்தவனை நாடி இரு.

கூட்டுவதுங் கூட்டிப் பிரிப்பதுவும் ஒன்றொன்றை
ஆட்டுவதும் ஆட்டி அடக்குவதும் - காட்டுவதும்
காட்டி மறைப்பதுவும் கண்ணுதலோன் முன்வைத்த
ஏட்டின் படியென் றிரு.

உள்ளதுதான் போமோமற் றில்லா ததுவருமோ
பள்ளமே வெள்ளம் பரவாதோ - கள்ளமாய்ப்
பித்துப்போ லேபிதற்றும் பேதைமட நெஞ்சமே
செத்துப்போ னானோ சிவன்.

ஆகம் பகையாவ தன்றிப் பகையுண்டோ
மோகம் தவிர்ந்த முனிவோர்க்கிங் - கேகன்
இருவர் அறியாத ஈசனருள் அல்லால்
ஒருவர் துணைஉண்டோ உரை.

அதிட்டானம் ஈசன் அருளன்றி மற்றை
அதிட்டானம் எல்லாம் அநித்தம் - அதிட்டானம்
பொய்யென் றறியாமற் பூதலத்து நெஞ்சமே
மெய்யென் றுழல்வதெல்லாம் வீண்.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்-சீ சி
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

ஒருகோடி ஆகமங்க ளெல்லாம் உணர்ந்தும்
பெருகுதவஞ் சித்தியெல்லாம் பெற்றும்-குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாந் தினம்.

எல்லாம் உனது செயலென் றறிந்தும் எனதுளத்திற்
பொல்லாத சங்கற்பம் ஏன்வரு மோபுர மூன்றெரிக்க
வல்லாய் கமலையில் ஞானப்ர காச வரத இது
சொல்லாய் கரண மயக்கமன் றோஎன் தொழிலல்லவே.

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமைஉணர் வதுவே.

பொதுத் திரட்டு

குருவின் சிறப்பு

சொல் பிறந்த இடமெங்கே முப்பாழெங்கே
துவார பாலகர் எங்கே முதற் பாழெங்கே
நல்ல சங்கு நதியெங்கே வைகுந்த மெங்கே
நாரணனும் ஆலிலை மேல் படுத்த தெங்கே
அல்லல்படும் ஐம்பூத மொடுக்க மெங்கே
ஆறைந்து இதழிரெண்டு முளைத்த தெங்கே
சொல்ல வல்லார் உண்டானால் அவரை நாமும்
தொழுது குருவெனப் பணிந்து வணங்கலாமே.

தன்னை யறியாமற் றானே தனைத்தேட
என்னபுதுமை யிதையென் சொல்வேன் - மண்உலகிற்
தண்ணீரி னின்றுகொண்டு தாகம் தணியார்போ
லெண்ணீர்மற் றேதுரைப்போம் யாம்.

சித்தம் பிறந்து செகம் பிறந்து நானெனவோர்
கத்தன் பிறந்தவழி கண்டோமே - சித்த
மடங்காமை யேமாயை யம்மாயை மாய்ப்பார்
திடந்தானே சாயுச் சியம்.

தேரைத் திருநாளை சேவிப்பார் தம்மை விட்டங்
காரைத் தொழப் போரா ரையகோ - தேரிடையே
பார்க்கின்ற தெய்வம் பரிபூரண மலவே
யார்க்குந் தெரியாத தோ

வாலே முகமாய் வரவானை யேறினான்
போலேயுன் போதமோ போய்த்தீண்டும் - சாலப்
பெருஞ்சிரிப்பாந் தன்னைப் பிடித்தாட்டும் பேயைத்
தெரிஞ்சிருக்கத் தேடும் செயல்.

பொருள் வால்புறமுகமாய் நினைந்து யானையின் மீது ஏறியவனை அவன் கருதிய ஊருக்கு மாறாகிய ஊரைச் சார்விக்கும். தலைப்புறமுகமாய் ஏறினானை அவன் கருதிய ஊருக்கு நேரே சார்விக்கும். அதுபோல் அருளைப் பின்னிட்டுப் போதத்தை முன்னிட்டுச் சென்றானைக் கருவிகளைச் சார்விக்கும். அத்திருவருளை முன்னிட்டுப் போதத்தைப் பின்னிட்டுச் சென்றானைச் சிவத்தைச் சார்விக்கும் என்பதறிக.

விண்ணுக்குள் வெளியிருள் மாற்றி
வேதாந்த விளக்கினை ஏற்றிக்
கண்ணுக்குள் மணியாகத் தோற்றி - வரும்
காரணமான கடவுளைப் போற்றி
இறக்கத் துணிந்து கொண்டேனே.

குணங்குடியார்

உயர்வு அற உயர்நலம் உடையவன்? யவன் அவன்
மயர்வு அற மதிநலம் அருளினன் யவனவன்?
அயர்வு அறும் அமரர்கள் அதிபதியவன்? அவன்
துயர் அறுசுடர் அடி தொழுதெழு என் மனனே!

நம்மாழ்வார்

காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகாரசிவ
போகமென்னும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப்
பூரணமாய்
ஏகஉருவாய்க் கிடக்குதையா இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.

தாயுமானவர்

ஞான விழிப்புப் பெற்றவன் தனது அகந்தையை ஒழிக்கவேண்டும்; பணிவை ஆபரணமாகப் பூண வேண்டும். அவனது உள்ளத்தில் எழுந்த அன்பு எரியத் தொடங்கி, அவனிடமுள்ள உலக ஆசைகளை நீறாக்க வேண்டும். விழிக்குமுன் கண்ட உலகம் மறைய வேண்டும்; விழித்த கணத்துக் கண்ட புதிய உலகம் முழுதும் எப்போதும் திகழ வேண்டும்.

மனிதனது ஸங்கற்பமாகிய பசு இறைவனது இச்சையென்னும் முளையொடு கட்டப்படுள்ளது. இறைவன் தனது திருவுள்ளப்படியே பசுவைப் பிணைக்கும் கயிற்றை நீட்டலாம் சுருக்கலாம்.

ஆணவத்தினின்றும் உண்டாகும் பலவித ஆசைகளாகிய கல்லோடு புண்ணியம் பாவம் என்னும் இரு வினைகளாகிய கயிற்றினால் கட்டப் பட்டுப் பிறவிக் கடலில் ஆழ்ந்து மண்ணோடு போகும் உயிர்கட்கு 'நம சிவாய' என்ற பஞ்சாக்ஷரமே உய்விக்கும் தெப்பமும் துணையுமாகும்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

கண்ணாய்! ஏழு (உ)லகும் கருத்தாய அருத்தமுமாய்
பண்ணார்! இன்தமிழாய் பரமாய பரஞ்சுடரே
மண்ணார்! பூம்பொழில் சூழ்மழபாடியுள் முளைக்கின்ற
வித்தே! உன்னை எங்ஙனம் நான் விடுகேனே.

தேவாரம்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. திருக்குறள்

யான் உனைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே திருவாசகம்

ஆன்மாவை மட்டும் இழந்துவிட்டு உலக முழுவதையும்
பெற்றாலும் அதன் பயன் என்ன? இயேசு

அகரம் முதல் எழுத்தாகி நின்றாய்.
அக்ஷரங்களுக்குள் அகர மாகிறேன். கீதை

கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்,
நற்றுணையாவது நமச்சிவாயவே. அப்பர்

அன்றேநம் கண்காணும் ஆழியான் கார்உருவம்
இன்றேநாம் காணா(து) இருப்பதுவும்-என்றேனும்
கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும்
உட்கண்ணால் காணும் உணர்ந்து. பெரிய திருவந்தாதி

கனவு நடக்கும்போது உண்மை போலிருக்கிறது. விழித்தால் பொய்யாகி விடும். அதே போல் விருப்பு, வெறுப்பு முதலியவை செறிந்த (இந்த விழிப்பு) உலகமும் அனுபவிக்கும் போது உண்மை போலிருக்கிறது. ஆத்ம ஞானமான உண்மை விழிப்பு ஏற்பட்டால் இது பொய்யாகி விடும்.

நாம் சினிமா பார்க்கிறோம். நல்ல ஒரு கதை நடக்கிறது. கதையின் முக்கிய பாத்திரத்தின் இன்ப துன்பங்களுக்கு நாம் மனம் நெகிழ்றோம். திடீர் என்று எல்லாம் நின்று விடுகிறது. ஒரே வெள்ளைத்திரை தான் இருக்கிறது. நமக்கே ஒரு வெட்கம் ஏற்படுகிறது. இந்த ஒன்றுமில்லாத திரையைப் பார்த்துத்தானா அழுதோம், சிரித்தோம், ஆரவாரம் செய்தோம் என்று தலை குனிகிறோம்.

அதைப்போல எந்தத் திரையில் இந்த வாழ்க்கைப்படம் ஓடுகிறது? அந்தத் திரைப் போன்றதுதான் அந்த இரண்டற்ற தனிப்பெரும் பொருளான பிரம்மம் என்பது.

மனிதன் தன் உண்மையான இயல்பை அறிந்து கொண்டு தனக்குரிய பூரண வளர்ச்சியை அவன் அடைவதற்குத் துணை செய்யக் கூடிய சாதனமே தியானம்.

நமக்குள் எண்ணங்கள் உற்பத்தியாகும் வேகத்தை நமது பிடிக்குள் கொண்டு வந்து, அவை செல்லும் திசையை நாம் விரும்பியபடி திருப்ப ஆற்றல் பெற்றால் தான் நாம் நிறை மனிதனாகி விட்டதாகப் பெருமை கொள்ளலாம். ஏனென்றால், விலங்குகளுக்குக் கூட மனமும் புத்தியும் இருக்கின்றன. அவைகள் செழுமையாக வளர்ச்சியடைய விட்டாலும் அவற்றுக்கும் ஒருவகை எண்ணங்கள், புத்தி இருக்க வேண்டுமல்லவா? ஆயினும் விலங்கிலிருந்து மனிதன் எந்த வகையில் வேறுபடுகிறான்? எந்த வகையில் உயர்ந்தவனாகிறான்? எப்படியெனில், (ஆறு அறிவாகிய, பகுத்தறிவு) சொந்த முயற்சியின் மூலம் தனது மனத்தையும், புத்தியையும் அவனால் வளர்த்து இரண்டையும் இணையச் செய்ய முடியும். புத்திக்கு மனம் தோழியாகப் பணி புரிய, மனத்தைப் புத்தி எப்போதும் ஆள வேண்டும். புத்தி மனம் ஆகிய இரண்டின் கூட்டுறவால் மனிதன் முழு வளர்ச்சியடைகிறான். இந்த அந்தக்கரணங்களின் நலத்தைப் பேணி வளர்ப்பதுவே ஆன்மீக (தியான)வாழ்க்கையின் ஆரம்பமாகும்.

விருப்பத்தைத் துறவுங்கள்; எண்ணங்கள் அடங்கும். இந்த சங்கற்ப விகல்ப இரைச்சல் அடங்கியதும் நிரந்தர சாந்தியை நாம் நுகரலாம். இந்தப் பரிபூரண திருப்தியையும் அமைதியையும் அனுபவிப்பது புற உலகத்தை ஒட்டியது அல்ல. அன்றாட வாழ்க்கையில் நம்மைச் சுற்றி என்ன சம்பவங்கள் நேர்ந்தாலும், நம்முடைய வாழ்க்கை நிலை எவ்வாறு மாறினாலும் இந்த அனுபவங்களை நாம் அடைய முடியும். அவ்வாறு அடைவதே குறிக்கோள். இதுவே ஈஸ்வர தரிசனம்; கைவல்யம். யோகியின் நிர்விகல்ப சமாதி. ஞானியின் முக்தி.

இடைவிடாத மனப் பூர்வமான சாதகம் இன்றேல், ஆன்மீக வாழ்க்கையிலே முன்னேற்றம் கான முடியாது.

திமிர் பிடித்த அகங்காரத்தின் அழுக்கடைந்த கறுத்த குகைகளின் வழியைக் கடந்தால்தான் பரிசுத்தமான சுய நலமற்ற பிரேமைப் பெரு வெளியிலே ஆன்மீக சாதகன் போய்ச் சேர முடியும்.

தெய்வீக வாழ்க்கையை ஆரம்பிப்பவன் தன் ஆடையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நெற்றியில் நீறு இட்டுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை. தலையை மழித்தல் அல்லது சடைமுடியை நீட்டல், திருவோட்டை ஏந்துதல், சிங்கத்தோலிலே சயனித்தல், மான் தோலிலே அமருதல் போன்ற புறச் சின்னங்கள் எல்லாம் உண்மையான ஆன்மீக சாதகனுக்கு முக்கியமில்லை. ஆன்மீக வாழ்க்கை என்பது தெய்வீக வாழ்க்கை; அதை அடைவதற்கு ஒரே வழி நீதி நெறியுள்ள சன்மார்க்க வாழ்க்கையில் வாழ்வதே ஆகும்.

உலக வாழ்க்கை இடைவிடாத துன்பத்தொடர்; தற்காலிகமாக ஏற்படும் சில போலியான போதையூட்டும் சிற்றின்பங்களைத் தவிர, அது பெரும்பாலும் குறைபாடும் தொல்லையும் நிறைந்தது. தெய்வீக வாழ்க்கை ஓர் அழியா அனுபவம். சத்தியம் என்ற சச்சிதானந்தத்திலே ஒன்ற முயன்று மனிதன் அதிலே திருப்தியைக் காண்கின்றான். அந்த உன்னத உணர்வே குறிக்கோள்; இலட்சியம்.

பேரின்பமே கடவுள். எங்கும் கடவுள்; எதிலும் கடவுள். உங்களுடைய பேரின்பத் தன்மையே சிவம். சிவமே நீங்கள்; தன்னை ஆன்மாவென்று அடையாளம் கண்டு கொள்வதே (ஆசாரியன் மூலம்) வாழ்க்கையின் இறுதி வெற்றியாகும். இதுவே ஈஸ்வர தரிசனம், கடவுள் காட்சி என்பதை உணர்ந்த மனிதன் தெய்வத்தன்மையை அடைந்த மகான். அதன் பிறகு புறவுலக சம்பவங்கள், இன்ப துன்பம், இகழ் புகழ், வெற்றி தோல்வி, வறுமை வளமை, விருப்பு வெறுப்பு, துரதிர்ஷ்டம் முன்னேற்றம் இவற்றில் எதுவுமே அவனைத் தொட முடியாது. அவன் சூழ்நிலைக்கு அப்பாற்பட்டவன். மூலமாகிய அறிவு ஒளியிலே வேர் ஊன்றிய அவன், இனி ஒரு போதும் புறவுலகுக்கு அடிமையாகான். பிரபஞ்சம் முழுதும் தனக்குள் ஏற்படும் ஒரு தற்காலிகமான சலனம் போல அவனுக்குத் தோன்றுகிறது.

ஆன்மாவோடு ஐக்கியப்படுத்திக் கொண்டால் அந்த மாயையாகிய நான் மறைகிறது. அந்த இடத்திலே அமைதியான தெய்வீகத்தைக் காண்கிறோம்.

தனிமனிதன் என்ற எண்ணத்தை அழித்து, சுயநலம், ஆசை, குறுகிய எண்ணங்கள் ஆகிய அற்ப வாழ்க்கையை எப்போது கைவிடுகிறானோ அப்பொழுது தான் ஒருவனுக்கு நிரந்தரமான பரிபூரணம் கிட்டும். ஏனென்றால் நான் என்ற அகங்காரம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு சிவம் குறைவாக இருக்கிறது. நமது தெய்வத் தன்மையிலிருந்து நம்மைப் பிரிக்கும் திரை இந்த 'நான்' என்ற பொய்யே தவிர வேறில்லை.

இந்த 'நானை'க் கொல்லுங்கள். தெய்விக வாழ்வு வாழுங்கள்.

''தெய்விக வாழ்வே இறைவனின் சாம்ராஜ்யம்
அவர் ராஜ்யம் வந்தால்தான் என் ராஜ்யம் போகும்'' பைபிள்.

மனிதன் மனப்பூர்வமாகச் சுயவிமரிசனம் செய்யத் துவங்கினால் அநேகமாக ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒரு கயவனாகக் கண்டு கொள்வான். ஆபாசமான எண்ணங்கள், கீழ்த்தரமான உணர்ச்சிகள்,

மிருகத்தனமான வேகங்கள், அஸ்திவாரமில்லாத நம்பிக்கைகள், ஒரு நாளும் நிறைவேறமுடியாதகனவுகள்ஆகியவற்றின்மூட்டையாகவெளிப் படுவான். திமிர் பிடித்தவனாய், அசட்டுத்தனங்கள் நிறைந்தவனாய், குரூரத்திலும், அஞ்ஞானத்திலும் அழுந்தியவனாய் அவன் திரிகின் றான். ஓயாத குஸ்திகளில் ஈடுபட்டிருக்கும் இந்த 'நான்' என்ற பிராணியைக் கட்டிப் போடவேண்டும். அது போராடிக் கொள்ளை யடித்து, கொன்று சமைத்து, திரட்டிப் புதைத்து வைத்து, அதையே ஆனந்தம் என்று நினைத்துத் தன்னை ஏமாற்றிக் கொள்கிறது அந்த 'நான்'. என்னே பரிதாபம்!

ஆகவே, இந்தக் கொடுங்கோலனான இந்த மாயையாகிய 'நான்' உருவத்தின் பிடியினின்றும் விடுதலை பெற, கண்ணீரில் நீந்தும் மனிதன் செய்ய வேண்டுவது என்ன? வேறொன்றும் வேண்டாம். முதலில் இதைப் புரிந்து கொண்டாலே போதும்; மனிதனுடைய எதிரி அவனுடைய மனத்தின் சிருஷ்டிதான். இல்லாத ஒன்றை இருப்ப தாக எண்ணும் இந்தத் தவறினால் விளையும் பயங்கர உணர்ச்சிகளை அழுந்தப் புதைக்க அவன் பயில வேண்டும்.

சித்தர்கள்

சுழிமுனை வட்டச்சுழிமுனை
        யுச்சித்து வாரத்திலே
வழி பயமென்று மலைப்பர்களோ?
        மடைக் கொக்கது போல்
தெளிவுறு பார்வை யசையாது சிற்றடி
        தூக்கி நின்று
விழியிமை யாதொளிப் பார்த்தூடுருவ
        வெளிப்படுமே.

ஒளியாம் விளக்கொளிக்குள்ளே சென்று கொண்டு ஊடுருவ
வெளியாம் பராபரமே, ஜோதியே விந்து நாதமொடு
தெளிவாய் இருந்து பிரகாசம் தோற்றும் சிதம்பரத்தில்
அழியா வரம் பெற்றிருக்க பதமுண்டு அடியவருக்கே.

கடவுள் அந்தாதி

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வனபினரன் கழல் செலுமே. சிவஞான போதம்.

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணா-காட்டிய

உள்ளந்தனைக் காணா வுள்ளத்தின் கண்ணாய
கள்வன் றானுள்ளத்தில் காண்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம் பதிவிதியெண்ணு மஞ்செழுத்தே.

கடலமுதே வெண்ணெய்க் கரும்பேயென் கண்ணே
உடலகத்து மூலத் தொடுங்கச்-சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
மருவியா தென்றுரைக்க மண்.

மெய்கண்ட சாத்திரம்-இருபாவிருபஃது

மண்முதற் கரண மெல்லா மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினி லூன்றி யந்தக் கருத்தினா லெவ்வையு நோக்கி
எண்ணியஞ் செழுத்துமாறி யிறைநிறை யுணர்ந்து போற்றல்
புண்ணியன் தனக்கு ஞானப் பூசையாய்ப் புகலுமன்றே

எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கும் சோதியை, மூடரெல்லாம்,
கட்டிச் சுருட்டித்தம் கக்கத்தில் வைப்பர், கருத்தில் வையார்,
பட்டப் பகலை இரவென்று சொல்லும் பாதகரே.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே, செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
உருவே என்னுறவே என்னூனே ஊனின்
உள்ளமே உள்ளத்தினுள்ளே நின்ற
கருவே என்கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோயடையா வண்ணம்
ஆவடு தண்டுறை யுறையும் அமரரே.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்அடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்(து) அப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்

கனத்தகத்தான் கயிலாயத்(து) உச்சி உள்ளான்
காளத்தியான் அவன்என் கண்ணுளானே.

மண்ணை மலையை மறிகடலை வானகத்தை
யெண்ணி லளந்தறிய வெய்துமோ-வுண்மையைநீ
யுண்டென்னி லோர்வார்த்தை யுண்டல்லா துன்னொழிவைக்
கண்டறிய லன்னியமாங் காண்.

கருத்து: ''மண்ணை மலையை மறிகடலை வானகத்தை எண்ணில் அளந்து அறிய எய்துமோ'' இதனால் போதத்தாற் சிறிது அளவிடப் படும் மண்ணாதி மெய்ப்பொருளையே முற்றும் அளவிட முடியாது எனின், ''உண்மையை நீ உண்டு என்னில் ஓர்வார்த்தை உண்டு அல் லாது உன் ஒழிவைக் கண்டு அறியில் அன்னியம் ஆம்'' அப்போத நாசத்திருந்த மெய்ப்பொருளை எங்ஙனம் அளவிடக்கூடும் என்பதாம்.

சுட்டுப்போ தங்கழன்ற சுத்தமரை மாத்திரையில்
மட்டுத்தா னற்ற நிட்டை வாய்க்குமேற்-கெட்டேன்
றலைச்செய்யு மானந்தஞ் சற்றே பால்வாரி
முலைக்கண்ணிற் றோன்று முறை.

கருத்து: சுட்டுப் போதம் கழன்ற சுத்தம் அரை மாத்திரையில் மட்டு அற்ற நிட்டை வாய்க்குமேல் கெட்டேன் தலைச் செய்யும் ஆனந்தம் சற்றே-அரைக்கணப்போது ஆயினும் இதுஅது என்று சுட்டி அறியும் தற்போதம் ஒழிந்த ஓர் வரம்பின்றிய சுத்தமாகிய நிட்டை வாய்க்கும் ஆயின், கெட்டேன்! ஆண்டுப்பிரவேசிக்கும் பேரானந்தம் அற்பமோ?

முலைக்கண்ணில் பால்வாரி தோன்றும் முறை-முலையினது சிறிய கண் துவாரத்தில் பெரிய பாற்கடல் உதயமான முறைமை போல் பரிபூரணமாய்த் தோற்றும்.

கருத்து: ஈண்டுச் சத்தம் என்பது பரையோகம், இப்பரை யோகத்தில் ஆன்ம போதம் மிகவும் தேய்ந்திருத்தலின், அதனை ''முலைக்கண்'' என்றும், இங்ஙனம் இருந்த போது அரைக்கணத்தில் அப்பரையோகம் நீங்கிப் பரிபூரணனாந்தம் அநுபவமாய்த் தோற்றலின்,அதனை ''பால் வாரி'' என்றுங் கூறினார்.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்

செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
    நிகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டும்
    தலைவ நினைப்பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

நடுநாடி நடுநாடி நடமாடு பதியே
    நடராஜ நடராஜ நடராஜ நிதியே
நடுநாடி யொடுகூடி நடமாடு முருவே
    நடராஜ நடராஜ நடராஜ குருவே
நடுநாடி யிடைநாடி நடமாடு நலமே
    நடராஜ நடராஜ நடரரஜ பலமே.

அருட்ஜோதித் தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற வானந்த தெய்வம்
பொருட்சாறு மறைகளெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளந் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

திருப்புகழ்

பாதி மதிநதி போதுமணிசடை நாதனருளிய -குமரேசா
பாகு கனிமொழி மாதுகுறமகள் பாதம் வருடிய -மணவாளா
காதுமொருவிழி காகமுறஅருள் மாயனரிதிரு -மருகோனே
காலனெனையணு காமலுனதிரு காலில்வழிபட -அருள்வாயே
ஆதிஅயனொடு தேவர் சுரருல காளும் வகையுறு -சிறைமீளா
ஆடுமயிலினி லேறிஅமரர்கள் சூழ வலவரும் -இளையோனே
சூதமிகவளர் சோலைமருவு சுவாமிமலைதனில்-உறைவோனே
சூரனுடலற வாரிசுவறிட வேலைவிடவல -பெருமாளே.

மனைமக்கள் சுற்றமெனு மாயா
    வலையைக் கடக்க அறியாத
வினையிற் செருக்கி யடிநாயேன்
    விழலுக் கிறைத்து விடலாமோ
சுனையைக் கலக்கி விளையாடு
    சொருபக் குறத்தி மணவாளா
தினநற் சரித்ர முனதேவர்
    சிறைவெட்டி விட்ட பெருமாளே.

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயம தொழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே
ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானில மலைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலைகண்டு
நாடியதில் நின்று தொழுகேனே
சோதி யுணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே.

இருந்த விடுங் கொஞ்சிய சிறுவரும் முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்குலாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்தகாலுந் தண்டையு மழகிய பெருமாளே.

இறைவனின் சிரிப்பு

உலகம் என்பதே எல்லாம்வல்லஇறைவனின் விளையாட்டுப்பந்து. இறைவனின் சங்கற்பத்தினால், பஞ்சபூதங்களும் அதன் கலப்பினால் ஆன அணுமுதல் அண்டங்கள்நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மேலும் உலகிலுள்ள சர அசர ஜீவ ஜந்துக்களும் அதாவது ஓரறிவு முதல் எல்லா உயிரினங்களும் இப்படியே உலகச் சக்கரத்தில் சுழல விடப்பட்ட ஒவ்வொன்றும் தம் கடமையை அமைதியாக ஆற்றுவதன் வாயிலாக, கடவுள் கணக்கேட்டில் முதன்மை இடத்தைப் பெறத் துடித்துக் கொண் டிருக்கிறன, ஆனால் மனிதன்? ஆறறிவு பெற்றான். ஆனால் அதை முறையாக அனுபவிக்க மறுத்தான்.

When much is given, much will be demanded. அதிகம் பெற்ற வனிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படும் என்பதை மறந்து, தன்னிலை தாழ்ந்து, விலங்கினும் கீழாய், வீணாய்த் திரிவதையே விரும்பி ஏற்கிறான்.

சுயநலம் அவன் சொந்த நிலம். இதில்தான் அவன் ஏராளமான களைகளைப் பயிர் செய்து கொண்டிருக்கிறான். மனிதன் தனக்கு வழங்கப் பட்டிருக்கும் பெரும் பரிசான, ஆன்மாவின் குரலை அடிக்கடிப் புதைத்து விட்டு அதன் மேல் சாம்பல் மாளிகை எழுப்பிக் கொண்டிருக் கின்றான். இது நல்லது, இது தீயது என்று பகுத்துணர வழங்கப்பட்ட பேரறிவைத் தான்புரியும் இதயமற்ற செயல்களுக்கு இலக்கணம் கற்பிக்க மட்டுமே பயன் படுத்துகிறான்.

தெய்வ சிந்தனை என்பது மனித வாழ்வு என்ற புகை வண்டி செல் லும் தண்டவாளமாக அவனுக்குத் தோன்றவில்லை. ஏதோ ஒரு புகை வண்டி நிலையமாகத்தான் காட்சியளிக்கிறது. வாழ்க்கைப்பயணம் தடைப்படும்போது சற்று நின்று தன்னையே தேற்றிக் கொள்ளக் கிடைத்த ஒரு தற்காலச் சாந்தியாக ஒரு சுமைதாங்கியாக மட்டுமே தெய்வ நினைவைக் கருதுகிறான்.

மனித வாழ்க்கை இறைவனை அடையக் கிடைத்த இறுதிச் சந்தர்ப்பம். இதை உணராத மனிதன் இன்பத்தின் பின்னே, நாயினும் நலிந்து அலைந்து கொண்டிருக்கின்றான். தனது மானுட உடம்பு வெறும் ரத்தபித்த மலமூத்ர நாடிநரம்பு தோல் எலும்புகளின் தொகுப்பே என்ற தத்துவம் அவன் புத்திக்கு எட்டவில்லை.

இவற்றையெல்லாம் சிந்திக்க மனிதனுக்கு நேரம் ஏது? ஆன்மீகம் தவிர மற்ற அனைத்தும் அற்பமானவையே அல்லவா? வாழ்வாங்கு

வாழ்ந்தால் கிட்டும் மனச்சாந்தியின் பேராற்றலை அறிய மறந்து திரிகிறானே! இப்படி எத்தனையோ பனிப்படலங்கள் மனித மனத்தைச் சுற்றிப் படர்ந்துள்ளன. இத்தகைய மனித விசித்திரங்களைப் பார்த்து இதோ சிருஷ்டி கர்த்தா சிரிக்கிறான். இது ஆனந்தச் சிரிப்பல்ல. விரக்திச் சிரிப்பு; வேதனைச் சிரிப்பு.

மனிதா! என்மகனே! உன்னை உலக உயிர்கள் அனைத்திலுமே உயர்வாகப் படைத்தேன், காணக்கண், பேசநாவு, கேட்கக் காது, நுகரநாசி, உணர உடல், சிந்திக்க அறிவு, வாழ ஆயுள் இத்தனையும் போதா என்று இன்னும் எதை எதையோ வேண்டி என்னைப் பணிகிறாயே! அளித்த வரங்களுக்கு நீ ஆற்றிய பணி போதுமா? கடவுள் வெறும் காமதேனுப் பசுவா? சற்று சிந்தித்துப் பார்த்தாயா? உனக்கு நல்வழி காட்ட எத்தனை முயற்சிகள்! யுகத்துக்கு யுகம் எத்தனை அவதாரப் பிறப்புகள்! மனிதா! நீ அவர்களை மிக உயரத்தில் இருத்தி வணங்கக் கற்றுக் கொண்டாய், வாழக் கற்று கொள்ளவில்லை! ஸ்ரீ ராமபிரானின் சத்திய விரதம் உனக்கு அதிசயத்தை மட்டும் தந்தது. அதன் அவசியத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட்டாயே! என் படைப்புகளிலேயே உன்னை மிக உயர்ந்தவனாகப் படைக்கக் கருதித்தான் ஆறறிவு தந்தேன்; சிந்திக்கும் திறன் தந்தேன்; பேசும் ஆற்றல் தந்தேன்; சிரிக்கும் கலை தந்தேன். ஆனால் நீயோ சிந்தித்தாய் பகைவனை எப்படி வீழ்த்தலாம் என்று; சிரித்தாய் மற்றவன் வீழ்ச்சியைக் கண்டு. பேசினாய் மற்றவன் குற்றத்தை.

மனசாட்சி எனது ஒரே மந்திரி அவனை உனக்குத் துணையாக அனுப்பி வைத்தேன். ஆனால் நீயோ அவனை உன் எதிரியாகவே கருதுகிறாயே! அவன் உன்னுள்ளிருந்து ஒரு சத்திய நாதம் எழுப்பும் போது நீ செவிடன் போல இருந்து விடுகிறாய். என் தமிழ் மைந்தன் பாரதி நொந்து பாடினானே.

நெஞ்சு பொறுக்கு திலையே-இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்

என்று. அப்படி இருக்கிறது உன் நிலை.

மனிதனுக்கு மட்டும் நான் அளித்த அரிய பொக்கிஷங்களை எப்படிப் பாழுங்கிணற்றில் அள்ளி வீசிக் கொண்டிருக்கிறாய்?

மனிதா !உன்னை விடத் தாழ்ந்தவை என்று தானே விலங்குகளையும் மற்ற உயிர்களையும் நினைக்கிறாய்? நண்பனைக் கொல்லும் நயவஞ்சக ப்ரூட்டஸ் (Brutus)களை அங்கே காண்பது அரிது, ஆசை வலையில் அகப்பட்டு, மீளும் வகையறியாமல் உழலும் அற்பர்களை

மாக்பெத்(Macbeth)களை அங்கே பார்க்க முடியுமா? பொய்யர், பொறாமைக்காரர்கள், சுயநல வாதிகள் அங்கே சொற்பமே!

மனிதா! உன்னைப் படைத்தவன் உன் இழிநிலை கண்டு கண்ணீர் வடிக்கிறேன். இதை உனக்குச் சொல்லியும் விட்டேன். இனி மேலாவது என் கண்ணீர் துடைக்க ஓடி வரமாட்டாயா? என்று வேதனையோடு இறைவன் வினவுகிறான்.

''கடமையைச் செய் பயனைக் கருதாதே'' மனிதா! உன் விதியை உருவாக்குபவன் நீயே, மனிதனுக்குள் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ளும் சக்தியை இறைவன் அளித்துள்ளான் என்பதை உணர்ந்து கொள்.

சுத்த சன்மார்க்க ஆகாரம்

சுத்த சன்மார்க்க சாதகர்கள் எக்காலத்தும் புழுக்காதிருக்கின்ற வஸ்துவைக் கொள்ளல் வேண்டும். புழுக்காத வஸ்துக்கள் யாவெனில்: சர்க்கரை, தேன், கற்கண்டு, வெல்லம், அயச் செந்தூரம், தாமிர முதலிய பஸ்பம். ஆதலால் அவசியம் ஆகாரத்திற்கு முக்கிய வஸ்து மேற்குறித்தவை. பரியாயத்தில் சர்க்கரையென்று லவணத்தைச் சொல்லுவதுமுண்டு. மேற்படி லவணத்தைத் துரிசு போக்கி, ஜய லவணமாய்க் கட்டி, ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும். இதன்றி சத்வ பதார்த்தத்தில் லவணம் சிறுகச் சேர்த்துக் கொள்ளவுங் கூடும்.

கரிசாலையும், தூதுளையும்: கரிசாலையை-தினேதினே-பச்சையாகவாவது சமையல் முதலிய வகையாலாவது சாப்பிட்டு வரவேண்டும்: பிரதம உள்ளுடம்பாகி அதை நீடிக்கப்பண்ணும். மேல் குறித்த மூலிகையை அலக்ஷியம் செய்யாது, ஆசாரியன் திருவடியின் கண்ணே இலக்ஷியம் வைத்து எவ்வித தந்திரத்தினாலாவது தினம் தினம் உட்கொண்டால் தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி, தேகம் வலிவுள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முக்தியடைவதற்கு சகாயமாயுமிருக்கும். மகான்களிடத்தில் அனந்தகாலம் காத்தாலும், மேல்குறித்த மூலிகையின் பிரயோஜனத்தையும் உண்மையையும், அனுபவத்தையும் வெளியிடார்கள். பரம கருணாநிதியாகிய நம் தலைவனால் கிடைத்தது. அசட்டையின்றி, உட்கொள்ளல் வேண்டும். மேல்குறித்த மூலிகை ஜலமில்லாத இடத்தில் இருக்கிறது மிகவும் நன்று. ஜலமுள்ள இடத்தில் உள்ளது காரமிராது. தந்த சுத்தி செய்து அண்ணாக்கில் தர்ஜினி விரலால் தேய்க்க-மேல்குறித்த மூலிகையால்-பித்தநீர், கபநீர் வெளியாகி கண்ணொளி விசேஷிக்கும். நேராத பக்ஷத்தில் பொற்ற

லைக்கையாந்தகரை கூடும். மேல்குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக் குழித்தைலம்வாங்கியும் செந்தூரம் செய்யலாம். அதுபோலவே, அறிவை விளக்குவதற்கும், கவனசக்தி உண்டு பண்ணுவதற்கும், கரணம் ஒய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கியதையுடைய ஒளஷதி, தூதுளை. அதை மேல்குறித்தபடி அநுஷ்டித்தால் விஷேச நன்மை செய்யும். கரிசாலை தத்த சுத்தியால் வசீகரமும் நேரிடும்; உண்மை.

சுத்த சன்மார்க்க சாதனம்

சன்மார்க்க சாதனம்: சாதனங்கள் ஒன்றும் வேண்டாம் ஏதாவது ஓர் சாதனம் சொல்லக் கேட்டு, அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாகும். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால் காலந்தாழ்த்தாது, எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். இந்தக் குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவரை எழுப்புகிறவன்; அவனே ஆண்டவனுமாவான்.

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கியசாதனம் என்னவென்றால்: எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே முக்கியமானவை. உதாரணம் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் சொல்லியது:- ''கருணையுஞ் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக. மற்றெல்லாம் மருள்நெறி என நீ எனக்கு அறிவித்த வண்ணமே பெற்றிருக்கிறேன்.

- ஆறாவது திருமுறை பதிகம் 21, பாட்டு 90.

சுத்த சன்மார்க்கத்தின் மரபு

சாகாத்தலை - வேகாக்கால் - போகாப்புனல் என்பவற்றிற்குப் பொருள் யாதெனில்:

அடியில் வருவனவேயாம்

சாகாத்தலை யென்பது:. ருத்திரபாகம், ருத்திர தத்துவம், வித்தியாகலை, வஸ்து, அருளானந்தம், காரணாக்கினி, சிவாக்கினி

வேகாக்காலென்பது:- மகேசுவர பாகம், மகேசுவர தத்துவம், சாந்திகலை, ஆன்மா, அன்பு, காரணவாயு

போகாப்புனலென்பது: சதாசிவ பாகம், சதாசிவதத்துவம், பிரதிஷ்டாகலை, ஜீவன், இரக்கம் காரணோதகம். இவை மூன்றும் சாகாக் கல்வியைத் தெரிவிக்கும்.

சாகாக்கல்வி: தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால் அவன் ஆயிரம் வருடம் ஜீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்து கொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம்.

சுத்த சன்மார்க்க லக்ஷியம்

சாகாத கல்வியே கல்வியொன் றேசிவம்
　　தானென அறிந்த அறிவே
தருமறிவு மலமைந்தும் வென்றவல் லபமே
　　தனித்த பூரண வல்லபம்
வேகாத காலாதி கண்டு கொண்டெப் பொருளும்
　　விளையவிளை வித்த தொழிலே
மெய்த்தொழில தாகும் இந்நான்கையும் ஒருங்கே
　　வியந்தடைந் துலக மெல்லாம்
மாகாத லுறவெலாம் வல்லசித் தாகிநிறை
　　வானவர மேஇன்பமாம்
மன்னுமிது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
　　மரபென் றுரைத்த குருவே!
தேகாதி மூன்றுநாள் றருமுனருள் செய்தெனைத்
　　தேற்றியருள் செய்த சிவமே
சிற்சபையில் நடுநின்ற ஒன்றான கடவுளே
　　தெய்வநட ராஜ பதியே.

ஆறாம் திருமுறை பதிகம் 100

ஔவைக் குறள்

அ. வீட்டு நெறிப்பால்

ஆதியாய் நின்ற வறிவுமுத லெழுத்
தோதிய நூலின் பயன்.

கருத்துரை; நூல்களை வாசிப்பதினால் ஏற்பட்ட பிரயோஜனமானது தனக்குள்ளிருக்கும் ஓங்காரத்தை அறிவதாகும்.

விளக்கவுரை: தமிழ் பாஷைகளின் நூல்களும், சமஸ்கிருத பாஷைகளின் உபநிடதங்களும், ஓங்காரத்தையே அறிய வேண்டுமென்று குறிப்பிடுவதாலும், நூல்களானவை மானிடர்களுக்கு அறிவை விரிவாக்குந் தந்திரங்களையே போதிப்பதாலும், அறிதல் என்னும் கர்மாவுக்கு ஆதார சத்தியாகிய ஓங்காரமே எஜமானத்துவம் வகித்திருப்பதாலும், திருவள்ளுவர் கடவுள் முதல் உலகமெல்லாம், அ, உ, ம, முதலிய பொருள்களால் சம்பந்தப்பட்ட பிரணவத்தையே இடமாகப் பெற்றிருப்பதாகச் சொல்லி இருப்பதான

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்னும் குறளை முதலில் வெளிப்படுத்தியிருப்பதாலும்,

அறியாவறிவை யறியாரே என்றும்,

வாசிட்டம்

தேவபூஜை கதையில்

தெய்வந்தா னியாதென்றோதில், கேவலமே யரியல்ல அரனல்ல, பூதவுடற் கிடைத்ததல்லவோவு மனமன்றடி முடியுமிலாச் செயப்படாவுணர்வே தெய்வமென்று கூறியிருப்பதாலும்,

தரணி சலங்கனல் காற்றத்த வானம்
அரணியபானு வருந்திங்களங்கி
முரணிய தாரகை முன்னிய வொன்பான்
பிரணவ மாகும் பெருநெறிதானே. திருமந்திரம்

என்று கூறியிருப்பதாலும் மேற்சொன்ன உண்மையை அறிய வேண்டியது.

பரமாய சத்தியுட் பஞ்சமாபூதந்
தரமாறிற் றோன்றும் பிறப்பு.

கருத்துரை: உடலை உண்டாக்கிய நாத கலையில் (நாத சக்தியில்) ஐந்து பெருமை பொருந்திய பூத சத்திகளானவை தங்களுக்கு இயற்கையான கலைகளில் ஜெனனத்துக்கு வேண்டிய கலைகளைப் பிரித்து நாத சத்தியிற் கலப்பதினால் ஜெனனமானது உண்டாகும்.
விளக்கவுரை: பஞ்ச பூதங்களின் சூக்ஷ்ம சக்திகள் அளவின் படி அன்னத்தில் கலந்து அந்த அன்னத்தினாலேயே நாதபிந்து கலைகளுண்டாகி ஜெனனமாவதைக் கூறியிருக்கிறார். இதற்கு தைத்ரியமே சாக்ஷி

ஓசை பரிசமுருவஞ் சுவை நாற்ற
மாசை படுத்து மளறு.

கருத்துரை: சத்தமும், பரிசமும், ரூபமும், கந்தமும் இவைகள் ஆசையில் சம்பந்தப்பட்டால் சேறாகும். (பஞ்ச தன்மாத்திரைகள் நரகத்திற்குச் செல்லவிடும்.)

விளக்கவுரை: பஞ்சேந்திரியங்களை ஞானேந்திரியங்களென்று உருவகப்படுத்தியிருக்கும் தத்துவ ஞானிகளின் ஆராய்ச்சிக்கு முரண்படாமல் உரையாசிரியர்கள் தங்கள் அறிவை உபயோகப்படுத்த வேண்டும். ஞானேந்திரியங்களும், மனமும் ஆசையில் சம்பந்தப்படும் போது உலக வாழ்க்கையும், நிராசையில் சம்பந்தப்படும் போது ஞான வாழ்க்கையும் உண்டாமென்பது ஞான நூல்களின் சம்மதம். அதனால், ஆசைப்படுத்தும் அளறு என்று நம் அம்மையார் கூறியிருக்கிறார்.

தருமம் பொருள் காமம் வீடெனு நான்கு
முருவத்தாலாய பயன்.

கருத்துரை: (ஆத்மத்தை அறியும்) தர்மமும் (செல்வமும் தேகத்தின் கண்ணுள்ள மஹத்தான) ஆசையும் (பரத்தாசை) (ஆத்மா இப்போது வசிக்கும் விடாகிய தேகத்தை விட்ட பிறகு அது வாசம் பண்ணுவதற்கு வேண்டிய விடாகிய) மோக்ஷமும் என்று சொல்லப்பட்ட நான்கு வகையான புருஷார்த்தமும் இந்த தேகத்தினலேயே உண்டாகியபிரயோஜனமுள்ள பொருள்களாம்.

விளக்கவுரை: நாதபிந்து கலைகள் சேர்ந்துதேகமானது உருவகப்பட்ட போது, தர்மம், என்னும் மகத்தான ஒரு சத்தியைக் கொண்டே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. தேகத்தைக் கொண்டும், தேகத்திலுள்ள மகத்தான செல்வங்களைக் கொண்டும் தான் தேகமானது நிர்மாணிக்கப்பட்டது. தோற்றிக் கொண்டிருக்கும் உலக செல்வம் தேகத்தையே இடமாகப் பெற்றிருக்கின்றது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு

என்ற பழமொழி சாதனா சம்பந்தமற்றவர்கள் கூட யோசிப்பதற்கு இடமுண்டு பண்ணி இருக்கின்றது. ஆகையால் தேகத்திலுள்ள செல்வங்களின் சாயைகளே பஹிர்முகமாகிய உலகின் கண்தோற்றுகின்றன. உலகமக்களில் அறிவுடையோர் உண்மைச் செல்வத்தின் சாயைகளைக் கொண்டே தர்மம் என்பதில் சம்பந்தப்படுகின்றார்கள். உண்மையான செல்வத்தின் கதியென்ன மாகிறது? அதனால்தான் தேகத்திலுள்ள உண்மையான செல்வங்களைத் தர்மத்தில் சம்பந்தப்படுத்துவதே ஞான கர்மாக்களாகும். சாயையாகிய செல்வமும், தர்மமும் சம்பந்தப்படுவதினால் ஆத்ம சம்பந்தமாகிய புண்ணியம் என்கின்ற வினையுண்டாகின்றது. அந்தப் புண்ணியத்தை ஆத்மாவுக்கு உபயோகப்படுத்திக் கொண்டு உலக வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகின்றார்கள். உண்மையான செல்வத்தையும், தர்மத்தையும் சம்பந்தப்படுத்துவதினால் ஞான வாழ்க்கை யுண்டாகின்றது. இந்த உலக வாழ்க்கை, ஞான வாழ்க்கை யென்னும் இரண்டிற்குள் செய்யுங்கர்மாவுக்கு அதாவது தர்மத்தையும், செல்வத்தையும் பிணைப்பதற்கு ஒரு சிற்பி வேண்டும். அந்த சிற்பிதான் காமம். அந்த சிற்பியின் குணமானது சாயை. செல்வத்தைத் தர்மத்தோடு பிணைக்கும்போது ஆசையென்னும் பெயரை அமைத்துக்கொள்கின்றான். உண்மைச் செல்வத்தைத் தர்மத்தோடு பிணைக்கும் போது நிராசையென்னும் பெயரைத் தரித்துக் கொள்கின்றான். ஆகையால் காமம் என்பதை, மூன்றாவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. நாலாவது வீடு. தேகத்தோடு ஆத்மா கூடியிருக்கும்போது உலக வாழ்விற்கு வாசஞ்செய்ய வீடு இருப்பதுபோல், தேகம் நீங்கிய பிறகு ஆத்மாவுக்கு வீடு வேண்டியது நியாயமல்லவா? அந்த வீடுதான் மோக்ஷம். ஆத்ம சத்தியானது, தேகத்தைக் கொண்டே தர்மம், பொருள், காமம் என்னும் பலத்தினால் மோக்ஷவீட்டை ஏற்படுத்திக் கொள்ளுகின்றது.

நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே
யுலவை யிரண்டொன்று விண்.

கருத்துரை: பிருதிவியானது ஐந்து பிரிவுகளாகவும், ஜலமானது நான்குவகையாகவும், நீண்ட அக்கினியானது மூன்று பிரிவுகளாகவும், வாயுவானது இரண்டு பிரிவாகவும், சிதாகாயமானது ஒன்றாகவும் (தேகமானது அமைக்கப்பட்டிருக்கின்றது.)

விளக்கவுரை: நிலம் ஐந்தாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி. நீர்நான்காவன; கண்ணிலுள்ள ஜல மண்டலமானது, ஆனந்தம், துக்கம் இவைகளினாலுண்டாகும் ஜலமும் ,அந்தர் முகத்திலிறங்கும் சந்திரா அமிர்தமாகிய ஜலமும், சூரியனிடமிருந்து இறங்கும் ஜலமும்,

நாதஜலமும், ஆக நான்குமே. அக்னி மூன்றாவன தேகத்திலுள்ள மூலாக்னி ஒன்று. சூரியாக்கினி ஒன்று, சந்திராக்கினி ஒன்று ஆக மூன்றாக்னி. உலவை இரண்டாவன பிராண வாய்வு, அபான வாய்வு. விண் ஒன்றாவது துவாதசாந்த வெளியிலுள்ள இராப்பகலற்ற சிதாகாயமே. இவைகள் பெருஞ் செல்வமே.

மாயன் பிரமனு ருத்திரன் மகேசனோ
டாயுஞ்சிவ மூர்த்தியைந்து.

கருத்துரை: விஷ்ணுவும், பிரம்மாவும், ருத்திரனும், மகேசுவரனோடு ஞான கர்மாவினால் ஆராய்ச்சியின் பலனாக ஏற்பட்ட மூர்த்திகரமுடைய சிவனுமாக பஞ்சமூர்த்திகளாவார்கள்.

விளக்கவுரை: ஐந்தாவது குறளில் சொல்லி இருக்கும் பஞ்ச பூதங்களுக்கு அதிதேவதைகளே பஞ்ச மூர்த்திகளாவார்கள். பிரம்மா பிருதிவிக்கும், விஷ்ணு ஜலத்திற்கும், ருத்திரன் அக்கினிக்கும், மகேசன் வாயுவிற்கும், சிவன் ஆகாயத்திற்கும், உலக சாம்ராஜ்யத்திற்குப் பஞ்ச பூதங்களும், ஞான சாம்ராஜ்யத்திற்கு பஞ்ச மூர்த்திகளும், எஜமானத்துவம் வகுத்திருப்பதை அறிவாளிகள் ஆராய்ச்சியின் மூலமாகத் தெளிவடையவும்.

மாலயனங்கி யிரவிமதி யுமையோ
டேலும் திகழ்சத்தி யாறு.

கருத்துரை: (விஷ்ணு சத்தியாகிய) லக்ஷ்மியும், பிர்ம்மாவின் சத்தியாகிய சரஸ்வதியும், அக்கினியும், சூரியனும், சந்திரனும், பார்வதியும் (இவர்கள்) தேகத்தில் பொருந்திப் பிரகாசிக்கின்ற சத்திகள் ஆறுசத்திகளாக இருக்கின்றார்கள்.

விளக்கவுரை: இந்தச்சத்திகளின் உபயோகமானது, ஞானகர்மத்தைச் செய்பவர்களுக்கன்றி ஏனையோருக்கு விளங்குவது அருமையே.

தொக்குதிரத் தோடுன் மூளை, நிணமென்பு
சுக்கிலந் தாதுக்க ளேழு.

கருத்துரை: சரீரம்இரத்தத்தினுடன், மாமிசமும், மூளையும், கொழுப்பும், அஸ்தியும், சுக்கிலமும் (ஆக) ஏழுவகைத் தாதுக்களாகும்.

விளக்கவுரை: ஏழுவகையான தாதுக்களாகிய செல்வத்தை எடுத்துச் சொல்லப்பட்டது.

மண்ணொடு நீரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு.

கருத்துரை: பிருதிவியுடன், ஜலமும், தேயுவும், சந்திரனும், வாயுவும் சூரியனும், ஆகாயமும் பிராணனுடன் எட்டுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றன.

இவை யெல்லாங்கூடி யுடம்பாய வொன்றி
னவையெல்லா மானது விந்து.

கருத்துரை: மேலே சொன்ன செல்வங்களெல்லாம் சேர்ந்து பொருந் தியதால் சரீரமாக ஏற்பட்டது. அந்தச் செல்வங்களெல்லாவற்றையும் உண்டாக்கினது சுக்கிலமே.

விளக்கவுரை: மகத்தான செல்வங்களோடு கூடிய சரீரம் ஏற்பட்ட தற்கு மூலவித்தாக இருந்தது சுக்கிலமே.

ஆ. உடம்பின் பயன்

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண்.

கருத்துரை: சரீரத்தை அடைந்ததினாலுண்டாகிய எல்லாப் பிரயோ ஜனங்களும் தேகமத்தியில் உள்ள இருதய கமலத்தில் பரமசிவத்தைக் காண்பதற்கே யாகும்.

விளக்கவுரை: சரீரத்தைப் பெற்றது சரீரத்திற்குள் கடவுளைப் பார்ப் தற்கேயாகும்.

உணர்வாவ வெல்லா முடம்பின் பயனே
யுணர்க உணர்வுடை யார்.

கருத்துரை: சரீரத்தினா லேற்பட்ட பிரயோஜனமெல்லாம் அறிவை உண்டு பண்ணுவதற்கேயாம். அறிவை உடையவர்கள் அறிந்து கொள்வார்களாக.

விளக்கவுரை: அறிவை தேகத்திலுள்ள செல்வங்களைக் கொண்டு அறிய வேண்டியது.

ஒருபய னாவ துடம்பின் பயனே
தருபயனாஞ் சங்கரனைச் சார்.

கருத்துரை: தேகத்தினுடைய பிரயோஜனத்தினாலேயே இகபரத்தைக் கொடுக்கின்ற சத்தத்தின் மூலமாயறியும் சிவத்தைச் சார்வதே பிரயோஜனமாகும்.

விளக்கவுரை: சங்கின் குணத்தைக் கொண்டே கடவுளை அறிய வேண்டியிருக்கிறது. சங்கின் குணம் சத்தத்தை எழுப்புவது. சத்தத்தின் மூலமாகவே தெய்வத்தை அறிய வேண்டும். சங்கில், இடம்புரி, வலம்புரி என்று இரண்டுவிதமுண்டு. இதில் வலம்புரி, உயர்வையுடையது. இடம்புரி தாழ்மையுடையது. உயர்வு தாழ்வை நம்முடைய காதுகளின் தந்திரத்தினாலேயே கற்பிக்கப்பட்டது. வலம்புரியாகிய வலது காதின் மூலமாகவே சிவத்தைக் காண நூல்கள் சொல்லியிருக்கின்றன.

சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி, என்றும்,

சத்தியார் கோவில் இடம் வலஞ் சாதித்தால்
மத்தியா னத்திலே வாசகங் கேட்கலாம்
நித்தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்
சத்தியஞ் சொன்னோஞ் சதாசிவ னாணையே. என்றும்

நாதமுடிவிலே நல்லாளிருப்பது
நாதமுடிவிலே நல்யோகமிருப்பது
நாதமுடிவிலே நல்ஞான மிருப்பது
நாதமுடிவிலே நஞ்சுண்ட கண்டனே. திருமந்திரம்

என்றும் சொல்லப்பட்டன.

பிறப்பினாற் பெற்றபயனாவ வெல்லாந்துறப்
பதாந்து நெறிக்கட்சென்று.

கருத்துரை: ஜெனனத்தினால் அடைந்த பிரயோஜனம் உண்டாவது எல்லாம் பரிசுத்தமாகிய வழியின் மூலமாக போய் (வழியிலிருக்கும் மும்மலங்களாகிய கிரந்தித்திரயங்களை) நீக்குவதாகும்.

விளக்கவுரை: துறவு என்பதற்கு இகவாழ்வை ஒழிப்பதே என்று பொருள்படுத்துகிறார்கள். இந்த ஒரே காரணத்தினால்தான், பிரம்ம வித்தை, யோக வித்தை, ஞானவித்தை மறையக் காரணம்.

பிரம்மச்சாரி: பிரம்மம் இதுவென்று அறிந்து அதை அடைய கர்மாக்களைச் செய்து கொண்டிருப்பவன்.

இல்வாழ்வான் : பத்தினியோடு கூடி போகத்தின் மூலமாகவும், குடும்ப வாழ்வின் மூலமாகவும், கடவுளை அறிபவன்.

வானப்பிரஸ்தம் : பத்தினியோடு கூடி, போகம், யோகம், முதலிய கர்மாக்களின் மூலமாக நிஷ்காம கர்மஞ்செய்து ஞானத்தையடைபவன்.

சந்நியாசி: சர்வ சங்கப் பரித்தியாகி. விருப்பு, வெறுப்பற்றவன். வீட்டிலிருப்பதையும் விரும்பான். வெளியில் போவதையும் விரும்பான். இந்திரியக் கூட்டுறவை நியாசஞ் செய்து, மனதைத் தன்வயப்படுத்தி, சாக்கிர சொப்பன, சுழுத்தி, துரியம் இந்த அவத்தைகளைத்தாண்டி துரியாதீத பதத்தை அடைபவனாகும். போக யோக நூல்கள் அவனுக்கு வேண்டியதில்லை. மற்றவை வெறும் பேச்சே.

உடம்பினா லன்றி யுணர்வு தானில்லை
யுடம்பினாலுன்னிய தேயாம்.

கருத்துரை: அறிவானது சரீரத்தினால் அல்லாமல் உண்டாவதில்லை. (ஆகையால்) சரீர அவயவங்களினால் வெளிப்பட்டதேயாகும்.

விளக்கவுரை: ஞானேந்திரிய, கர்மேந்திரியங்கள் மூலமாய் ஏற்படும் கர்மாவினாலேயே ஓங்காரமான அறிவு வெளிப்பட்டு நிற்கும்.

மாசற்ற கொள்கை மனதிலடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு.

கருத்துரை : (மூல மலங்களாகிய கிரந்தித்திரயங்களான) அழுக்கு நீங்கிய அடையவேண்டிய ஆனந்தமானது மனதில் பொருந்தி விட்டால் தேகமானது கடவுளைத் தோற்றுவிக்கும்.

விளக்கவுரை : மாறாத ஆனந்த மடைந்த மனதையுடைய சரீரமே கடவுளைக் காட்டும். அகத்தினழகு முகத்தில் தெரியும்.

ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்
நேசத்தாலாய வுடம்பு.

கருத்துரை: சரீரமானது (ஞானேந்திரிய, கர்மேந்திரிய) ஒற்றுமைகளினாலுண்டாகிய சப்தம் அறிவும் அறிவு சம்பந்தமான பொருள்கள் எல்லா வஸ்துக்களையும் முகத்துமுன் நிறுத்தும்.

விளக்கவுரை: ஞான கர்மத்தினால், சத்தம், அறிவு முதலிய பொருள்களைக் கண்ணினால் பார்க்கும் நிலைமையிற் கொண்டு வந்து விடும்.

உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி யாதியை நாடு.

கருத்துரை: பிராணனுக்கு எல்லா உறுதிகளையுந்தருவது தேகத்திலிருந்து உண்டாகுங்கலைக் கூட்டங்களின் பிரயோஜனமே. (ஆகையால்) சந்தேகமில்லாமல் முதன்மையான கடவுளைப் பார்.

உடம்பினாற்பெற்ற பயனாவ வெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு.

கருத்துரை: சரீரத்தினால் உண்டாகிய பிரயோஜனத்தை அடைந்த எல்லாப் பொருள்களும் உறுதியாகக் கடவுளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவே.

விளக்கவுரை: சரீரத்திலிருந்துண்டாகிய கலைக் கூட்டங்களினாலேயே தைரியத்தையடைந்து கடவுளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

அன்னத்தாலாய உடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும்.

கருத்துரை: ஆகாரத்தை உண்பதினால் உண்டாகிய தேகத்தின் பிரயோஜனங்கள் எல்லாங்கூடி முதல்வனாகிய சிவத்தைத் தரிசிப்பிக்கச் செய்யும்.

விளக்கவுரை: சுக்கிலத்தின் கலையைப் பிரித்து மேல் ஏற்றுவதால் பரமசிவன் வெளிப்பட்டு நிற்பான். சரீரத்தை உண்டாக்கியது நாத பிந்துக்கள். நாதபிந்து கலையை உண்டாக்கியது அன்னம். அதனாற்றான் ''அன்னத்தாலாய வுடம்பு'' என்றார். பயனோவெனின் நாத பிந்து கலைகளில் உள்ள கலைகளேயாகும். அந்தக் கலைகளைக் கொண்டே பரமசிவனை வெளிப்படுத்த வேண்டும். ஆண்களுக்கு அன்னத்தினால் ஏற்படுவது பிந்துநாதம். பெண்களுக்குக் கலையாகிய சுரோணிதமும், நாதமும். இந்தக்கூட்டுறவினாலேதான் சரீரம் உண்டாகின்றது.

இ. உள்ளுடம்பின் நிலைமை
சூக்கும சரீரத்தின் நிலைமை

கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலா
முற்றுடம்பா லாய வுணர்வு.

கருத்துரை: ஊன்றிப் பார்ப்பதினாற் றோன்றும் சூக்கும சரீரத்தினால் உண்டாகிய அறிவைக் கொண்டு யாவற்றையுங் கிரகிக்கலாம். தூரசிரவணத்தைக் கேட்கலாம். கண்ணாலேயே (அறிவையும், சூக்கும சரீரத்தையும்) பார்க்கலாம்.

விளக்கவுரை: சூக்கும சரீரத்தையும், அறிவையும், கண்ணாற் பார்க்கும் யோக்கியதையைப் பெறுவதினாலேயே நூல்களின் மர்மங்களையறிவதோடு துலையிலிருப்பவர்களோடு சம்பாஷணை செய்யலாம் என்பதையே இக்குறளில் அழுத்தமாய்க் கூறியிருக்கிறார்.

வெள்ளி பொன்மேனிய தொக்கும் வினையுடைய
வுள்ளுடம்பி னாய வொளி.

கருத்துரை: சரீரத்தினாற் செய்யுங் கர்மாக்களுக்கு மூலகாரணமாகவுள்ள சூக்கும சரீரத்தினால் உண்டாகிய பிரகாசமானது சுக்கிலத்தின் நிறத்தையும், நாதத்தின் நிறத்தையும் (பெற்ற) தூல சரீரத்தைப் போலவேயிருக்கும். சூக்கும தேகமானது தூல சரீரத்தைப் போலவே விளங்கும்.

சென்றுண்டு வந்து திரிதரு முள்ளுடம்பு
என்றுங் கெடாத திது.

கருத்துரை: சூக்கும சரீரமானது (சங்கற்பித்த இடங்களுக்குச்)சென்று (அவ்விடங்களிலுள்ள விஷயங்களை) கிரகித்து (தூல சரீரத்தினிடம்) வந்து திரிந்து கொண்டிருக்கும். இப்படிப்பட்ட இந்த சூக்கும சரீரமானது எந்தக் காலத்திலும் அழியாமலிருக்கும்.

விளக்கவுரை: ஞானிகள் சூக்கும தேகத்தைப் பலப்படுத்தி அதை வசப்படுத்திக் கொண்ட பின்பே, தூலத்தை யொழித்து விட்டு, சூக்கும தேகத்தைக் கொண்டே உலகத்தில் விவகாரஞ் செய்து கொண்டிருப்பதை இந்தக் குறளில் நிரூபித்தார்.

வருபய னுண்டு மகிழ்ந்துட னாநிற்கு
மொருபயனைக் காட்டு முடம்பு.

கருத்துரை: உள்ளுடம்பானது வேண்டிய பிரயோஜனத்தை அடைந்து ஆனந்திப்பதோடு சுவாலையோடுங் கூடிய பிரணவத்தை நிலைத்து நிற்கும்படியான ஒப்புவமையற்ற பிரயோஜனத்தை வெளிப்படுத்தும்.

விளக்கவுரை : ஓங்காரத்தின் பலனாவது பஞ்சமூர்த்திகளையும், விநாயகன். சுப்பிரமணியன், முதலிய தெய்வங்களையும், அதனதனுடைய சத்திகளையுங் காட்டி, இராப் பகலற்ற சிதாகாயத்தில் அழியாத ஆனந்தத்தை அடையும்படி செய்துவிடும்.

அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய
தொல்லை யுடம்பின் றொடர்பு.

கருத்துரை : ஆராய்ச்சியினால் உண்டாகிய கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் தூல சரீரத்தின் சூக்கும சரீரமானது துன்பத்தோடு கூடிய ஜெனனத்தை ஒழித்துவிடும்.

நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு.

கருத்துரை : (தூலசரீரம்) புண்ணியத்தையும் பாவத்தையும் அடைந்து திரிந்து கொண்டிருக்கும். சூக்கும சரீரமானது செய்யும் படியான ஞான கர்மத்திற்கு விதையாக நிற்கும்.

விளக்கவுரை: தூல சரீரம் பாவ புண்ணியத்தை அடையும். சூக்கும சரீரம் ஞான கர்மத்திற்கு வித்தாக இருக்கும்.

உள்ளுடம்பின் வாழ்வன வொன்பது மேழைக்
கள்ள வுடம்பாகி விடும்.

கருத்துரை : (தூல சரீரத்தில் சம்பந்தப்பட்டு) விவகாரஞ் செய்து கொண்டிருக்கும், நவத்துவாரங்கள் சூக்கும சரீரத்தில் (சம்பந்தப்பட்ட போது) விவகாரச் செயலற்ற மறைந்து நின்ற உடம்பாக மாறிவிடும்.

விளக்கவுரை: சூக்கும சரீரத்தின் விவகாரங்கள் அறிவின் வசப்பட்டிருக்கின்றன அதனால் நவத்துவாரங்களுக்கு அறிவினிடம் வேலையில்லை. தரித்திரதெசையை யடைந்ததுபோல் சாயாமாத்திரமாய் நிற்பதால் ''ஏழைக் கள்ள வுடம்பாகி விடும்'' என்றார். நவத்துவாரங்கள், தூல நவத்துவாரங்கள், சூட்சும நவத்துவாரங்கள் என்று இருவகைப்படும். இந்த சூட்சும துவாரங்களைத்தான் ஆசாரியன் காட்டுவது

பொய்க்கெல்லாம்பாசனமாயுள்ளதற்கோர்வித்தாகு
மெய்க்குள்ளா மாய வுடம்பு.

கருத்துரை : எல்லாப் பொய்களுக்கும் ஆதாரமாயிருக்கின்ற அந்த தூலசரீரத்திற்கு அந்த தூலத்திற்குள்ளிருக்கிற சூக்கும சரீரமானது ஒப்பற்ற முதலாக இருக்கின்றது.

விளக்கவுரை : தூல சரீரத்திற்குச் சூக்கும சரீரம் ஒரு வித்தாக இருக்கின்றது. ஞான கர்மத்திற்கு முதன்மையான இந்திரியங்கள் நிராசையோடு நின்று சூக்குமசரீரத்தையடையும். தூலசரீரத்தையே இடமாகக் கொண்ட இந்திரியங்கள் ஞான விரோதமாக பஹிர்முகவிஷயத்தில் கிளர்ச்சி செய்கின்றன. மனம் சூக்குமத்தில் சம்பந்தப்பட்டவுடன் அதனுடைய தொழிலாகிய மனனத்தை ஒழித்திருக்கின்றது. தூலத்திலிருக்கும் போது மனனமாகிய கிளர்ச்சியைச் செய்கின்றது. ஆகையால் தான் தூலத்தை 'பொய்க்கெல்லாம் பாசன' மென்றார்.

வாயுவினா லாய வுடம்பின் பயனே
யாயுவி னெல்லை யது.

கருத்துரை : சரீரத்தின் பிரயோஜனத்தினாலேயே உண்டாகிய பிராண வாயுவினால் ஆயுளின் முடிவு ஏற்பட்டிருக்கின்றது. பிராண வாயுவுக்கு ஆயுளை முடிப்பதற்கு அதிகாரம் ஏற்பட்டதற்குக் காரணம் அசைவேயாகும்.

ஒன்பது வாசலுமொக்க வடைத்தக்கா
லன்ப திலொன்றா மரன்.

கருத்துரை : (சூக்குமமாகிய) நவத்துவாரங்களையும் ஒருமிக்க நியாசஞ் செய்தால் ஐம்பது ரகசிய பீஜங்களோடு ஒன்றாக (ஐம்பத்தொன்றாக) சிவனிருப்பான்.

விளக்கவுரை : ஆசாரியனால் காட்டும் சூட்சும நவத்துவார நியாசத்தினாலேஏற்படும் ஐம்பத்தொரு பீஜங்களாகச் சொல்லப்படும் இரகசியங்களில் ஒன்றாகச் சிவன் வெளிப்படுவான்.

ஈறுசெய் மூலமதில் நாலதாகும்
எண்ணரிய லிங்கத்தே ஆறதாகும்
கூறியதோர் ஆலடியில் பத்ததாகும்
குறிப்புடைய முக்கோணத்தில் பனிரெண்டதாகும்
பேரரிய காலதனில் பதினாறதாகும்
பேசரிய வாயதனில் ரெண்டதாகும்
மாரிலாக் குருபதத்தே ஒன்றதாகும்
மன்னிய சீ ரட்சரங்க ளன்பத்தொன்றே
குருபதத்தி லொன்றென்பதே
பரமசிவமாகும்.

ஈ. நாடி தாரணை

எழுபத் தீராயிர நாடி யவற்றுள்
முழுபத்து நாடி முதல்.

கருத்துரை: தேகத்தின் கண் எழுபத்தீராயிர நாடிகளிருக்கின்றன. அந்த நாடிகளுக்குள் பூரணமான பத்து நாடிகளிருக்கின்றன. (அந்தப் பத்து நாடிகளுக்கும்) முதன்மையாக ஒருநாடி இருக்கின்றது. தேகத்தினுள்ள நாடிக் கூட்டங்களில், ஞானகர்மத்திற்காக ஏற்பட்ட பத்து நாடிகளும், அதைப்பிரவர்த்திக்கச் செய்யும் நாடி ஒன்றும் இருக்கின்றன.

விளக்கவுரை: தசவித நாடிகள்: அத்தி, அலம்புடை, இடை, காந்தாரி, குரு, சங்கினி, சிகுவை, சுழிமுனை, பிங்கலை, புருடன்.

நரம்பெனு நாடியிவை யினுக்கெல்லா
முரம்பெறு நாடியொன் றுண்டு.

கருந்துரை: நாடிகளுக்கு நரம்பென்று சொல்லப்படும். இந்த நாடிகளுக்கெல்லாம் பலம் பொருந்திய நரம்பானது ஒன்று இருக்கின்றது.

உந்திமுதலா யுறுமுடிகீழ் மேலாய்ப்
பந்தித்து நிற்கும் பரிந்து.

கருத்துரை: நாபித்தனத்தை முதன்மையாகக் கொண்டு உச்சி வரை நாபிக்குக் கீழாகவும் மேலாகவும் பொருந்தி அன்புடன் உறுதியாக (மேல் குறளில் சொன்ன ஒரு நாடியானது) நிற்கின்றது.

விளக்கவுரை: இந்த ஒப்பற்ற நாடியே, குண்டலி யென்ற ஓங்கார நாடியாகும். உந்தி என்பது நாடியின் மத்திய பீடம். இதையே தொப்புள் என்று நினைத்து வழங்கிக் கொண்டிருப்பது வழக்கமாய் விட்டது. உந்தி, நாபி, உந்திக்கமலம், இப்பதங்களெல்லாம் குறிப்பிடுவது, ஓங்காரத்தின் மத்திய பாகத்திலுள்ள மணிபூரகமே. இந்த இடத்திருந்தே ஆரம்பமாகி ஓங்காரத்தின் அடிபாகத்திலும் முடிபாகத்திலும் உறுதியாக நிற்பதையே இந்தக் குறளில் கூறியிருக்கின்றார்.

காலொடு கையி னடுவிடத் தாமரை
நூல்போலு நாடி நுழைந்து.

கருத்துரை: கால்களோடு கைகளிலும் மத்திய பாகத்திலும் (சரீர முழு வதும்) பக்கங்களிலும் ஓங்கார நாடியானது தாமரை நாளத்தின் நூல் போன்று உள் நுழைந்திருக்கின்றது.

விளக்கவுரை : சரீரமானது ஓங்கார நாடியின் வியாபகத்தினாலேயே அறிவின் மயமாகவே நினைக்கப்பட்டு, ஒருவரையொருவர் சாஷ்டாங் கஞ் செய்வது, கும்பிடுவது முதலியவைகள் ஏற்பட்டன.

ஆதித்தன்றன் கதிர்போல வந்நாடிகள்
பேதித்துத் தாம்பரந்த வாறு.

கருத்துரை: சூரியன் தன்னுடைய கலையைப் பரப்புவது போல அந்த ஓங்கார நாடிகள் கலையை வெளிப்படுத்தி (சரீரத்தில்) வியாபித்த தன்மை யாக்கும். ஓங்கார நாடியானது சூரிய வியாபகம் போல, தன்னு டைய கலையைப் பரப்பி இருக்கின்றது.

மெய்யெல்லாமாகி நரம்போ டெலும்பிசைந்து
பொய்யில்லை நாடிப் புணர்வு.

கருத்துரை: ஓங்கார நாடியானது வியாபித்த தன்மையானது சரீர முழுமைக்குமாய் மற்ற நாடிகளோடும் எலும்புகளைச் சேர்ந்து நிற்ப தாகும். (ஆகையால்) இது உண்மையாகும்.

உந்திமுதலாகி யோங்காரத்துட் பொருளாய்
நின்றது நாடி நிலை.

கருத்துரை: குண்டலி நாடியின் நிலையானது பிரணவத்தின் இரக சியப் பொருளாய் நாபிக் கமலத்தை முதன்மையாக்கிக் கொண்டு நிலைத்திருக்கின்றது.

நாடிகளூடு போய்ப் புக்க நலஞ்சுடர்தான்
வீடுதருமாம் விரைந்து.

கருத்துரை: ஓங்கார நாடிகளுடன் சென்று பிரணவத்துக்குள் நுழைய நன்மையாகிய ஒளி (உண்டாகும்). அந்த ஒளியானது வேகமாய் மோட் சத்தைக் கொடுக்கும் நிச்சயம். ஓங்காரத்திற்குள் பார்வையும், மனமுங் கூடி நுழைந்தால் மோட்சத்தைக் கொடுக்கும்.

நாடி வழக்கமறிந்து செறிந்தடங்கி
நீடொளி காண்ப தறிவு.

கருத்துரை: பிரணவ நாடியின் (ஞானிகளின்) பழக்கங்களைத் தெரிந்து நெருங்கி, ஒடுங்கி, நீண்டதேஜஸை தரிசிப்பது அறிவாகும். பழக்கமுள்ள ஞானிகளின் அனுபோகத்தைக் கொண்டே நீண்ட ஒளியைக் காண வேண்டும்.

அறிந்தடங்கி நிற்குமந் நாடிகடோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம்.

கருத்துரை: உணர்ந்து பார்வையும் மனமும் ஒடுங்கி இருக்கின்ற அந்தப் பிரணவத்தின் பூரண பாகங்களிலும் சிவமானது நிறைந்து ஸ்திரப்பட்டு நிற்கும். பிரணவத்திலேயே சிவமானது ஸ்திரத் தன்மை யோடு நின்றுவிடும்.

உ. வாயு தாரணை

மூலத்திற்றோன்றி முடிவிலிரு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் காண்.

கருத்துரை: காற்றானது (குண்டலியின் மத்திய பாகத்திலுள்ள) வாயு உதிக்குமிடத்தில் உதித்து, குண்டலியின் உச்சியில் இரண்டாகப்பிரிந்து நான்கு திக்கிலும் பரவி துவாதசாந்த வெளியில் செல்லும் போது பன்னிரண்டு கலைகளாக வெளிப்பட்டு நிற்கும் அதைப்பார்.

விளக்கவுரை: மூலம் என்பது மூலாதாரமல்ல. மூலாதாரமென்ற பழக்கச் சொல் ஒவ்வொரு பொருளும் உதிக்குமிடமே மூலமாகும். இவ்விடம் மூலம் காற்று உதிக்குமிடமாகும். அது குண்டலியின் மத்திய பாகமே. இரு நான்காகி என்பது, இரண்டு, நான்கு இவைகள் இரண்டு என்பது, வாயு இரண்டாகப் பிரிவதையும், நான்கு என்பது நான்கு திக்கையுங் குறிக்கும். துவாதசாந்தவெளி என்பது, பிரணவ உச்சியைத் தாண்டிக் கலைகளோடு செல்லும்போது, சிரசுக்கு மேல் பதினாறு அங்குல அளவில் உள்ளது. அதுவே இராப்பகலற்ற இடம்.

இடைபிங்கலை களி ரேசக மாற்றி
லடையுமரனா ரருள்.

கருத்துரை: பரமசிவத்தின் அருளானது இடைகலையிலும் பிங்கலை யிலும் ரேசிக்குந் தந்திரத்தை இடபிங்கலைகளினால் மாறி மாறிச் செய்தால் (அருள்) சாதகனிடத்தில் வந்து சேரும்.

விளக்கவுரை : இட, பிங்கலைகள் என்பன இடது பக்கத்திலும், வலது பக்கத்திலும் உள்ள, சூரியன், சந்திரன் என்னும் இரண்டு திருவடிகளை அடக்கி வைத்திருக்கும் இரண்டு நேத்திரங்களே. ரேசித்தல் என்பது, சூரிய கலையும், சந்திர கலையும் ஒன்று சேர்ந்து கலத்தலே. ரேசகத்தின் பலன், அமாவாசையாகும். அச்சமயத்தில் தான், ஞானகர்மாவை யாரம்பிக்குங்காலம்.

திருமந்திரத்தில்,
விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணென்ற தாளை தலைக்காவல் முன்வைத்து
உண்ணின்று ருக்கி உறைப்பிலா வானந்தம்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே.
வாசிட்டம்: புசுண்டர் கதையில்,
நீ யிங்கெதிர் காணும்
பூதவுடலாம் மனைநடுவே பொருந்துமிதய புண்டரிகச்
சீதமலரில் உள்ளிரண்டு செறியும் பிராணன பானனென.

(என்று கூறி இருப்பதைக் கவனிக்கவும்) அமாவாசை காலத்தில், நாம் செய்யும் பஹிர்முக கர்மாவே அந்தர் முகத்திலுஞ் செய்யும் படியானதாகும்.

அங்குலியான் மூடிமுறையா லிரேசிக்கிற்
பொங்குமாம் பூரகத்தினுள்.

கருத்துரை : விரல்களினால் மறைக்கப்பட்டிருப்பதை (ஆசாரியன் சொல்லும்) முறையின்படி (திறந்து) கலக்க வைத்தால் பூரகஞ் செய்யும் போது (கலைகளானது) பொங்கி எழும்பும்.

விளக்கவுரை : அங்குலி விரல்கள்-இதைப் பிராமணர்கள் விரல்களுக்குச் சொல்லியிருக்கும் மந்திரத்தைக் கவனித்தால் விளங்கும். ஆணும், பெண்ணும் விவாக காலத்தில், சேர்க்கையை ஸ்திரப்படுத்தும் சுண்டு விரல்களை, ஒன்றோடொன்று சம்பந்திக்கிற கர்மாவே நாத, பிந்து வடிவமாயிருக்கும் சூரிய, சந்திரக்கலைகளைச் சேர்ப்பதற்கும் உதவுமென்று நிச்சயப்படுத்த வேண்டும்.

எண்ணிலியூழி யுடம்பாயிரேசிக்கி
லுண்ணிலமை பெற்றதுணர்வு.

கருத்துரை : கணக்கற்ற தடவை சரீரத்தின்கண் பொருந்தும்படியாய் (உறையும்படி) ரேசகத்தைச் செய்தால் உள்ளே (சரீரத்திற்குள்ளே) ஸ்திர நிலைமையடைந்த அறிவாகும்.

விளக்கவுரை : ஊழியென்பதை காலத்திற் குபயோகப்படுத்தாமல், செயற்கை யொழிந்த காலத்திற்கு உபயோகிக்கவும்.

மயிர்க்கால்வழி யெல்லாமாய்கின்றவாயு
வுயிர்ப்பின்றி யுள்ளேபதி.

கருத்துரை : (மூக்கில் சென்று வெளியில் வரும்) உஸ்வாச, நிஸ்வாச மில்லாத மயிர்க்கால் வழியாக நாசமாகின்ற பிராணாபான வாயுக்களை முற்றிலும் பிரணவ கமலத்தினுள்ளே நுழைத்து விடு.

விளக்கவுரை : உலகத்திலுள்ள கல்வி ஞானிகள், மூச்சையே பிராண வாயு வென்று நினைத்துக் கர்மத்தைச் செய்யப் போகிறார்களென்று நினைத்தே, 'உயிர்ப்பின்றி' என்று சொல்லியிருக்கின்றார். மேலும் உஸ்வாச நிஸ்வாசமாகிய உள்ளே சென்றும், வெளியே வருகிற வாயுக் களானவை, மயிர்க்கால் வழியாக மாயுமாவென்று அறிவாளிகளை யோசிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இரேசிப்பது போலப்பூரித்து நிற்கிற்
றராசுமுனை நாக்கதுவேயாம்.

கருத்துரை : சூரிய சந்திரர்களைக் கலக்க வைக்கும் கர்மாவைப் போலவே (பூரிப்பை யடையும்படி செய்யுங் கர்மாவாகிய) பூரகஞ் செய்து நிற்கில் பிரணவ உச்சி தராசாகவே யிருக்கும்.

விளக்கவுரை : பூரகம் பூரிப்பையுடையது. பூரிப்பை யடைந்தால்தான் மேல் நோக்கும். மேல்நோக்கினால்தான், பிரணவத்தை யுருவாக்க முடியும். தராசு என்ற சப்தமே ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்தி விடு கின்றது. பிரணவ முனையைத்தான் நூல்களும் புகழ்கின்றன.

நாவின் நுனியில் நடுவே சிவிறிடில்
சீவனு மங்கே சிவனு முறைவிடம்
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவது மில்லை சதகோடி யூனே.

ஊனூரல் பாயுமுயர் வரையுச்சிமேல்
வானூரல் பாயும் வகையறிவாரில்லை
வானூரல் பாயும் வகை யறிவார்க்கு
தேனூர லுண்டு தெளிதலு மாமே. திருமந்திரம்

கும்பகத்தினுள்ளே குறித்தரனைத் தானோக்கிற்
தும்பிபோனிற்குந் தொடர்ந்து.

கருத்துரை: சரீரத்திற்குள்ளே கும்பகமென்னுந் தந்திரத்தினால் சிவத்தைக்குறித்துச் சாதகன் ஊர்த்துவமுகத்தைப் பார்ப்பானேயானால் பிராணாபான வாயுக்களானவை பார்வையோடு தொடர்ந்து கரும்பு போல் நிலைத்து நிற்கும்.

விளக்கவுரை : தும்பி என்பதை வண்டு யானைக்கு, உபயோகப்படுத் தினால், நிறம், குணம், உருவம் இவைகள் பொருந்தா. கரும்புகோல், வெள்ளை, சிகப்பு கலந்திருப்பதால், பிராணாபான வாயுவைக் காட்டு கின்றது. பிராணாபான வாயுவானது நாத, பிந்துவின் சாரமா யிருக் கின்றது. குணமோ இனிப்பாகிய சுகத்தைக் கொடுக்கின்றது. உருவமோ நீண்டு உயர்ந்திருக்கின்ற தன்மையையும், அதன் இலை கள் இடாபிங்கலைக் காட்டும் தன்மையையும் கவனிக்கக்கோருகிறேன். கரும்பைப் பார்த்தவர்கள், பிராணாபானனை நிறுத்திப் பார்ப்பார் களேயானால், இது விசிதமாகு மென்பது நிச்சயம். தும்பிக்குக் கரும்பு கோலென்ற உரையுமுண்டு.

இரேசகபூரக கும்பகமாற்றிற்
றராசு போனிற்குந்தலை.

கருத்துரை: பிராணாபானனை ஒன்றோடொன்று கலத்தலும், அவற் றின் கலைகளைப் பூரிக்கச் செய்வதும், பிராணாபான வாயுக்களைப் பிரணவ மத்திய பாகத்தில் நிறுத்தலும் இந்த மூன்றையும் மாறி மாறிச் செய்தால் பிரணவ வுச்சியானது நிறைக்கோலைப் போல் நின்றுவிடும்.

விளக்கவுரை : சிரசுக்கு முக்கியமானதாயுள்ள, பார்வைகளுக்கு, சூரியன், சந்திரன் என்றும் பெயர். சூரியனுக்குப் பனிரெண்டு கலை. சந்திரனுக்குப் பதினாறு கலை. இப்படி வித்தியாசமாக இருப்பதால், பார்வைக்கு வேண்டிய, சத்தி குறைவு படுவதனாலேயே, மனது தகு மான சக்தியை யடையவில்லை. இது பிரத்தியட்சம். இந்த கஷ்டந் தொலையவே, ரேசக, பூரக, கும்பகங்கள் ஏற்பட்டன. தராசு போய் நிற்குந்தலை யென்று கூறியது இக்கருத்தைக் கொண்டேதான்.

வாயு வழக்க மறிந்து செறிந்தடங்கி
லாயுட் பெருக்க முண்டாம்.

கருத்துரை: பிராணாபான வாயுக்களின் பழக்கத்தை உணர்ந்து பிராணனும், அபானனும் ஒன்றுபட்டு உந்திக் கமலத்திலடங்கினால் ஆயுளின் விருத்தியானது உண்டாகும்.

போகின்ற வாயு பொருந்திற் சிவமொக்குந்
தாழ்கின்ற வாயு வடக்கு.

கருத்துரை: அதோ முகத்தில் சஞ்சரிக்கும் அபான வாயுவை அதோ முகம் செல்லாமல் தடுத்து மேல்பாகத்தில் சென்று சஞ்சரிக்கும் பிராண வாய்வினோடு சம்பந்தித்தால் சிவத்துக்குச் சமானமாகும்.

ஊ. அங்கி தாரணை

அந்தத்தி லங்கி யழல்போலத் தானோக்கிற்
பந்தப் பிறப்பறுக் கலாம்.

கருத்துரை : மூலாக்கினியை வெளியிலெழுப்பி (சடாக்கினியின்) சுவாலை போலச் சாதகன் பார்ப்பனேயானால் முடிவில் ஜெனனத்தை உண்டாக்கும் பாசத்தை அறுத்து விடலாம். மூலாக்கினியின் சுவாலையை நோக்கிப் பார்ப்பதினால், பிறப்பின் பந்தத்தை ஒழிக்க லாம்.

விளக்கவுரை : ஊதியறி வாய் கொண்டு ஊதிப்பாரு
உள்பத்திக் கொண்டுதடா தானே தானாய்
ஊதியறி வாயறிய மாட்டா யானால்
உன்னாணை ஊதிபங்க ளொன்று மில்லை. என்றும்,

''ஊதுகிற வூத்தறிந்தா லவனே சித்தன்'' என்றும், சித்தர் நூல்கள் கூறுகின்றன.

உள்ளும் புறம்பு மொருங்கக் கொழுவூறிற்
கள்ள மலமறுக்க லாம்.

கருத்துரை : பிரணவ வெல்லைக்குள்ளும் பிரணவத்திற்கு வெளிப்பக் கங்களிலும் ஒரே காலத்தில் பிராணனுக்குப் பலத்தைக் கொடுக்கும் அக்கினிச் சுடர் ஊறுமானால் வஞ்சனையையுடைய கிரந்தித்திரயங் களை ஒழிக்கலாம்.

எரியுங் கழல் போல வுள்ளுற நோக்கிற்
கரியுங் கனலுருவமாம்.

கருத்துரை : ஜொலித்துக் கொண்டிருக்கும் திருவடிகளைப் போல உன்னே மனமும் பார்வையும் பொருந்தப் பார்த்தால் கரிநிறமானஇருட்

டும் அக்கினியின் ரூபமாகும். பிரணவத்திற்குள் பார்ப்பாயேயானால், திருவடிக் கமலங்கள் பிரகாசிப்பது போல், பிரம்ம கிரந்தியாகிய இருட்டும் பிரகாசத்தைக் கொடுக்கும்.

உள்ளங்கி தன்னை ஒருங்கக் கொழுவூறில்
வெள்ளங்கிதானாம் விரைந்து.

கருத்துரை: பிரணவத்திற்குள் பிரவேசித்த அக்கினி மயமாயிருக்கும் நாதகலையைப்பூரணமாக(மூலாக்கினியையெழுப்பி அதன்சுவாலையை மேற்படி நாதகலையின் மேல்) பாய்ச்சினால் (அதோ முகத்துள்ள) பிந்துகலையானது வேகமாக (ஊர்த்துவமுகத்தில் வந்து) நிற்கும். நாதகலையோடு, அக்கினி கலை சேர்ந்தால், பிந்துகலை தானாகமேல் எழும்பி நிற்கும்.

உந்தியினுள்ளே யொருங்கச் சுடர்பாய்ச்சி
லந்தி யழலுருவ மாம்.

கருத்துரை: நாபிப் பிரதேசத்தில் பூரணமாகவும் அக்கினிகலையை விசும்படி செய்தால் இராக்காலமானது அக்கினியின் பிரகாசத்தைப் போலாகும். மணிபூரகஸ்தானத்தில், அக்கினி கலையைப் பிரவேசிக்கச் செய்தால் இரவு வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

உந்திக்கமலத் துதித்தெழுஞ் சோதியை
யந்திக்கு மந்திரமாரு மறிகிலர்
அந்திக்கு மந்திரமாரு மறிந்தபின்
தந்தைக்குமுன்னே மகன் பிறந்தானே. திருமந்திரம்

ஐயைந்து மாய வகத்து ளெரிநோக்கிற்
பொய்யைந்தும் போகும் புறம்.

கருத்துரை: (அரசனாகிய)பிரணவமும் பஞ்சேந்திரியசத்திகளும் சேரும்படி பிரணவ நடுவீட்டில் அக்கினியையெழுப்பிப்பார்த்தால் பிரயோஜனமற்ற சத்த, பரிச, ரூப, ரச கந்தமாகிய ஐந்தும் (சாதகனுக்கு) வெளியில் ஒழிந்துவிடும். ஓங்காரமும், பஞ்சேந்திரிய சத்திகளும், சம்பந்திக்கும்படி அக்கினியைப் பார்த்தால், பஞ்சேந்திரியங்களின் பஹிர்முக விவகார மொழியும்.

ஐம்பது மொன்றுமழல் போலத் தானோக்கி
லும்ப ரொளியாய் விடும்.

கருத்துரை: ஐம்பத்தொரு பீசங்களால் கூறப்படும் இடங்களையும், அதன் சத்திகளையும் அக்கினியைப் போல சாதகன் பார்த்தால் தேவர் களுடைய ஒளியாக மாறும்.

தூண்டுஞ் சுடரைத் துளங்காமற்றா னோக்கில்
வேண்டுங் குறை முடிக்கலாம்.

கருத்துரை: கர்மாவினால் தூண்டப்படும் மூலாக்கினியை அசைவில் லாமல் சாதகன் பார்த்தால் இச்சிக்குங் காரியங்களைச் சித்தி செய்து கொள்ளலாம். சாதனையால் எழும்பும் அக்கினியை நிவாத தீபம்போல் பார்த்தால் இஷ்டசித்தியை யடையலாம்.

உள்ளத் தாலங்கி யொருங்கக் கொழுவூறில்
மெள்ளத்தான் வீடாம் விரைந்து.

கருத்துரை ; மனதினால் மூலாக்கினியைத் தந்திரமாகச் சேர்த்துச் சுடரைப்பாய்ச்சினால் சீக்கிரமாக மோட்ச வீடாகும்.

ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில்
வெள்ளியா மாலை விளக்கு.

கருத்துரை: பிரகாசத்தோடுங் கூடிய அக்கினிக் கொழுந்தை அசைவு இல்லாமல் ஸ்திரத்தன்மையுடன் பார்த்தால் இரவை (அந்தகாரத்தை ஒழித்துப்) பிரகாசிப்பது பிந்துகலையாகும். மனமும், பார்வையும் ஒருங்கு கூடி, மூலாக்கினியைப் பார்ப்பதினால், இரவை மறைத்து பகலைப் போல் தோற்றி வைப்பது பிந்து கலையாகும்.

விளக்கவுரை : இக்குறளின் கண்ணிருக்கும், அந்தரங்க ரகசியத்தையே காட்டிய மணிவாசகப் பெருமானுடைய திருவாசகத்தில், திருப்பாண்டிப் பதிகம் முற்றிலும், ஊன்றிப் பார்த்தால் விசிதமாக விளங்கும். ஒரு பாசுரத்தை அடியில் காட்டுகிறோம்.

ஈண்டிய மாயா விருள்கெடவப் பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனுஞ் சொல்லவல்ல னல்லன்
வேண்டிய போதே விலக்கிலை வாய்தல் விரும்புமின்றாள்
பாண்டியனாரருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே.

இப்பாசுரத்தில் மீனவன், பாண்டியன் இப்பதங்களைப் பரமசிவத் துக்கும், பாண்டிய அரசனுக்கும், மன்மதனுக்கும் அமைத்துக் கொள்ளு கின்றார்கள். பிந்து கலைக்குப் பொருத்தினால் ஞானக்கருத்து பொருந்தும்.

எ. அமுத தாரணை

அண்ணாக்குத் தன்னையடைத் தங்கமிர்துண்ணில்
விண்ணோர்க்கு வேந்தனுமாம்.

கருத்துரை: ஓங்காரமாகிய மேல்பாகத்தில் உள்ள நாக்கின் மத்தியில் சாதகன் தன் பார்வை, மனம் இரண்டையும் சேர்த்து (நின்று) அந்த இடத்தில் (சுரக்கும்) அமுதத்தை உண்பானேயானால் தேவர்களுக்கு அரசனாகவிருப்பான்.

விளக்கவுரை: அமிர்த தாரணை பத்துக் குறளிலும், தேகத்திலுள்ள அமுதம் உண்டாகக் கூடிய இடத்தைக் குறிப்பிட்டு அமுதத்தை ஞான அவா வுள்ளவர்களை உண்ணச் சொல்லுகிறார்.
மணிவாசகப் பெருமானும்,

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
 மதித்திடாவகை நல்கினான்
வேயதோளுமை பங்கனெங்க டிருப்பெருந்
 துறைமே வினான்
காயத்துள்ள முதூறவூரநீ கண்டுகொள்
 ளென்று காட்டிய
சேயமாமலர் சேவடிக்கணஞ்
 சென்னி மன்னித் திகழுமே. என்றும்,

தாயுமானவரும்,

மருமலர்ச் சோலைநெறி நன்னீழன் மலையாதி
 மன்னு முனிவர்க் கேவலாய்
மந்திரமா லிகைசொல்லு மியமநிய மாதியா
 மார்க்கத்தி னின்று கொண்டு
கருவுமரு காயத்தை நிர்மலம தாகவே
 கமலாச னாதி சேர்த்துக்
காலைப் பிடித்தனலை யம்மை குண்டலியடிக்
 கலைமதியி னூடு தாக்கி
உருகிவரு மமுர்தத்தை யுண்டுண்டு றங்காமல்
 உணர்வான விழியை நாடி
ஒன்றோ டிரண்டெனாச் சமரச சொருபசுக
 முற்றிடவென் மனதின் வண்ணம்

திருவருள் முடிக்கவித் தேகமொடு காண்பனோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவானந்த தெய்வமே.
தேசோ மயானந்தமே.

என்றும், சொல்லியிருக்கிறார்கள்.

ஈரெண்கலையி னிறைந்தவமிர் துண்ணில்
பூரணமாகும் பொலிந்து.

கருத்துரை: பதினாறு கலைகளையுடைய சந்திரனிடம், பூர்ணமாயி ருக்கின்ற அமிர்தத்தை யுண்டால் (உண்ட தேகமானது) தேஜசோடு விளங்கித் தேகமடைய வேண்டியதைப் பூரணமாக அடைந்து விடும்.

ஓங்காரமான கலசத்தமிர் துண்ணில்
போங்கால மில்லை புரிந்து.

கருத்துரை: ஞானகர்மாவினால் ஓங்காரமான பிரணவமாகிய சொரு பத்திலுள்ள அமிர்தத்தைச் சாப்பிட்டால் சாகுங் காலங் கிடையாது. சாதகன் சாதனா பலத்தால் பிரணவத்திலுள்ள அமுதத்தை உண்டால் மரணமில்லை.

ஆனகலசத் தமிர்தை யறிந்துண்ணில்
போனகம் வேண்டாமற் போம்.

கருத்துரை: சாதனா சம்பந்தத்தால் ஏற்பட்ட அஷ்டதள கமலத்தின் மத்தியிலுள்ள அமிர்தத்தைக் கண்டுபிடித்து உண்டால் ஆகாரம் விருப்ப மில்லாமல் போய்விடும்.

விளக்கவுரை: ஊறு மருவி உயர்வரை யுச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குள மொன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரை
பூவின்றிச் சூடான் புரிசடை யோனே. என்றும்,

ஒருங்கிய பூவுமோ ரெட்டிதழாகும்
மருங்கிய மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழினையினூடே
யொருங்கிய சோதியையோர்ந் தெழுமுய்ந்தே.

என்றும்,

ஆறேயருவி யகங்குள மொன்றுண்டு
நூறே சிவகதி னுண்ணிது வண்ணமுங்
கூறே குவிமுலைக் கொம்பனையா ளொடும்
வேறேயிருக்கும் விழுப்பொருள்தானே, என்றும்,

திருமூலர் கூறுகின்றார்.

ஊறுமமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக் கலாம்.

கருத்துரை: சிவ பொக்கிஷமாகிய பிரணவ வுச்சியை மனமுங் கண்ணும் பொருந்தும்படி பார்த்தால் (அதிலிருந்து) இறங்கி வரும் அமிர்தபானத்தை (உண்டால்) நூல்களால் எடுத்துச் சொல்லப்பட்ட ஜெனனத்தை ஒழிக்கலாம்.

ஞான வொளிவிளக்கா னல்லவமிர் துண்ணில்
ஆன சிவயோகி யாம்.

கருத்துரை: ஆத்ம வொளியின் தீபத்திலுண்டாகும் நன்மையைக் கொடுக்கத் தகுந்த அந்த அமிர்தத்தை யுண்டால் அந்த அமிர்தத்தன் மையால் சிவராஜ யோகியாவான்.

மேலையமிர்தை விளங்காமற் றானுண்ணில்
காலனை வஞ்சிக்கலாம்.

கருத்துரை: துவாதசாந்த வெளியில் சூரியகலையிலிருந்து கீழிறங்கும் அமிர்தத்தைத் தெளிய வைக்காமல் (பஹிர்முக பஞ்ச பூதங்களினுடைய பரிசத்துக்கு இடங்கொடாமல்) சாதகன் உண்டால் எமனை தேகத்திலிருந்து பிராணனைப் பிரிப்பதைத் தடுத்து விடலாம்.

விளக்கவுரை: பிராம்மண கர்மாவில் வேத சம்பந்தமானது, சூரியனிடத்திலிருந்தே மூன்று உளுந்து பிரமாணமான கங்கையை வரவழைத்து, ஸ்வீகரிக்க வேண்டுமென்பது ஏற்பட்டிருக்கிறது. அந்த தந்திரத்தையே ஔவையுங் கூறியிருக்கிறார், சூரிய கலையிலிருந்து உண்டாவதால், கீழிறங்கின சமயத்திலேயே ஆவியாய் எழும்பி விடுமாதலால் உடனே உண்ண வேண்டுமென்றே, ''விளங்காமற்றானுண்ணில்'' என்றார்.

காலன லூக்கங் கலந்த வமிர்துண்ணில்
ஞான மதுவா நயந்து.

கருத்துரை: பிரணவ உச்சியில் (உயர்ச்சி) பிராணாபான வாயுக்களும் ஆத்ம அக்கினியும் கலப்பினா லுண்டாகும் அமிர்தத்தை யுண்டால் அதன் குணத்தால் ஞானமாகும். (அறிவு அமிர்த குணத்தை உண்டாக்கும்) வாயுவும், அக்கினியும் பிரணவ உச்சியில் கலந்ததினாலுண்டாகும் அமிர்தம் உண்டால் ஞானமுண்டாகும்.

எல்லையிலின்னமிர்த முண்டாங் கினிதிருக்கில்
தொல்லை முதலொளியே யாம்.

கருத்துரை: பிரணவ உச்சியிலுள்ள இன்பத்தைக் கொடுக்கும் அமிர்தத்தைச் சாப்பிட்டு அந்தஇடத்தில்ஆனந்தத்தில் லயித்துக்கொண்டிருந்தால், பழமையாகிய எதார்த்த வடிவமான ஆத்ம ஒளியே ஆகும்.

நிலா மண்டபத்தினிறைந்த வமிர்துண்ணில்
உலாவலா மந்தரத்தின் மேல்.

கருத்துரை: சந்திரனுடைய மண்டலத்தில் தேக்கி இருக்கின்ற அமிர்த்தை உண்டால் ஆகாயத்தில் கமனஞ் செய்யலாம். சந்திர மண்டலத்தின் அமிர்த முண்டவன் ஆகாயத்திற் சஞ்சரிப்பான்.

ஏ. அர்ச்சனை

அர்ச்சனை - பூசிக்கும்முறை

மண்டலங்கள் மூன்று மருவவுட நிறுத்தி
அண்டரனை யர்ச்சிக்கு மாறு.

கருத்துரை: சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அக்கினி மண்டலம், இந்த மூன்றையும் ஒன்றுடனொன்று சம்பந்தமுண்டாகும்படி நிறுத்தி நேத்திரத்திலுள்ள சிவத்தைப் பூசிக்கும் வழியாகும்.

விளக்கவுரை: மண்டலங்களை ஒன்று சேர்ப்பது, ஆகாயத்திலுள்ள இரண்டு மண்டலங்களையும்பூமியின் கீழிருக்கும் அக்கினியையும், ஒன்று சேர்ப்பது முடியாத காரியம். பஞ்சபூதங்களாகிய தூலத்திற்கு சூட்சமமாயிருப்பது தேகம் தூலத்திலுள்ளது சூட்சமத்திலும் உண்டு அல்லவா? ஆகையால் சரீரத்தின்கண் உள்ள மண்டலங்களை உடன் நிறுத்தும் போது அண்டரனையென்பது கண்ணுக்குள்ளிருக்குஞ் சிவனையென்று தெளிவுபடுகின்றது.

ஆசனத்தைக் கட்டியரன் றன்னை யர்ச்சித்து
பூசனை செய்துள்ளே புணர்.

கருத்துரை: ஸ்திரத்தன்மைக்காக ஏற்பட்டிருக்கும் ஆசனத்தைச் சேர்த்துக் கொண்டு மண்டலங்களை ஒன்றுபடுத்தி உள்ளிருக்கும் சிவத்தை அர்ச்சனை செய்து ஞான கர்மாவைச் செய்தல் வேண்டும்.

உள்ளமே பீடமுணர்வே சிவலிங்கந்
தெள்ளிய ரர்ச்சிக்குமாறு.

கருத்துரை: மனத்தையே பீடமாகவும், அறிவையே சிவலிங்கமாகவும் தெளிவை அடைந்த அறிவுடையோர் அர்ச்சிக்கும் வழியாகும்.

ஆதாரத் துள்ளே யறிந்து சிவனுருவைப்
பேதமற வர்ச்சிக்குமாறு.

கருத்துரை: ஆதாரத்துக்குள்ளே பஞ்ச மூர்த்திகளின் வித்தியா சத்தை நீக்கிக் கொண்டு சிவரூபத்தைத் தெரிந்து கொண்டு அர்ச்சிக் கும் வழியாகும். ஷட் சக்கரத்துள்ளே சிவரூபம் இன்னதென்று அறிந்து பூசிப்பதே வழி.

பூரித்திருந்து புணர்ந்து சிவனுருவைப்
பாரித்தங் கர்ச்சிக்கு மாறு.

கருத்துரை: ரேசித்துப் பிறகு கும்பித்துப் பூரகஞ்செய்து அதனால் வெளிப்பட்ட சிவரூபத்தைமேல் வெளிப்பட்டஇடத்தில் அர்ச்சனை செய் யும் வழியாகும்.

விளக்கவுரை: உலகில் ரேசக, பூரக, கும்பத்துக்கு, மூக்கினால் தெய்வீக மாய் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும், உஸ்வாச நிஸ்வாசங்கள், காரணமாயிருந்தால், இந்தக் குறளில் கூறிய படி சிவனுருவைக் காண வேணும். அப்படிக்கில்லாமல் அவர்கள் வாயுவையடக்கி அதனால் வியாதியை யடைவதே பலனாகும்.

விளக்குறு சிந்தையான் மெய்ப்பொருளைக் கண்டு
துளக்கற வர்ச்சிக்குமாறு.

கருத்துரை: சாதனா சம்பந்தத்தால் தெளிவடைந்து மனனமற்ற மன தினால் அசைவை நீக்கி, தேகத்தில் இருதய குகையில் உள்ள சிவத்தைப் பார்த்து அர்ச்சிக்கும் வழியாகும்.

விளக்கவுரை: மனம் பார்வை யிவைகளிலுள்ள அசைவையொழித்துத் தான், பிறகு சிவத்தைக் காண வேண்டிய முறையென்றுசொல்லப்பட்டு

இருக்கின்றது அர்ச்சனை என்பதற்குக் கலைகளையும் பிரகாசிக்கப் படுத்துவதேயாகும்.

பிண்டத்தினுள்ளே பேராதிறைவனைக்
கண்டு தானர்ச்சிக்கு மாறு.

கருத்துரை: பிரிந்திருக்கும் நேத்திரத்தினுள்ளே சிவனைப் பார்த்த பிறகுதான் மறையவொட்டாது செய்து அர்ச்சனை செய்யும் வழியாகும்.

விளக்கவுரை: சிவன்தோன்றி, மறையுங் குணமுள்ளவனானதால், மறைய விடாமல் செய்து கொண்டு, பூசிப்பதே வழியாகும்.

திருமூலரும்,

புறப்பட்டுப் புக்குத்திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மலமாக்கி
உறுப்புச் சிவக்கும் ரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே, என்றார்.

பிரிவைக் காட்டும் நேத்திரத்திற்குள்ளேயே காணவேண்டுமென்றே ''பிண்டத்தினுள்ளே'' என்றார்.

திருமூலர்,

ஒண்ணா நயனத்திலுற்ற வொளிதன்னை
கண்ணாரப் பார்த்து கலந்தங்கிருந்திடல்
விண்ணாறு வந்து வெளிகண்டிட வோடிப்
பண்ணாம னின்றது பார்க்கலு மாமே.

மாணிக்கவாசகப்பெருமான்,

பன்னாட் பரவிப்பணி செய்ய பாதமல
ரென்னா கந்துன்னவைத்த பெரியோனெழிற் சுடராய்க்
கன்னா குரித்தென்னை யாண்டுகொண்டான்கழலிணைகள்
பொன்னான வாபாடி பூவல்லிகொய்யாமோ. என்றும்,

சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கிவாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தெனை யாட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்

தந்தனை செந்தாமரைக் காடனையமேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலிதமிய னேற்கே. என்றும்,

கூறுகின்றார்.

மந்திரங்க ளெல்லா மயங்காமலுண்ணினைந்து
முந்தரனை யர்ச்சிக்குமாறு .

கருத்துரை: முதலில் இரகசியப் பொருளைக் குறிப்பிடுவதற்கு ஏற்பட்ட எல்லா மந்திரங்களின் இரகசியத்தையும், சந்தேகங்களையும் ஒழித்து அது குறிப்பிடும் தந்திரத்தை மனதில் வைத்து அதனால் வெளிப்பட்ட சிவனை அருச்சிக்கும் வழியாகும்.

விளக்கவுரை: மனிதர்கள் தங்கள் தேகத்திற்குக் கடவுளுடைய பேரை அமைத்துக் கொண்டு, தேகத்தின் கண்ணுள்ள தெய்வ விடங்களைப் பூ பரப்பின் மேலுள்ள ஊர்களுக்குப் பேராக வமைத்துக் கொண்டு, மனிதர்கள் அந்த விடங்களிலுள்ள தெய்வத்தை அறியும்படியான தந்திரத்தைப் பீஜமாக வைத்திருப்பதால், பீஜத்தின் இரகசியத்தை அறிவதே ஞானகர்மமாகும். அந்த கர்மாவினால் கடவுள் வெளிப்படும்.

பேராக் கருத்தினாற் பிண்டத்தி னுண்ணினைந்
தாராதனை செய்யு மாறு.

கருத்துரை: பிரிவுபட்ட நேத்திரத்தின் உள்பாகத்தில் கடவுளை நினைத்து இடைவிடாத கருத்தோடு பக்குவஞ் செய்யுந் திறத்தினால் செய்யப்பட்ட ஞான கர்மமே வழியாகும்.

உள்ளத்தினுள்ளே யுறப்பார்த்தங் கொண்சுடரை
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு.

கருத்துரை: மனதுக்குள்ளே சாதகன் மிருதுவாக மனமானது பார்வையோடு பொருந்த பிரகாசமாகிய சுடரை அவ்விடத்தில் கண்ணாற் கண்டு பூசிக்கும் வழியாகும்.

விளக்கவுரை: தந்திரமாக மனதைப் பார்வையோடு சம்பந்தித்து அதனால் எழும்பும் சுடரைக் கண்டு அதைப் பூசிக்க வேண்டும். இந்தப் பத்து குறளிலும், சிவத்தை வெளிப்படுத்தி, பூஜிக்கும் முறை சொல்லப் பட்டது.

அகார வுகார சிகார நடுவாய்
வகார மோடாறும் வளியுடன் கூடிச்

சிகார முடனே சிவன் சிந்தைசெய்ய
ஒகார முதல்வ னுவந்து நின்றானே.

அவ்வென்ற போதினிலுவ் வெழுத்தாலித்தா
லுவ்வென்ற முத்தியுருகிக் கலந்திடு
மவ்வென்ற னுள்ளே வழிபட்ட நந்தியை
யெவ்வணஞ் சொல்லுகே னெந்தை யியற்கையே.

நீரிலெழுத் திவ்வுலகா ரறிவது
வானிலெழுத் தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை யறிவா ரவர்கள்
ஊனிலெழுத்தை யுணர்கிலர் தாமே.

நாவியின்கீழது நல்லவெழுத் தொன்று
பாவிகளத்தின் பயனறி வாரில்லை
யோவியராலு மறிய வொண்ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே.

அவ்வொடு சவ்வென்ற ரனுற்ற மந்திர
மவ்வொடு சவ்வென்ற தாருமறிகில
ரவ்வொடு சவ்வென்றதாருமறிந்தபி
னவ்வொடு சவ்வு மனாதியுமாமே. திருமந்திரம்

இம்மந்திரங்களினால் இடமும், கடவுள் வெளிப்படும் தந்திரத்தையும், வெளியாக இருப்பதைக் கவனிக்கவும்.

ஐ. உள்ளுணர்வு

அறிவாகிய பிரணவத்தின் சத்தியைக் கொண்டு
யாவற்றையும் அறியுந்தன்மை

எண்ணிலியூழி தவஞ் செய்திங் கீசனை
உண்ணிலைமை பெற்ற துணர்வு.

கருத்துரை : தவத்தின் மூலமாய் கணக்கற்ற முறை அசைவற்ற தன்மையை உண்டாக்கிக் கொண்டு அசைவற்ற நிலைமை ஏற்பட்ட இடமாகிய இருதய கமலத்தில் சிவத்தை ஸ்திரத்தன்மையுடன் அடைந்ததே அறிவின் சத்தியாகும்.

விளக்கவுரை : ஊழி என்பது பஞ்ச பூதங்கள் மறையுங்காலம். பஞ்ச பூதத்தின் சூக்குமமாகிய தேகத்திற்கு ஊழி காலம் மரணமே. ஞான கர்மத்துக்கு ஊழிகாலம் மனோ நாசமே.

உணர்வு என்பது அறிவின் சத்தியை விவகார தசையில் பிரயோகித்தலேயாகும்.

ஞான வாசிட்டம்,

''தெரி பொருளுந் தரிசனமுஞ் சேரும் போதில்
சேர்ந்த சுகமறிவு மிகச் சிறந்ததாகும்'' என்றும்,

''உள்ளும் புறம்பும் அசைவின்றி உயிரு மனனு மடங்குமெனிற்
றள்ளுறா மலொருக்காலுந் தாதுவெல்லாஞ் சடத்துறையும்'' என்றும்,

புசுண்டர் கதை,
இனையயாரு மிந்தவறிவு யிறவா திருக்க வீதறிய
வினையமின்றி மிகச்சோர்ந்தார் வீணர் செருக்குமிகுமுரப்பு
முனையில் வின்னா ணோசையைப் போன்மூடர் கேட்ப திறப்பதற்கே
யனையர் வீணாட் கழிப்பதலா லறியா வறிவை யறியாரே.
என்றும் சொல்லியிருப்பதை அறிக.

பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்து
நல்லுணர்வு பெற்ற நலம்.

கருத்துரை: நன்மையைக் கொடுக்குமறிவானது பல முறைகளாக மனனமற்று பழகி சிவத்தை (சிவவொளிவைப்) பிரகாசிப்பித்து அடைந்த நன்மையாம்.

அறிவானது மனனமற்ற நிலையிலிருந்து, சிவவொளியை யடைந்ததே நன்மையாகும்.

எண்ணற் கரிய வருந்தவத்தா லன்றே
நண்ணப் படுமுணர்வு தான்.

கருத்துரை : அறிவானது வேறு விதத்தாலல்லாமல் எண்ணுதற்கு அரிதாகிய அருமையாகிய தவத்தினால்தான் பொருந்தி நின்று விடும். அறிவானது தவத்தினால் அல்லாமல் வேறு விதத்தால் பூரண சத்தியை யடையாது.

முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்
பின்னைப் பெறுமுணர்வு தான்.

கருத்துரை : முதலில் தேகத்தில் முயற்சித்த தபத்தினாலேற்பட்ட அக்கினிச் சுவாலையால் பிற்பாடு அறிவானது பூர்ண சத்தியை யடையும்.

விளக்கவுரை : முன்னை பின்னை யென்பதை, முன் ஜென்மம், பின் ஜென்மம் என்பதற்கு உபயோகிப்பதற்கு இந்தஜென்மத்தில் தவத்தைச் செய்ய ஆரம்பித்தால், வருகிற ஜெனனத்தில் அறிவை யடையலாம் என்ற எண்ணம் ஏற்படும். தற்காலம் ஏற்பட்ட ஜெனனத்தில் அறிவு சத்தியை யடைவதற்கில்லை. இந்த தேகம் எடுத்ததால் பிரயோஜன மென்ன? இதிலுள்ள அறிவின் கதி என்னமாகிறது?

வாசிட்டம் ஜனகன் கதையில்,

''சங்கற்ப நாசத்தா லெளிதாக மனநாசந்தானே யெய்து
மங்குற்ற மனமிறக்கிற் சனன மரணங்களெனு மரமுமாயு
மிங்கிப்பா லெனைத் திருடுங் கள்வனைக் கண்டேன் கண்டேனிவன்
பேர் நெஞ்சம்
பொங்குற்ற நெஞ்சத்தா னெடுநா ளொந்தே னின்றுபொன்றுவிப்பேன்

இதைக் கவனித்தால் குறளின் மர்மம் வெளியாகும்.

காயக் கிலேச முணர்ந்த பயனன்றே
ஓயா வுணர்வு பெறல்.

கருத்துரை : தேக மிறக்கப் போவதைப் பற்றிய துக்கத்தை அறிந்த பிரயோஜனம் அல்லவா இடைவிடாது அறிவை அடைய முயற்சித்த லாகும். சரீரம் அநித்தியம் என்று அறிந்து இடைவிடா முயற்சி யினால் அறிவை அடைவதாகும்.

பண்டைப் பிறவிப் பயனாந் தவத்தினால்
கண்டங் குணர்வு பெறல்.

கருத்துரை : பழைய மூலவித்தின் பிரயோஜனத்தினால் ஏற்பட்ட தபசினால் அறிவைப் பார்த்து அதன் உச்சியில் அந்த சக்தியை அடை வதாகும்.

விளக்கவுரை : முன்னேழு ஜெனனங்களின் வித்தினாலேயே தபசு முடிமென்பது அறிவைக் காண்பதேயாகும்.

ஏழு பிறவியின் விபரம்

1. பஞ்ச பூதங்கள்.
2. அவைகளின் கூட்டுறவால் உண்டான சத்திகள்.
3. அச்சத்திகளைப் பிரிதிவிசத்தி கிரஹித்து ஒஷதிகளை வெளிப்படுத்தல்.

4. ஒஷதிகளிலிருந்து வித்தாகிய சீவ வுணவுகளை உண்டாக்கல்.
5. உணவை உண்டவன் நாதபிந்துக்களை உண்டாக்குதல்.
6. அந்த நாதபிந்துகள் ஸ்திரீயின் கெர்ப்பத்தில் செலுத்தி உருவாக்கல்.
7. மறுபடி மனிதருபமாய் வெளிப்பட்டு நிற்றல்.

இதுதான் எழுபிறவி.

மறு ஏழு பிறவிகளின் இரகசியம் ஆத்ம ஞானிகளுக்கே புலப்படும்.

பேராத் தவத்தின் பயனாம் பிறப்பின்மை
ஆராய்ந்துணர்வு பெறின்.

கருத்துரை : ஆராய்ச்சியின் மூலமாக அறிவைப் பெற்றால் இடைவிடாத ஞான சாதனையின் பிரயோஜனத்தினாலே ஜெனனத்தின் முடிவானது ஏற்படும்.

அறிவைப் பெற்று இடைவிடாத ஞான கர்மாவினால் ஜெனன முடிவை யடையலாம்.

ஞானத்தாலாய வுடம்பின் பயனன்றே
மோனத்தாலாய வுணர்வு.

கருத்துரை : ஞானத்தாலுண்டாகிய தேகத்தின் பிரயோஜனமல்லவா அறிவானது மௌனத்தினால்ஏற்பட்டது.மோனமென்பதுஞானவரம்பு. ஞானம் = அறிவு.

ஆதியோடொன்று மறிவைப் பெறுவதுதான்
நீதியாற் செய்த தவம்.

கருத்துரை : சிவகலையோடு பொருந்தும் பிரணவத்தை அடைவதுவே நியாயமாகச் செய்கின்ற தவம்.

காடு மலையுங் கருதித்தவஞ் செய்தால்
கூடுமுணர்வின் பயன்.

கருத்துரை : சரீரத்தின் கண்ணிருக்கும், அஞ்ஞான தத்துவங்களின் கூட்டுறவாகிய காடுகளையும், பிரணவ மேருவையும் அவற்றின் குணங்களை யோசித்து தபமாகிய ஞான கர்மாவைச் செய்தால் அறிவினுடைய லாபமானது சேரும்.

பிரணவ சொருபத்தை அறியவும், அதை மறைத்துக் கொண்டிருக்கும் அஞ்ஞானத் தத்துவங்களைப் போக்கவும், எண்ணியே ஞானகர்மாவைச் செய்தால் அறிவினாலுண்டாகும் பிரயோஜனம் வெளிப்படும்,

விளக்கவுரை : திருமூலர்,

ஒடுங்கு நிலை பெற்ற உத்தமருள்ள
ளடுங்குவதில்லை நமனு மங்கில்லை
இடும்பையுமில்லை யிராப்பக லில்லை
படும்பயனில்லை பற்று விட்டோர்க்கே.

பிறப்பறியார் பலபிச்சை செய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வமும் பெறுவர்
மறுப்பில ராகிய மாதஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றோரே.

சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டு நீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவிப் பார்வை பசுமரத்தாணிபோ
லார்த்த பிறவியகல விட்டோடுமே.

விளைவறிவார் பண்டைமெய்த்தவஞ் செய்வார்
விளைவறிவார் பண்டை மெய்யுரை செய்வார்
விளைவறிவார் பண்டைமெய்யுறஞ் செய்வார்
விளைவறிவார் விண்ணின் மண்ணின் மிக்காரே.

என்று கூறியிருக்கிறார்.

௯. பத்தியுடைமை

பத்தியுடைமை = சிவ ஜிவ வொற்றுமை

பத்தியாலுள்ளே பரிந்தரனைத் தானோக்கில்
முத்திக்கு மூலமது.

கருத்துரை : ஏகாக்கிர சித்தத்தோடு அசைவற்ற நிலையினால் அந்தர் முகத்தில் விரும்பிச்சிவத்தைச் சாதகன்பார்த்தால்மௌனத்துக்கு வேராகும்.

பாடியு மாடியும் பல்காலும் நேசித்துத்
தேடுஞ் சிவசிந்தை யால்.

பினாலுருகி விழிநீர் ஆறாக வாராத ஆவேச ஆசைக் கடற்குண் மூழ்கி''
என்றும்,

மணிவாசகப் பெருமான்,

அழலது கண்ட மெழுகது போலவும்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியும், என்றும்,

மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பியுள்ளம். என்றும்,

திருமூலர்,

மலமென் றுடம்பை மதியாத வூமர்
தலமொன்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடியிருக்கிற்
பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே. என்றும்,

கூறுகின்றனர்.

பூசனைசெய்து புகழ்ந்து மனங்கூர்ந்து
நேசத்தா லீசனைத் தேடு.

கருத்துரை: கலையையும், ஒளியையும் வெளிப்படுத்தும் பூசையைச் செய்து புகழ்ச்சியை மதித்து மனதைக் கூர்மைப்படுத்திப் பார்வையோடு பொருத்திச் சிவத்தைக் கண்டுபிடி. மனமும், பார்வையும் ஒன்றுபடும் கர்மாவினால்தான் சிவத்தைக் காணமுடியும்.

கண்ணா லுறப்பார்த்துக் காதலாற்றா னோக்கில்
உண்ணுமே யீசனொளி.

கருத்துரை: பரமசிவத்தின் பிரகாசத்தோடு கூடிய ஒளியைச் சாதகன் நேத்திரங்களால் பொருந்தும் படி கண்டு அன்பினால் நோக்கினால் மறைக்கும் பதார்த்தத்தைச் சாப்பிட்டுவிடும். சிவவொளியை அன்போடு. பார்வை இரண்டும் பொருத்தமாகப் பார்த்தால் சிவவொளியை மறைக்குங் கிரந்தித்திரயங்களை உண்டுவிடும்.

நல்லானைப் பூசித்து நாதனென வுருகில்
நில்லாதோ வீசனிலை.

கருத்துரை: அழகோடுங் கூடிய சிவகலையைப் பூசனை செய்து நாத சக்தியோடு சம்பந்தப்பட்டவன் என்று நினைத்து அன்பைப் பிரயோ

கித்தால் ஈசன் நீங்காமல் நிற்குமிடம் நிலைத்து விடாதோ? சிவகலை, நாதகலையோடு சேர்ந்து ஒளியையும், கலையையும் வெளிப்படுத்தி நின்றால் ஈசனிருக்குமிடம் நிலைத்து விடும்.

அடியார்க் கடியராயன் புருகித் தம்முள்
படியொன்றிப் பார்த்துக் கொளல்.

கருத்துரை: திருவடிகளையுடைய சிவத்துக்கு அந்தத் திருவடிகளைக் கொண்டு ஞான கர்மத்தைச் செய்பவர்கள், ஆனந்த வெள்ளம் புரள தங்கள் சரீரத்திற்குள் ஆதாரப்படிகளில் ஒவ்வொரு படியாக ஏறி நின்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

விளக்கவுரை : நாலுமிரு மூன்று மீரைந்து மீராறுங்
கோலிமே னின்ற குறிகள் பதினாறு
மூலங்கண் டாங்கே முடிந்த விரண்டுங்
காலங்கண் டானடி காணலு மாமே. என்றும்,

ஆறந்தமுங் கூடியாகு முடம்பினிற்
கூறியவாதார மற்றுங் குறிகொண்மி
னாறியவக்கர மன்பதின் மேலே
யூறிய வாதரத்தோ ரெழுத்தாமே. என்றும்,

திருமந்திரம் கூறும்.

ஈசனெனக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீ நினைந்து கொள்.

கருத்துரை : நீங்கள் ஜீவனோடு கூடியவைகளையும் சிவகலையினாலே உண்டாயினவென்று எண்ணி அன்பின் பிரயோகத்தால் மனதில் வையுங்கள்.

மெய்ம்மயிர் கூரவிருப்புற்று வேர்த்தெழுந்து
பொய்ம்மையி லீசனைப் போற்று.

கருத்துரை : அன்புடன் (சாதனையால்) மயிர்க்கூச்செறிய வியர்வை உண்டாகும் வரை எழுப்பிப் பொய்த்தன்மை இல்லாத சிவத்தை துதி. ஞான சாதனையால் மயிர்க்கூச்செறிய பொய்யில்லாத ஈசனை வெளிப் படுத்தி வணங்கு.

செறிந்தறிந்து நாடிச் செவ்விதா யுள்ளே
அறிந்தரனை யாய்ந்து கொளல்.

கருத்துரை : (திருவடிகளை) ஒன்றோடொன்று சேர்த்து அதிலிருந்துண்டாகும் பொருளை அறிந்து அதை லட்சியமாக வைத்துக்கொண்டு உள்ளுக்குள்ளே அழகியதாய் சிவத்தை யறிந்து அதை மூடியிருக்கும் பிரகிருதியை நீக்கி அடைவதாம்.

திருவடி ஞானத்தினால் வெளிப்பட்ட கடவுளை மறைத்திருக்கும் இருட்டை நீக்கி அறிய வேண்டும்.

II. திருவருட்பால்

அ. அருள்பெறுதல்

அருளினா லன்றியகத்தறி வில்லை
அருளின் மலமறுக்க லாம்.

கருத்துரை : திருவருளினால் அல்லாமல் சரீரத்திற்குள் அறிவாகிய பிரணவ சொரூபமானது உண்டாவதில்லை அருள் விலாசத்தால் மும்மலமாகிய கிரந்தித்திரயங்களை ஒழிக்கலாம்.

விளக்கவுரை : அருள் என்பது சிவம் வெளிப்பட்டு நிற்கையில் அதனிடத்திலிருந்து வெளிப்படும் கலைகளே.

ஞானிகளல்லாதவர்கள் மும்மலங்களுடையகுணங்களையே வெளிப்படுத்துகிறார்கள். அவை ஆணவம், காமியம்,மாயை என்றழைக்கப்படுகின்றன. இந்த மூன்றுக்கும் மூலப்பொருள் முறையே ருத்திர கிரந்தி விஷ்ணு கிரந்தி, பிரம்ம கிரந்தியாகும்.

மூலப்பொருள்களை விட்டு, குணங்களை ஒழிக்கப் பார்க்கிறவர்கள், ஆகாயத்தை வெட்டப்பார்க்கிறவர்களே யாகும்.

ஆகையால் கிரந்தித்திரயங்களைக் கண்டு அவற்றை யொழித்தால் ஆணவம், காமியம், மாயை யொழியும்.

இருளைக் கடிந்தின் றிறைவனருளால்
தெருளும் சிவசிந்தை யால்.

கருத்துரை : ஏகாக்கிரமனத்தினால் இப்பொழுது (முதலில்) மாயையாகிய இருட்டை (பிரம்மகிரந்தி) அதை நீக்கிவிட பரமசிவத்தின் கிருபையால் சிவகலையானது வெளிப்பட்டுச் சேர்ந்து நிற்கும்.

விளக்கவுரை : மாயை என்பது=பிரம்ம கிரந்தி, அஞ்ஞானம், இரவு, அறிவின்மை, கண்ணில் உள்ள இருட்டு இவைகளுக்குப்பொருந்தும்.

காமியமென்பது விஷ்ணு கிரந்தி, உலகபோகம், ஸ்திரீபோகம், ஆசை, ஞானபோகம் இவைகளுக்கும் பொருந்தும். ஆணவம்=ருத்திர கிரந்தி, உலகப் பிரகாசம், ஞானப்பிரகாசம், உலகாங்காரம், ஞானாங் காரம் இவைகளுக்குப் பொருந்தும்.

இம்மூன்றும், இகத்துக்கும் பரத்துக்குமாக ஏற்பட்டிருக்கின்றன.

வாய்மையாற் பொய்யாமனத்தினால் மாசற்ற
தூய்மையாமீச னருள்.

கருத்துரை : சத்தியத்தினாலும், அசைவற்ற மனத்தினாலும் குற்ற மில்லாத சிவகலையானது பரிசுத்தமாம். சத்தியம், சலனமற்ற மனது, பரிசுத்தம் இவைகளினாலேயே சிவ அருளாகிய கலை வீசஆரம்பிக்கும்.

ஒவ்வகத்துணின்ற சிவனருள் பெற்றக்கால்
அவ்வகத்து ளானந்த மாம்.

கருத்துரை : ஓங்காரமாகிய பிரணவத்திற்குள் நிற்கின்ற சிவகலையை அடைந்தால் அந்தச் சிவகலையில் ஆநந்தமானதுண்டாகும்.

உன்னுங் கரும முடிக்கலா மொள்ளிதாய்
மன்னு மருள்பெற்றக் கால்.

கருத்துரை : உள்ளே பொருந்தும்படி பிரகாசமுடையதான சிவ கலையை அடைந்தால் நாம் நினைக்கின்ற காரியங்களை முடித்துக் கொள்ளலாம்.

எல்லாப் பொருளு முடிக்கலா மீசன்றன்
தொல்லை யருள்பெற்றக் கால்.

கருத்துரை : சிவனுடைய பழமையான அருளாகிய கலையை அடைந் தால் தர்மார்த்த காம மோட்சத்தோடு, இகத்திற்கு வேண்டிய பொருட் செல்வங்களையும் அடையலாம் என்று ஏற்படுகின்றது.

சிந்தை யுணின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாச மறும்.

கருத்துரை : சிவ சொருபத்திலிருந்து வெளிக்கிளம்பும் அருட் கலையை அடைந்தால் மனதின்கண் நிலைத்து, பந்தித்துக் கொண்டி ருக்கும் இருளானது நீங்கும்.

விளக்கவுரை : பந்தபாசத்தைத் தற்காலம் உள்ள வேதாந்திகள் எனப் படுவோர் ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தையே மேற்கொண்டு மற்ற வர்களுக்குஞ் சொல்லுகிறார்கள். அப்படி பேசும் வேதாந்திகள் ஒழித்து விட்டதை வெளித்தோற்றத்தில் காட்டவில்லை.

ஒரு வேட்டியைக் குளிருக்குப் போர்வையாக உபயோகித்தால்கூட அதைப் பத்திரப்படுத்த எண்ணம் உண்டாகும். ஆகையால் அவர்களால் அது முடியாதென்பது திண்ணம்.

அதைப் போக்கடிக்கவே இக்குறளின் மூலமாய் வெளிப்படுத்தியி ருக்கிறார். பரமார்த்திக லௌகீகங்களில் பிரத்தியட்சமாகப் பொரு ளைப் பார்க்கவே நேத்திரம் ஏற்பட்டும் மறைவாக உள்ள பொருள் களைப் பார்ப்பதற்கு முடியாதிருப்பதற்குக் காரணம் பந்தித்துக் கொண் டிருக்கும் இருட்டேயாகும். அதை யொழிக்க வேண்டியதே.

மாசற்ற கொள்கை மதிபோலத்தான் றோன்றும்
ஈசனருள் பெற்றக் கால்.

கருத்துரை : சிவனருளை ஒருவன் அடைந்தால் குற்றமில்லாத அடைய வேண்டிய பொருளானது சந்திரகலையைப் போலவே அந்தப் பொருள் காணப்படும்.

விளக்கவுரை : சிவகலையை யறியாவிட்டால் அறிவாகிய பிரணவந் தோன்றாது. அறிவு தோன்றாவிட்டால் சிவ கலையை அறிய முடி யாது. இந்த இரண்டையும் அறியாவிட்டால் மனதை அடக்கமுடியாது.

வாசிட்டக்காரர்

இனைய மூன்றுஞ் சமமாக வியற்றா ரெம்மட்டம் மட்டு
மனைய பதமெய்தா வருடமாயிரங்கள் சென்றாலும்
வினையில் காலஞ் சமமாக மிகுநாளியற்றின் மிகப்பலிக்கு
நினைவி லொன்றொன்றா வியற்றில் நிலைகூடா
நிட்பலமாகும். என்றார்.

ஆவாவென் றோதியருள் பெற்றார்க் கல்லாது
தாவாதோ ஞான வொளி.

கருத்துரை : அகார சப்தத்தினாலே கூறப்படும் சிவகலையை வெளிப் பட வேண்டி அதற்கு வேண்டிய கர்மாவைச் செய்து அருட்கலையை அடைந்தவர்களுக்கு அறிவின் ஒளி தாவியெழும்பாதோ? (எழும்பும்) சிவ வொளியை வெளிப்படுத்தத் தெரியாதவர்க்கு எழும்பாது எனினுமாம்.

சிவகலையை வெளிப்படுத்துங் கர்மத்தைச் செய்கிறவர்களுக்கு ஞான ஒளி கிடைக்கும். கர்மத்தைச் செய்யாதவர்களுக்கு இல்லை என்பது கருத்து.

ஓவாச் சிவனருள் பெற்றா லுரையின்றித்
தாவாத வின்பந் தரும்.

கருத்துரை: மறைதலற்ற சிவ அருளை அடைந்தால் குறைவான சொல்லில்லாமல் வெப்பமற்ற (குளிர்ச்சியான) இன்பத்தைக் கொடுக் கும். மறையாமல் நின்று சிவன் அருளை வீசினால் குளிர்ந்த இன்பம் உண்டாய் விடும்.

விளக்கவுரை : திருமூலர்,

அருளது வென்ற வகலிட மொன்றும்
பொருளது வென்ற புகலிட மொன்றும்
மருளது நீங்க மனம் புகுந்தானைத்
தெருளுறும் பின்னைச் சிவகதி யாமே. என்றும்,

ஒளியு மிருளு மொருகாலுந் தீரா
வொளியுளோர்க் கன்றோ வொழியா தொழியு
மொளியிருள் கண்டகண் போல வேறாயுள்
ளொளியிரு ணீங்க வுயிர் சிவமாமே. என்றும்,

உண்டில்லை யென்னு முலகத் தியல்வது
பண்டில்லை யென்னும் பரங்கதி யுண்டுகொல்
கண்டில்லை மானிடர் கண்ட கருத்துறில்
விண்டில்லை யுள்ளே விளக்கொளி யாமே. என்றும்கூறினார்.

ஆ. நினைப்புறுதல்

கருத்துறப் பார்த்துக் கலங்காம லுள்ளத்
திருத்திச் சிவனை நினை.

கருத்துரை: பார்வையை உபயோகப்படுத்துவதில் அசைவை யொழித்து மனதோடு திருத்தமாய்ச் சேர்த்து அவைகளோடு உன் எண் ணத்தைப் பொருத்திச் சிவத்தை நினை.

பார்வை, மனம், சங்கற்பம், மூன்றையும் ஒருமித்துச் சிவத்தை நினை.

குண்டலியினுள்ளே குறித்தரனைச் சிந்தித்து
மண்டலங்கள் மேலாகப் பார்.

கருத்துரை: குண்டலியாகிய பிரணவத்தின் குறிப்பான மத்திய பாகத்தில் சிவத்தை (மேல்குறளில் சொல்லியபடி) நினைத்துக் கொண்டு சூரிய சந்திர அக்கினி மண்டலங்களை ஒன்றாக்கி அதன் மேல்பாகத்தில் உற்றுப் பார்.

விளக்கவுரை: வாசிட்டம்,

''ஆந்திர வேட்டனிகை யென்றோர் தனிநாடி நாடி கணூரணுகி நிற்கும், வாய்ந்த விசை விணையுடல் வட்டம் போனீர்ச் சுழிபோல் வட்டமேயா, யேய்ந்துள தானங்களெலா மெய்தலுறு மயனிடத்து மெறும் பின்பாலும், போந்துள பல்லுயிரிடத்து முடறோறுந் தோன்றியே பொருந்தி நிற்கும்'' என்பதினாலறிக.

ஓர்மின்கள் சிந்தையிலொன்றச் சிவன்றன்னைப்
பார்மின் பழம்பொருளே யாம்.

கருத்துரை: மூலவித்தாகிய பிந்து கலையைக் கொண்டு, மனதில் பொருந்தும் கர்மாவை திடத்துடன் செய்யுங்கள். (பிறகு) சிவத்தைப் பாருங்கள்.

விளக்கவுரை: திருமந்திரம்,

விந்துவு நாதமு மேவியுடன் கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடி
லந்தர வானத் தமுதம் வந்தூறிடு
மங்குதி மந்திர மாகுதி யாகுமே. என்றும்,

விந்துவு நாதமும் விளைய விளைந்தது
வந்தவிப் பல்லுயிர் மன்னுயிருக் கெலா
மந்தமு மாதியுமா மந்திரங்களும்
விந்து வடங்க விளையுஞ் சிவோகமே. என்றும்,

சாற்றிய விந்து சயமாகுஞ் சத்தியா
வேற்றிய மூலத்தழலை யெழ மூட்டி
நாற்றிசை யோடா நடுநாடி நாதத்தோ
டாற்றியமுத மருந்த விந்தாமே. என்றும்

மேலா நிலத்தெழு விந்துவு நாதமுங்
கோலான டத்திக் குறிவழியே சென்று
பாலா மமிர்துண்டு பற்றப் பற்றினான்
மாலானது மாளுமவ் விந்தே என்றுங் கூறியிருக்கிறார்.

சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையிலீசனை
மிக்க மலத்தை விடு.

கருத்துரை: (திருவடிகள் ஒன்றோடொன்று) லயப்படும் என்பதை (ஆசாரியனால் அறிந்து) அதில் தேர்ச்சியடைந்து மிகுந்த திருவடிகளிலுள்ள அழுக்கை சாலன தந்திரத்தால் நீக்கி மனதில் சிவத்தை நீ அடைக.

விளக்கவுரை: திருமூலர்,

சுழற்றிக் கொடுக்கவே சுத்திக் கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கு முபாய மறிவார்க்
கழற்றி தவிர்ந்துட லஞ்சன மாமே. என்றும்,

இதே கருத்தோடு 'மிக்க மலத்தை விடு' என்றார்.

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமேதிண் சித்தி முத்தியே. என்றும்,

கழலார் கமலத் திருவடியென்னு
நிழல்சேரப் பெற்றே னெடு மாலறியா
வழல்சேரு மங்கியுளாதிப் பிரானுங்
குழல்சேரு மின்னுயிர்க் கூடுங்குலைந்ததே. என்றும்,

ஆகையால் 'சிக்கு எனத் தேர்ந்து' என்றார்.

அறிமின்கள் சிந்தையி லாதாரத்தைச் சேர்ந்
துறுமின்க ளும்முளே யோர்ந்து.

கருத்துரை: ஆறு கமலங்களை மனதில் நீ அடைந்து அதில் பொருந்தி இருக்கின்ற மின்னல்களையும் உங்கள் சரீரத்துக்குள்ளே விளங்கும்படி செய்து கொண்டு (அங்குள்ள விசேஷங்களை) அறிந்து கொள்ளுங்கள். மின்னல்களோடு கூடிய ஆதாரத்தைப் பிரகாசிக்கச் செய்து உள்ளிருப்பதாகிய பல பொருள்களையு மறியுங்கள்.

நித்தம்நினைந்திரங்கிநின்மலனையொன்றுவிக்கில்
முற்றுமவ னொளியேயாம்.

கருத்துரை: தினந்தோறும் உன்னுடைய பஞ்சேந்திரிய சத்திகளை அன்போடு கொண்டு வந்து மறப்பற்றவனாகிய பிரணவ சொரூபியை (அவற்றுடன்) பொருத்தினால் ஓங்கார சொரூபத்தின் ஒளியானது பலப்பட்டு நிற்கும்

இந்திரிய சத்திகளைப் பிரணவ சொரூபத்தோடு பிணைக்கில், அவை அதிக பிரகாசத்தோடும் ஸ்திரமாக நின்று விடும்.

ஓசை யுணர்ந்தங்கே யுணர்வைப் பெறும்பரிசால்
ஈசன் கருத்தா யிரு.

கருத்துரை: அறிவை அடைய வேண்டிய பழக்கத்தினால் அநாகத ஸ்தானத்தில் சத்தத்தை அறிந்து சிவனுடைய எண்ணத்தையே கொண்டிரு. அறிவை அடையும் முயற்சியில் அநாகதத்வனியை எழுப்பிக் கொண்டு சிவ சிந்தையோடு நில்.

இராப்பகலன்றி யிருசுடர்ச் சிந்திக்கில்
பராபரத் தோடொன்றலு மாம்.

கருத்துரை: இரவும் பகலுஞ் செய்யுங் கர்மாக்களோடு அல்லாமல் சூரிய சந்திரர்களையும் சிந்தித்துக் கொண்டிருந்தால் பர அபர வித்தைகளை அடையக் கூடும்.

சூரிய சந்திரர்களால் செய்யுங் கர்மாவை, இரவும் பகலுமிடை விடாது செய்து கொண்டு வந்தால் பர அபர வித்தைகளை அடையலாம்.

மிக்க மனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்க சிவனுருவமாம்.

கருத்துரை: ஏகாக்கிர மனதில் அதிகமாக நினைப்பை (சிவன் பேரில் வைத்து) சிந்தனையோடு (கர்மாவைச் செய்தால்) வேண்டிய எல்லா தத்துவங்களும் ஒருமிக்கச் சிவனுருவம் வெளிப்படும்.

விளக்கவுரை : ''சிந்தனை புறஞ்செலா சிவோகம் பாவனை சந்தத முளுற்றிடில் சமாதி வந்துறும்'' என்றார் பெரியோர்.

வேண்டுவோர் வேண்டும் வகைதான்விரிந்தெங்கும்
காண்டற்கரிதாஞ் சிவம்.

கருத்துரை: ஞான அவாவுடையவர்கள் இச்சிக்கும் விதமாக பார்ப்ப தற்கரியதாகிய சிவமானது பத்து திசைகளிலும் பரவி நிற்கும். ஞான கர்மத்தை யுடையவர்கள் இச்சித்த படி சிவம் பரவி நிற்கும்.

இ. தெரிந்து தெளிதல்

தேறித்தெளிமின் சிவமென்றே யுள்ளுணர்வில்
கூறிய பல்குணமு மாம்.

கருத்துரை: உள்ளே தோன்றும் அறிவாகிய ஓங்காரத்தில் காண்பதில் சித்தி யடைந்து அதைச் சிவ சொருபமென்றே அறியுங்கள். அதனால், சான்றோர் நூல்களில் சொல்லப்பட்ட பலவகையான குணங்களையு மடையலாம். அறிவையறிந்து அதுவே சிவமென்று தெளிவை யடைந் தால், ஞானிக்கு வேண்டிய குணங்களை யடையலாம்.

விளக்கவுரை: வாசிட்டம்,

''தேக முதற்பிரிவுகளாய்ச் சிறியனவாம் பொருள்களி லத்தெய்வ முண்டோ
பாகமறப் பணதியற வடிமுடிவற் றுளணர்வே பரமபோத
மாகலினாலது தெய்வமருச் சித்தற்குரித்தாகு மறிவிலாத
மூகருக்கு வடிவமுதலருச்சனையே யியல்பென்று மொழியுமன்றே''
என்று கூறும்.

உண்டில்லையென்று முணர்வை யறிந்தக்கால்
கண்டில்லை யாகுஞ் சிவம்.

கருத்துரை : இருப்பது நிச்சயம் என்று அறிவை அறிந்தால் சிவமா னது பார்க்க முடியும் (அறிவு) கிடையாது (என்பவர்களுக்கு) சிவமுங் கிட்டாது.

அறிவு என்னும் பொருள் இருப்பதை அறிந்தவர்களுக்குக் கடவு ளைக் காண முடியும். அறிவு என்ற பொருளை அறியாதவர்களுக்குக் கடவுளைக் காண முடியாது.

ஒருவர்க்கொருவனே யாகுமுயிர்க் கெல்லாம்
ஒருவனே பல்குணமு மாம்,

கருத்துரை: ஒப்பற்ற ஞானிகளுக்குத் தனிச் சிவமானவனே அறிவு மய மாகவே யிருப்பான். ஞானமற்றவர்களுக்கெல்லாம் அந்தச் சிவமே வேறுபட்ட குணமுடையவனாவான்.

ஞான சாதனையுடையவர்களுக்குக் கடவுள் அறிவுமயமாகவும், ஞானமில்லாதவர்களுக்கு அவர்களுடைய குணமயமாகவும் இருப்பான்.

எல்லார்க்கு மொன்றே சிவமாவ தென்றுணர்ந்த
பல்லோர்க்கு முண்டோ பவம்.

கருத்துரை: ஜீவப் பிராணிகளுக்கெல்லாம் ஒன்றே சிவசொரூபமாவது என்று அறிந்த பல அறிவுடையோர்க்கு ஜெனன பயம் இருக்கின்றதோ (இல்லையெனினுமாம்)

ஜீவர்களுக்கெல்லாம் ஒரே தெய்வமென்று அறிந்தவர்களுக்கு ஜெனன பயம் இல்லை.

விளக்கவுரை: வாசிட்டம்,

எனைத்து ஞானநன் னூலினியம்பு மறுதியா தென்னி
லனைத்துங் கனவு காண்பதுவே யன்றோ வவிஞ்சையிங்கில்லை
வினைத்தின் கவலைசெய்கின்ற வெய்ய மாயை தானில்லை
தினைத்துன்பமு மற்றுப சாந்தத் திறமா மிதுவே திகழ்பிரமம். என்றும்,

சாந்தமாகிச் சிதம்பரமாய்ச் சமமாம் நொய்தாயான் மாவா
யேந்து சத்தியளவிலதா யிடும்பேர் பிரமமெனு மிதற்கே
சேர்ந்தபல நிச்சயம் பண்ணிச் சிலர்பாழென்பர் பரமேசன்
வாய்ந்த வுருவமென்பர் சிலர் மாவிஞ்ஞானமென்பர் சிலர்.

என்றும் சொல்லியிருப்பதை கவனிக்க.

ஆயுமிரவியு மொன்றே யனைத்துயிர்க்கும்
ஆயுங்கா லொன்றே சிவம்.

கருத்துரை: எல்லாப்பிராணிகளுக்கும் சூரியனும் ஒன்றேயாகும். அவ்விதமாகப் பார்க்கில் சிவம் ஒன்றேயாகும். இதை யோசியுங்கள்.

அகண்ட உலகத்துக்கு ஒரு சூரியன் இருப்பது போல அதிலுள்ள ஜீவர்களுக்கும் ஒரே சிவம். இதை யோசித்துப் பாருங்கள்.

ஓவாததொன்றே பலவாமுயிர்க் கெல்லாந்
தேவானதென்றே தெளி.

கருத்துரை: பலவாறான பிராணிகளுக்கெல்லாம் மறையாத பிரணவ மொன்றே தெய்வமானது என்று நிச்சயித்து அறிவாயாக பலவகை ஜீவர்களுக்கு ஓங்காரமே தெய்வாகும்

தியானபிந்து உபநிஷத்,

விளக்கவுரை : ஓங்காரத்தி னின்றும் வேதங்களும், ஸ்வரங்களும்' தாவர ஜங்கமங்களோடு கூடிய மூன்று லோக சமூகங்களும் உற்பவிக் கின்றன. அதிலுள்ள ஹிருஸ்வம் பாபத்தை நசிப்பிக்கின்றது. தீர்க்கம் சம்பத்தைத் தருகின்றது அர்த்த மாத்திரையோடு கூடிய பிரணவம் மோட்சத்தைத் தருகின்றது. என்றும்,

மைத்திராயணியோபநிஷத்,

பரமாத்மா, பிரணவ சொரூபமானவன். அவன்தன் சொரூபத்தை மூன்று வகையாக்கினான். மூன்றுக்கும் மூன்று மாத்திரையுண்டு. அம் மாத்திரைகளால் பிரபஞ்சமெல்லாம் பிரணவத்தில் ஓதப்புரோதமாய் இருக்கின்றன. என்றும்,

வசிட்ட ஸ்மிருதி,

எட்டு அங்கங்களும், நான்கு பாதங்களும், மூன்று ஸ்தானங்களும், ஐந்து தேவதைகளுங் கூடிய ஓங்காரத்தை எவன் அறியவில்லையோ அவன் பிராமணனாகான். என்றும்,

சூத சங்கிதை,

அத்தகு பிரணவந்தா னனைத்தினும் விசேடமான
வுத்தம மென்பராலவ்வோ மெனுமரக் கலத்தாற்
பித்தமார் பாசபந்தப் பெருங்கடல் கடக்கலாகும். என்றும்,

வள்ளலார்

காமமாதிகளை நீத்துக்கரண வாதனை கடந்து
நாமதுவெனுஞ் சம்பந்த ஞானமே ஞானமாகி
யோமொழிப் பொருளைத் தேறி யுணருணராமை போக்கி
யாமை போலைந்தடக்கி நிற்பதே யமலயோகம்.

என்றும் இயம்புகின்றனர்.

தம்மையறியாதார் தாமறிவோமென்பதென்
செம்மையா லீசன்றிறம்.

கருத்துரை: தங்களை யார் என்று அறியாதவர்கள் செவ்வையாக சிவத்தின் அபார சக்தியை தாங்கள் அறிவோமென்று சொல்லுவது என்ன காரணம்? தம்மை யறியாதவர்கள் சிவத்தைக் காணமுடியாது.

விளக்கவுரை: வாசிட்டம்,

கெடாத சிற்கண்ணா னீதான்கிளர்மே லவர்களுடனேதான்
விடாதிவ் வுலகேதியாமா ரென்றுறைக்க மெல்ல விசாரிப்பாய்
தடாதுட் பொருடேர் வித்தைக்கு விசாரந்தானே தனிஞானங்
கடாவி யறியத்தக்க ததிற்காணும் பாலின் மதுரம் போல்.

என்று கூறும்.

எல்லாவுலகத் திருந்தாலு மேத்துவர்கள்
நல்லுலக நாத னடி.

கருத்துரை: நல்லவர்களாகிய எல்லா சீவர்களும் உலக வாழ்வில் அழுந்தியிருந்தாலும் உலக கர்த்தாவாகிய பரமசிவனுடைய திருவடி களை வணங்குவார்கள்.

உலகத்திற்பட்ட உயிர்க்கெல்லா மீசன்
நிலவுபோ னிற்கும் நிறைந்து.

கருத்துரை: பூலோகத்தில் ஜெனித்த ஜீவர்களுக்கெல்லாம் சிவன் சந்திரிகையைப் போல் பூரணிமாய் நிற்பான்.

உலகத்தில் பிறந்த உயிர்களுக்கெல்லாம் பூரண சந்திரனைப் போல் சிவன் ஆனந்தத்தைக் கொடுப்பான்.

உலகத்தில் மன்னு முயிர்க்கெல்லா மீசன்
அலகிறந்த வாதியே யாம்.

கருத்துரை: பூலோகத்தில் இருக்கும் மூக்குடைந்து போன (தம்மைக் காத்துக் கொள்ளும் சக்தியற்ற) ஜீவர்களுக்கெல்லாம் பரம சிவன் முதன்மையானவனா யிருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறான்.

பரமசிவன் எல்லா ஜீவர்களையும் அவர்களுக்குள்ளிருந்தே அவர்களைக் காப்பாற்றுகிறான்.

ஈ. கலை ஞானம்

கலைகளின் அறிவு

சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடுருவில்
முத்திக்கு மூல மது.

கருத்துரை : சந்திர கலையைச் சூரியகலையினிடம் கலக்க வைத்தால் சிரேஷ்டமாம், அந்த சிரேஷ்டமானது மோட்சத்துக்கு வேர் ஆகும்.

வாசிட்டக்காரர்,

விராவிவரும் புறநின்று மபான னென்னும்
    வியன்மதிய மேனியெல்லாங் குளிரவிக்கும்
பிராணனெனுஞ் சூரியன்றான் கனலாயுள்ளே பேசியவிவ்
    வுடற்பாகம் பிறக்குப் பண்ணு
மிராதுழலும பானனெனு மதியினுட் சேரியற்
    கலைகள் பிராணனெனு மிரவியாலே
யுராவி விழுங்கப்பட்ட தெங்கே யந்தவுயர்
    பதமுற்றாற் பின்னையொரு நோயுண்டோ.

என்று கூறியிருக்கின்றார்.

அயனங்கொள் சந்திரனா லாதித்த னொன்றில்
நயனமா முத்திக்கு வீடு.

கருத்துரை : தேய்வும் வளர்ச்சியுமுள்ள சந்திர கலையில் சூரிய கலை சேர்ந்தால் மோட்சவீடு நேத்திரமாகும்.

சந்திரகலை, சூரிய கலையோடு சேருவதினால் மோட்ச வீடு நேத்திரமே என்பதாகும்

விளக்கவுரை : திருமூலர்,

அண்டங்களேழு மகண்டமு மாவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே.

என்று சொல்லியிருக்கிறார்.

அஞ்சாலு மாயாதறம் பொரு ளின்பமுந்
துஞ்சாதவர் துறக்கு மாறு.

கருத்துரை : ஆத்ம தரிசனமும், ஆத்மாவோடு இருக்கும் அழியாத செல்வங்களும், ஆத்ம ஆனந்தமும் பஞ்சேந்திரிய பஹிர்முக விவகாரங் களினால் நாசமடையாதபடி சாகாதவர்கள் (இந்திரிய சலனங்களை) வெறுத்தல் வழியாம்.

ஈசனோடொன்றி லிசையாப் பொருளில்லை
தேசவிளக் கொளியே யாம்.

கருத்துரை: சிவத்தோடு மனமுங் கண்ணும் பொருந்தினால் கூடி வராத பொருள்கள் கிடையாது. (அது) உலகத்தை விளக்கிக் காட்டும் பிரகாசமேயாம்.

சிவத்தோடு மனமுங் கண்ணும் பொருந்தினால் இகபர சாதனங் கள் கிடைக்காமற் போகா.

தாஞ்செய் வினையெல்லாந் தம்மையற வுணரில்
காஞ்சனமே யாகுங் கருத்து.

கருத்துரை: மனதினால் தன்னைச் சுத்தமாக(பூரணமாக) அறிவானே யாகில் தான் செய்கின்ற கர்மாக்களெல்லாம் பொன் போல் பிரகாசிக் கும்.

தன்னை அறிந்தால் தான் செய்யும் கர்மங்கள் பிரகாசிக்கும்.

கூடகமான குறியெழுத்தைத் தானறியில்
வீடகமாகும் விரைந்து.

கருத்துரை : மௌனமாய் மறைந்திருக்கும் ஞான கர்மத்துக்கு லட்சிய மாயிருக்கும் குறிப்பான பிரணவத்தை அதிதீவிரமாக அந்தகர்மத்தைச் செய்யுஞ் சாதகன் அறிந்து கொண்டால் மோட்ச வீடு தன் தேகமே யாகும்.

ஆசாரியனால் தொட்டுக் காட்டுந் தந்திரத்தால் அறிந்து கொள் ளும்படியான ஞான லட்சியமான ரகசியப் பொருளைக் கண்டால் தேகமே மோட்ச வீடாக விருக்கும்.

விளக்கவுரை : சொரூப சாரம்,

தேகா லயத்திற் சிதாகாச தேவதையை
வாகாய சாந்தி மலராலே - யேகாந்த
மந்திரத்தால் பூசைசெயு மாதவரை யாதரித்து
சந்ததம் வாழ்வார்க்கார் சரி. என்றும்,

வள்ளலார்,

அள்ளிக் கோவிலை என்னா வாசானையே
நள்ளிக் கோவிலை நத்திப் பெற்றாங் கொளிர்
யுள்ளக் கோவிலை யூன்றிப் பாராதவர்
கள்ளக் கோவிலைக் காமுறுவார்களே.

என்றும் கூறியிருக்கின்றன.

வீடகமாக விழைந்தொல்லை வேண்டுமேல்
கூடகத்திற் சோதியோ டொன்று.

கருத்துரை: தேகமே மோட்ச வீடாக ஆசைப்பட்டு சீக்கிரமாக விரும்பி னால் தேகத்தின் மேல் பாகமாகிய சிரசில் உள்ள பிரணவத்தின் சோதி யின் சொரூபத்தில் மனதோடு கூடிய பார்வையைப் பொருத்திவை.

தேகமே மோட்ச வீடாக எண்ணி அதில் கூடகமான பிரணவத்தின் சோதியோடு மனமும், பார்வையும், செலுத்திப் பார்த்தால் மோட்சம் லபித்து விடும்.

பூரித்து நின்ற சிவனைப் புணரவே
பாரித்ததாகுங் கருத்து.

கருத்துரை: அருட்பிரகாசத்தோடு நின்ற சிவ சொரூபத்தை மனஞ் சம்பந்தப்பட்ட பார்வையின் கலைகள் சூழும்படி செய்தால் சங்கற்பம் பலமுள்ளதாகும்.

சிவகலையோடு பார்வையின் கலையை சம்பந்தப்படுத்துவதினால் சங்கற்பத்தில் பலமாகிய சக்தி கலந்து விடும்.

நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமு மொத்துக்
கலை வழி நின்ற கலப்பை யறியின்
மலைவறி வாகும் வழியிது வாமே.

என்று திருமந்திரம் கூறும்.

இரேசக மாற்றி யிடையறாதே நிற்கில்
பூரிப்ப துள்ளே சிவம்.

கருத்துரை : இரேசக பென்னுந் தந்திரத்தைச் சூரிய சந்திரர்களால் மாறி மாறிச் செய்து, உந்திக்கமலத்தில் நீங்காமல் நின்றால் பிரணவ

மத்தியில் பரமசிவன் அருளை வீசுவான். சூரிய பேதினி, சந்திரபேதினி யைச் செய்து பிரணவ மத்தியில் பார்வையை நிறுத்தினால் சிவன் அருளோடு பிரகாசிப்பான். (இரேசகமென்பது வெளி வாயுவை மூக்கின் மூலமாய் இழுப்பதென்ற கொள்கையல்ல. அதற்குப் பயனில்லை,)

தாயுமானவரும்,

துருத்தி யெனும் படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யுருக்கி லென்னாஞ் சிவயோகமெனுங்
குருத்தை யறிந்து முகமாறுடைக் குருநாதன் சொன்ன
கருத்தை மனத்திலிருத்துங் கண்டீர் முத்திகைகண்டதுவே.

என்றும்,

திருமூலரும்,

ஆதாரயோகத் ததிதே வொடுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி யீரெண் கலை செல்ல மீதொளி
யோதாவ சிந்தமி தானந்த யோகமே.

என்றும் இயம்புகின்றனர்.

சிந்தையில் நின்ற நிலைவிசும்பிற் சாக்கிரமாம்
சந்திரனிற் றோன்று முணர்வு.

கருத்துரை: மனதின் உதவியைப் பெற்று சந்திர கலையினால் வெளிப் படும் அறிவாகிய ஓங்காரமானது நிற்கின்ற நிலையிலிருந்து ஆகாயத் தில் செலுத்தினால்) சாக்கிராவஸ்தை போல் தோன்றும்.

சந்திர கலையால் உருவாக்கப்பட்ட பிரணவத்தை ஆகாயத்தில் செலுத்தினால் பிரத்தியட்சமாக விளங்கும்.

வண்ணா னொலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினா
லண்ணாந்து பார்க்க வழுக்கற்ற வாறே. என்று திருமூலரும்,

குணங்குடி மஸ்தான் ஆனந்த களிப்பிலும்,

விண்ணுக்குள் வெளியிருள் மாற்றி, அதில்
வேதாந்த மூல விளக்கினை யேற்றிக்
கண்ணுக்குள் மணியாகத் தோற்றி, வருங்
காரணமான கடவுளைப் போற்றி
இரக்கத் துணிந்து கொண்டேனே.

என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

௨. உருவொன்றி நிற்றல்

எள்ளகத் தெண்ணெ யிருந்ததனை யொக்குமே
உள்ளகத் தீச னொளி.

கருத்துரை: எள்ளுக்குள் எள் நெய்யானது கலந்து இருப்பதாகும். அது போலவே சரீரத்துக்குள்ளிருக்கும் பிரணவத்தில் சிவனுடைய ஒளியும் இருக்கின்றது.

சரீரத்திற்குள் சிவவொளி கலந்திருப்பது எள்ளில் எண்ணெய் இருப்பது போல்தான்.

மஸ்தான்,

நாடாத பேர்கள் பயம்பயம் பயமென்ன
நம்பிய பேர்கள் ஜெயம் ஜெயம் ஜெயமென்ன
தேடிய பேர்கள் நயம் நயம் நயமென்ன
திக்குத் திசைகளெங்கு மிக்கவொளி பரப்பி
ஒக்க வுலக மொரு கைக்குள் ளடங்கும். என்று கூறுகிறார்.

பாலின் கணெய்போற் பரந்தெங்கு நிற்குமே
நூலின் கணீச னுழைந்து.

கருத்துரை: பாலில் நெய் கலந்திருப்பது போல சாஸ்திரங்களில் சிவம் உள் நுழைந்து எந்தப் பாகங்களிலும் வியாபித்து இருக்கின்றது.

திருமூலர்,

பண்டிதராவர் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறிவா ரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டு பாடையு
மண்ட முதலாயரன் சொன்ன வாறே. என்றும்,

அண்ணலருளா லருளுஞ் சிவாகம
மெண்ணிலி கோடி தொகுத் திடுமாயினு
மண்ண லறைந்தவறி வறியாவிடி
லெண்ணிலி கோடியுநீர் மேலெழுத்தே.

என்றும் கூறியிருக்கிறார்.

கரும்பினிற் கட்டியுங் காய்பாலி னெய்யும்
இரும்புண்ட நீரு மியல்பு.

கருத்துரை: கரும்பு கோலில் கற்கண்டு கட்டி உண்டாவது போலவும் காய்ச்சின பாலில் நெய்யானது, ஆடையாக வெளிப்பட்டு நிற்பது போலவும், நெருப்பில் காய்ந்த இரும்பானது கிரகித்துக் கொண்ட நீரைப் போலவும் உலக வழக்காகும்.

நூல்களில் வியாபித்திருக்கும் சிவனை யறியும் மாந்தர்களை உத்தம, மத்திம, அதமர்களாகப் பிரித்திருக்கின்றார்கள். உத்தம ஞானிகள் நூல்களை வாசித்து அதிலுள்ளவைகளைப் பிரித்து, சாரத்தை எடுத்துப் பக்குவப்படுத்தி, ஆத்ம இன்பத்திற்கு உபயோகித்துக் கொண்டு, அசத்தை எறிந்து விடுவார்கள். அவர்களைக் குறித்து, ''கரும்பினிற்கட்டியும்' என்றார்.

மத்திமர்களாகிய கல்வி ஞானிகள், நூலில் உள்ள விஷயங்களைப் பிரித்து, அதன் சாரத்தைக் கொஞ்ச மளவாக உபயோகித்துக் கொண்டு நூலையும் பத்திரப்படுத்தி வைப்பார்கள். சாரத்தைப் பிரித்து விட்ட பிறகு மிகுதியுள்ள வரையில் நீக்க வேண்டியதையும் கிரகித்துக் கொள் வார்கள். அசத்தாக நின்ற தயிரையும் உபயோகிக்கிறார்கள். அதனால் 'காய் பாலில் நெய்' என்றார்.

அதமர்கள், நூலையே அறியாதவர்கள். அறிய ஆரம்பித்தாலும் சாரத்தைக் கிரகிக்க முடிகிறதில்லை. அவர்களைக் குறித்தே வேக் காட்டிலுள்ள இரும்பானது, நீரை கிரகித்துக் கொண்டு பிரகாசமுள்ள நிறத்தையும் நீக்கிக் கொள்வதால் 'இரும்புண்ட நீர்' என்றார்.

பழத்தினிரதம்போற் பரந்தெங்கு நிற்கு
மழுத்தினா லீச னிலை.

கருத்துரை: பக்குவ திசையை யடைந்த பழத்தினுடைய சாரத்தைப் போல சிவத்தினிலையை பார்வையையும் மனதையும் ஒன்றாக்கி ஊடுருவப் பார்த்தால் நான்கு திக்கிலும் பரவி நிலைக்கும். (சிவன் வெளிப்படும் என்பதாகும்).

தனுவொடு தோன்றுமே தானெல்லாமாகி
யணுவதுவாய் நிற்குமது.

கருத்துரை: தானே தேகத்துடன் உள்ளும் புறம்புமாயுள்ள எல்லாப் பொருள்களிலும் வியாபித்து வெளிப்படும். அந்த சிவமானது அணு சொரூபமாய் நின்றிருக்கும். சிவமானது ஒவ்வொரு சரீரத்திலுள்ள உள்ளும் புறமுமான பொருள்களில் வியாபித்து நேத்திரத்தில் அணு சொரூபமாய் நிற்கும்.

வாசிட்டம்—தேவபூசை கதை

என்னதுடலிற்சிற்கதிரா யிலங்குதெய்வ நானென்னை
யுன்னு மனங்கண்வாக்குக்களுடைய சத்தித்திரளெல்லாம்
பின்ன மின்றி நாயகனைப் பிரியாமகளிர் போனாளுந்
துன்னு மென்றேய நவரதந்தொடர் பாவனைசெய்திடல்
வேண்டும்.

திருமந்திரத்தில்,

அணுவி லணுவினை யாதிப் பிரானை
யணுவி லணுவினை யாயிரங்கூறிட்
டணுவிலணு வையணுக வல்லார்க்
கணுவி லணுவையணு கலுமாமே. என்றும்,

படர்கொண்ட வாலதின் வித்ததுபோலச்
சுடர்கொண் டணுவினைத் தூவழி செய்ய
விடர்கொண்ட பாச விருளற வோட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே. என்றும்,

அணுவு ளவனு மவனு ளணுவுங்
கணுவுற நின்ற கலப்பதுணரா
ரிணையிலியீசனவ னெங்குமாகித்
தணிவர நின்றான் சராசரந்தானே.
என்றும் இயம்பப் பெறுகிறது.

வித்து முளைபோல் விரிந்தெங்குநிற்குமே
ஒத்துளே நிற்குமுணர்வு.

கருத்துரை: சூரிய சந்திர கலைகள் கூடி சரீரத்திற்குள் நிற்கின்ற அறிவாகிய பிரணவ சொருபமானது வித்திலிருந்துண்டாகும் முளையைப் போல் உண்டாகி அகன்று நான்கு திசைகளிலும் நின்றுவிடும்.

அச்ச மாங்கார மகத்தடக்கி னாற்பின்னை
நிச்சயமா மீசனிலை.

கருத்துரை: பயம் என்னும் கீழ் நோக்குஞ் சத்தியையும், ஆங்கார மென்னும் மேல் நோக்குஞ் சத்தியையும், பிரணவ மத்தியிலுள்ள அக்கினியில் செலுத்தித் தகித்து விட்டால் பிறகு சிவனிருப்பிடம் நிச்சய மாகப் பிரகாசிக்கும். (சிவ நிலை விசிதமாக வெளிப்படும்)

மோட்டினீர் நாற்ற முளைமுட்டை போலுமே
விட்டுளே நிற்கு மியல்பு.

கருத்துரை: சரீரத்திற்குள்ளே சிவமிருக்கும் இயற்கையானது உயர் வான இடத்திலிருக்கும் ஜலம் வாசனை வித்திலிருந்துண்டாகும் முளை கோழி முட்டை இவைகளைப் போவே இருக்கும்.

விளக்கவுரை: உயர்ந்த இடத்திலிருக்கும் ஜலமானது கீழ் அதிக வேகமாயும், பூரணமாயும் இறங்குவது போல, பக்குவம் நேரிடுங் காலத்தில் வேகமாயும் ஆனந்தத்துடனும் சிவம் வெளிப்படும்.

வாசனையானது செடியிலுள்ள புஷ்பத்திலிருந்து எழுப்பி காற்றி னால் பரவி நிற்றல்போல் சிவமானது பிராணாபான வாயுக்களின் கூட் டுறவாலாகிய வேகத்தினால் பிராணன், பார்வை, மனம் இவைகள் அசைவற்ற நிலையிலிருக்குஞ் சமயம் தன் கலையைப் பரப்பிவிடும்.

முளை - மண்ணில் ஜல சம்பந்தப்பட்டு வித்தானது இரண்டு பாக மாக விரிந்து, அதின் மத்தியிலிருந்து சத்தாகிய முளையை வெளிப்படுத் துவது போல், சிவமானது, சேர்ந்திருக்கும் சூரிய சந்திர கலைகளைப் பிருதிவி சத்தியின் சம்பந்தத்தால் கலைகள் பிளவுபட்டு மத்தியில் ஒளி யோடு வெளிப்படும்.

முட்டையானது, நாதபிந்துக்களைப் பத்திரப் படுந்திக் கொண்டு, தன்னை வெளிப்படுத்திய பெட்டைக் கோழியினாலேயே, அவயங் காக்கப் பெற்று அதன் உஷ்ணத்தால் உருவாகி, வெளிப்படுவதுபோல், சூக்கும நாதபிந்து கலைகள் மேலுங் கீழுமாகயிருப்பதைச் சிவனருளா லேயே கூட்டப்பட்டு அவனே வெளிப்படுவதாலும், இந்த நான்கிலும் சிவன் இருந்து வெளிப்படும் வழியைக் காட்டி இருக்கின்றார்.

நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனாய் நிற்கும்
அனைத்து யிர்க்குந் தானாமவன்.

கருத்துரை: எல்லா ஜீவர்களுக்கும் தானாக நிற்கும் பரமசிவன் தன்னை அசைவற்ற நிலையிலிருந்து சிந்திப்பவர்களுக்கு மனதிற்குள் மறப்பற்று பிரகாசமுடையவனாய் நிற்பான். (ஜீவ கோடிகளுக்குளெங் கும் வியாபித்திருக்கும் சிவன் சிந்திப்பவர்களிடம் தங்கியிருப்பான்).

ஓசையினுள்ளே யுதிக்கின்ற தொறுண்டு
வாசமலர் நாற்றம்போல் வந்து.

கருத்துரை: புஷ்பத்தில் வாசனை கலந்திருப்பது போல் சத்தத்தி னுள்ளே வந்து சேர்ந்து வெளிப்படுகின்ற வாசனைப் பொருளாகிய சிவம் ஒப்பற்றதாய் இருக்கின்றது. (மலரிலிருந்து வாசனை வெளிப்படு வதுபோல் சத்தத்திலிருந்து சிவம் வெளிப்படும்.)

ஊ. முத்தி காண்டல்

மனத்தோடுறுபுத்தி யாங்காரஞ் சித்தம்
அனைத்தினு மில்லை யது.

கருத்துரை: மனதினொடு பொருந்தும் அறிவு ஆங்காரம் சித்தம் என்னும் இந்த நான்கு அந்தக்கரணங்களிலும் முத்தியானது கிடை யாது.

(அந்தக் கரணங்களிலும் முத்தி கிடையாது.)

வாக்குங்கருத்து மயங்குஞ் சமயங்கள்
ஆக்கிய நூலினு மில்.

கருத்துரை: வாக்கின் வல்லமையாலும் எண்ணங்களைக் கொண்டும் ஐயந்திரிபு நீங்காத சமயங்களில் உள்ளவர்களால் உண்டாக்கப்பட்ட நூல்களாலும் முத்தி கிடையாது. (வாக்கு வல்லமை யுடையோராலும், மனோராஜ்ய முள்ளவர்களாலும், ஐயந்திரிபு நீங்காது மயங்கிக் கொண்டிருக்கும் மதத்தை யுடையோராலும் எழுதப் பட்ட நூல்களால் முத்தி கிடையாது.)

உருவமொன்றில்லை யுணர்வில்லை யோதும்
அருவமுந் தானதுவே யாம்.

கருத்துரை: (முத்தி என்பதற்கு) ரூபங் கிடையாது. அறியுந் தன்மை யும் கிடையாது. சொல்லப்படுகின்ற ரூபமில்லாததும் அந்த முத்தி மேற்சொன்னதைப் போலவே இருக்கும். உருவம், அருவம், உணர்வு இவைகள் முத்திக்குக் கிடையா. முத்தி என்பது இராப்பகலற்ற இடமே யாகும். அந்த இடத்தை அறிந்தவர்களுக்கே இந்தக் குறளின் தாற் பரியம் விளங்கும்.

தனக்கோ ருருவில்லை தானெங்குமாகி
மனத்தகமாய் நிற்கு மது.

கருத்துரை: அந்த முத்திக்கு ஒரு ரூபமில்லை சரீர முழுதும் பரவி மன முதிக்கு மிடத்தை அடைந்து முத்தி என்பது நிலை நிற்கும். (ரூபமற்ற முத்தியானது சரீரத்தில் பரவிமனமுதிக்கு மிடத்தைஅடைந்திருக்கிறது)

பெண்ணா ணலியென்னும் பேரொன் றிலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு.

கருத்துரை: பெண், ஆண், அலி என்று சொல்லும்படியான ஒரு நாமமும் இல்லாததாகி ஆகாய சொரூபமாய் ஆச்சரியப்படும்படி நின்றிருக்கும். (முத்தியானது நாமரூபமற்று ஆகாய சொரூபமாய் ஆச்சரியப்படும்படி நிற்கும்).

அனைத்துருவ மாய வறிவை யகலில்
தினைத்துணையு மில்லை சிவம்.

கருத்துரை: எல்லா ரூபங்களாய் வியாபித்திருக்கும் பிரணவத்தை அறியாவிட்டால் (நீங்குதல்) தினையளவும் பரம சிவத்தை காணமுடியாது. (அறிவை யறியாவிட்டால் சிவனைக் காண முடியாது.

துணிமுகத்துக் காதியாத் துன்னறிவின்றி
அணிதா ரிரண்டு விரல்.

கருத்துரை: ஒளியுள்ள வதனத்துக்கு முதற் காரணமாய் பொருந்திய அறிவு தவிர மோதிரத்தை யணியும் விரலும் அங்குசமாகிய சுண்டு விரலும் ஆக இரண்டு விரல்களுண்டு (சின் முத்திரையைக் காட்டிய விஷயமே; ஆனால் கட்டை விரலை ஆள்காட்டி விரலோடு சப்பந்தித்து மற்ற மூன்றையும் நீட்டிக் காட்டும் தந்திரத்தைப் போன்றதேயாகும். இது குரு முகாந்திரமாய் அறியத்தக்கது.

மயிர்முனையிற்பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டங் காதி நிலை.

கருத்துரை: சந்தேகமான ரோமத்தினுடைய முனையின் அர்த்தபாகமளவு அசைவற்ற மனமும் அறிவும் இருந்தால் அந்த இடத்தில் (சந்தேகமில்லாமல்) சிவத்தின் இடம் இருக்கும்.

தற்பரமான சதாசிவத்தோ டொன்றில்
உற்றறி வில்லை யுயிர்க்கு.

கருத்துரை: ஜீவர்களுக்கு அந்த பரமாகிய சிவத்தோடு மனமும் பார்வையும் சேர்ந்து பொருந்தினால் அவர்களிடத்தில் பொருந்தியுள்ள மனதின் விரிவாகிய உணர்ச்சி ஒழிந்துபோம்.

உறக்க முணர்வு பசிகெடப்பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு.

கருத்துரை: ஜெனித்தவனிடமுள்ள நித்திரை உணர்ச்சி பசி இவை மூன்றையும் ஒழித்தால் மறுபடியும் ஜெனிக்க வேண்டாம். (சாகாமலிருக்கலாம்)

ஏ. உருபாதீதம்

கருவின்றி வீடாங் கருத்துற வேண்டில்
உருவின்றி நிற்கு முணர்வு.

கருத்துரை: ரூபமற்று தேகத்தில் நிற்கும்படியான தேகத்தைத் தம் வயப்படுத்தியிருக்கும் மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்னும் இவைகள், இல்லாமலும் எண்ணமானது சலனமற்றுப் பொருந்த வேண்டிக் கொண்டால் (சாதனையில் முடிந்துக் கொண்டால்) அறிவே மோட்ச வீடாகும்.

பிறத்தலொன்றின்றிப் பிறவாமை வேண்டில்
அறுத்துருவ மாற்றி யிரு.

கருத்துரை: உற்பவித்த அந்தக்கரணங்கள் ஒன்றுமில்லாமலும் மறுபடி உற்பத்தியாகமலும் செய்யவேண்டுமானால் அதற்கு மூலகாரணமான உருவத்தோடு கூடிய சத்திகளை அவை தங்கியிருக்கு மிடங்களிலிருந்து பேதித்து பிரணவத்தில் சேர்த்து அல்லது அது உதித்திருக்கு மிடத்திலிருந்து எதிரான இடத்துக்கு மாற்றி அசைவற்று இரு.

(ஞான விரோதமான தத்துவங்களை நீக்கியும் மறுபடி உற்பவிக்க வொட்டாமல் செய்வதற்கு அவற்றின் சத்திகளின் உருவத்தைக் கண்டு அவைகளின் இடத்திலிருந்து வேறுபடுத்தி விட வேண்டும்.

உருவங்க ளெல்லா மறுத்தற மாற்றில்
கருவேது மில்லை தனக்கு.

கருத்துரை: அஞ்ஞான குணங்களுக்கு மூல காரணமான ரூபங்களையெல்லாம் இடத்திலிருந்து பெயர்த்து, குணங்கள் எழாமலிருக்கும்படி

யான இடத்துக்குப் பூரணமாக மாற்றினால் சாதகனுக்கு அஞ்ஞான தத்துவங்களால் எற்படும் குணங்கள் ஒழியும்.
(குணங்களின் சூட்சும சத்திகளை மாற்றிவிட்டால் குணங்களொழியும்.)

கறுப்புவெளுப்பு சிவப்புறுபொன்பச்சை
யறுத்துருவ மாற்றி யிரு.

கருத்துரை: கறுப்பு வர்ணமான வாயு சத்தியையும், வெளுப்பு நிற மான ஆகாய சத்தியையும் பொருந்தியுள்ள அக்கினி சத்தியையும், பொன்னிறமான பூமி சத்தியையையும், பச்சை நிறமான ஜலசத்தியை யும் இருப்பிடத்திலிருந்து பெயர்த்து பூரணமாக பிரணவத்தில் சேர்த்து அசைவற்றிரு.

திருமந்திரம்,

அஞ்சுள சிங்க மடவியில் வாழ்வன
வஞ்சும்போய் மேய்ந்துதம் மஞ்சகமேபுகு
மஞ்சி னுகிறு மெயிறு மறுத்திட்டா
லெஞ்சா திறைவனை யெய்தலுமாமே. என்றும்,

பாய்ந்தன பூதங்க ளைந்தும் படரொளி
சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு
வாய்ந்துகொ ளானந்தமென்னு மருள் செய்யில்
வேய்ந்துகொண் மேலை விதியது தானே. என்றுங் கூறும்.

அனைத்துருவ மெல்லா மறக்கெடுத்து நின்றால்
பினைப்பிறப் பில்லையாம் வீடு.

கருத்துரை: தேகத்தின் கண்ணுள்ள எல்லா ஞான விரோத தத்துவங் களின் மூல சத்திகளாகிய உருவங்களையும் சுத்தமாகப் பேதித்து அசை வற்ற நிலையில் நின்றால் பிற்பாடு ஒன்றும் உதிக்காது. (இந்திரிய விஷயங்களுக்கும் காமக்குரோதாதிகளுக்கும் மூலகாரணமான உருவங் களைப் பூரணமாக மாற்றி நாசஞ் செய்தால் மறுபடி உதிக்கா.)

நினைப்புமறப்பற்று நிராகரித்து நின்றால்
தனக்கொன்று மில்லை பிறப்பு.

கருத்துரை: மனனத்தையும், மறதியையும், இல்லாமல் செய்து உதித்த உருவங்களை உதறி நீக்கி சாதகன் நின்றால் அவனுக்கொரு கெடுதலு மில்லை. ஞான மார்க்கத்தை அடைய முடியும்.

குறித்துருவ மெல்லாங் குறைவின்றி மாற்றில்
மறித்துப் பிறப்பில்லை வீடு.

கருத்துரை: சரீரத்திலுள்ள ரூபங்களையெல்லாம் மிகுதியாய் நிற்காமல் குறிப்பாகப் பார்த்து வேறு இடத்துக்கு மாற்றிவிட்டால் மறுபடி உண்டாவது கிடையாது.

(உதித்திருக்கும் ரூபங்களைக் கண்ணால் பார்த்து மாற்றிவிட்டால் மறுபடியும் உதிக்காது).

பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு.

கருத்துரை: உலகத்தின் வித்தியாசங்களைப் பேசும் உணர்ச்சியை யுண்டாக்குஞ் சலசத்தியைப் பேதித்து அறிவோடு சேர்த்து நிற்பதே மோட்சமாகும். (வாக்கின் உணர்ச்சியை எழுப்பும் சல சத்தியை எழுப்பி அறிவோடு சேர்ப்பதே மோட்ச பதியாகும்.)

பிறப்பறுக்க வீடாம் பேருவமை யின்றி
அறுத்துருவ மாற்றி யிரு.

கருத்துரை: உதித்திருக்கும் அஞ்ஞான குணங்களை நாசஞ்செய்ய குணங்களின் மூல சத்தியாகிய உருவத்தை இருக்குமிடத்திலிருந்து வேறுபடுத்தி பெரிய உவமையற்ற பிரணவ வீட்டில் சேர்த்து அசைவற்றிரு.

ஓசை யுணர்வோடுயிர்ப் பின்மை யற்றக்கால்
பேசவும் வேண்டா பிறப்பு.

கருத்துரை: சத்தம் உணர்ச்சியுடன் பிராணாபான வாயுக்களின் மூலப் பொருளாகிய தத்துவ ரூபங்களின் கிளர்ச்சியற்ற தன்மை ஒழிந்தால்' செனனத்தைப் பற்றி வேறுவித யோசனையை யோசிக்க வேண்டியதில்லை.

ஏ. பிறப்பறுதல்

தன்னையறிவு மறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு.

கருத்துரை: தான் இன்னானென்று அறிவதற்குக் கருவியாயிருக்கின்ற, அறிவாகிய ஓங்கார சொரூபத்தை (ஒருவன்) அடைந்தால் பிற்பாடு ஜெனனதுக்கம் கிடையாது. முடிவான இடமும் கிடைத்துவிடும்.

விளக்கவுரை: அறிவை அலட்சியஞ் செய்வதைப்பற்றி வாசிட்டக்காரர் சொல்லியிருப்பதைக் கவனிக்க.

பற்றத்தகுவாக்கியப் பொருளைப்பயிறன் னெஞ்சாற்பாவித்தோர்க்
குற்றுப்புகல் சொற்றிரளுள்ளே யொடுங்கும் வெந்தநில நீர்போற்
கற்றுப்பரமப் பொருணோக்கார் கண்ணாமறிவைக் கண்டறியார்
வற்றத்திரணம்போல் வாளாதிரிவர் மனச்செய்கையி லெவரும்.

(என்றும்)

ஆதலினாலிதொன்றுஞ் செய்வதல்ல வடுத்துளவிச் சகமில்லை
யறிவுமட்டு, மேதகுசங்கற்பிதமேவேதா வாகுமெய்யாக வறிவன்றி
வேறொன்றில்லைச் சேதனமாத்திரத்துதித்த சிருட்டியந்தச்
சேதனமேவடி
வென்று செப்பலாகு மோதியசெய்வோன் புசிப்போனிரண்டு
மல்லவுறுப
வந்திர் பிரம்மமேயுள்ளவெல்லாம். என்றார்.

அறம்பாவ மாயு மறிவுதனைக் கண்டால்
பிறந்துழல வேண்டா பெயர்ந்து

கருத்துரை: புண்ணிய பாவங்களை இன்ன தன்மையுடையதென்று ஆராய்ந்து அறியும் பிரணவத்தை பார்த்தால் அதை விட்டு நீங்கி ஜெனனத்தை எடுத்து உலக துக்கத்தில் கஷ்டப்பட வேண்டியதில்லை.

சிவனுருவந்தானாய்ச் செறிந்தடங்கி நிற்கில்
பவநாச மாகும் பரிந்து.

கருத்துரை: சிவ சொரூபமானது (ஞானகர்மாவின் பலத்தினால்) தானாகவே (பிரணவத்தில்) சேர்ந்து ஸ்திரமாக நின்றால் தேக அழி வானது சீவன் மீது உள்ள காருண்யத்தினால் ஒழியும். (ஓங்காரத்தில் சிவன் நிலைத்து விட்டால் தேக அழிவானது.நாசமாகும்.)

உறக்க முணர்வோடுயிர்ப்பின்மை யற்றால்
பிறப்பின்றி வீடாம் பரம்.

கருத்துரை: உதிப்பது இல்லாமல் நித்திரையும், உணர்ச்சியும், பிரா ணனின் அசைவும் இல்லாமலொழிந்தால் சிவன் வாழும் இடமாக தேக மிருக்கும்.

விளக்கவுரை: தூக்கம், மனனம், அசைவோடு கூடிய பிராணன் இம் மூன்றும், இலௌகீகத்திற்கு இன்றியமையாதவை.

தூக்கம் இல்லாவிட்டால் தேகம் சாந்தபதமடையாது. மனனம் இல்லாவிட்டால் பகுத்தறிவு இல்லாமல் போய் விடும். பிராணனின் அசைவற்றால் விவகாரத்தில் இந்திரியங்கள் செல்லாது.

(இது ஜீவ பாவம்)

தூங்காமற் தூங்குவது, மனனமற்ற மனம், அசைவற்ற பிராணன், இம்மூன்றும் ஞான மார்க்கத்திற்கு இன்றியமையாதவைகள்.

தூங்காமல் தூங்குவதினால், ஜாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் இந்த அவஸ்தைகளை அறியலாம்.

மனனமற்ற நிலையினால் அறிவு வியாபகமாகும் பிராணன் அசைவற்றால் சிவவொளியைக் கண்டு ஜீவனை பரத்தோடு சேர்க்கலாம். (இது அறிவு பாவம்)

நினைப்பு மறப்பு நெடுபசியு மற்றால்
அனைத்துலகும் வீடாமது.

கருத்துரை: சங்கல்பமும், யாவற்றையும் மறைத்துக் கொண்டிருக்குந் திரைகளும், எல்லாவற்றிலும் பெரியதாகிய பசியும் ஒழிந்தால் அதனாலேற்பட்ட பலனால் எல்லா உலகங்களுக்கும் உறைவிடமாக சரீரமாகும். (தேகத்தின் கண்ணுண்டாகும் சங்கல்பமும், யாவற்றையும் அறியவொட்டாது மறைக்கும் கிரந்தித்திரயங்களும், பசியும் ஒழிந்த விடத்து, எல்லா உலகுக்கும் தேகமானது உறைவிடமாகும்.)

விளக்கவுரை: உலக பாகம்	ஞான பாகம்
நினைப்பு:	
சங்கற்ப பலத்தினாற்றான் எண்ணிய கருமத்தை முடிக்கலாம்.	சங்கற்ப நாசத்தால் மனம் வலிவையடையும். பிந்து பலப்படும். ஞான கர்மத்துக்கு உதவி செய்யும்.
மறப்பு:	
மனம், வாக்கு, காயங்களாலுண்டாகும் உழைப்புக்கு ஆறுதல் செய்வதில் பேர் பெற்றது.	மறப்பற்றால்தான் 14உலகங்களையுந் தன்னையுமறியலாம்.
பசி:-	
பசியானது உணவுகளை உட்கொள்வதற்கு சமிக்கையாக விருப்பதோடு உண்ட உணவை ஜீரணித்து, அதைப்பக்குவஞ் செய்து, சுக்கிலம், நாதம், மலமாகப் பிரிக்கும். பசியின்மை நேரிட்டால் மேற் சொன்னவைகளுக்கு எதிரிடையை உண்டாக்கும்.	பசி யொழிந்தால் அமுதத் தன்மை உண்டாகின்றது. ஆத்ம பலம், தேகபலம் உண்டாகிறது. பஞ்சேந்திரியங்களை அக முக விவகாரத்தில் செலுத்தும் சூட்சும தத்துவங்களுக்கும், தூல தத்துவங்களுக்கும், பலத்தைக் கொடுக்க, அமிர்த ஊற்று சுரக்கும்.

உடம்பிரண்டுங் கெட்டாலுறுபயனொன்றுண்டு
திடம்படு மீசன் றிறம்.

கருத்துரை: தூல சூக்கும சரீரங்கள் வேறு வேறாக தோன்றாமல் ஒன்றாய் கலந்து விட்டால், அதனாலுண்டாகிய பிரயோசனம் ஒப்பற்றது இருக்கிறது. (அது) சிவத்தினுடைய அருளானது அதிகமாகும். (தூல, சூக்கும ஐக்கியமே காலனை வெல்வதாகும்)

தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு.

கருத்துரை: சரீரத்தில் தானாகிய அறிவைத் தெரிந்து கொண்டு அதனிடம் சேர்ந்து லயித்துத் தானென்று நினைக்கும் ஜீவபாவ மழிந்தால் பிறகு தத்துவ தோற்றங்கள் கிடையாது. (ஞான விரோத தத்துவங்கள் பூரணமாக ஒழியும்.)

மருளன்றி மாசறுக்கின் மாதூ வெளியாய்
இருளின்றி நிற்கு மிடம்.

கருத்துரை: பிரம்மத்தானத்தில் அச்சம் அல்லாமல் கிரந்தித்திரயங்களாதியாகவுள்ள குற்றங்களை ஒழித்தால் இருட்டில்லாமல் பெருமை பொருந்திய பரிசுத்தமான சிதாகாயமாய் (இரவு பகலற்றமிடம்) நிலைத்து விடும்.

விகாரங்கெட மாற்றி மெய்யுணர்வு கண்டால்
அகாரமாங் கண்டீ ரறிவு.

கருத்துரை: அகார பீஜத்தால் குறிக்கப்படும் சுக்கிலத்தை ஸ்திரீ போகத்தை வெறுக்குபடியாக அதன் கலையைப் பிரித்து வேறு ரூபமாக மாறும் படி செய்து சரீரத்திற்குள் தெளிவையடைந்தால் ஓங்கார சொருபத்தைக் கண்டவராகும். (பிரணவ சொரூபம் விளங்கும்)

விளக்கவுரை : திருமூலர்,

அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப்படாமற் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்க தலைவனு மாமே. என்றும்,

வீயமதாகிய விந்துவின் சத்தியால்
ஆயவகண்டமு மண்டமும் பாரிப்ப
காயவைம் பூதமுங்காரிய மாயையில்
ஆயிட விந்துவகம் புறமாகுமே. என்றும்,

அண்ணலுடலாகி யவ்வனல் விந்துவு
மண்ணிடை மாய்க்குமபிராணனாம் விந்துவுங்
கண்ணுங் கனலிடைக்கட்டி கலந்தெரித்து
உண்ணில மிர்தாகியோகிக் கறிவாமே. என்றும்

கூறுவதனாலுமறிக.

சிந்தை யாங்காரஞ் செறிபுல னற்றக்கால்
முந்தியே யாகுமாம் வீடு.

கருத்துரை: மனம் ஆங்காரம் பழகுகிற பஞ்சேந்திரியங்கள் இவைகளுக்கு பஹிர்முக விவகாரம் ஒழிந்தால் முதலிலேயே மோட்சமானது கிடைத்து விடும். (பஞ்சேந்திரியங்களின் பஹிர்முகச் செயல்களை நீங்கி இருந்தால் உடனே ஆத்ம ஞானத்தை யடையலாம்.)

ஐ. தூயவொளி காண்டல்

தோன்றிய தெல்லாந் தொடக்கறுத்துத் தூய
[வொளியாய்
தோன்றியக் காற்றூய வொளி.

கருத்துரை: உதித்து உருவாகி நிற்கும் தத்துவங்களையெல்லாம் அதன் சம்பந்தத்தை நீக்கி பரிசுத்தமான தத்துவாதிகளற்ற வெளிப்பிர தேசமாய் தோன்றும் பொழுது பரிசுத்தமாகிய ஆத்ம பிரகாசம் (உண்டாகும்.) (அஞ்ஞான தத்துவங்களின் துடர்ச்சி அற்று ஆகாயத்தை நிர்மலமாக்கிவிட்டால் ஆத்மவொளி பிரகாசிக்கும்.)

விளக்கவுரை : வாசிட்டம்,

அன்றியே யதுதனையுந் தீரநீக்கி யறிபொருளின்
முடிவான வறிவாற்றுன்னி, யென்றுமுப சாந்தனாய்ப்
பளிங்கு போலுள் ளொளிமேவிச் சீவனொருமித்து நிற்ப
னன்றுணர் சிற்சுகராகிப் பெரியோராகி ஞான பரராய்ப்
பரம நன்றாய்ப் பெற்றோர், நின்றசைவார் புறத்தின் மயிற்
பீலிபோல நிலை கலங்கார் மேருவைப் போனெஞ் சினுள்ளே
என்றும்,

திருமந்திரம்,

உண்டில்லை யென்னு முலகத்தியல்வது
பண்டில்லை யென்னும் பரங்கதியுண்டுகொல்
கண்டில்லை மானிடர்கண்ட கருத்துறில்
விண்டில்லை யுள்ளே விளக்கொளியாமே.

தெளிவாய தேசவிளக் கொளியைக் காணில்
வெளியாய வீடதுவே யாம்.

கருத்துரை: தேகத்தில் தெளிவுண்டாகும் படியாக உலகத்தை விளக்கிக் காட்டும்படியான தீபத்தைக் கண்டால் மறப்பில்லாமல் மேற்சொன்ன ஒளியே சிவவொளியாகும்.

புகவெளிதாகும் புவனங்க ளெட்டு
மகலொளிதா யிருளாகர விசும்
பகலொளி செய்ததுமத் தாமரையிலே
யிகலொளி செய்தெம் பிரானிருந் தானே. திருமந்திரம்

மின்போலுருவ விளக்கொளிபோல் மேற்காணில்
முன்போல மூலம் புகும்.

கருத்துரை: மின்னலைப் போலவும், தீபத்தைப் போலவும் வெளிப்பட்டு (சிரசுக்குமேல் பதினாறு அங்குலமளவில்) கண்டால் முன்னிருந்தது போல் பிரணவ மத்திய வீட்டில் (உந்திக் கமலத்தில்) திரும்பிவந்து நுழைந்து விடும். (மூலாக்கினியை எழுப்பி சிரசுக்கு மேல் கொண்டு வந்து நிறுத்தி அதன் மூலமாய் தேகம், தேசம் இவைகளைப் பார்த்து விட்டு நாபிக் கமலத்தில் சேர்த்து விட வேண்டும்.)

பளிங்கு வலம் புரிபானிகர்த்ததாகில்
துளங்கொளியாந் தூயநெறி.

கருத்துரை: பரிசுத்தமான வழியானது படிகத்தின் நிறத்தையும் வலம்புரிச்சங்கின் நிறத்தையும், பாலினிறத்தையும் ஒத்திருந்தால் (மேற்பாகத்தில்) அசைதலுடைய யாவற்றையும் விளக்கிக் காட்டும் ஆத்மவொளியாம்.

திருமந்திரம்,

ஏரொளியுள் ளெழுதாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவினாலெழு நாதமாம்

ஏரொளியக் கலையெங்கு நிறைந்தபின்
ஏரொளி சக்கரமன்னடு வன்னியே. என்றார்.

சங்கு நிறம்போற் றவளவொளி காணில்
அங்கையி னெல்லியே யாகும்.

கருத்துரை: சங்கின் நிறத்தைப் போன்ற வெள்ளையாகிய ஒளி கண்டால் அழகிய உள்ளங்கையில் நெல்லிக்கனியாகவே ஆய்விடும். (நெல்லிக்கனி ஆச்சாரியன் விளக்கிக் காட்ட விளங்கும்.)

துளங்கிய தூண்டா விளக்கொளி காணில்
விளங்கிய வீடாம் விரைந்து.

கருத்துரை: உச்சியில் அசைதலோடு கூடிய தூண்டப்படாத யாவற்றையும் விளக்கும் ஒளியைக் கண்டால் அதி சீக்கிரத்தில் யாவற்றையும் விளக்கிக் காட்டுவது சரீரமே யாகும்.

மின்மினி போன்ற விளக்காகத் தான்றோன்றில்
அன்னப் பறவையே யாம்.

கருத்துரை: மின்மினி பூச்சியைப் போல் தோன்றித் தோன்றி மறையும் படியான அந்த ஆத்ம ஒளியானது தோன்றினால் (அது) அம்ஸ பட்சியாகவே (சீவன்) ஆகும்.

ஆத்ம ஒளியை மேல்பாகத்தில் பார்த்துக் கொண்டிருந்த ஜீவனானது அம்ஸ பட்சியாக நிற்கும்.

உள்ளொளி தோன்றிலுணரிலருளொளி
அவ்வொளியாதி யொளி.

கருத்துரை: சரீரத்திற்குள் ளிருக்கும் ஒளியாகிய மூலாக்கினியானது வெளிப்பட்டு நிற்க அதை யுணர்வானே யாகில் அந்த ஒளியானது அருளைக் கொடுக்கும் ஒளியேயாகும்.

பரந்த விசும்பிற் பரந்த வொளிகாணில்
பரம் பரமேயாய வொளி.

கருத்துரை: அகன்ற ஆகாயத்தில் பரவிய ஒளியைப் பார்த்தால் (அந்த ஒளியானது) பரம், அபரம், இந்த இரண்டினாலேயே உண்டாகிய ஆத்ம ஒளியே யாகும்.

விளக்கவுரை: பரவித்தை: ஞான கர்மத்தைக் கொண்டு பரத்தை வெளிப்படுத்திப் பார்ப்பது.

அபரவித்தை: பத்தினியோடு கூடிய வாழ்க்கையின் மூலமாய் அறியும், தேகத்தை நாசமாக்காமல் தடுக்கும் வித்தை.

ஆதியொளியாகி யாள்வானுந் தானாகி
ஆதி யவனுருவுமாம்.

கருத்துரை: மூலாக்கினியின் ஒளியாகவும் (சீவர்களை) ஆள்பவனும் அவனேயாகி நின்ற சிவன் சாதகனுடைய உருவத்தைப் போல் நிற்பான்.

௭. சதாசிவம்

பத்துத்திசையும் பரந்த கடலுலகும்
ஒத்தெங்கும் நிற்குஞ் சிவம்.

கருத்துரை: பத்துத் திக்குகளும், அகன்ற கடலால் சூழப்பட்ட பூவுலகமும் எல்லாவிடத்திலும் அதில் கலந்து சிவமானது நிலைத்திருக்கும். உலகமெங்கும் உள்ள தூல சூக்குமங்களில் சிவம் வியாபித்து நிற்பதை இக்குறள் கூறுகின்றது.

விண்ணிறைந்து நின்றுவிளங்குஞ் சுடரொளிபோல்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.

கருத்துரை: ஆகாயத்தில் பூரணமாக நிலையாக நின்று விளக்கிக் காட்டும் சூரியனுடைய சுடரின் பிரகாசத்தைப் போல, சரீரத்தின் உள் பாகத்தில் பூரணமாக சிவகலையானது நிலைத்து நிற்கும்.
விளக்கவுரை: வாசிட்டம் மாவலி கதையில் மாவலிக்குச் சுக்கிரன் சொன்ன முடிவு:

''வருங்கற்பகவின் விரைந்தேக வந்தேன்பல சொல்லியும் பயனென். சுருங்கச் சொல்லும் பயன் கேளாய் தோன்றவிங்குள்ள துவுஞ்சித், தொருங்கப் புறத்துஞ்சித் தெல்லையுள்ளதுஞ்சித் தெல்லையற, நெருங்குற்றதுஞ் சித்துயான் சித்து நீசித்துலகநிறை சித்தே'' என்று கூறியிருக்கிறார்.

ஆகமுஞ் சீவனு மாசையுந் தானாகி
ஏகமாய் நிற்குஞ் சிவம்.

கருத்துரை: சரீரமும் தேஹியும் சரீரத்தையும், சீவனையும் சம்பந்தித்திருக்கும் பந்தமாகிய ஆசையும் அதுவேயாகி கலந்து பரம் இருக்கும்.

வாயுவாய் மன்னுயிராய் மற்றவற்றினுட் பொரு
ஆயுமிடந்தானே சிவம். [ளாய்

கருத்துரை: சரீரத்திலுள்ள தசவித வாயுக்களாயும், மனமாயும், பிராணமாயும் இன்னம் அவற்றினோடு கலந்திருக்கும் கலைகளாயும் ஆராய்ச்சியின் மூலமாய் ஏற்படும் பிரணவ வுச்சியில் சிவமிருக்கும். திருமூலர்,

உணர்வுமவனே யுயிருமவனே
புணருமவனே புலவியவனே
யிணருமவன்றன்னை யெண்ணலு மாகான்
றுணரின் மலர்க்கந்தம் துன்னி நின்றானே.

உண்ணின் றொளிருமுலவாம் பிராணனும்
விண்ணினின்றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின்றியங்கும் வாயுவுமாய் நிற்குங்
கண்ணின் றிலங்குங் கருத்தவன்றானே.

தாயுமானவர்,

அங்கிங்கெ னாதபடி எங்கும்பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோடிகளெலாந்
தன்தெய்வ மென்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல் பகலற நின்ற வெல்லையுளதெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம். என்கின்றனர்,

எண்ணிறந்த யோனிபலவாய்ப் பரந்தெங்கும்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.

கருத்துரை: கணக்கற்ற பிறவிகளில் பல மாதிரியாய் எங்கும் பரவி சரீரத்திற்குள் நிறைந்து சிவமானது இருக்கும். (ஜீவர்கள்தோறும் பரவி சரீரத்திற்குள் நிறைந்து சிவமிருக்கும்.

ஒன்றேதானூழி முதலாகிப் பல்லுயிர்க்கும்
ஒன்றாகி நிற்குஞ் சிவம்.

கருத்துரை: சிவமானது ஒரு பொருளாகவே பூமியினிடம் வித்தாகி பலவகைப்பட்ட பிராணிகளுக்கும் ஒரேபொருளாகி இருக்கும்.

திருமந்திரம்,

விந்துவு நாதமும் விளைய விளைந்தது
வந்தவிப் பல்லுயிர் மன்னுயிருக்கெலா
மந்தமு மாதியு மாமந்திரங்களும்
விந்து வடங்க விளையுஞ் சிவோகமே என்று கூறும்.

மூலமொன்றாகி முடிவொன்றா யெவ்வுயிர்க்கும்
காலமாய் நிற்குஞ் சிவம்.

கருத்துரை: எல்லாவுயிர்களுக்கும் உற்பத்திக்கு மூலகாரணமான பிந்து ஒரே தன்மையுடையதாகியும், மோட்சத்தைக் கொடுக்கும். ஒரே வஸ்துவாகிய பிந்து கலை ஒன்றாகியும் காலத்தைக் காட்டும் சூரிய சந்திரர்களாயும் சிவமானது மேற்சொன்ன மூன்று பொருள்களிலும் கலந்து நிற்கும். (உற்பத்திக்கு மூலகாரணமானது விந்து. அதையே பிரித்துக் கலைவடிவாக மேல் செலுத்துவதே சிவத்தை வெளிப்படுத்தும் தந்திரமென்பது கருத்து.)

மண்ணிற் பிறந்த வுயிர்க்கெல்லாந் தானாகி
விண்ணகமே யாகுஞ் சிவம்.

கருத்துரை: பூமியின்கண் உற்பவித்த ஜீவர்களுக்கெல்லாம் சிவமானது தானாகவே வியாபித்துஇராப்பகலற்ற சிதாகாயமே இடமாக இருக்கும். (மண்ணின் சக்தியால் உற்பவித்த ஜீவர்களுக்கு அந்த சக்தியே சிதா காயத்தில் இடமாக ஏற்பட்டுச் சிவம் தங்கி இருக்கும்.)

தோற்றமது வீடாகித் தொல்லைமுத லொன்றாகி
ஏத்தவரு மீசனுளன்.

கருத்துரை : பழமையான விந்துவானது சரீரங்களோடு லயமாகி (அதன் கலைகளைப் பிரித்து) மேலோங்கும் படிச் செய்ய அந்தக் கலைகளின் தோற்றமே சிவத்திற் கிடமாகி ஏற்படும் அந்த இடத்தில் சிவம் இருக்கிறான்.

(பழைய முதலாகிய பிந்துவின் கலைத்தோற்றத்தின் மத்தியில் சிவனிருப்பான்.)

ஆதியான தொன்றுமே யனேகனேக ரூபமாய்
சாதிபேத மாயெழுந்து சர்வசீவ னானபின்
ஆதியோடு கூடுமீண் டெழுந்த சென்மமானபின்
சேதியான ஞானியாருஞ் சுத்தமாயிருப்பரே.

சிவவாக்கியர்.

சிற்சொரூபந்தானே செக சொரூபமான வெலாந்
தற்சொரூபகாரமாச் சாற்றவே - பொற்சொரூப
மச்சுருவாம் போலவது வதுவாய்த் தோற்றுமொரு
சொச்சொரூபந்தானே துணை. சொரூபசராம்.

அவனவளதுவெனு மவை மூவினைமையின்
றோற்றியதிதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி றொன்மனார் புலவர். சிவஞானபோதம்.

பரதத்துவமாய்த் தத்துவங்களெவைக்கும் பகர்தத்துவமாகி
வரமுற்றிடுசிற் சத்தியுமாய் மருவுசட சத்தியுமாகி
யுரவுற்றிடுமச் சத்திகடம் பேதங்களுமா யொளிர்கின்ற
வரவச்சடையோ னெவனவனை யடியேன் போற்றித்
துதிக்கின்றேன்.

சூதசங்கிதை.

அத்தமியாத சோதியருக்கனா யளவிலாதாய்
மெத்திய பிணியிலாதாய்மேவரும் பிறப்பிலாதா
யெத்தலங்களிலு மென்று மியாவுமா யாவுஞ் செய்து
முத்தியுமாகி யோங்குமுதற்பரம் பொருளொன் றுண்டு.

ஞான வாசிட்டம்.

அருளுருவாம் பரம சிவானந்த சக்திக்காதாரமாக வமர்ந்திருப்பதாலே
சருவ சகக்காரணமா மவ்வீசற்குச் சமமேனும் மல்லதவற் கதிகமேனும்

கருத்துரை : தன்னிடத்தில் அறிவை அறியும்படியான தவத்தைச் செய்பவர்கள் மனதிற்குள் பரமசிவன் அன்பு பொருந்தி இருப்பான்.

(தன்னைத்தான் அறியும்படியான, கர்மாவைச் செய்யுந் தபசிகளின் உள்ளத்தில் சிவன் அன்பாக நிலைத்திருக்கின்றான்.)

சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித் திருக்குஞ் சிவம்.

கருத்துரை : சிவ சொருபத்தைச் சிந்தித்திருத்தலையே தொழிலாக உடையவர்கள் தம் மனதின் கண் பரமசிவமானது சிந்தனை செய்து கொண்டிருக்கும். (சிவ சிந்தனையானது சிவம் செய்யும் சிந்தனையாக மாறிவிடும்.)

''சிந்தனை நின்றனக் காக்கி நாயினேன்றன் கண்ணினை நின்
திருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையுமம் மலர்க்கே யாக்கி
வாக்குன்மனி வார்த்தைக் காக்கி, யைம்புலன்களார வந்தனை
யாட்கொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே
மலையேயுன்னை, தந்தனை செந்தாமரைக் காடனைய
மேனித் தனிச்சுடரே இரண்டு மிலிதனியனேற்கே'' என்றார்
மணிவாசகப் பெருமான்.

குருவி னடிபணிந்து கூடுவதல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம்.

கருத்துரை: ஆச்சாரியனை சேவித்து திருவடிகளை அறிந்து கொண்டு அதனுடன் சேர்ந்து ஞானகர்மத்தைச் செய்வது. அவ்வாறு செய்வதல்லாத மற்றவர்களுக்கு பரம சிவமானது ரூபமில்லாமலே இருக்கும். (செய்பவர்களுக்கு உருவமாக நிற்குமென்றபடி)

(மணிவாசகப்பெருமான்): கீர்த்தித் திருவகவலில் உள்ளதைக் கவனித்தால், திருவடிகளை அடைந்தவர் பெருமை தெரியவரும்.

தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியி லல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்.

கருத்துரை : ஞானகர்மத்தின் இரகசியங்களை யறிந்த ஞானசாரியரின் சந்நிதானத்தில் கிரகிப்பதல்லாமற் போனால் வலையிலகப் பட்டுக் கொண்ட மானைப் போல் விழிக்க வேண்டியதுதான்.

(ஆசாரியர் தடுத்து ஆட்கொள்ளா விட்டால் லௌகீகத்தில் அகப்பட்டு நசுங்க வேண்டியதே.)

உரியேனல்லே னுனக்கடிமை யுன்னைப் பிரிந்திங்கொருபொழுதுந்
தரியேனாயே னின்னதென் றறியேன் சங்கராகருணையினாற்
பெரியோ னொருவன் கண்டுகொளென்றுன் பெய்கழலடி காட்டிப்
பிரியேனென்றென் றருளியவருளும்பொய்யோவெங்கள்பெருமானே

என்றார் மணிவாசகப் பெருமான்.

நெறிப்பட்ட சற்குரு நேர்வழிகாட்டில்
பிரிவற் றிருக்குஞ் சிவம்.

கருத்துரை: ஞானமார்க்கத்தின் ஐயந்திரிபற்று அநுபோகத்திலுள்ள ஞானசாரியன் அதற்காக ஏற்பட்ட தந்திரத்தைத் தொட்டுக்காட்டினால் சிவமானது தன்னை விட்டுப் பிரியாமல் நிலைத்திருக்கும்.

குருமொழியே மலையிலக்குமற்ற மொழியெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வ தொக்குங் கண்டாய்

தாயுமானவரும்,

குருமார்க்கமில்லாத குருடருடன் கூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்து கெட்டேனே.

பட்டினத்தாரும்,

தொழிலறிவாளர் சுருதி கண்ணாகப்
பழுதறியாத பரம குருவை
வழியறிவார்நல்வழி யறிவாள
ரழிவறிவார் மற்றையல்லா தவரே.

திருமூலரும்,

கட்டுண்ட கள்வன்றானோ கட்டினை விட்டுக் கொள்வான்
விட்டவேதனையைத் தீர்த்துவிடுவிப்பானொருவன் வேண்டு
மட்டமா சித்தியோக வறிவினா லறியலாமோ
தட்டறப் பாசந் தீர்க்கத் தற்பர குருவே வேண்டும்.

என்று சிடாசாரமும் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லை யில்லாத சிவம்.

கருத்துரை: நன்மையைக்கொடுக்கும் பலவகையானஞானநூல்களைக் கற்ற போதிலும் முடிவில்லாத சிவத்தைக் காணுவது அருமையாகும்.

வேதமாகம புராணமிருதிகள் வேறா மார்க்க
ரோதுமாகமங்கடர்க்க மொன்றோடொன் றொவ்வாதாகு
மீதெலா மொக்கப் பண்ணலாவதன்றிதயதுக்க
மாதாலாலனைத்தும் விட்டிங்கனைத்து மாஞ்சிவத்தைப்
[பார்ப்பான்.

கருமதற்பரராய் நாங்களே யெல்லாங் கற்றவரென்றிருக்கின்ற பெருமித முடையார் மூடரே பிறவா நெறியையும் பெறுகிலார் பிறவிக், குருடர் கைப்பற்றிப் போகிய குருடர் குழியிலேகூட வீழ்வதுபோன், மருவிய வினையுந் தாங்களுங் கூட மாய்வதேயன்றி மற்றில்லை.

என்று பிரம்மகீதையும்,

சதுமறையாகம சாத்திரமெல்லாஞ் சந்தைப்படிப்பு
நஞ்சொந்தப்படிப்போ, விதுநெறி சுத்தசன்மார்க்கத்திற் சாகா
வித்தையைக் கற்றன னுத்தரமெனு மோர், பொதுவளர் திசை
தோக்கி
வந்தனனென்றும் பொன்றாமைவேண் டிடிலென்றோழி நீதான்,
அதுவிது
வென்னாமலாடோடிபந்துவருட்பெருஞ்சோதி கண்டா டோடிபந்து.

என்று திருவருட் பிரகாச வள்ளலாரும்,

ஏட்டைப் படித்திங் கிறுமாப் பாலென்ன பயன்
நாட்டம் படித்தன்றோ நாமறுப்பம் - வாட்டமெலாம்
எச்சனனத் தேனு மிரும்பொருளை நாடாத
எச்சத்தாலன்றோ இவை.

தன்னிலக்கணங் கல்லார் தாமன்னியங் கற்றார்
என்னாவா ரென்கண்ணுக்கிப்புலவர் - இன்னோர்
தமைத்துரும் பென்றெண்ணுவன் யான்றக்கோ ரடிகள்
எமக்கு முடிவே றொன்றிலை.

என்று சச்சிதானந்த சுவாமிகளும்,

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதினாற் போமோ பிறவிநோய் - உற்றகடல்
நஞ்சுகந்து கொண்டருணை நாதரடி தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி.

என்று அருணகிரி யந்தாதியும்,

கற்குமடப் பட்டுமிகக் கற்றவெலாங் கற்றவர்பாற்
றற்கமிட்டு நாய்போலச் சள்ளிடவோ - நற்கருணை

வெள்ள மொடுங்கும் விரிசடையார்க் காளாகி
யுள்ள மொடுங்க வல்லவோ.

என்று சிவபோக சாரமும்,

சின்னஞ் சிறியார்கள் செய்த மணற்சோற்றை யொக்கும்
மன்னுங்கலை ஞானமார்க்கம் பராபரமே.

என்று தாயுமானவரும்,

கற்று மென்பலன் கற்றிடு நான்முறைச்
சொற்ற சொற்கள் சுகாரம்பமோ நெறி
நிற்றல் வேண்டு நிருவிகற் பச்சுகம்
பெற்றபேர் பெற்ற பேசாப் பெருமையே.

என்று திருமூலரும்,

ஆகம விதங்க ளறிவார்கள் பரமறியார்
யோகமொ டுறங்கு மவரே பர முணர்ந்தோர்
புராண மிதிகாச மெவையும் பொருளனைத்தின்
பிராண னறியா துளவிடத்திவை பிதற்றே.

என்று சசிவன்ன போதமும்,

கற்றத னாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

என்று திருவள்ளுவரும்,

தற்கம் படித்துத் தலைவெடித்துக் கொள்ளுமதைக்
கற்கநினையா தருளைக் காட்டுங் கருணையனே.

என்று சிற்றம்பல நாடிகளும்,

கோடிபல நூலறிவு வேதமுறை பேசினுங்
குருபாதம் வெளியாகுமோ.

என்று சச்சிதானந்த விளக்கமும் கூறியிருப்பதைக் காண்க.

நினைப்பு மறப்பு மில்லாதவர் நெஞ்சந்
தனைப் பிரியாது சிவம்.

கருத்துரை: மனனமும் திரந்தித்திரயங்களும் ஒழித்தவர்களாகிய மனதையுடையவர்களைப் பரமசிவம் நீங்காது.
(நினைப்பும் மறப்பும் அற்றவர்களை சிவம் விட்டுப் பிரியாது.)

ஒன்றிலொன்றில்லாத மனமுடையா ருடல்
என்று மொன்றாது சிவம்.

கருத்துரை : ஒரு திருவடியோடு மற்ற திருவடி கலக்க வைத்தல் இல்லாத மனதை யுடையவரின் சரீரத்தில் பரமசிவம் எப்போதும் சேராது.

திருமந்திரம்,

இதயத்து நாட்டத்து மென்றன் சிரத்தும்
பதிவித்த பாதம் பராபர நந்தி
கதிவைத்தவாறு மெய்காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்ப வொண்ணாதே. என்றும்,

மந்திரமாவது மா மருந்தாவதுந்
தந்திரமாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தரமாவதுந் தூய் நெறியாவது
மெந்தை பிரான்றனிணையடி தானே. என்றும் கூறுகிறது.

நாட்டமில்லாவிடம் நாட்டமறிந்தபின்
மீட்டு விடாது சிவம்.

கருத்துரை: பார்வை செல்லாதவிடத்தில் அதைஎழுப்பி, பார்வையைச் செலுத்த வறிந்தபின் சிவமானது சாதகனை விட்டு நீங்காது. (பார்வையை உபயோகிக்க முடியாத விடத்தில் பார்வையை மீட்டு, அந்த ரகசியமான இடத்தில் செலுத்தினால் சிவன் அவனை விட்டு நீங்காது. (இது குரு முகாந்திரமாய்த் தெரிந்து கொள்ள வேண்டும்.)

பஞ்சமாசத்த மறுப்பவர்க் கல்லாஅல்
அஞ்ச லென்னாது சிவம்.

கருத்துரை : ஐந்து இந்திரியங்கள் சேரும்போதுண்டாகும் பெருமை பொருந்திய நாதத்தைத் தடுத்து ஆக்ஞாசக்கிரத்தில் செலுத்துபவர் அல்லாது மற்றவர்களை (யழைத்து)ச் சிவமானது அஞ்சாதே என்று சொல்லாது.

(நாத சக்தியை எழுப்பி அதனோடு லயமடைந்த சாதகர்களை அஞ்சாதே என்று சிவம் சொல்லும்.)

ஆ. அங்கியிற் பஞ்சு

அங்கியிற் பஞ்சுபோ லாகாயத்தே நினையில்
சங்கிக்கவேண்டாஞ் சிவம்.

கருத்துரை : பஞ்சானது நெருப்பில் பற்றிக் கொண்டு போவது போல் ஆகாயத்தினிடத்தில் பார்த்து மனதில் பட்டால் பரமசிவத்தைப் பற்றி சந்தேகப்பட வேண்டாம்.

(ஆகாயத்தில் மூலாக்கினியைப் பாய்ச்சினால் சிவன் வெளிப் படுவான்.)

மெய்ப்பா லறியாத மூடர்தம்நெஞ்சத்தின்
அப்பால தாகுஞ் சிவம்.

கருத்துரை: சிவனையறியும்படியான யிடத்தை அறிந்து கொள்ளாத பாமரர்களின் மனதில் சிவமானது நீங்கியிருக்கும்.

(உண்மைத் தத்துவத்தை யறியாதவர்களின் மனதில் தெய்வீக சத்தியில்லாமல், மனன சத்தியே குடியிருக்கும் என்பது கருத்து.)

நெஞ்சகத்து ணோக்கி நினைப்பவர்க் கல்லாஅல்
அஞ்சலென்னாது சிவம்.

கருத்துரை: மனம் எழும்பும்படியான உந்திக் கமலத்தில் பார்த்து சிவத்தைச் சிந்திக்கிறவர்களுக்குஅல்லாது மற்றவர்களுக்குபயப்படாதே என்று சொல்லாது.

(மனமுதிக்க வொட்டாமல் செய்து சிவத்தைச் சந்தியாதிருப்பவர் களுக்குச் சிவம் அபயாஸ்தம் கொடுக்காது)

பற்றில்லாதொன்றினைப் பற்றினா லல்லது
கற்றதனா லென்னபயன்.

கருத்துரை: பிடிப்பதற்கு ரூபமற்ற தன்மையையுடைய திருவடிக் கமலத்தைப் பிடித்தாலல்லாமல், நூல்களை வாசித்ததனால் என்ன பிரயோசனம்.

(அரூபமாயும், தோற்றமாத்திரமாயுமுள்ள திருவடிகளைக் கண்ட வர்களே நூல்களின் சாரத்தைக் கிரஹிப்பவர்களாவார்கள் என்பது கருத்து)

திருவள்ளுவர்,

கற்றத னாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

தம்மையறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
தம்மை யறிவரோ தான்.

கருத்துரை: (சாதகர்கள் தங்களை அறியும் பரமசிவத்தைத் தாங்கள் அறிந்து கொண்ட பிறகு தம்மையறிய முயற்சிப்பரோ? முயற்சி செய்ய வேண்டியதில்லை என்றபடி.

(சிவத்தை யறிந்த பிறகு தம்மை யறியும் வேலை சாதகர்களுக்கு இல்லை.)

அசபை யறிந்துள்ளே யழலெழநோக்கில்
இசையாது மண்ணிற் பிறப்பு.

கருத்துரை: அசைவைத் (சலனத்தை) தெரிந்துகொண்டு பிரணவ மத்திய பாகத்தில் (உந்திக் கமலத்தில்) நெருப்பானது வெளியில் வீசும் படி பார்த்தால், பூவுலகத்தில் ஜெனனம் சாதகனை யடையாது.

(சலனமற்று மூலாக்கினியை எழுப்பி அதைப் பார்த்துக் கொண்டு வந்தால் மரணமில்லையென்பது கருத்து.)

விளக்கவுரை: அசபையை வடநூலார் அஜபா என்று அழைக்கின்றார்கள். அஜம் என்பது ஆடு; ஆட்டினது குணம் அசைவை சதா உபயோகிக்குந் தன்மையுடையது. ஆகையால் வடநூல்களும் அசைவையே ஒப்புக் கொண்டிருப்பதாக ஏற்படுகின்றது. அசைவை நிறுத்திவிட்டால் மூலாக்கினியை எழுப்ப முடியும். அதனால் 'அசைவை யறிந்து உள்ளே யழலெழ நோக்கில்' என்றார்.

அஜபாவை, இன்னதென்று அறியாத மாந்தர்கள் கல்வி அறிவின் முதிர்ச்சிக்குத் தோற்றாததினால் மந்திரமாக நினைக்கின்றார்கள்.

ஆத்மா அழிவற்ற பொருள். தேகத்தோடு கூடவே பிறந்து தேகம் நீங்கியவுடன் மறுபடியும் பஞ்சபூத சத்திகளில் சம்பந்தப்பட வேண்டியிருக்கின்றது. அதைத் தேகத்தோடு கலப்பிப்பதே அபர வித்தை போதிக்கும் தந்திரமாகும். அந்த கர்மத்தைச் செய்வதனால் தேகம் நசிக்காது. செத்தால் பிறக்க வேண்டும்; பிறந்தால் சாக வேண்டுமென்கின்ற உலக வழக்கச் சொற்களை அறிந்து பிறந்த தேகத்தைக் காப்பாற்ற

வேண்டிய தந்திரங்களை அறிவதே ஆத்மாவை யறிந்து தேகத்தோடு லபிக்கச் செய்யும் கர்மமாகும். அது முடியாவிட்டால் சாவதுநிச்சயம். செத்தால் பிறக்கத்தான் வேண்டும். அதைத் தடுப்பதற்கு தேகத்தோடிருந்துதான் அந்தக் கர்மத்தைச் செய்ய முடியும். அந்தக் கர்மமானது தூல தேகத்திலிருந்து சூட்சமத்தைப் பிரித்து அதை ஸ்திரப்படுத்துவதேயாகும். அக்கர்மத்தால் தூல மொழிந்தாலும் சூக்கும தேகமறியாது. அந்த சூக்குமத்தோடு ஆத்மா ஒன்றி விடும், மஹரிஷிகள், சித்தர்கள் இதைக் கண்டு கொண்டே உலகத்தில் சஞ்சாரஞ் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

உடம்பு முடம்பு முடம்பைத் தழுவி
யுடைம்பிடை நின்ற வுயிரை யறியார்
உடம்பொடு யிரடை நட்பறியாதார்
மடம்புகு நாய்போன் மயங்குகின்றாரே. திருமந்திரம்.

இமையாத நாட்டத் திருந்துணர்வாருக்
கமையாத வானந்த மாம்.

கருத்துரை: அசைவற்றப் பார்வையை உபயோகித்து, அறிவை அறியும்சாதகருக்கு இதுவரையில் பார்த்திராத ஆனந்தம் சதா உண்டாகிக் கொண்டிருக்கும்.

(அசைவை நீக்கிய பார்வையின் சத்தியினால் ஆனந்தம் சதா உண்டாகும்.)

''நாட்டத்தை மீட்டு நயனத்திருப்பார்க்கு
தோட்டத்து மாம்பழம் தூங்கலு மாமே'' என்றார்.

துரியங்கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை விடு.

கருத்துரை: சரீரத்தில் துரிய நிலைக்கு அதீதமான துரியாதீத நிலையில் மூலாக்கினியின் சுடரை அந்தநிலையில் பார்த்தால் உற்பத்தி லயம் இவ்விரண்டும் நேரிடுகிறதில்லை.

(துரியாதீத நிலையில் ஆத்ம ஒளியைக் கண்டவர்களுக்கு ஜெனன மரணங்களின் கவலை இல்லை.)

மதிபோ லுடம்பினை மாசற நோக்கில்
விதிபோ யகல விடும்.

கருத்துரை: சரீரத்தைக் குற்றம் நீங்க சந்திரனைப் போல் பார்த்தால் மரணமானது (சாதகனை) விட்டு நீங்கி தூரஞ்சென்றுவிடும். (சரீரத்தை நோக்குங் காலத்தில் சந்திர கலையானது பாதாதி கேச பரியந்தம் பரவும்படிப் பார்த்தால், கால அளவைக் கடக்கலாம்.)

சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்
பாவ நசிக்கும் பரிந்து.

கருத்துரை: ஜீவ சொருபமானது சிவலிங்காகாரமாக அறிந்து தெளிவையடைந்தவர்கள் தங்களுடைய பாவத்தாலழைக்கப்படும் வினைகள் தாமாகவே நாசமாகும்.

(ஜீவனை லிங்காகாரமாக ஒருவன் பார்ப்பானேயானால் பழைய வினைகள் தாமாக நாசமுறும்.)

இ. மெய்யகம்

மெய்யகத்தினுள்ளே விளங்குஞ் சுடர் நோக்கில்
கையகத் தினெல்லிக் கனி.

கருத்துரை: அறிவின் மத்திய பாகமாகிய உந்திக் கமலத்தினுள்ளே உதித்துத்தோன்றும் அக்கினிக் கொழுந்தைப் பார்க்கும்படியான காலத்தில் உள்ளங்கையில் நெல்லிக்கனி யென்று மறைவாகக் கூறும் பொருளானது தெளிவாகிவிடும்.

(அறிவின் சுடரை நோக்குங் காலத்தில் உள்ளங்கையில் நெல்லிக் கனி என்பது விளங்கும்.)

விளக்கவுரை: கரதலத்தையும், அதன் பின் பாகத்தையும் பிராம்மண கர்ம மந்திரத்தில் ''கரதலகர பிருஷ்டாப்பியோம் நம:'' என்று சொல்லி யிருக்கும் கருத்தைக் கவனிக்கவும். எந்த வஸ்து உள்ளங்கையில் நிற்குமோ, அதே வஸ்து புறங்கையிலும் ஊடுருவி நிற்கும்படியானதும், நெல்லிக் காயைப்போல், மேல்பாகம் 6ஆம் உள்பாகம் முக்கூட்டாகவும் நின்று வித்தை அடக்கி பழுக்காத குணத்தோடு நிற்கும் பொருளை உபமானமாகக் கூறி, உபமேயப் பொருளை மறைத்துச் சொல்லும் நெல்லிக்கனியை ஆசாரியன் மூலமாய் அறிவதே மேன்மையாகும்.

கரையற்ற செல்வத்தைக் காணுங்காலத்தில்
உரையற் றிருப்ப துணர்வு.

கருத்துரை : உணர்ச்சியானது எல்லையற்ற (அளவிலடங்காத) ஆத்ம சொரூப சம்பந்தமான செல்வத்தைப் பார்க்கும் பக்குவ காலத்தில் பேச நினைக்க ஒன்றுமற்று இருக்கும்.

(ஆத்ம சொருபத்தையும், அதன் கலைகள் முதலியவைகளையும், பார்க்குங்காலத்தில், அறிய வேண்டியது முடிந்து விடும்.)

வாசிட்டம், உத்தாலகன் கதை,

அன்னகாலையி லிருள்சுடர்துயில் மயக்கனைத்தையு மறுத்
[தோட்டி
மன்னுமோ ரவத்தயை யடைந்தொருகணம் வருத்த மாறியதுள்ளம்
இன்னநீர்ந்துடனேய னைத்துருவமா மறிவை யெய்திய தன்றே
நன்னெடுங்கரை தடுக்க நின்றெதிர்த்து முற்றல நிறைந்திடு
[நீர் போல்

உண்டு பசிதீர்ந்தார் போலுடம்பெல்லா அங்
கண்டுகொள் காதல் மிகும்.

கருத்துரை: புசித்துப் பசியைத் தணித்து கொண்டவர்போல் சரீர மானது உள்ளும், புறம்பும் அன்பானது முதிர்ச்சியடைந்து நிற்கும் அதைப் பார்த்துக் கொள்.

(பசி, யிளைப்பு தீர உண்டு மனம் ஒருவித ஆனந்த நிலைமையில் இருப்பது போல், சரீரத்தில் உள்ளும், புறம்பும் தன்னை யறியாமல் அன்பு உண்டாகும். அந்தக் காலத்தை யறிந்து அதைத்தெரிந்து கொள் என்பது கருத்து)

உரைசெயு மோசை யுரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன்.

கருத்துரை: சத்தத்தின் மூலமாய் உண்டாகும் வார்த்தையை விளங்க சிரவணஞ் செய்பவர்களுக்கு, நரையும், கிழத்தனமும், எமனும் கிடையாது.

(ஓசையின் மூலமாய் உண்டாகும் ஒரு சொல்லின் இரகசியத்தை யறிபவர்களுக்கு, நரை, திரை மரணம் மூன்றும் கிடையாது என்பது கருத்து.)

வாசிட்டம்,

''பிரணவத்தினுச் சாரணமுடிவில் பிறந்த சொல்லுறு முண்மை
விரவுநாட்டத்தாற் றுயில்பவனுணர்வு தான் வெளிப்படிலுமிர்
[நிற்கும்

பரவுதாலு மூலஞ் செறியிதழினை படரு நாவாற்றள்ளி
யுரவினாலுயர் புரையிலே பிராணனை யோட்டினாலுயிர் நிற்கும்.

தோன்றாததூய வொளி தோன்றியக்காலுன்னைத்
தோன்றாமற் காப்ப தறிவு.

கருத்துரை: எவருக்கும் வெளிப்பட்டு நிற்காத பரிசுத்தமான ஆத்ம வொளியானது வெளிப்பட்டுச் சூழ்ந்து கொண்டிருந்தால் ஆத்மவொளி யோடு கூடிய சரீரத்தை எவரும் பாராமலிருக்கும்படி மறைத்துக்கொண் டிருப்பது தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாம்.

(ஆத்ம ஒளி உன்னை வெளிப்பட்டுச் சூழ்ந்திருக்கும் போது, இதராள் பாராமலிருப்பது பேரறிவாகும்.)

வாக்கு மனமு மிறந்த பொருள்காணில்
ஆக்கைக் கழிவில்லையாம்.

கருத்துரை: பேச்சும்,மனனமும் இல்லாத தனதுஎதார்த்தவடிவத்தைக் கண்டால் தூல சரீரத்திற்கு நாச மேற்படுவதில்லை யென்று பெரியோர் சொல்லுகிறார்கள்.

கண்ண கத்தே நின்று களிதருமே காணுங்கால்
உன்னகத்தே நின்ற வொளி.

கருத்துரை : உன் சரீரத்திற்குள்ளே பிரகாசத்தோடு நிற்கின்ற ஆத்ம ஒளியானது நேத்திரத்திற்குள்ளிருந்து வெளிப்பட்டு உனக்குத் தோன் றுங்கால் ஆநந்தத்தைக் கொடுக்கும். (உன் ஆத்ம ஒளி கண்களிலிருந்து வெளிப்பட்டுத்தோற்றுவதைப் பார்த்துக்கொண்டிருப்பது ஆநந்தத்தைக் கொடுக்கும்.)

ஆநந்தமான வருளையறிந்த பின்
தானந்த மாகு மவர்க்கு.

கருத்துரை: ஆநந்தமே சொரூபமாகி நிற்கின்ற அருளொளியைப் பார்த்த பிறகு அந்த அருளொளியானது பார்த்த சாதகர்களுக்கு முடிவா கிய மோட்ச பதமாகும்.

மறவாமற் காணும் வகை யுணர்வாருக்
கிறவாதிருக்கலு மாம்.

கருத்துரை: மறதியை ஒழித்து அதனால் பார்வைக்குத் தோற்றும் பொருளின் அதன் விஷயத்தை அறிபவர்களுக்குச் சாகாமல் இருக்கக் கூடும்.

(மறதிஎன்னும் குணம்ஒழிவதினால் உண்டாகும் பொருளின் விஷயத்தை பகுத்தறிபவர்கள் சாகாமலிருக்கக் கூடும்.)

விண்ணிறைந்து நின்ற பொருளே யுடம்பதன்
உண்ணிறைந்து நின்ற வொளி.

கருத்துரை : சரீரத்தினுடைய உள்பாகத்தில் நிறைந்து, அசைவற்று நின்ற அருளொளியானது சிதாகாயத்தின் கண் நிறைந்து நிற்கின்ற சிவமே யாகும்.

(சரீரத்தின்கண் தோற்றும் அருளொளியானது சிதாகாயத்தில் நின்ற பொருளாகிய சிவவொளியே.)

ஈ. கண்ணாடி

கண்ணாடி தன்னி லொளிபோ லுடம்பதனுள்
உண்ணாடி நின்றவொளி.

கருத்துரை: சரீரத்திற்குள்ளிருக்கும் குண்டலிக்குள் நிற்கின்ற வொளியானது கண்ணாடிக்குள் சூரிய கிரணங்கள் தோற்றுவது போலவேயாம்.

(கண்ணாடியைச் சூரிய கிரணத்தின் முன்வைத்தால் அதனுள் அந்தக் கிரணம் தோற்றுவதைப் போலவே உள்ளிருக்குங் குண்டலி சத்தி நின்ற நிலையுந், தோன்றும் என்பதே கருத்து.)

அஞ்சு புலனின் வழியறிந்தாற் பின்னைத்
துஞ்சுவதில்லை யுடம்பு.

கருத்துரை: பஞ்சேந்திரிய சத்திகளைப்பிரணவத்திற் சேர்க்கும்வழியை அறிந்து கொண்டால் பிறகு சரீரமானது இறக்காது.

(பஞ்சேந்திரிய சத்திகளைப் பிரணவத்திற் சேர்க்கும் வழியையறிந்து சேர்ப்பவர்கள் சரீரத்தை இழக்க நேரிடாது என்பது கருத்து.)

"கிடக்குமுடலிற் கிளரிந்திரிய
மடக்க லுறுமவன்றானே யமரன்

விடக்கிரன் டின்புறமே வுறுசிந்தை
நடக்கினடக்கு, நடக்குமளவே''

''பாய்ந்தன பூதங்க ளைந்தும் படரொளி
சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு
வாய்ந்து கொளானந்த மென்னுமருள் செய்யில்
வேய்ந்து கொள்மேலை விதியதுதானே'' திருமந்திரம்

நாபியகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு.

கருத்துரை: உந்திக் கமலத்தில் நன்மையைக் கொடுக்கும் மூலாக் கினியானது வெளிப்பட்டு பொருந்தி நிற்க, பார்வையைச் செலுத்தி அசைவற நிற்கில் சரீரம் சாகாது.

நாவியின் கீழது நல்லவெழுத்தொன்று
பாவிகளத்தின் பயனறிவாரில்லை
யோவியராலு மறிய வொண்ணாதது
தேவியுந்தானுந் திகழ்ந்திருந்தாரே.

உந்திக்கமலத் துதித்தெழுஞ் சோதியை
யந்திக்கு மந்திரமாரு மறிகிலா
ரந்திக்கு மந்திரமாரு மறிந்தபின்
றந்தைக்கு முன்னேமகன் பிறந்தானே. திருமந்திரம்

கண்டத்தளவிற் கடிய வொளிகாணில்
அண்டத்த ராகு முடம்பு.

கருத்துரை: கண்டமாகப் பிரிந்திருக்கும் நேத்திரத்தின் கடிப்பிரதேசத் தில் ஒளியைப் பார்ப்பனே யாகில் சரீரமானது தேவர்களுடைய சரீரத் தைப் போல் ஆய்விடும்.

(நேத்திரப் பிரதேசத்தில், ஆசாரியன் காட்டும் இடத்திலுள்ள ஒளியைப் பார்ப்பானேயாகில், தேவர்களைப் போல் பொன்னியமான சரீரமாகும்)

சந்திரனுள்ளே தழலுற நோக்கினால்
அந்தரமாகு முடம்பு.

கருத்துரை: இடகலையாகிய திருவடிக்குள்ளே வியாபிக்குந் தன்மையை யுடைய அக்கினி கலையானது பொருந்தும்படி பார்த்தால் சரீரமானது ஆகாயத்துக்குச் சமமாகும்.

(இட கலையாகிய திருவடியைக் கண்டு அதன் மத்தியில், அக்கினி கலையை யெழுப்பிப் பொருந்தும்படி செய்தால் தூல சரீரமானது ஆகாயத்தைப் போலாகும். சத்தி நடுவிலோடும் என்றபடி.)

ஆர்க்குந் தெரியா வுருவந்தனை நோக்கில்
பார்க்கும் பரமா மவன்.

கருத்துரை: தன்னைத்தவிர மற்றவர்களுக்குத் தெரியாத ஓங்கார வுருவத்தைப் பார்த்தால் அப்படிப் பார்த்தவன் பார்க்க வேண்டிய பரசொரூபத்தைப் போல் விளங்குவான்.

(ஓங்காரத்தைத் தெரிசித்தவன் பரசொரூபத்தைப் போன்றவனே யாகும் என்பது கருத்து.)

வண்ண மில்லாத வடிவை யறிந்தபின்
விண்ணவராகு முடம்பு.

கருத்துரை : கோணலாயிருக்கும் ஓங்கார உருவத்தை அறிந்த பிறகு சரீரமானது தேவர்களில் சேர்ந்தவனாகும்படி செய்யும்.

(ஓங்காரரூபத்தை அறிந்தவர்கள் தேவர்களுக்குச் சமமாவார்கள்.)

நெற்றிக்கு நேரே நிறைந்த வொளிகாணில்
முற்று மழியா துடம்பு.

கருத்துரை : நெற்றிக்கு நேர்மேல் பாகத்தில் (சிரசிலிருந்து மேல் 16 அங்குல அளவில்) நிறைந்திருக்கின்ற ஒளியைப் பார்த்தால் தூல சூக்ஷமமாகிய இரண்டுசரீரங்களும் கெடாது.

மாதூவெளியின் மனமொன்ற வைத்தபின்
போதக மாகு முடம்பு.

கருத்துரை: பெருமை பொருந்திய பரிசுத்தமாகிய சிதாகாய வெளியில் மனதை அசைவற்று நிறுத்தினால் சரீரம் இளமையை எய்தும்.

(இராப்பகலற்ற விடத்தில் மனம் அசைவற்ற நிலைமையிலிருந்து பழகினால் இளமையுள்ளதாகவே சரீரமிருக்கும்)

சுத்தமோடொன்றி மனமு மிறந்தக்கால்
முற்றுமழியா துடம்பு.

கருத்துரை: பூரண கலைகளும் பரிசுத்தமாகிய பிரணவத்தோடு பொருந்தி மனனமும் நாசமானால் சரீரமானது நாசமாகாது.

(பிரணவ சொருபத்தோடு கலைகள் பொருந்தி மனனமும்ஒழிந்தால் தேகம் அழியாது.)

வாசிட்டம்,

''எனது மனம் பிராண சமாதியினாற் சொன்னவிவ்
வொழுங்கானின் மலதத்துவத்தே யென்றுந்,
தனியிடர்தீர், நெறியிதுவாமிந்த நோக்கந்தனைப் பற்றிச்
சென்றது மேல் வருவதெண்ணே, னனிநிகழ் காலத்
தியல்பினண்ணுகின்றே னானிதுபெற்றேன் பெறுவதிது
வென்றெண்ணேன், முனிவரனே யதனாலே நோயொன்
றின்றி முடிவறு நீடுயிர் பெற்றேன் மோகமற்றேன்'' என்றும்,

திருமந்திரம்,

இடக்கை வலக்கை இரண்டையு மாற்றி
துதிக்கையா லுண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி யுணர வல்லார்கட்கு
இறக்கவு வேண்டாம் இருக்கலு மாமே. என்றும்,

அமுதப் புலன்வரு மாற்றங் கரைமேல்
குமழிக்கத் தற்சுடரையுந்தையுங் கூட்டிச்
சமயத்தண் டோட்டித் தரிக்க வல்லார்க்கு
நமனில்லை நற்கலை நாளில்லை தானே,
என்றுங் கூறுகின்றன.

உ. சூனியகால மறிதல்

நிரவியழலுருவாய் நீண்ட வெளிகாணில்
அரவணை யானாகு முடம்பு.

கருத்துரை : எல்லையற்ற சிதாகாயத்தில் பரவி அக்கினி கலைகளினாலாகிய உருவத்தைக் கண்டால் சர்ப்பத்தைத் தரித்தவனாகிய சிவத்தின் கலைகள் போல் சாதகன் சரீரம் அருள்வடிவாய் நிறமாறிவிடும்.

விளக்கவுரை: 'அரவணை' என்பது குண்டலி சத்தியாகிய சர்ப்பாகாரத்தையே சொல்லப்படுகின்றது. இந்த சர்ப்ப சத்தியை விஷ்ணு ஆசனமாகவும், சிவன் ஆபரணமாகவும் உபயோகித்ததாக புராணக் கதை,

இவ்விடத்தில் மணி பூரகஸ்தானத்தில் விஷ்ணு சொருபம் குண்டலி சத்தியின் உருவத்தை ஒன்றாக்கி அதன் மீது நிற்பதினால், ஆசனமாக வும், சிவன் நடனகாலத்தில், குண்டலிசத்தியானது அந்தசிவரூபத்தைச் சுற்றிக் கொண்டே நடனத்தில் தோற்றுவதையே ஆபரணமாகவுங் கூறியிருப்பதாகும்.

உருவந்தழலாக வுள்ளத்தே சென்று
புருவத்திடையிருந்து பார்.

கருத்துரை: பார்வையை மனத்தோடு சேர்த்து உள்செலுத்தி சிவவுரு வத்தை அக்கினி சொரூபமாக இரண்டு புருவங்களின் மத்திய பாகத்தை லட்சியமாக்கிக் கொண்டு அசைவற்ற நிலையிலிருந்து அதைப்பார். மணிவாசகப் பெருமான்,

பந்தணை விரலாள்பங்க நீயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே. என்று கூறியிருக்கின்றார்.

புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு முடம்பு.

கருத்துரை: புருவங்களின் இடையை லட்சியமாக வைத்துக் கொண்டு பரமசிவத்தைப் பார்த்தால் சரீரமானது இந்திரியங்கள் பகிர்முக விவகாரத்தை ஒழித்து அசைவற்று ஓங்காரத்தோடு சேர்ந்திருக்கும்.

அகம்புறம் பேராப் பொருளை யறியில்
உகம்பல காட்டும் உடம்பு.

கருத்துரை: உள்ளுக்குள்ளும் வெளியிலும் தானாக வெளிப்படாத திருவடிக் கமலங்களை ஆசாரியனால் தெரிந்துகொண்டால் சரீரமானது பல யுகங்கள் காணப்டுபம்.

(திருவடிக்களைக் கொண்டு செய்யுங்கர்மாக்களாலே, பல யுகங்கள் தேகத்தை நாசமடையாமற்படி செய்யக் கூடும்.)

மணிவாசகப்பெருமான்,

உவலைச் சமயங்களொவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்

கவலைக் கெடுத்துக் கழலிணை கடந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங்கொட்டாமோ. என்றும்

மலங்கினேன் கண்ணினீரை மாற்றி
மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக் கேடனேனினி
மேல் விளைவதறிந்திலே
னிலங்குகின்ற நின் சேவடிக
ளிரண்டும் வைப்பிடமின்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. என்று கூறியிருக்கின்றார்.

ஆவிபாழ் போகாதடக்கி யிருந்தபின்
ஓவியமாகு முடம்பு.

கருத்துரை: கலைகளை வெளியில் சென்று மடியாமல் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் உபயோகித்துக் கொண்டு, நிலைத்த பிறகு சரீரமானது சித்திரத்தில் தீட்டிய உருவம் போலாகும்.

திருமந்திரம்,

ஓவியமான உணர்வை யறிமின்கள்
பாவிகளித்தின் பயனறிவா ரில்லை
தீவினையாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவிலிருந்திடும் புண்ணியத் தண்டே. என்றார்.

வாசிட்டம்: உத்தாலகன் கதையில்

அந்தணன் றனதறி வெனுமன்ன மாநந்தமா நிலையோடை
வந்தமர்ந்தது சரற்ககனத்திலே வயங்குமா மதியென்ன
வுந்து காற்றிலாவிளக் கெனவோவியத் துருவெனத் திரையிலாச்
சிந்துவென்ன நீர்கருக் கொண்டு பொழியலாச் சேண்முகிலென
நின்றான்.

அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவதில்லை யுடம்பு.

கருத்துரை: பஞ்சேந்திரிய சத்திகளைப் பிரணவத்தோடு பிணைத்து சத்திகள் அறிவுடன் கலந்து இருந்தபின் சரீரமானது சாகாது.

விளக்கவுரை: பஞ்சபூதங்கள், பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமாம். முறையே பஞ்ச பூத சத்திகள் மெய், வாய், கண், மூக்கு, செவி. இவை

மந்திரங்களால் அழைக்கப்படுவது முறையே ந, ம, சி, வ, ய என்பன வாம். பஞ்சபூதங்களின் சூட்சும சக்திகள்தான், பஞ்சேந்திரியங்களுக்குச் சத்திகளாகவும், அதற்கு நாம பீஜங்களால் அழைக்கப்படுவது முறையே அ, இ, உ, எ, ஒ என்பனவாம். அதற்கு நிறங்கள், பொன்னிறம், பச்சை, அல்லது நீலம், சிகப்பு, புகை நிறம், பளிங்கு நிறம். ஜோசியர் கள் சொல்லும் பஞ்ச பட்சிகளும் இவையே.

தீயாகவுள்ளே தெளிவுற நோக்கினால்
மாயாது பின்னை யுடம்பு.

கருத்துரை: பிரணவ மத்திய பாகத்தில் உள்ள உந்திக் கமலத்தில் அக்கினியை யெழுப்பி விளக்கமாகப் பொருந்தப் பார்த்தால் பிறகு சரீரம் நாசத்தை யடையாது.

தானந்த மின்றித்தழலுற நோக்கிடில்
ஆனந்த மாகு முடம்பு.

கருத்துரை: சாதகன் குறைவு படுத்தாமல் அக்கினியை யெழுப்பிப் பொருத்தமாகப் பார்வையை அதில் செலுத்தினால் சரீரம் ஆனத்தத்தை யடையும். (மூலாக்கினியை யெழுப்பி அதைத் தீப்பொறி பறக்கப் பார்த்தால் சரீரம் ஆனந்தத்தை யடையும்.)

ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில்
அழிவின்றி நிற்கு முடம்பு.

கருத்துரை: இடைவிடாமல் பார்வை செல்லுகிற இடமெல்லாம் நிற் கின்ற செல்வமாகிய சிவத்தை அறிந்தால் சரீரமானது சாகாமல் நிலைத்து விடும்.

பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்
முற்று மழியா துடம்பு.

கருத்துரை: மறைப்பற்று நிற்கின்ற பழமையாகிய செல்வச் சிவத்தை மனனத்தில் சம்பந்தப்படுத்தி விட்டால் சரீரமானது தூல சூக்குமங்களி ரண்டும் நாசமடையாது.

வள்ளலார்,

சிந்தனை புறஞ்செலா சிவோகம் பாவனை
சந்தத முறுற்றிடில் சமாதி வந்துறும். என்றார்.

வாசிட்டம்,

முடிவிலாத நின்மலமா முத்திப் பதத்தே சித்தத்தின்
நெடிய துயர்தீர்ந் திளைப்பாறு நிலைபெற்றோரை
யமனணுகான். என்றும்,

திருமந்திரம்,

நாடவல்லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல்லார்கண பதியாய் நிற்பர்
தேடவல்லார்க டெரிந்த பொருளிது
கூடவல்லார்கட்குக் கூறலுமாமே. என்றும்,

மூன்று மடக்குடை பாம்பி ரண்டெட்டுள
வேன்ற யியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிழ் முட்டை யிரண்டையுங் கட்டியிட்
டுன்றி யிருக்க வுடலழி யாதே.
என்றும் யிருப்பதைப் பார்க்கவும்.

ஊ. சிவயோக நிலை

அடி மிசை வாயு வடுத்தடுத் தேகி
முடி மிசை யோடி முயல்.

கருத்துரை: திருவடிகளின் மீது அபான வாயுவை (சந்திர சம்பந்த மானது) அடிக்கடி செலுத்தி (பிறகு) பிரணவ உச்சியின் மீது செல்லும் படி முயற்சி செய்.

(உந்திக் கமலத்தின் அடிப்பாகத்திலிருந்து உண்டாகும் வாயுவா கிய அபானனைத் திருவடிகளோடு செலுத்திப் பிறகு பிரணவ உச்சிக் குள் செலுத்திவிடு என்பது கருத்து.

வாசிட்டம், புசுண்டர் கதையில்

ஆடுகின்ற பிராணலயத்தருகு மேவியபானலயத்தரு குற்றுப் பிராணாபான
னூடு பயில்சிற்பரத்தையேத்து கின்றே னுற்றவபானன் றோற்ற மொழிந்து நிற்க
நீடுபிராணனு மிறக்க மூக்கினுச்சி நேர் விசும்பிற் சிற்பரத்தை நீக்க மில்லேன்
நாடுமலமொன்று மறக்கலைகள் சூழநாகர் தொழும்பதம் பெற்றே னல்ல நோக்கால். என்று கூறும்.

உண்ணாடி வாயுவதனை யுடனிறப்பி
விண்ணோடு மெள்ள விடு.

கருத்துரை: அபானவாயுவை (சந்திர சம்பந்தமானது) உள்ளே நன் றாய்ப் பார்த்து உந்திக் கமலத்தில் கலக்க வைத்து சிரசுக்கு மேல்பாகத் தில் தோற்றும் சிதாகாயத்தோடு மெதுவாக மேல் நோக்கும்படி செய்து விடு.

விளக்கவுரை: இக்குறளில் இரேசக தந்திரத்தைச் சொல்லிப் பூரக ஆரம்பத்தையும் சொல்லுகிறார்.

யோகத்திற்கு ஏற்பட்ட கர்மங்களை நம்முடைய முன்னோர்கள் ரேசகம், பூரகம், கும்பகம் என்னும் பெயர்களை அதற்கு அமைத்திருக் கின்றார்கள். அதன் சப்தத்தைக்கொண்டே யாயினும், அநுபோகியைக் கொண்டேயாயினும் தெரிந்து கொண்டால்தான் இது விளங்கும். இதை யறியாதவர்களும், அனுபோகமற்றவர்களுந்தான், இவைகளை உள்ள படி அறிந்ததாக எண்ணி வெளிவிடும் கரியமிலவாயுவாகிய கழிவுப் பொருளை உபயோகப்படுத்தி, உலகம் யோக வித்தையைப் பார்த்து நடுங்கும்படி செய்து உலகத்திற்கு இதில் வெறுப்பை உண்டாக்கி விட்டார்கள்.

வாசிட்டம்,

குண்டலியெனுஞ் சீவசத்திமிக நல்லதாய் கூடிநிற்கு
மண்டுபிராணாபான வடிவமாதலிற் கீழ்மேல் வந்துபோகு
மிண்டறமேல் போகிலு மெல்லாமாய்ப்போ மீளினுமெல்லா
மாய்மீளுந்
தண்டலிலாப்புமானாகிச் சாமேவும் பிராணனுமிச் சத்திதானே.
என்று கூறும்.

மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்
கொள்ளுமின் கும்பங் குறித்து.

கருத்துரை: மிருதுவாக அபானனைப் பிராணனோடு கலக்க வைத்து தேகமானது விதிர்விதிர்த்து (கலைகள்) பெருத்து மேல் நோக்கும்படி செய்து கும்பக நிலையை அடையும்படியான சமயத்தை அறிந்து கொள் ளுங்கள்.

விளக்கவுரை: அபானனைப் பிராணனோடு கலக்கவைக்கும் ரேசக தந்திரத்தைச் செய்து, பிறகு பூரக தந்திரமாகிய மேல் நோக்குந்

தந்திரத்தைச் செய்தால் கும்பக அவத்தைக்கு மேல்நோக்கும் பிராணா பானன்கள் தானாகக் கீழிறங்கி உற்பத்தியான விடத்தில் வந்து சேர்ந்து விடும் என்பது கருத்து.

மணிவாசகப்பெருமான்,

மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப்போற்றி சயசய போற்றி
யென்னுங்
கைதானெகிழ விடேனுடையா யென்னைக் கண்டுகொள்ளே.
என்றார்.

வாசிட்டத்தில், ரேசகத்தை

மருவிதய விண்ணினுந் தன்னித யத்தூடே
வருத்தமறப் பிராணன்கள் புறநோக் கெய்தல்
புரிவுறவுண் மேவுமிரேசகந்தானாகும். என்றார்.

பூரகத்தை,

விராவிந்த பிராணன் விடாதசைவாஞ்சத்தி மேவி
யொழியாதுலவு மேனியுள்ளே திரமின்றிப் புறத்தினும்
முள்ளினு மெப்போதுந் திரும்பாது மேற்போதல் செய்கையாகும்.

மற்றையபானனு மசைவாஞ் சத்திமேவி மாறாமலுலவு
மகவாகியத்தி, லுற்றவுடலிற் கீழே யோடாநிற்கும்
முறுநனவு கனவிலு மிவ்வுயர் பிராணன் முற்றுற மீள்வது
நன்றா மறிந்தோர்க்கின்பமுழுதளிக்கு மிதனியல்பை
மொழியக் கேளாய், பெற்ற புறத்தீராறுவிரன் மட்டோடும்
பிராணன் மீட்டுடலுறல் பூரகமாய்ப் பேசும். என்றார்.

கும்பகத்தை,

புறநின்று சாலவு முள்ளடங்க வன்பு பொருந்தாம
லபானனுடற் புகுத லெய்துந், திறனொன்று மதனையும்
பூரகமாய்ச் செப்புந் தீரவபானனு மொளித்துப்
பிராணன்தானு, மறவுமிதயத் தசைவற்றிருக்கு மெம்
மட்டம் மட்டுங் கும்பகமரமவித்தையாகும், இறவறுநல்
யோகியரீதனுபவிப்பரெக் கலையுங் கற்றுணர்ந்த
வேதத்தோனே. என்றார்.

இரேசகமுப்பத் திரண்டது மாத்திரை
பூரகம் பத்தாறு புகும்.

கருத்துரை: அபானனைப் பிராணனோடு கலப்பித்து நிற்குங் காலமானது, அதற்குச் செலவாக வேண்டியது முப்பத்திரண்டு மாத்திரை அளவினதாகும். பிராணாபானன்கள் மேல்பாகத்தில் சென்று உதித்த விடத்திற்கு வந்து சேருவதற்கு பதினாறு மாத்திரை யளவுள்ள காலமாகும். (கண்ணிமைப் பொழுதும், கைந்நொடிப் பொழுதும் மாத்திரைக் களவாம் என்றார் பவணந்தி.)

கும்பகநாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான்.

கருத்துரை: பிராணாபானன்கள் கலந்து உந்திக் கமலத்தில் நிற்கும்படி சாதகன் அசைவற்று நிலைத்துவிடும்படி செய்வதற்கு அறுபத்தினாலு மாத்திரை அளவுள்ள காலமாகும். (மேற்படி காலம் வரையில் பிராணாபானன்களை அசைவற்ற நிலையில் நிறுத்த வேண்டியதே என்பது கருத்து.)

முன்ன மிரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

கருத்துரை: முதலில் இரேசகத்தைச் செய்து பிறகு பூரகத்துக்கு முயற்சி செய், கடைசியில் செய்ய வேண்டியது கும்பகமாகும்.

விளக்கவுரை: உலகத்தார் நினைத்துக் கொண்டிருக்கும் கழிவு பதார்த்தமாகிய உஸ்வாச நிஸ்வாசத்தை இந்த முறையில் செய்ய ஏலாதென்பதைக் கவனிக்கவும்.

ஈரைந்தெழுபத்தி ராயிரநாடியுஞ்
சேருமின் வாயுச் செயல்.

கருத்துரை: இரண்டு பிராணாபான வாயுக்களின் செயலினால் செய்யுங் கர்மத்தைக் கொண்டு பஞ்சேந்திரிய சத்திகளையும், எழுபத்திரண்டாயிர நாடிகளின் சத்திகளையும் ஒன்றாய்ச் சேருங்கள்.

விளக்கவுரை: பிராணாபான வாயுக்களாகிய இந்த இரண்டின் கர்மத்தினால் பஞ்சேந்திரிய சத்திகளையும் சரீரத்திலுள்ள எல்லா நாடிகளின் சத்தியையும் ஒன்றாக்கு மென்பது கருத்து.

வாசிட்டம்,

''சீமானாஞ் சிகித்துவசன் கதைக்கிடையே வினவுதலாற் செப்பு [கின்றேன்
கோமானே பிராணாதிபவனத்தின் பரிசயத்தின் கொள்கையாகிச்
சாமாறில்லாப்பயன் செய்நெறி கேட்பாய் வாதனைகள் சற்றுமின்றிப்
போமாறு செய்துளத்திலிதற்கடுத்தவாதனையேபொருந்திநின்று''
என்றார்.

வாசலீரைந்து மயங்கியவாயுவை
ஈசன்றன் வாசலிலேற்று.

கருத்துரை: ஏழு வாசல்களில் உள்நுழையாது திகைத்துக் கொண்டிருக்கும் பிராணாபான வாயுக்களைச்சிவன் வெளிப்படும் வாசலாகிய பிரணவ வுச்சியில் உள்ள துவாரத்தில் நுழைத்துவிடும்.

விளக்கவுரை: கண்ணிரண்டு, காதிரண்டு, மூக்கிரண்டு, வாய் ஒன்று ஆகிய ஏழு வாசலின் வழியாய் நுழையமாட்டாது திகைக்கும் வாயுவைச் சிவன் வெளிப்படும் பிரமரந்திரமாகிய சுழிமுனைத் துவாரத்தில் நுழை என்பது கருத்து.

திருமந்திரம்,

ஆரிய னல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறிவா ரில்லை
கூரிய நாதன் குருவினருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. என்றும்,

மேல்கீழ நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாமி ரேசகத்தா னுட்பதி வித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
யாலால முண்டானருட் பெறலாமே. என்றார்

தயாவினில்வாயு வலத்திலியங்கில்
தியான சமாதிகள் செய்.

கருத்துரை: அருளை வீசும்படியான நாபிக் கமலத்தில் இருந்து உண்டாகும் பிராணாபான வாயுக்களானவை, பிங்கலையில் இயங்கியிருந்தால் தாரணை, தியானம், சமாதிகளைச் செய்வாயாக.

திருமந்திரம்,

மாறிவரு மிருபான்மதி வெய்யவ
னேறி யிழியு மிடை பிங்கலை யிடை
யூறுமுயிர் நடுவே யுயிருக் கிரந்
தேறி யறிமின் றெரிந்து தெளிந்தே.

உதித்து வலத்திடம் போகின்ற போது
வதிர்த்தஞ்சி யோடுத லாமகன் றாரு
முயிர்த்தது வேமிக வோடிடு மாகி
லுதித்தவீ ராசி யுணர்ந்து கொளுற்றே.

நடுவு நில்லா மலிடம் வல மோடி
யடுகின்ற வாயுவை யந்தணன் கூடி
யிடுகின்ற வாறு சென்றின் பணிசேர
முடிகின்ற நீபத்தின் முன்னுண்டென்றானே. என்றார்.

ஆதியாமூல மறிந்தஞ்செழுத்தினைப்
பேதியா தோது பிணை.

கருத்துரை: யோக சாதனைக்கு முதன்மையாக யிருக்கும், நாபிக் கமலத்தைத் தெரிந்துகொண்டு பஞ்சேந்திரிய சத்திகளைப்பொருத்தமாக வேற்றுமைப் படுத்தாமல் அதில் சேர்ந்து விடு.

விளக்கவுரை: பிரணவத்தோடு பஞ்சேந்திரிய சத்திகளை ஒன்றாகச் சேர்ப்பதே ".ஓம் நமசிவய" என்னும் மந்திர உபதேசத்தின் கருத்தாகும்.

எ. ஞான நிலை

தற்புருட மாமுகந் தன்னிற்றனியிருந்
துற்பன மஞ்சை யுரை.

கருத்துரை: பிந்து கலையின் பெருமை பொருந்திய முகத்தில் பார்வையை மாத்திரம் உபயோகித்து நிறுத்தி, தோன்றுகின்ற பஞ்சேந்திரிய சத்திகளை மேற்படி முகத்தில் தேய்க்கவும். (கலக்க வைக்கவும்.)

விளக்கவுரை: பிந்து கலை யெழும்பும்போது அதன் முகத்தில் பஞ்சேந்திரியங்களை அழுத்திக் கலக்கவை என்பது கருத்து.

திருமந்திரம்,

திறத்திறம் விந்து திகழு மகார
முறப்பற வேநினைந் தோதுஞ் சகார
மறிப்பது மந்திர மன்னிய நாத
மறப்பற யோகிக் கறநெறி யாமே. என்றும்,

ஆகுஞ் சனவேத சத்தியை யன்புற
நீகொள்ளி னெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகுபடுத்திப் பலகோடி களத்தினா
லூழ் கொண்ட மந்திரந் தன்னாலொடுங்கே என்றும். கூறும்.

தற்புருடமென்பது சிவத்தின் ஐம்முகங்களிலொன்று என்பதை விட்டுச் சிவம் வெளிப்படும் ஐந்திடங்களிலொன்று என்பது அனுபோக மானது.

ஐம்முகம் அல்லது ஐந்து இடங்கள்

1. தற்புருடம் — பிந்து கலையின் உச்சியிலும்
2. ஈசானியம் — ஈசானிய திக்கிலும்
3. வாமனம் — சந்திர கலையிலும்
4. ஆகோரம் — அபான வாயுவி னுச்சியிலும்
5. சத்தியோசாதம் — நாதபிந்து சேருமிடத்திலும் யோகிகள் சிவனைக் கண்ட வழிகளாகும்.

தற்புருடமாமுகமேற் றாரகைதன்மேலே
நிற்பது பேரொளி நில்.

கருத்துரை: பிந்துகலை யெழும்பும்போது பெருமை பொருந்திய அதன் உச்சியின் மீது நட்சத்திரங்களிருக்கின்றன. அதன் மேல்பாகத்தில் பிரகாசத்தோடிருப்பது பெரிய ஒளியாகும் அவ்விடத்தில் நின்று பார்.

திருமந்திரம்,

மேலா நிலத்தெழு விந்துவு நாதமுங்
கோலா னடத்திக் குறிவழி யேசென்று
பாலா மமிர்துண்டு பற்றறப் பற்றினான்
மாலான தும்மாள மாளுமவ் விந்தே. என்றார்.

ஓதியதற்புரு டத்தடி யொவ்வவே
பேதியா தோது பிணை.

கருத்துரை: மேற்குறள்களில் சொல்லிய பிந்து கலையினுடன் திருவடி களானவை ஒன்றோடொன்று கலக்கும்படி செய்து வித்தியாசமில்லாமல் பொருத்தமாக பிரணவத்துடன் கலந்து விடு.
திருமந்திரம்,

விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய வங்கியினாலே நயந்தெரித்
தந்தமில் பானு வதிகண்ட மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே. என்றும்,

திருவடிகள்: நாதபிந்து கலைகளைத் தம்முள்ளடக்கிக் கொண்டு சங்கு சக்கிர ரூபமாயும், சூரிய சந்திரர்களாயும், நின்று உலகத்தை விளக்கிக் காட்டிக் கொண்டிருப்பதை, திருவடிகளைத் தரிசித்தவர்கள் கூறுகின்றார்கள்.

கொழுந்துறுவன்னி கொழுவுற வொவ்வில்
எழுந்தா ரகையா மிது.

கருத்துரை: காறு அல்லது கொழு கொம்பானது பிரம்மஸ்தானத்தில் பொருந்தப் புணரும்படிசெய்தால் அக்கினியானது. சுவாலையைஎழுப்பி நிற்கும் போது பிந்து கலையானது நட்சத்திர ரூபங்களாக எழும்பி விடும். (கொழு கொம்பானது ஆசாரியன் சொல்லும் முதல் தந்திர மாகும்)

நின்றிடு விந்துவென் றுள்ளவெழுத்தெலா
நின்றிடு நாதமு மோங்கு மெழுத்துட
னின்றிடு மப்பதி யவ்வெழுத் தேவரி
னின்றிடு மப்புறந் தாரகை யானதே.

தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
தாரகை மேலோர் தழைந்தது பேரொளி
தாரகை சந்திர னற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே. என்றார்.

மறித்துக் கொளுவிடு வன்னி நடுவே
குறித்துக் கொளுஞ்சீயைக் கூட்டு.

கருத்துரை: சூரிய சந்திர கலைகளைத் தடுத்து ஒன்றோடொன்று சேர்ந்து விடுவதால் ஏற்படும் மூலாக்கினியின் மத்தியிலே குறிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கின்ற, பிந்து கலையைஅதனுடன் சேரு.

(சூரியசந்திர கலைகளின் கூட்டுறவா லேற்படும் அக்கினி மத்தியில் குறிப்பாகப் பிந்து கலையைக் கூட்டி விடு.)
திருமந்திரம்,

வீயம தாகிய விந்துவின் சத்தியா
லாய வகண்டமு மண்டமும் பாரிப்பக்
காயவைம் பூதமுங் காரிய மாயையி
லாயிட விந்து வகம்புற மாகுமே, என்று கூறும்.

காலுந்தலையு மறிந்து கலந்திடில்
சாலவும் நல்லது தான்.

கருத்துரை: பிராணாபான வாயுக்களையும் பிரணவ வுச்சியையும், அவற்றைப் பார்த்து இரண்டையுங் கலந்து (பிந்துகலையை) அதில் சேர்த்து விட்டால் மிகவும் நன்மையைக் கொடுத்துவிடும்.

திருமந்திரம்,

இருந்தனடன் முகமாறொடு நாலாய்ப்
பரந்தன வாயு திசைதிசை தோறுங்
குவிந்தன முத்தின் முகவொளி நோக்கி
நடந்தது தேறல தோமுக மம்பே. என்றார்.

பொன்னொடு வெள்ளியிரண்டும் பொருந்திடில்
அன்னவன் றாளதுவே யாம்.

கருத்துரை: நாதமுடன் பிந்து இந்த இரண்டு பொருள்களும் அந்த இரண்டு கலைகள் கூடுவதினால் பரமசிவனுடைய திருவடிகள், பொருத்தமாய்ச் சேர்த்து விட்டால் நாதபிந்துக்களே யாகும்.

விளக்கவுரை: நாதபிந்து என்று சொல்லப்பட்ட இரண்டு பொருள் களும், கலைகளினால் ஒன்று சேரும் பொழுது பரமசிவம் வெளிப்படும். திருவடிகள் பொருத்தமாய்ச் சேர்ந்துவிட்டால் நாத பிந்துக்களேயாகும்.

திருமந்திரம்,

அடிசாரலா மண்ணல் பாதமிரண்டு
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்
படிசார்ந்த வின்பப் பழவடி வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே. என்றது

நின்றவெழுத்துட வில்லா வெழுத்தினை
யொன்றுவிக்கி லொன்றே யுள.

கருத்துரை: நிறைவு குறைவில்லாமல் சதா பனிரெண்டு கலையோடு கூடிய சூரிய கலையுடன் தேயவும் வளரவுமாய் நின்ற சந்திரகலையை ஒன்றோடொன்று பொருந்தும்படி செய்தால் ஒப்புவமையற்ற பரமசிவ ரூபமே ஏற்படும்.

(சூரிய சந்திரர்களை ஒன்றுவித்தால் சிவரூப தரிசனையுண்டாகும்.)

பேசா வெழுத்துடன் பேசுமெழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம்.

கருத்துரை: செபிக்கப்படாத பிரணவ சொரூபத்துடன் சத்தமானது பொருந்தி விட்டால் ஆசாரியன் பரமசிவமே குருவாக நின்று வழியை விளக்கிக் காட்டுபவனாம்.

ஓங்காரத்துடன் சத்தத்தை சம்பந்தித்தால் ஆசாரியன் பரமசிவனே யாகி இரகசியங்களை விளக்குவான்.

திருமந்திரம்,

சத்தமுஞ் சத்த மனமு மனக்கருத்
தொத்தறி கின்ற விடமு மறிகிலார்
மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு
வத்த விருப்பிட மவ்விடந் தானே. என்றது

அழியா வுயிரை யவனுடன் வைக்கில்
பழியான தொன்றில்லை பார்.

கருத்துரை: பார்வையின் மூலமாகப் பிராணனுக்கு மூலவித்தாகிய அழிதலற்ற பிந்து கலையைச் சிவன் வெளிப்படும் சுழிமுனைத்துவாரத்தில் அல்லது பிரம்மரந்திரத்தில் ஊர்த்துவ முகம் கொண்டுபோய் சேர்த்தால் ஸ்திரீ லோலன் என்கிற பழியானது ஒரு குற்றம் சாதகன் பேரில் ஏற்படாது.

திருமந்திரம்,

வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை
வித்திடு வோர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை

வித்தினில் வித்தை விதற வுணர்வரேன்
மத்தி லிருந்ததோர் மாங்கனி யாமே. என்றும்

விந்து விளைவும் விளைவின் பயன்முற்று
மந்த வழிவு மடக்கத்தி லாக்கமும்
நந்திய நாசமு நாதத்தாற் பேதமுந்
தந்துணர் வோர்க்குச் சயமாகும் விந்துவே. என்றும்

விந்துவு நாதமு மேவக் கனன்மூல
வந்த வனன் மயிர்க் காறோரு மன்னிடச்
சிந்தனை மாறச் சிவமக மாகவே
விந்துவு மாளுமெய்க் காயத்தில் வித்திலே.

என்றும் கூறும்.

ஏ. ஞானம் பிரியாமை

பிறந்திட மாலிடம் பேராதிருப்பின்
இறந்திடம் வன்னியிடம்.

கருத்துரை: ஞான கர்மங்களுக்கு வேண்டிய தத்துவங்கள் வெளிப்படு மிடம், விஷ்ணுவின் மணிபூரகமாகிய உந்திக் கமலந்தான். அந்த இடத்தைத் திறக்காமலிருப்பீர்களேயானால் நீங்கள் சாகப் போகிற விடம் அக்கினி மூண்டெரியும் சுடுகாட்டில்தான்.

மணிபூரகமாகிய நாபிக் கமலத்திலிருந்து வெளிப்படுந் தத்துவங் களைக் கொண்டே ஞான சாதனை செய்ய வேண்டும். நாபிக் கமலந் திறக்குந் தந்திரத்தை அறியாவிட்டால் சுடுகாடுதான் மனிதனடைவது என்பது கருத்து.

சாகாதிருந்த தலமே மவுனமது
ஏகாந்த மாக விரு.

கருத்துரை: இறவாது தடுக்கும் பொருள்கள் உள்ள இடமே யாவற் றையும் வெளிப்படுத்தும் நாபிக்கமலமாகும். பார்வை, மனந்தவிர வேறு எதுவுமில்லாமல் அதைப் பார்த்துக் கொண்டிரு.

உந்திக் கமலம் திறப்பதற்கு முந்தி தோற்றாமல் அதற்குச் சம்பந்த மில்லாத கர்மாவினால் திறந்து யாவற்றையும் தோற்று விப்பதால் மௌனம் எனப் பேர் பெற்றது.

வெளியில் விளைந்த விளைவின் கனிதான்
ஒளியிலொளியா யுறும்.

கருத்துரை: பிரபஞ்சத்தில் உற்பத்தியான பலனாகிய அன்னத்தின் முதிர்ந்த பிந்துவானது மூலாக்கினியின் மத்தியில் கலைவடிவைப் பெற்றுப் பொருந்தி நிற்கும்.

உலகத்தில் உற்பத்தியான பழமாகிய அன்னமே மூலாக்கினியில் வேறு ரூபமாய்ச் சேர்ந்து வெண்மையாகிய ஒளியாக நிற்குமென்பது கருத்து.

மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா ரிறவார் பினை.

கருத்துரை: மறதி யற்றும், மனனமற்றும் உந்திக் கமலத்தில் மனதையும் பார்வையையும் ஒன்றாகச் சேர்த்து நோக்கிக் கொண்டிருந் தால் பிறகு பிறக்க மாட்டார்கள், சாகமாட்டார்கள்.

(நினைப்பு மறப்பற்று மௌன நிலையில் நின்றால் பின்னுதிப்பது மரிப்பது கிடையா.)

குருவாம் பரநந்தி கூடல்குறித்தாங்
கிருபோது நீங்கா திரு.

கருத்துரை: அந்த மௌன நிலையை அந்தர்முகக்குருவாகிய பரம சிவமானது அவ்விடம் வந்து சேரும்படி லட்சியமாக வைத்து இராப்பக லிருவேளையும் அதை விட்டு நீங்காமல் நில்.

(நந்திகுரு உதிக்குந்தனையும் மவுனத்தில் நிலைத்து நில்என்பது கருத்து.)

சுந்திரச்சோதி துலங்கு மிடமது
மந்திரச் சக்கரமு மாம்.

கருத்துரை: பிரணவத்தினாலும் திருவடி சக்கரங்களினாலும் வெளிப் பட்ட அந்த உந்திக் கமலமாகிய மௌனத்தில் மகா அழகுள்ள ஜோதி சொரூபமானது வெளிப்படும்.

விளக்கவுரை: திருவடிகளைக் கண்டு அதனால் செய்யுங் கர்மத்தின் பலத்தால் பிரணவ சொரூபம் வெளிப்படும். அதன் மத்திய பாகத்தில் உந்திக்கமலமிருக்கின்றது. அதிலிருந்து வெளிப்படும் ஜோதிசொரூபமே ஆனந்தத்தைக் கொடுக்கும்.

தூராதி தூரஞ் சொல்லத் தொலையாது
பாராப் பராபரம் பார்.

கருத்துரை: பரவித்தையும், அபர வித்தையும் பார்க்க முடியாதவர் களுக்கு அதிக தொலைவிலிருக்கின்றன. அதைச் சொல்லவேண்டு மானால் அதிக தூரமென்பது எதுவென்று பார்த்துத்தெரிந்து கொள். (பரஅபர வித்தைகள் பார்க்காதவர்களுக்கு அதிக தூரமாயும் பார்த்த வர்களுக்குஅதிக சமீபமாயு மிருக்கும்.)

ஈரொளியீதென் றிறைவ னுரைத்தனன்
நீரொளி மீது நிலை.

கருத்துரை : குருநந்தி அல்லது சிவன் கீழும் மேலுமா யிருக்கப்பட்ட நாதவொளியையும், பிந்து ஒளியையும் குறிப்பாக அறிந்து (இதன் மத்தியில் உள்ள) ஜலமண்டலமாகிய உந்திக் கமலத்தினின்று ஒளி வெளிப்படும் இடமே மௌனமென்று சொன்னான்.

திருமந்திரம்,

மேலொளி கீழதன் மேவிய மாருதம்
பாரொளி யங்கி பரந்தொளி யாகாச
நீரொளி செய்து நெடுவிசும் பொன்றிலு
மேலொளி யைந்து மொருங்கொளி யாமே.

அந்தமுமாதியு மில்லாவரும் பொருள்
சுந்தர ஞானச் சுடர்.

கருத்துரை : முடிவும், முதலும் இல்லாத அருமையாகிய பொருள் அழகுள்ள அறிவைப் பிரகாசிக்கச் செய்யும் சுடராகும். (ஆதியந்தமற்ற அருமைப் பொருள் ஞானச் சுடரேயாகும்.)

இதுமுத்தி சாதனமென் றேட்டில்வரைந்து
பதிவைத் தனன்குரு பார்.

கருத்துரை: இப்பொழுது சொல்லவந்த பொருள்கள் மோட்ச கர்மத் துக்கு வேண்டிய பொருள்களென்று ஓலையேட்டில் எழுதிப் பரமசிவன் ஏற்படுத்தினான். அவனே குரு இதைப்பார்.

(இந்தப் பொருள்கள் முத்தி சாதனமென்று முதனூல்களில் எழுதி வைத்தவன் குருவே யாகும்.)

ஐ. மெய்ந்நெறி

செல்லல் நிகழல் வருங்காலமூன் றினையுஞ்
சொல்லு மவுனத் தொழில்.

கருத்துரை : இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலத்தையும் மௌன வைப்புக்காகச் செய்யும் கர்மத்தின் பலன் உனக்கு விளக்கிக் காட்டும்.

உந்திக் கமலத்தில் செய்யும் ஞானகர்மமானது திரிகாலங்களையும் அறிவிக்குமென்பது கருத்து.

திருமந்திரம்,

விளங்கிடும் வாயுவை மேலெழ வுன்னி
நலங்கிடுங் கண்டத்து நாபியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே. என்றும்,

சொல்லலு மாயிடு மாகத்து வாயுவுஞ்
சொல்லலு மாகு மண்ணீர்க் கடினமுஞ்
சொல்லலு மாகு மிவையஞ்சுங் கூடிடிற்
சொல்லலு மாந் தூர தரிசனந் தானே.

தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாங்
காராருங் கண்ணி கடைஞான முட்பெய்திட்
டேராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன் முன்ன தாமே. என்றுங் கூறும்.

தூர தரிசனமே திரிகாலத்தையு முணர்த்தி விடும்.

பஞ்சிற் படுபொறி போலப்பரந்திருந்து
துஞ்சாது ஞானச்சுடர்.

கருத்துரை: பஞ்சிற்பட்ட நெருப்புப் பொறிபோல அறிவின் சுடரானது பரவி மறையாமலிருந்து அவியாது. (மூலாக்கினியை எழுப்பிஅறிவுடன் சம்பந்தித்துவிட்டால் எல்லாத்தத்துவங்களுக்கும் பலத்தைக் கொடுத்துக் கொண்டு அவியாமல் சதா பிரகாசித்துக் கொண்டிருக்கும் என்பது கருத்து.)

இமைப்பிற்பரந்தங் கொடுங்குமின்போல்
நமக்குட் சிவன்செயல் நாடு.

கருத்துரை : இமை கொட்டுகிற நேரத்தில் பரவி உதித்த விடத்தில் மறைந்து விடும் மின்னலைப் போல சரீரத்திற்குள் சிவனுடைய காரியத்தை நீ பார்த்துத்தெளிவையடை. (ஆகாயத்தில் தோன்றி மறையும்

மின்னலைப் போலவே, சிவனுடைய செயலும் நமக்குள் வியாபித்துத் தோன்றி மறைந்து கொண்டிருக்குமென்பது கருத்து.)

குவித்து மனத்தைக் குவித்துள்ளே யோங்கில்
செவித்துப் பெறுவ தெவன்.

கருத்துரை: மனதில் மனனமற்று பிரணவத்தின் மத்திய பாகத்தில் எழும்புங் கலைகளைக் கூட்டி மேலோங்கினால் செபஞ் செய்து அடைவது யாவை?

(ஏகாக்கிர சித்தத்தோடு கலைகளைக்கூட்டி மேலோங்கி நின்றால் அதைவிட மேலானது ஒன்றுமில்லை என்பது கருத்து.)

காலுந்தலையு மொன்றாகக் கலந்திடம்
நாலா நிலையென நாடு.

கருத்துரை: பிராணாபான வாயுக்களும் பிரணவ வுச்சியும் ஒன்றாய்க் கலந்து நின்ற இடம் துரியத்தானம் என்று நீ பார்.

மூல நில மிசை மூன்றா நிலத்தினில்
ஆல மருந்துஞ் சிவம்.

கருத்துரை: தேகத்திற்கு மூலமாகவுள்ள நேத்திரத்திற்குள்ளிருக்கும், மணி பூரகமாகிய நாபிக் கமலத்தில் விஷத்தைச் சாப்பிட்ட சிவன் இருக்கிறான்.

திருமந்திரம்,

மூலத்து மேலது முச்சது ரத்தது
காலொத் திசையிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையினில் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.

என்றும்,

மூலத்து வாரத்து மூளு மொருவனை
மேலைத் துவாரத்தின் மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங் கியோகமாய்
ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே. என்றுங் கூறும்.

எழுஞ்சுடருச்சியின் மேன்மனம் வைக்கத்
தொழிலொன் றிலாத சுடர்.

கருத்துரை: மௌன நிலையிலிருந்து எழும்பும் அக்கினிக் கலையின் உச்சியின் மேற்பாகத்தில், மனதை அதன் மேல் நிறுத்த அசைதலாகிய ஒரு தொழில் இல்லாத அக்கினிக் கொழுந்தாக எரியும் சுடராம்.

(உந்திக் கமலத்திலிருந்து எழும்பும் சுடரின் உச்சியில் மேல் மனம் அசைவற்று நின்றால் சுடரும் அசைவற்ற நிலையில் நிற்குமென்பது கருத்து.)

அடைத்திட்டவாசலின் மேன்மனம் வைத்துப்
படைத்தவன் தன்னையே பார்.

கருத்துரை : மூடியிருக்கும் இருதய குகையின் வாசலின் மீது மனதை வைத்து வெளியில் எழும்பியவனாகிய தன்னையே (அகண்டமாய்) பார்.

அறுபதொடாறு வருட மிதனை
உறுதியதாக வுணர்.

கருத்துரை: சந்திரனின் பதினாறு கலைகளோடு அதைச் செலுத்தும் வழிகளையும் இதை ஒருவருட காலம் வைராக்கியமாகப் பழகி அறிந்து கொள்.

திருமந்திரம்,

முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டி
லணிந்த வணிமாகை தானா மிவனுந்
தணிந்தவம் பஞ்சினுந் தானொய்ய தாகி
மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே. என்றும்,

அட்டமாசித்தி யடையுமோ ராண்டினில்
இட்ட மிதனைத் தெளி.

கருத்துரை: இதை ஏற்படுத்தி யிருக்கிறோம். இவ்விஷயத்தை அறிந் தாயே யானால் ஒருவருஷத்தில் எட்டுவித சித்திகளும் உன்னை வந்து சேரும்.

எட்டுவித சித்தியாவன:

அணிமா, மகிமா, கிரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.

ஒ. சூரிய தரிசனம்

வன்னியதெட்டு மதியம் பதினாறு
முன்னிய பன்னிரண்டு முள்.

கருத்துரை : முதன்மையான சூரியனுக்குப் பனிரெண்டு கலைகளும் அக்கினிக்கு எட்டு கலைகளும் சந்திரனுக்குப் பதினாறு கலைகளும் இருக்கின்றன.

(சூரியனுக்கு 12 கலைகளும், சந்திரனுக்கு 16 கலைகளும், அக்கினிக்கு எட்டு கலைகளு மிருக்கின்றன என்பது கருத்து.)

சூரியன்வன்னியொன் றாகிடிற் சோமனாம்
பாரு மினீது பயன்.

கருத்துரை: சூரியனும், மூலாக்கினியும் ஒன்றாய் கலந்துவிட்டால் சந்திரன் பிரகாசிப்பான். இதனுடைய பிரயோஜனத்தைப் பாருங்கள். (சூரியன், அக்கினியோடு கலந்தபின் சந்திரனுதிப்பான். அந்த ஆநந்தத்தை நீங்களே பார்த்து அறியுங்கள் என்பது கருத்து.)

திருமந்திரம்,

குரவ னுயிர்முச் சொரூபமுங் கைக்கொண்
டரிய பொருண்முத் திரையாகக் கைக்கொண்டு
பெரிய பிரானடி நந்தி பேச்சற்று
வுருகிட வென்னையங் குய்யக்கொண் டானே. என்றார்.

மதியொடு வன்னியொன் றாகவேவந்தால்
கதிரவ னாமென்று காண்.

கருத்துரை : சந்திரனும், அக்கினியும் ஒருரூபமாக எழும்பிக் கலந்தனவானால் சூரியன் பிரகாசிப்பான் என்று பார்த்துக்கொள்.

மதிக்குட் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல்.

கருத்துரை: சந்திரனுக்குள் சூரியன் அக்கினியைக் கலந்து கொண்டு வந்து சந்திரனுடன் கலக்குமாகில் பதினாறு கலைகளோடு கூடிய பருவமென்று சொல்லு.

திருமந்திரம்,

அங்கி மதிகூட வாகுங் கதிரொளி
யங்கி கதிர்கூட வாகு மதியொளி
யங்கி சிவத்தினிற் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே. என்று கூறும்.

தோற்றுங்கதிரவ னுண்மதி புக்கிடில்
சாற்று மமாவாசை தான்.

கருத்துரை: வெளியில் உதித்துத் தோற்றும் சூரியனிடத்தில் சந்திரன் கலந்து விட்டால் உலகோரா லுரைக்கப் படும் அமாவாசை திதியே யாகும். (சரீரத்துக்குள்ளிருக்கும் சூரியனோடு சந்திரன்கலந்துவிட்டால் அமாவாசை ஏற்படும் என்பது கருத்து.)

வன்னி கதிரவன் கூடிடிலத்தகை
பின்னிவை யாகு மெலாம்.

கருத்துரை: அம்மாதிரியாகவே அக்கினியோடு சூரியகலை சேர்ந்தால் பிறகு அமாவாசை பூரணை எல்லாம் தானாகவே ஏற்பட்டுவிடும்.

அமாவாசை பூரணையாகுமவர்க்குச்
சமனா முயிருடம்பு தான்.

கருத்துரை: சூரியனிருக்கும் ராசியில், சந்திரன் சேரும் திதியாகும் அமாவாசையும், சூரியனை விட்டுப் பிரியும் சந்திரன் சூரியனுக்கு ஏழா வது ராசியில் நிற்கும் பூரணையும் அவ்விதமாகச் செய்யும் சாதகர் களுக்குச் சரீரமும் பிராணனும் சமனாக நிற்கும்.

பஞ்சபூதக் கூட்டுறவினால் ஏற்பட்ட சூரிய சந்திரர்களின் கெதி எப்படியுண்டாகிறதோ அவ்விதமாகச் சரீரத்தில் சூரிய சந்திரர்களின் கெதியையும் நடத்தி வந்தால் தேகியும், தேகமும், சமனாய் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதென்பது கருத்து.

அண்டத்திலு மிந்த வாறென் றறிந்திடு
பிண்டத்திலு மதுவே பேசு.

கருத்துரை: ஆகாயத்திலும் இவ்விதமான வழியே என்று அறிந்து கொள். சரீரத்திலும் அந்த கெதிகளையே செய்ய வேண்டியதாம். (உலகத்தில் சூரிய சந்திரர்களின் கூட்டுறவைப் போலவே சரீரத்திலும் சூரிய சந்திரர்களை நடத்த வேண்டுமென்பது கருத்து.)

ஏறுமதிய மிறங்கிடி லூறங்கிடும்
கூறுமப் பூரணை கொள்.

கருத்துரை: (சரீரத்தில்) சூரியனுடன் லயித்திருக்கும் சந்திரனானது கலையை விருத்தி செய்துகொண்டு மேலேறும் வளர்பிறை காலத்திலும் தேய்பிறையாகக் கலைக் குறைவை யடையும் காலத்திலும், சூரியனோடு சம்பந்தப்படுகிற வரையிலுமுள்ள பாகத்தை அந்த வளர்பிறை யாகவே நீ அறிய வேண்டும்.

விளக்கவுரை: சூரியன் சந்திரன் இரண்டும் சேரும் நாள் அமாவாசை யாகவும், பிரிந்த நாள்முதல் மறுபடியும் சேரும் முன்னாள் வரை பருவ மாகவும் கொள்வதற்குக் காரணம் சாதகர்கள் தேய்வுக்கு இடங்கொடுக் காததினால் பூரண கலையோடு சூரியனிடம் சந்திரன் சேருவதால், இரவும் பகலுந் ஒழிந்து, இராப்பகலற்ற இடத்தில் ஆநந்தத்தில் லயிக்க முடியும்.

திருமந்திரம்,

எய்து மதிக்கலை சூக்கத்தி லேறியே
யெய்துவ தூல மிருவகைப் பக்கத்து
ளெய்றுங் கலைபோல வேறி யிறங்குமாந்
துய்யது சூக்கத்துக் காலத்த காயமே. என்றும்,

ஆகின்ற சந்திரன் சூரிய னங்கியு
ளாகின்ற வீரெட்டொ டாறிரண் டீரைந்து
ளேகின்ற வக்கலை யெல்லா மிடைவழி
யாகின்ற யோகி யறிந்த வறிவே. என்றும் கூறும்.

உதிக்கும் மதியமுங் கண்டங் குறங்கில்
மதிக்கு மமாவாசை யாம்.

கருத்துரை: பிரதமையிலுதிக்கும் (அமாவாசையை விட்டுப்பிரியும்) சந்திரனைப் பார்த்து அந்த இடத்தில் பார்வையையும் மனத்தையும் வைத்து தூங்கினால் ஞானிகளினால் மதிக்கப்பட்ட அமாவாசையாகும்.

ஓ. உயர்ஞான தரிசனம்

கொண்டிடுமண்டல மூன்றங்கி தன்னையிப்
பிண்டமு.மூழி பிரியா.

கருத்துரை: சூரியன், சந்திரன், அக்கினியாகிய இந்த மூன்றையும் அக்கினி மண்டலத்தில் கலக்க வைத்து விட்ட அந்த அக்கினியையும் பிண்டமாகிய தேகத்தையும் காலமானது பிரிக்கச் சத்தியற்றுப் போய் விடும்.

வெள்ளி புதனொடு திங்களிடமெனத்
தள்ளுமின் கால சரம்.

கருத்துரை : வெள்ளிக்கிழமையையும், புதன்கிழமையோடு திங்கட் கிழமையையும் காலத்தையும் அதின் பலத்தையும் காட்டும் படியான சரத்தை, இடமிருந்து வலம் பாயும்படியாகச் செய்யுங்கள். (திங்கள், புதன், வெள்ளி இம்மூன்றுநாட்களிலும் சந்திரகலையைப் பிங்கலையில் சேரும்படி கர்மத்தைச் செய்யுங்கள்.)

செவ்வாய் சனிநா யிறுவல மாகவே
கொள்ளிலிவ் வாறிடருமில்.

கருத்துரை: செவ்வாய்க்கிழமையிலும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் வலத்திலிருந்து இடத்தில் பாயும்படி (சூரியகலையை)ச் சந்திரகலை யுடன் செய்கிறவர்களுக்கு ஒரு துக்கமும் உண்டாவதில்லை என்பதாம்.

வளர்பொன் னிடம் பிறைத் தேய்வுவலமா
வளர்பிறை யென்றே மதி.

கருத்துரை: வளர்பிறையில் வியாழக்கிழமையிலும் இடத்திலிருந்து வலத்தில் பாயவும் தேய்பிறையில் வலத்திலிருந்து இடமாகவும் பாய்ச்சி னால் (இவை இரண்டையும்) வளர்பிறையென்றே மதித்துக் கொள்ள வேண்டியது.

வலத்திற் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்து பேராது செயல்.

கருத்துரை: சனிக்கிழமைக்கு மாத்திரம் இரவும் பகலும் சூரியன் தன் னிடத்தை விட்டுப் பிரியாமல் கலையைப் பிரித்துப் பாய்ச்சும் கர்மத்தை வலது பக்கத்தில் செய்து அபான வாயுவையும் (சூரிய கலையோடு) செலுத்திவிடு.

இயங்கும் பகல்வல மிராவிடம் வாயு
தயங்குறல் நாடிக்குட் டான்.

கருத்துரை: குண்டலியாகிய ஓங்கார நாடிக்குள்ளேயே வியாபித்துக் கொண்டிருக்கிற பிராணாபான வாயுக்கள் பகற்காலமெல்லாம் வலது பக்கத்திலும் இராக்காலத்தில் இடது பக்கத்திலும் தயங்கிக் கொண்டிருக்கின்றன.

அரசறியாம லவன்பே ருறைந்துத்
தரைதனை யாண்ட சமன்.

கருத்துரை: அரசன் அவன்தன் உருவம் இப்படிப்பட்ட தென்பதைக் காட்டாமலே அவனுடையபேரை பகிர்முகப்படுத்தி உலகத்தை ஆளுகை செய்து கொண்டிருப்பது இந்த ஆத்ம வித்தைக்குச் சமானமாகும்.

கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடச்
செல்லாத தென்ன செயல்.

கருத்துரை: படிக்காதமூடர்கள் லட்சுமிகரம் பொருந்திய சொருபத்தை அடைய வேண்டி கர்மத்தைச்செய்தால் (கர்மத்தினாலுண்டாகியபலன்) செல்லாதது. ஏன்? செல்லும் என்றபடி.

மூடர்கள் ஆத்ம கர்மத்தைச் செய்ய முற்பட்டால், பதத்தை அடையாமல் தவற மாட்டாாகள் என்பது கருத்து.

திருவருட் பாலைத் தெரிந்து தெளியில்
குருவிருப் பாமென்று கொள்.

கருத்துரை: இந்த அருள்நிறைந்த ஞானக்குறளை (இதன் உட் கருத்தை) அறிந்து தெளிவை யடைந்தால் ஒரு ஞானாசிரியன் வந்து சேர்ந்து விடுவான் என்பதை நீ அறி.

கற்கிலுங் கேட்கிலும் ஞானக் கருத்துற
நிற்கில் பரமவை வீடு.

கருத்துரை: ஞான நூல்களை வாசிப்பதாலும், ஞான வார்த்தைகளை கேட்பதாலும் ஞானத்தை அடைய வேண்டுமென்கிற எண்ணம் உண்டாகி கர்மத்தைச் செய்து நிற்கில் அந்த கர்மங்கள் மோட்சத்தையும் சிவத்தையும் (கொடுத்துவிடும்.)

ஔவைக் குறள் மூலமும் உரையும் முற்றுப் பெற்றன.

பால். 3 பால் 1 - க்கு அதிகாரம் 10

அதிகாரம் 1 - க்கு குறள் 10

ஆக குறள் 300-ம்

உயர்ஞான தரிசனம் 10. ஆக குறள் 310.

கண்ணன் கழலிணை
நண்ணு மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.

திருவடியே துணை
திருச்சிற்றம்பலம்
முற்றும்.

அடுக்குநிலை போதம்

சொல்லிறந்த விடமெங்கே முப்பா ழெங்கே
துவாரபா லகரெங்கே முதற்பா ழெங்கே
நல்லசங்கு நதியெங்கே வைகுந்த மெங்கே
நாரணனும் ஆலிலைமேற் படுத்த தெங்கே
அல்லல்படும் ஐம்பூத மொடுக்க மெங்கே
ஆறஞ்சுயிதழ் ரெண்டு முளைத்த தெங்கே
சொல்லவல்லா ருண்டானா லவரை நாமும்
தொழுதுகுரு வெனப்பணிந்து வணங்க லாமே.

உந்தியெனு நிலையெங்கே அறுகோண மெங்கே
ஓங்கார நிலையெங்கே வுற்றவிடமு மெங்கே
மந்திரமுஞ் சாஸ்திரமும் பிறந்த தெங்கே
மறைநாலும் விரித்தவயன் தானு மெங்கே
முந்திவருங் கணபதியும் பிறந்த தெங்கே
முக்கோண முனையெங்கே யடிதா னெங்கே
இந்தவகை பொருளறிந்து சொல்வார் தம்மை
இறையவனென் றேகருதி யியம்ப லாமே.

பற்பதத்தில் பொங்கிவரும் வழிதா னெங்கே
பரிந்துமுறை கொண்டுநின்ற அறிவு மெங்கே
உற்பனமாங் கருநின்று விளைந்த தெங்கே
யொருபாதந் தாங்கிநின்ற வடையாள மெங்கே
தற்பரமா யாகிநின்ற நிலைதா னெங்கே
சர்வவுயிரா யெடுத்த சிவனு மெங்கே
இப்பொருளை யறிந்துரைக்கும் பெரியோர் தம்மை
இறையவனென் றேகருதி யியம்ப லாமே.

அடிமுடியு நடுவான நிலையு மெங்கே
அறுசுவையுங் கொண்டொளித்த விடமு மெங்கே
வடிவான வைந்தலைமா ணிக்க மெங்கே
வரையான வூமையெனு மெழுத்து மெங்கே
இடமாக ஆடிநின்ற பாத மெங்கே
இச்சையுடன் பேசிநின்ற எழுத்து மெங்கே
அடைவாயிப் பொருளறிந்து சொல்வார் தம்மை
அடிதொழுது குருவென்று நம்ப லாமே.

சற்குருவுஞ் சந்நிதியு மான தெங்கே
சாகாதகா லெங்கே வேகாத் தலையு மெங்கே

முப்பொருளு மொருபொருளாய் நின்ற தெங்கே
முனையெங்கே தலையெங்கே முகமு மெங்கே
நற்கமலமா யிரத்தெட் டிதழு மெங்கே
நாலுகை யொருபாத மான தெங்கே
இப்பொருளை யறிந்துரைக்கும் பெரியோர் தம்மை
இறையவனென் றேகருதி யியம்ப லாமே.

நஞ்சணிந்தான் முகந்தா னைந்து மெங்கே
ஞானக்கண் மற்றக்கண் மூன்று மெங்கே
அஞ்சுவுயிர்தனைக் கொடுக்கும் யேம னெங்கே
வாயிரங்கண் ணிந்திரனார் தாமு மெங்கே
பஞ்சறிவால் நின்றபரா சக்தி யெங்கே
பதினாலு லோகமனு மதுதா னெங்கே
வஞ்சமறப் பொருளறிந்து சொல்வா ராகில்
வணங்கிகுரு பரனென்று வாழ்த்த லாமே.

நகைபிறந்த விடமெங்கே கோப மெங்கே
நரகமே ழாநரக மான தெங்கே
திகைத்து மறந்திடமெங்கே நினைப்பு மெங்கே
தீராத குறைவந்து சூழ்ந்த தெங்கே
பகைத்தவிடத் தானெங்கே ஒழுக்க மெங்கே
பகலிரவு யிருந்தவிடந் தானு மெங்கே
வகைபொருளை யறிந்துரைக்கும் பெரியோர் தம்மை
வணங்கிகுரு பரனென்று வாழ்த்த லாமே.

ஆறுகால் முகமாறு மான தெங்கே
அறுபத்து நாலுகலை நின்ற தெங்கே
சிறுகால் பனிரெண்டிற் கழிந்த தெங்கே
செத்திடமுஞ் சாகாதிருந் திடமு மெங்கே
பூருவநீ யிருந்துவந்துபிறந் திடர்தா னெங்கே
புத்திதனி லன்பத்தோரட் சரமு மெங்கே
வேறு பொருளுரையா துள்ளபடியே சொல்வார்
மெல்லடியிலே பணிந்து மெலிய லாமே.

ஆதிகதிர் சந்திரனும் பிறந்த தெங்கே
அவரொடுங்கி நிற்குமது விடமு மெங்கே
சாதிபல வொன்றாகக் கண்ட தெங்கே
சத்திசிவ மென்றுபிரி யாத தெங்கே
ஓதியுணர்ந் தேபூசை மறந்த தெங்கே
வுச்சிட்ட நிட்டத்தே விடமு மெங்கே

சோதிபோல் ஞானமொரு பெற்ற பேர்கள்
சொல்லிய தெல்லாமுடலிற் சொல்லு வாயே.

இருள்பிறந்த விடமெங்கே ஒடுங்கிடமு மெங்கே
இரண்டுதிரு சங்குநின்ற விடமு மெங்கே
அருள்பிறந்து பாடிநின்ற விடமு மெங்கே
அறுத்தடைந்த வாசலொன்று கண்ட தெங்கே
திருப்பிறந்த விடமெங்கே எழுகிணறு மெங்கே
திருக்கிணத்தை யெறைக்கின்ற ஏத்த மெங்கே
விருப்பமுட னடுக்குநிலை போத கத்தை
விளம்பினோம் மெய்ஞ்ஞான அறிவு ளோர்க்கே.

அகத்தியர் அருளிய
அடுக்கு நிலை போதம் முற்றிற்று.

உபநிடதமும் ஒளிவழிபாடும்

தொன்மைக் காலப் புனித நூல்களாகிய ஞானநூல்களில், பாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களும், திருக்குறள், திருமந்திரம் சித்தர் நூல்கள் போன்றவைகளோடு, பகவத் கீதை, உபநிடதங்கள் (ஞானோபதேசம்) உண்மையில் ஆத்மாவின் இமயங்கள் எனலாம். நமது உணர்வு நிலையின் ஒளியையும், நம் உயிர்த்தீயையும் எவரிட மிருந்து பெற்றுள்ளோமோ, அப்பரம்பொருள் ஞாயிற்றைக் கண்டு கொள்ள ஞானியர்கள் மேற்கொள்ளும் தாபமிக்க அலைச்சல்கள், அவர் கேட்கும் கேள்விகளின் பெருமைதரும் பதில்களில் மிளிரும் மகத்தான எளிமை, உன்னதப்பொருளின் வெளிப்பாடு அவரகம் வரும்போது அவர்கள் உள்ளத்தில் எழும் ஒளிவெள்ளப் பேரின்பம் அவர்களுள் ஒரு கவிஞரால் ஆதவனின் ஒளியும் என்னொளியே என்று பாட முடிகிறது. அவர்தம் முரண்பட்ட கருத்துக்களில் இலங்கும், நம்மால் காணவல்ல ''வாழும் உண்மை'' அவர்தம் எளிய கதைகளைக் கொண்டு உறுதி யான உதாரணங்களோடு மாபெரும் தத்துவ உபதேச உண்மைகளை ஒரு குழந்தையின் மொழியில் வினா விடை மூலம் தருமராஜன், நசி கேசனுக்கு விளக்குதல்.

நமது உள்ளத்து உலகின் முடிவிலாப் பெருநிலையை வெளிப்படுத் தும் அவர்தம் 'காட்சியாம் ஒளிக்கோலங்கள்', அவற்றில் காணும் மகத் தான பல்வேறுபட்ட பன்மைகள் இருப்பினும், பரம்பொருள் பற்றிய கொள்கையில் மயிர் கூச்சும் அவர் தம் முழுமையான ஏகநிலை, பிரபஞ்சப் பெரும் பொருளோடு தானாகிய, 'மனித ஆத்மா' அல்லது ஜீவாத்மாவில் அவர்கள் கொண்டுள்ள கைகொடுத்து உயர்த் தும் அனையா நம்பிக்கை, அவர்கள் காட்டும் வேத சகிப்புத்தன்மை, ஆங்கு அவர்கள் தரும் ஆத்மீக விளக்கம் புறக்கிரியைகளுக்குக் குறி யிட்டு விளக்கம் சொல்லும் உயர்வு-வருங்காலங்களில் தோன்றும் மாந் தரின் அத்மீக உயர்வுக்கு அவர் காட்டும் மெய்வழி, உன்னதமான மனவியல் மற்றும் தத்துவக் கொள்கைகளின் வாயிலாக ஒலித்துக் கொண்டிருக்கும். அளப்பரிய ஒத்திசையும் நிலைகள், ஒளிநாடித்தேடும் பலதிறப்பட்ட வெவ்வேறு மனங்களைத் திருப்திப்படுத்தவல்ல அவர்தம் ஆத்ம ஞானம், அவர்தம் உவமைகள், மற்றும் உருவகங்கள், இவை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும், உப நிடதங்கள் பற்றிக் கேள்விப்பட்டவர்களாலும் ஞானியராலும் அருளப் பட்டும், நாம் ஆத்மீக வாழ்க்கையில், ஆத்மீக காட்சிகளாகிய, ஆன்ம ஒளியை (பரத்தை) ஜீவஒளியை, அடையும் உபதேச உண்மைகளை 'ஒளிவழிபாடு' மூலமாக அடையும் மெய்வழியை, ''உபநிடதம்'' 'குரு வின் முன் அமர்ந்து பெறுதல்' என்றும், கிரியையைவிட்டு, ஞான

விளக்கம் பெறுவதை உபநிடதங்கள் விளக்குகின்றன. மேலும் நம் முன்னோர்கள் கண் இருக்கும் போதே சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும் என்பதின் உண்மையும், மெய்யுணர்வு பெற்ற நசிகேதன், பால்தர இயலாத அளவுக்கு, புல் கூடத்தின்ன முடியாத நிலைமைக்கு, வந்து விட்ட நீர் அருந்தக் கூட இயலாத சக்தியற்றுப்போன கீழ்ப்பசுக்களைத் தரும் இந்தவரிய ஈகை நிச்சயம் ஒரு துன்பம் நிறைந்த உலகினுக்கே இட்டுச் செல்லும் என்பதனை உணர்ந்து,

அனைத்து சக்திகளையும் உடைய இளையவன் தன்னையே வேள்விப் படையலாக அர்ப்பணித்து விட முனைந்தான். இதன் அடிப்படை ஞானப்பொருள் என்னவெனில், மானிடன் மேற்கூறிய சக்தியற்ற பசுக்களைத் தானம் செய்து பரத்தையடைய முடியாது என்பதனையும், நாம் சக்தியுள்ள (பசுவாக-ஜீவனாக) இருக்கும் போது வேள்வியின் மூலம் (தியானம்) பரத்தை அடைய முடியும் என்பதனை உலகிற்கு உணர்த்தும் பொருட்டே காலதேவனின் கண்முன் அமர்ந்து உண்மை ஞான தீபத்தை அடையப் பெற்ற உபதேசமே உபநிடதமாகும். அவனுடைய இரக்க உணர்வே மோட்சத்தின் திறவுகோல் என்பதாகும்.

அறிவை (மெய்யைச் சுட்டும் உபநிடதங்கள்).

மனத்தை மிகத் தொலைவில் அலைய விட்டவன் யார்? உயிரை அதன் பயணத்தில் முதன்முதலில் முடுக்கி விட்டது யார்? யாருடைய திருவுளத்தால் நாம் இவ்வார்த்தைகளை இயம்புகின்றோம்? நம் கண்களையும் காதுகளையும் இயக்குகின்ற அந்தப் பரம்பொருள் யாது?

அதுவே செவியின் செவி; மனத்தின் மனம்; வார்த்தைகளின் வார்த்தை; உயிரின் உயிர்; கண்ணின் கண். ஆத்மாவைப் பிரித்தறிந்தோராய் பொறிகளும் மனமும் தாம் அது என்று கொள்ளும் பொய்யான கொள்கையை விடுத்து, ஆத்மாவே பிரம்மன் என அறிந்தோராய் - இவ்வுலகைத் துறந்த ஞானியர் அமரத்துவம் எய்துகின்றனர்.

கண்ணோ, மொழியோ அன்றி மனமோ அங்கே செல்வதில்லை. அதனை நாம் அறியோம்; நாம் அறிய முடியாது, எவர் அதனை எங்ஙனம் கற்பிக்க முடியும். அறியப்படுவனவற்றினின்றும் வேறுபட்டது அது. அறியப்படாதனவற்றினின்றும் வேறுபட்டது அது - எமக்கு இந்த உண்மையை உபதேசம் செய்து விளக்கிய தொன்மைக் காலத்து ஞானியர்களிடமிருந்து யாம் இவ்வண்ணமே கேட்டுத் தெரிந்து கொண்டோம்.

எதனை வார்த்தைகளால் பேச முடியாதோ, ஆனால் எதனால் வார்த்தைகள் பேசப்படுகின்றனவோ அதுவே பிரம்மன் என்றறிக. இவ்

வுலகத்தாரால் இங்கே எது தொழுது வழிபடப் படுகின்றதோ அது பிரம்மன் இல்லை.

எதனை மனத்தால் நினைக்க இயலாதோ, ஆனால், எதனால் மனம் நினைக்கின்றதோ அதுவே பிரம்மன் என்றறிக. இவ்வுலகத் தோரால் இங்கே எது தொழுது வழிபடப்படுகின்றதோ அது பிரம்மன் இல்லை.

எதனைக் கண்ணால் பார்க்க முடியாதோ ஆனால், எதனால் கண் பார்க்கின்றதோ அதுவே பிரம்மன் என்றறிக. இவ்வுலகத்தாரால் இங்கே எது தொழுது வழிபடப் படுகின்றதோ அது பிரம்மன் இல்லை.

எதனைச் செவியால் கேட்க இயலாதோ, ஆனால், எதனால் செவி கேட்கின்றதோ அதுவே பிரம்மன் என்றறிக. இவ்வுலகத்தாரால் இங்கே எது தொழுது வழிபடப்படுகின்றதோ அது பிரம்மன் இல்லை.

எதனை மூச்சால் உள்ளிழுக்க முடியாதோ, ஆனால் எதனால் மூச்சு உள்ளிழுக்கப்படுகின்றதோ அதுவே பிரம்மன் என்றறிக. இவ்வுலகத் தாரால் இங்கே எது தொழுது வழிபடப்படுகின்றதோ அது பிரம்மன் இல்லை.

மரண தேவன்: பேரின்பத்திற்கான பாதை ஆங்குண்டு. பொறிகளால் அனுபவிக்கும் இன்பத்துக்கான பாதையும் உண்டு. இரண்டும் ஆத்மாவைக் கவர்ந்திழுக்கின்றன. முன்னதைப் பின் பற்றுவோன் நன்மையை எய்துகிறன். ஆனால் பொறிகளின் இன்பத்தைப் பின் தொடர்வோன் இறுதிப் பயனை எய்துவதில்லை.

இரண்டு பாதைகளும் மனிதனுக்கு முன்னர் இருப்பனவே. அவைகளைப்பற்றி நன்கு சிந்தனை செய்து ஆராய்ந்து. பேரின்பத்துக்கான பாதையை, ஞானி தேர்ந்தெடுக்கின்றான். மூடனோ பொறிகளின் இன்பத்துக்கான பாதையில் போகிறான்.

நசிகேதா, மகிழ்ச்சியானவை போலத் தோன்றும் பொறிகளின் இன்பங்களைப் பற்றி சிந்தித்திருக்கிறாய், அதனால் அவற்றைமறுத்து விட்டாய்! எதனைக் கொண்டு மானிடர் தம்மைத் தளைப்படுத்துகின்றார்களோ, இன்னும் எதனடியில் அவர்கள் மூழ்குகின்றார்களோ, உடைமைகள் என்னும் அந்தச் சங்கிலித் தொடரினை நீ ஏற்றுக் கொள்ளவில்லை.

அறிவு எனும் பாதை ஆங்குண்டு. உடன், அறியாமை எனும் பாதையும் உண்டு. அவைகள் ஒன்றுக்கொன்று மிகத்தொலைவில் உள்ளவை. வெவ்வேறு முடிவுகளுக்கு இட்டுச் செல்பவை. நசிகேதா, பற்பல இன்பங்களும் நின்னைக் கவர்ந்து பற்றவில்லை, எனவே, நீ ஞானப் பாதையைப் பின்பற்றுகிறாய்!

அறியாமையின் நடுவில் நிலை கொண்டோராய், அறிஞரெனவும் கல்விமான்களெனவும் தம்மைப் பற்றி நினைப்புக் கொண்டோராய், குருடரால் வழிநடத்திச் செல்லப்படும் குருடரைப் போலக் குறிக்கோளேதுமின்றி, மூடர் துன்பங்கள் நிறைந்த பல்வேறு பாதைகளின் வழியாக இங்குமங்கும் சுழன்று சுழன்று அலைகின்றனர்.

எண்ணவிசாரமில்லாது, விவேகமற்ற சிறுபிள்ளைத்தனமாக நாளைக் கடத்துபவர்கள், கவனமில்லாதவர்கள், செல்வத்தால் மயக்கமடைந்தவர்கள் என்னும் இத்தகையவர்களுக்கு இவ்வாழ்கைக்கு அப்பால் உள்ள உறுபொருள் புலப்படுவதில்லை. இந்த உலகம் ஒன்று தான் உண்டு வேறொன்று இல்லவே இல்லை என்றே அவர்கள் சொல்கின்றனர்! இவ்வண்ணமாக அவர்கள் மரணத்திலிருந்து மரணத்திற்கே அவர்கள் மீண்டும் மீண்டும் அலைந்தேகுகின்றனர்.

ஆத்மாவைப் பற்றிக் கேட்போர் அநேகரில்லை. அப்படிக் கேட்போருள்ளும் ஆத்மாவை அடைவோர் அநேகரில்லை. ஆத்மாவைப் பற்றிப் போதிக்கக் கூடியவன் வியக்கத்தக்கவன்! எவன் போதிக்கப்படுகின்றானோ அவன் அறிவுள்ளவன். போதிக்கப்படும் போது அவனை அறிகின்றவன் வியக்கத்தக்கவன்.

ஆத்மாவை எய்தாத ஒருவனால் ஆத்மாவைப் பற்றிப் போதித்தல் இயலாது! மிக அதிகமான சிந்தனையால் அதனை எய்த முடியாது. ஆத்மாவைக் கண்ட ஞானகுருவின் வழியாகச் செல்லுதலே அதனை எய்தும் வழியாகும். மிக உயர்ந்த எண்ணங்களையெல்லாம்விட ஆத்மா உயர்வானது; உண்மையில் எல்லாஎண்ணங்களுக்கும் அப்பாலுள்ளது.

இப்புனித ஞானம் பகுத்தறிவால் எய்தப்படுவது இல்லை. ஆனால் உண்மையான நல்லாசிரியரால் இதனைத் தர இயலும். உன்னுடைய குறிக்கோள் உறுதியானது. எனவே, நீ ஆத்மாவைக் கண்டு கொண்டாய். உன்னைப் போன்ற இன்னொரு மாணவனை என்னால் காண இயலுமோ!

பொருட்களின் மர்மங்களிலும் மனித இதயத்திலும் கண்ணுக்குப் புலனாகாது வாழ்கின்ற, காலத்திற்கப்பாற்பட்ட பரம்பொருள் மீது

செய்யும் தியானத்தில் தன்மனத்தை அறிஞன் எப்பொழுது நிலைநிறுத்துகிறானோ அப்பொழுது அவன் இன்ப துன்பங்களுக்கப்பால் எழுந்து நிற்கிறான்.

கேட்டுப் புரிந்து, இயல்பைக் கண்டு பிடித்து, அடியாழத்திலுறை பவனை ஒரு மனிதன் எப்பொழுது எய்துகின்றானோ அப்பொழுது அவன் பேரின்ப மூலத்தில் பேரின்பம் காண்கின்றான். ஆத்மாவுக்காக உன்னுள் கோயில் கொண்டுள்ள கடவுளுக்காகத் திறந்து வைக்கப் பட்ட வீடு தான் நசிகேதனம்.

நசிகேதன்: நல்வினை தீவினை என்னும் இவற்றிற்கப்பால், செய்யப்பட்டது செய்யப்படாதது என்னும் இவற்றிற்கப்பால், கடந்தது இனி வரப்போவது என்னும் இவற்றிற்கப்பால் நீங்கள் எதனைக் காண்கிறீர்கள் என்பதை எனக்குச் சொல்லுங்கள்.

மரண தேவன்: எதனை வேதங்களெல்லாம் புகழ்ந்தேத்துகின்றனவோ, தன்னைத் தியாகம் செய்தியற்றும் வேள்விகளெல்லாம் எதனைப் போற்றுகின்றனவோ, புனிதமான மறை நூற்கல்விகளும் இன்னும் பரிசுத்தமான தூயவாழ்க்கையும் எதனைத் தேடுகின்றனவோ அதனை, அப்புனிதச் சொல்லை, உனக்குநான் இயம்புவேன். அதுவே ''ஓம்'' என்பதாம்.

அந்த வார்த்தையே என்றுமுள்ள பிரம்மன்; அந்த வார்த்தையே அதி உன்னதமான இறுதி அந்தப்புனித வார்த்தையை அறியும் போது எல்லா விருப்பங்களும் நிறைவேறுகின்றன.

மிகச்சிறிய அணுவுக்கும் சிறியதும், அளப்பரிய மிகப்பெரிய அண்ட வெளிகளினும் பெரியதுமான ஆத்மா-பரம்பொருள் எல்லா உயிர்களின் இதயங்களிலும் மறை பொருளாய் வாழ்கின்றான். தன் உள்ளத்துக் கோட்பாடுகளைச் சரண்செய்கின்ற மானிடன் துன்பங்களைக் களைகின்றான். படைப்பாளியின் பேரருளால் ஆத்மாவின் மகிமையைக் காண்கின்றான்.

நிலையில் அசையாதிருந்து கொண்டே, அவன் மிகத்தொலைவில் அலைந்து திரிகிறான். துயிலில் நிலை கொண்டே அவன் எல்லா இடங்களுக்கும் போகின்றான். தன்னுள் குடிகொண்டுள்ள ஆத்மாதவிர வேறெதனால் இன்ப துன்பங்களுக்கதிபதியான அந்த இறைவனை அறியஇயலும்.

காண்பனவற்றுள் காணவியலாதவனாகவும், நிலையில்லாதனவற்றுள் நிலையானவனாகவும் நிலைகொண்டுள்ளவரான, எங்கும்நீக்கமற

நிறைந்துள்ள பரமாத்மாவை, எப்பொழுது அறிஞர் உணர்கின்றனரோ அப்பொழுது, துன்பத்திற் கப்பாலுள்ள நிலையை அவர்கள் எய்துகின்றனர்.

மிக அதிகமான கல்வியால் ஆத்மன் அடையப்படுவது இல்லை. மதி நுட்பத்தாலும் புனித போதனையாலும் அவனை எய்த இயலாது. அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் மட்டுமே அவனை எய்த இயலும். ஏனெனில், அவர்களும் அவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தான் தேர்ந்தவருக்குத் தன் மகிமையை, ஆத்மன் வெளிப்படுத்துகின்றான்.

தீய வழிகளைக் கைவிட்டாலொழிய, பொறிகளில் ஓர் ஓய்வு இருந்தாலொழிய, மனதில் ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையும், இதயத்தில் அமைதியும் இருந்தாலொழிய, மிக ஆழ்ந்த அறிவாலும் ஆத்மனை எய்த முடியாது.

உடலினுள் பகுத்தறிவில், இதயத்தின் ஒப்பற்ற வான்வெளியில், உள்ளத்தின் மிக உன்னதமான மறைவிடத்தில், உண்மையெனும் உலகில் வாழ்க்கை அமுதினைப் பருகுகின்ற இரண்டு - தமது சொந்த கர்மாக்களின் நிச்சயமான பலாபலன்களை அனுபவிக்கின்ற ஜீவாத்மா பரமாத்மா உள்ளன. பிரம்மனை அறிவோரும், ஐந்து புனிதத்தீக்களை வளர்ப்போரும் மூன்று முறை முந்நிலைப்பட்ட நசிகேத வேள்வி செய்வோரும் 'ஒளியும் நிழலும்' என அவற்றை அழைக்கின்றனர்.

துன்பம் நிறைந்த உலகைக் கடக்க உதவும் பாலமாயுள்ள நசிகேத வேள்வியை நாம் செய்வோமாக. விடுதலை நாடுவோருக்கு இறுதிப் பயனாகவும், புகலிடமாகவும் இருப்பவரை, அச்சம் என்பதே யில்லாத அழிவில்லாத பிரம்மனை நாம் அறிவோமாக.

ஒரு தேரின் தலைவனாக ஆத்மனை அறிக. உடலே தேரெனவும் பகுத்தறிவு தேரோட்டி எனவும், மனம் கடிவாளங்கள் எனவும் தெளிக.

எவனுடைய தேர் பகுத்தறிவால் செலுத்தப்படுகின்றதோ, எவன் கண்ணும் கருத்துமாயிருந்து தனது மனத்தின் கடிவாளங்களைத் தன் ஆளுகையில் வைத்திருக்கின்றானோ, அவனே பயணத்தின் இறுதியை, எங்கும் வியாபித்திருக்கும் விஷ்ணுவின் உயிரிடத்தை எய்துகின்றான்.

பொறிகளுக்கப்பால் புலன்களும், புலன்களுக்கப்பால் மனமும், மனத்திற்கப்பால் பகுத்தறிவும் இலங்குகின்றன. பகுத்தறிவுக்கப்பால் மனிதனிடம் உள்ள ஜீவன் விளங்குகின்றது.

மனிதனிடம் உள்ள ஜீவனுக்கப்பால் பிரபஞ்சத்தின் உறுபொருள் இருக்கிறது. அதற்கும்அப்பால் புருஷன்-பரமாத்மா விளங்குகின்றான். புருஷனுக்கப்பால் வேறு எதுவுமேயில்லை. அவனே பாதையின் இறுதிப்பயன்.

ஆத்மாவின் ஒளி எல்லா உயிர்களுக்குள்ளும் மறைத்து வைக்கப் பட்டுக் காணவியலா நிலையில் மிளிர்கின்றது. நுண்மைப் பொருளைக் காணவல்ல அறிஞர்கள் தமது காட்சி ஒருமுகப்படுத்தப்பட்டுத் தெள்ளிய தாயிருக்கும் போழ்து ஆத்மாவைக் காண்கின்றனர்.

பேச்சை மனத்திலும் மனத்தைப் பகுத்தறிவிலும், பகுத்தறிவைப் பிரபஞ்சத்துப் பெரும் பொருளிலும் பிரபஞ்சத்துப் பெரும் பொருளை அமைதியே உருவான பரமாத்மாவிலும், அறிஞர் சரண்செய்யக்கடவர்.

எழுமின், விழிமின், உன்னதம் எய்த அயராதுழைமின்; ஒளியினில் நிலைமின். இப்பாதை மிகவும் ஒடுக்கமானது. பின்பற்றுவதற்கு மிக அரிது 'கத்தி முனையைப்போன்று கூர்மையானது' என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.

ஆத்மா ஒலியும், உருவமும் இல்லாதது; தொட்டுணர முடியாதது; ருசியறிய வியலாதது; மணம் இல்லாதது; அழிவற்றது; மாற்ற முடியா தது; தொடக்கமோ இறுதியோ இல்லாதது; பகுத்தறிவுக்கப்பால் உள்ளது. ஆத்மாவின் உணர்வுநிலை, தன்னைத்தான் வெளிப்படுத் தும் போது, மனிதன், மரணத்தினின்றும் விடுதலை பெறுகின்றான்.

மரணதேவன்; படைப்புக்கடவுள், பொறிகளைப் புறத்தே செல்லும் படியாகப் படைத்தார்: புறத்தே உள்ள பொருள் உலகிற்கே அவை ஏகுகின்றன; உள்ளுறையும் ஆத்மாவிடம் செல்வதில்லை. ஆனால் அமரநிலை தேடிய அறிஞர் ஒருவர் தனதுஉள்ளத்தினுள் பார்வையைச் செலுத்தி ஆத்மாவைக் கண்டு கொண்டார்.

எதன்மூலம் நாம்வண்ணங்களையும், ஒலிகளையும், நறுமணங்களை யும், காதல் முத்தங்களையும் உணருகின்றோமோ, எதனருளால் மாத் திரம் நாம் ஞானம் எய்துகின்றோமோ, உண்மையில் எதன் உதவியால் நாம் எதையும் அறியவியலுமோ, இது உண்மையில் அதுவே.

நம்மிடமுள்ளதும், உயர்ந்ததும், எல்லாவற்றையும் வியாபித்திருப் பதுமான ஆத்மாவின் வாயிலாகத் தான் விழிப்பிலும், கனவிலும் நாம் உணர்வு நிலையோடு கூடியிருக்கின்றோம் என்பதையறியும் அறிஞர் துன்பமிலா நிலையை எய்துகின்றார்.

தண்ணீரெல்லாம்தோன்றுவதற்கு முன்னர்,ஆதியில் தன்எண்ணத் தீயினின்று பிறந்தவரும், இதயத்தில்நுழைந்து, மூலகங்களோடுறை பவருமான படைப்பின் தேவன் - இது உண்மையில் அதுவே.

அக்னி ஒரு தாயின் வயிற்றில் வளரும் கருவைப் போல், புனித வேள்விகளின் போது தீக்கடையப் பயன்படும். இரு தீக்கடைக் கோல் களினுள் மறைந்துறைபவரும், எல்லாம் அறிந்தவரும், ஞானவழியைப் பின் தொடர்வோர்கள், கர்ம வழியைப் பின்பற்றுவோர்கள் - என்னும் இவர்களின் காலை வழிபாடுகளை ஏற்றுக் கொள்பவருமான நெருப்புத் தெய்வம் - இது உண்மையில் அதுவே.

எதனில் உதயசூரியன் பிறந்து வருகின்றனனோ, மீண்டும் எத னுள்ளே அவன் சென்று மறைகின்றனனோ, எதனில் எல்லாத் தேவர் களும், அவர்தம் தோற்றத்தைப் பெற்றிருக்கின்றனரோ, மற்றும் எதற் கப்பால் எம்மனிதனும் போக முடியாதோ - இது உண்மையில் அதுவே.

மனத்தாலும் இவ்வுண்மை கற்றிடல் வேண்டும்; தெய்வங்கள் பல இல்லை - ஒன்றுதான். அதனைப் பலவாய்க்கண்டு, ஒன்றாய்அதனைக் காணாதார் மரணத்தினின்றும் மீண்டும் மரணத்திற்கே அலைந்து திரி கின்றனர் - இது உண்மையில் அதுவே.

கட்டைவிரல் அளவில் ஒரு தீச்சுடராய், ஆத்மா நம்முள்ளே வாழ் கின்றது: கடந்தது, வருவது எனுமிவற்றின் தலைவனாய் அதனை அறியும் போது அச்சங்களெல்லாம் நீங்குகின்றன - இது உண்மையில் அதுவே.

புகையில்லாதவோர் தீச்சுடர் போல், கட்டை விரல் அளவில் மிளிர் வது ஆத்மா, கடந்த காலம் வருங்காலம் - எனும் காலங்களின் தலைவன், இன்றும் நாளையும் மாறாத ஒரே நிலையினன் - இது உண்மையில் அதுவே.

ஆத்மாவை உடலோடு தளைப்படுத்தும் கட்டுகள் அவிழ்த்து எறியப்படும் பொழுது, எஞ்சியிருப்பது என்ன? இது உண்மையில் அதுவே.

அழியும் இயல்புடையமனிதனின் உயிர்வாழ்வாவது உள்ளிழுக்கும் மூச்சு, வெளிவிடும் மூச்சு என்னும் மூச்சுக்களின் மூலமாக அல்ல. அவனது வாழ்க்கையின் மூலகாரணமாயிருப்பது பிறிதொன்றே. அந்த ஒன்றுதான் மூச்சு ஓடுவதற்கே காரணமாயிருப்பது.

கௌதமா, அழிவிலாப்பிரம்மனைப்பற்றிய மர்மம் பற்றியும்இறப்பினுக்குப் பின்னர் ஆத்மாவுக்கு என்ன நேர்கிறது என்பது பற்றியும் உன்னிடம் நான் பேசுவேன்.

ஆத்மா ஒருதாயின் கருப்பையை அடையலாம். இவ்வண்ணம் அது ஒரு புதிய உடலை எய்தலாம். அல்லது அதன் முந்தைய அறிவுக்கும் செயலுக்கும்மியைய அது மரங்கள் அல்லது செடிகளினுள்ளுங் கூடப் போய்ச் சேரலாம்.

நமது துயிலின்போது விழித்திருப்பதும் இன்னும் அத்துயிலின் கண் கனவுகளாம் வியப்பை நிகழ்த்துவதுமான ஆத்மன் ஒன்று உண்டு அவனே தூயோன். அவனே பிரம்மன். அவனே உண்மையில் அழிவிலாப் பெருவாழ்வு என்று அழைக்கப்படுகிறான். எல்லா உலகங்களும் அந்தப் பரமாத்மாவில் தான் நிலை கொண்டிருக்கின்றான். அவனிலைக்கு அப்பால்செல்லவல்லார் எவருமிலர்-இது உண்மையில் அதுவே.

உலகைக் காணும் சூரியன், தன்னைக் காணும் உலகின் தூய்மையின்மையால் தீண்டடப்படுவதில்லை. இது போலவே எல்லாவற்றுள்ளும் கோயில் கொண்டு வாழும் ஒரே ஆத்மா, புறத்துயரங்களாய் தீண்டப்படுவதில்லை.

ஒரு தலைவன் இருக்கிறான். அவன் ஒருவன் எல்லாவற்றுள்ளும் நிலைகொண்டிலங்கும் பரம்பொருள். அவனே தன் சொந்த வடிவத்தைப் பல வடிவங்களாக மாற்றிக் கொள்கிறான். தம் ஆத்மாவிஃப் அவனைக்காணும் அறிஞர் மட்டுமே அழிவிலாப் பேரின்பம் எய்துகின்றனர்.

நிலையில்லாத பொருள்களுக்கு நடுவில் அவன் நித்யனாகத் திகழ்கின்றான். உணர்வோடு கூடிய உயிர்களின் தூய உணர்வு நிலை அவன்; பலர் பிரார்த்தனைகளை நிறை வேற்றும் ஒருவன். தம் ஆத்மாவில் அவனனக் காணும் அறிஞர் மட்டுமே அழிவிலாப் பேரமைதி எய்துகின்றனர்.

நசிகேதன்! 'இது அதுவே' இவ்வாறுஅவர்கள்சொற்களால்இயம்பவொண்ணா உன்னதப் பேரின்பம் உணர்கின்றனர். இதனை எங்ஙனம் அறியமுடியும்? அது, தானே ஒளிர்கின்றதா? அல்லது மற்றொன்றின் ஒளி பெற்று மிளிர்கின்றதா?

மரணதேவன்; சூரியனோ சந்திரனோ அல்லது விண்மீன்களோ ஆங்கே ஒளிர்வதில்லை. மின்னல்கள் ஆங்கேஒளிர்வதில்லை. வையத்து நெருப்புகள் அதனினும் இல்லை. அவன் ஒளிதருகின்றான். அவன் ஒளி

யினின்றே இவையனைத்தும், ஒளி தருகின்றன! அவனது பேரொளி தான் படைப்பனைத்தையும் மிளிரச் செய்கின்றது.

அழிவின்மை என்னுமோர் அசுவத்தமரம் உயிரே விண்ணில், அதன் வேர்களைக் கொண்டிருக்கிறது. அதன் கிளைகள் கீழே மண்ணுலகம் வரை பரந்திருக்கின்றன. அதுவே பிரம்மம்; ஒளிசான்ற தூய பரம் பொருள்; அதுவே அமர நிலை; உலகம் யாவையும் அப்பரம்பொருளில் தான் நிலைகொண்டிருக்கின்றன. அப்பொளுக்கப்பால் யாரும் செல்ல முடியாது - இது உண்மையில் அதுவே.

உடலினின்றும் உயிர் நீங்குவதற்கு முன்னால் இப்பிறவியிலேயே ஒருவன் அவனைக்காண வல்லானாயின், அத்தகையவன் பிறப்பு இறப்பு எனும் அடிமைத்தளையினின்றும் விடுதலை எய்துகின்றான். இல்லையேல், அவன் புது உலகங்களிலும், புதுச் சிருஷ்டிகளிலும் மறுபடியும் மறுபடியும் பிறந்து இறக்கின்றான்.

அவனது வடிவம் கண்ணுக்குத் தோன்றும் ஒரு பொருள் வடிவில் உள்ளது அல்ல. அழியும் இயல்புடைய கண்களால் யாரும் அவனைக் காண வியலாது! தூய இதயத்தால், மாசிலா மனத்தால், தூயஎண்ணங் களால் மட்டுமே அவன் அறியப்படுகின்றான். அவனை அறிந்தோர் அமர வாழ்வெய்துகின்றனர்.

ஐம்பொறிகளும், மனமும் மோனத்தால் அடங்கி அமைதியெய்த பகுத்தறிவு நிலைகொள்ளும் பொழுது மேலான பாதை - பரகதி - தொடங்கும்.

பொறிகளின் அமைதி நிறைந்த இவ்வுறுதிப்பாடே 'யோகம்' எனப் படுகிறது. யோகத்தை அடையவும் இயலும், இழக்கவும்நேரும். எனவே மானிடன் எப்போதும் விழிப் போடிருத்தல் வேண்டும்.

சொற்களும், எண்ணங்களும் ஆத்மாவை எய்துதல் இல்லை! கண் ணும் அவனைக் காணுதல் இல்லை. அவன் இருக்கின்றான் என உணர்ந்து சொல்வோனால் அன்றிப் பின் ஆத்மாவை எங்ஙனம் உணர்தல் இயலும்.

அவன் இருக்கிறான் எனக் காணும் போது அவனது இயல்பின் வெளிப்பாடு ஒளிர்ந்து மிளிரும். அவன் இருக்கிறான் எனும் நம்பிக்கை யில் அவனது உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அவனை- அவனது இயல்பில் - அனைத்திற்கும் அப்பாற்பட்டுள்ள அவனது உண்மை நிலையில் உணர வேண்டும்.

இதயத்தை இறுகப் பற்றியிருக்கும் எல்லா ஆசைகளையும் நீத்து விடும்பொழுது அழியும் வாழ்வுடை மானிடன் அழிவிலாப் பெருவாழ்வு எய்துகின்றான். இவ்வுலகிலேயே அவன் பிரம்மனோடு ஒன்றுகின்றான்

இதயத்தைப் பிணித்துள்ள கட்டுக்கள் அனைத்தையும் அவிழ்த்து எறியும் பொழுது, அழியும் வாழ்வுடை மானிடன் அழிவிலாப் பெரு வாழ்வு எய்துகின்றான். இதுவே புனித போதனை.

நூற்றியொரு நுண்ணிய வழிகள் - இதயத்தினின்றும் பிறந்து வருவன. அவைகளில் ஒன்று தலையின் உச்சிக்கு மூளையிலுள்ள ஆயிரம் இதழ்த்தாமரையை நோக்கி எழுந்துசெல்கிறது! அமரநிலைக்கு அழைத்துச் செல்லும் பாதை இதுதான். பிற பாதைகள் வெவ்வேறு முடிவுகளுக்கு இட்டுச் செல்வன.

என்றும் எல்லா வுயிர்களுள்ளும் கோயில் கொண்டு வாழ்வது ஆத்மன் புருஷன் தான்; இதயத்தில் மிளிரும் சிறிய ஜோதிப் பட்டையி னின்றும், உள்ளுள்ள தண்டொன்று உரித்தெடுக்கப்படுவதைப் போல, உண்மையைத் தேடும் உறுதியாளன் ஆத்மாவைத் தன் உடலினின்றும் பிரித்தெடுக்கக்கடவன். இத்தூய அழிவிலாப் பேரொளியை அறிக. இத்தூய அழிவிலாப் பேரொளியை உண்மையில் அறிக.

உயிரே எரியும் தீ! உயிரே ஒளி தரும் சூரியன்! காற்றும் மழையும் வானத்து இடியும் உயிரே! உயிரே மண்ணும்! உயிரேபொருளும்! உள்ள தும் உயிரே! இல்லதும் உயிரே! அப்பால் அமர நிலையில் இருப்பதும் உயிரே!

'உயிரே! வானின்றும் நீ மழையைப் பொழியும் பொழுது, உனது உயிர்கள் யாவும் மகிழ்ந்து களிக்கின்றன. எமக்கு வேண்டிய உணவு, வேண்டிய அளவு கிடைக்கும்' என்றவை சொல்கின்றன.

உயிரே, தூயோன் நீ! உன்னத ஞானி நீ! அனைத்துக்கும் தலை வன் நீ! அனைத்தையும் அழிப்பவன் நீ! விழைந்து நீ நுகருவதெல் லாம் கொணரும் ஏழைப் பொறிகள்நாங்கள்! எந்தைநீ, எல்லா உயிரின் மூச்சு நீ!

உலகங்கள் யாவும், இன்னும் மூன்றும் உலகமாகிய மிக மிகப் புனிதமான வானுலகும் நினது சக்தியில்தான் நிலைபெற்றிருக்கின் றன. உயிரே! ஒரு தாய் தன் மக்களைக் காப்பதைப் போல, எம்மைக் காத்தருளும். மகிமையும் தூய அறிவும், எமக்குத் தந்தருளும்.

அய்யா துணை

பகவான் வைகுண்டர் அருள் நூல்

தொகுத்தவர்:

ஜோதி N.V செல்வராசு. சென்னை-23.

தமிழக மக்கள் இறைநிலையில் ''அய்யா'' என அழைக்கப்பட்டு வணங்கப் பெறும் வைகுண்டரால் (1809 - 1861) இயற்றப்பட்டது, அகிலத் திரட்டு அம்மானையும், அருள் நூலுமாகும். ''முத்து குட்டி'' என்ற இயற்பெயர் கொண்ட வைகுண்டர் பூவண்டன் தோப்பு (சாமி தோப்பு) என்னும் சிற்றூரில் பொன்னுமாடன் வெயிலான் என்ற நாடார் இனத்தம்பதியார்க்கு இரண்டாம் மகவாகப் பிறந்தார். கொல்லம் வருடம் 1008 மாசி மாதம் 19ந்தேதி திருச்செந்தூரில் கடலில் சென்று விஞ்சை பெற்றதை அடுத்து திருமாலின் அவதாரமான 'வைகுண்டர்', மக்கள் திருமாலின் திருவடியினை அடையும் வண்ணம் தன் தவத்தின்கண் அடைந்த பேரின்பத்தைத் தம் சீடர்களுக்கு மேற்படி நூலின்மூலம் அருள் பாலித்ததைச் - சிலபாக்களை - தொகுத்து அருளப் பட்டுள்ளது.

சாட்டு நீட்டோலை

சூரியன் திசைமாறி கலியுகம் முடியவோர்
　　சொற்பன வித்தேசம் சொல்வேன் சிவனே அய்யா
கலியை அழிப்பதற்குக் கண்ணில் வித்தேசம் கண்ட
　　காரணம் சொல்லலுற்றேன் சிவனே அய்யா
பெட்டகத்து விளக்கு தட்டுப் பட்டெண்ணை சிந்திப்
　　போகவும் கண்டனையோ சிவனே அய்யா
பாம்பைத் கடிக்க வந்த கீரியை சீறிமாறி
　　பாம்பெட்டிக் கொத்தக் கண்டேன் சிவனே அய்யா.

பூனைபோய் யானையுடன்போர் பொருதி முன்காலால்
　　பொத்தி யெடுக்கக் கண்டேன் சிவனே அய்யா
பச்சைப் பாம்பைக் கண்டவுடன் மயில்களெல்லாம்
　　பதுங்கிக் கிடக்கக் கண்டேன் சிவனே அய்யா
ஆலா கருடனையும் சிட்டு வோடிப் பறந்து
　　அடித்து எடுக்கக் கண்டேன் சிவனே அய்யா
மயில் கண்டாபோலே பச்சோந்திகளெல்லாம்
　　மயங்கி கிடக்கக் கண்டேன் சிவனே அய்யா.

ஆடுபோய் மாடுடனே அலறவே மாக்கு போட்டு
　　அதுவும் போர் செய்யக் கண்டேன் சிவனே அய்யா

பச்சைப் பிள்ளையை வொக்கரையி லெடுக்க
பாம்பாய் நெளியக் கண்டேன் சிவனே அய்யா
கடலெல்லாம் குளமாக குளமெல்லாம் கடலாக
கண்ணுக்குத் தோன்றக் கண்டேன் சிவனே அய்யா
ஊசி முனையதிலே கடலும் மலையுடனே
ஊரும் பதியுங் கண்டேன் சிவனே அய்யா.

புலியை எலிபிடித்துக் கலியில் பொசிப்பதற்கு
போதமும் கண்டேனையா சிவனே அய்யா
முள்ளு முனையதிலே குளம்வெட்டி வயலும் பாய்ச்சி
முன்மடை பாயக் கண்டேன் சிவனே அய்யா
உப்பு விளைந்துவரும் நஞ்சை நிலங்களெல்லாம்
உபரு வழிக்கக் கண்டேன் சிவனே அய்யா
சட்டிக் காய்க்கு கொம்பு முளைத்துக் கோழியுடன் போர்
பொருதக் கண்டேனையா சிவனே அய்யா.

நாடுதனில் திரிந்து வயல் காக்கும் நாயை
நரிவந்து கடிக்கக் கண்டேன் சிவனே அய்யா
சாவல் கோழியல்லோ கூவுமென்று சொல்வார்கள்
பேட்டை தானுமே கூவக் கண்டேன் சிவனே அய்யா
உண்ட மயக்கத்திலே உறங்கப்போன
உயிரோடிப் போகக் கண்டேன் சிவனே அய்யா
முனிப்பெற்ற பிள்ளையைச் சுண்டெலி தானும் கண்டு
முடுக்கிக் கடிக்கக் கண்டேன் சிவனே அய்யா.

ஒரு மாதத்துக்குள் பிள்ளை தரித்துப் பிறந்து
உருமாலும் கட்டக் கண்டேன் சிவனே அய்யா
இரண்டுதலை மூன்றுக் கண்ணுமாகப் பிள்ளை
தரித்துப் பிறக்கக் கண்டேன் சிவனே அய்யா
கோழிக் குஞ்சுகளெல்லாம் கூட்டை விட்டெழும்புமுன்
கொம்பு முளைக்கக் கண்டேன் சிவனே அய்யா
பசுவும் கன்றும் போகக் கடுவா யதைக் கண்டு
பதுங்கிக் கிடக்கக் கண்டேன் சிவனே அய்யா.

சடைநாய் முழுத் தேங்காயைக் கவ்விக் கொண்டுபோய்
தகர்த்துமே தின்னக் கண்டேன் சிவனே அய்யா
நரியன்மார் கூடி யிரையெடுக்கப் போக
நண்டு விரட்டக் கண்டேன் சிவனே அய்யா

விட்டெலி கூடியே பூனை தனைப்பிடித்து
விருந்து அருந்தக் கண்டேன் சிவனே அய்யா
இப்படி தான் கண்ட சொப்பன வித்தேசங்கள்
இந்தக் கலியழிக்க சிவனே அய்யா.

பத்திரம்

அய்யா சீசருக்குச் சொன்னது

தர்ம சீசர் தன் கையிலே தான் கொடுத்து வா மகனே
நாம் காப்பிட்ட கையைக் கடுகச் சொல்லும் பேர்களுக்கு
நாம் கூப்பிட்டுக் கேட்டு குற்றம் தெளிவிப்பேன் மகனே.

பெற்றவருக்குக் கிட்டிக் கொள்ளும் பேதமில்லை மகனே
பக்தியுள்ள மக்களுக்கும் புத்தியுள்ள மக்களுக்கும்
பயங்கள் தெளிய வைப்பேன் பதறாதே என் மகனே
முட்டப் பதி தீர்த்தம் முழு தீர்த்தம் ஆகவில்லை
கிட்டவரும் நாளையிலே கிட்டும் அதிகப்படி என் மகனே
வட்ட வட்ட சாலையிலே வழுகாமல் நீ யிருக்க
நாம் இட்டபடி சட்டமெல்லாம் கூடிவரும் என்மகனே.

அத்திபுரந்தனிலே ஐபேருந் தானிருந்தார்
புத்தியுள்ள குரு நாட்டில் பிறந்து வந்தேன் என்மகனே
பத்தி மறவாமல் பதறாமல் நீ யிருந்தால்
புத்தி சொல்ல நான் வருவேன் புலம்புவேன் என்மகனே
கர்த்தாவை நோக்கிக் கடுந்தவங்கள் நாம் செய்தால்
புத்திவரும் திருப்தி வரும் புலம்புவேன் என்மகனே
பேதகமில்லையென்று பேசிடு நீ என்மகனே.

பள்ளியறை தாள்திறந்து பதியேறும் நாளையிலே
உள்ளபடி சொல்லுதற்கு உகந்துவாறேன் என்மகனே
கவிழ்ந்திருந்து மாமுனியும் அதிசயத்தைக் கண்டிருந்து
நிமிர்ந்து அவர் காரணங்கள் செப்புவார் என் மகனே
உள்ளபடி நாமிந்த உபதேசம் சொன்னாலும்
நல்லதென்று சொல்லியவர் நன்மை கொள்ளார் என் மகனே
உன்னருள் தான் என்று சொல்லி உகந்திடாதே என்மகனே.

என்றும்

அழிவுகள் விப்ரம்: பெருங்காற்றினால் அழிவு, வெள்ளத்தால் அழிவு, பூமி அதிரும் ஓசையினால் ஒரு பெருமூச்சு உண்டாகும். இப்படி பற்பல தீர்ப்பு கேட்க நாராயணம் நாவில் வகுத்து சொன்னோம்.

அருளாக ஏகம் அகண்ட பரிபூரணமாய் வரையாகி, திரையாகி, வான்புவி லோகமுமாய், ஒளியாகி, வளியாகி உயிருக்கிணையான திரு வுருவாய், ஓர் உயிராய், தேசத்தில் பல வேசமுமாய், ஒன்றாக, இரண் டாகி உலகமெங்கும் நானாகி, இந்த யுகமெல்லாம் கருவுருவாய், ஓர் உருவாய் கருணாக் கடலானேன்.

உனை மனைந்து பலமாய் கையினால் உனை வகுத்தேன்.
உந்தன் பலங்குலைக்க உலகில் பெண்ணை வகுத்து விட்டேன்.
உண்டாக்கி வைப்பதும்நான். உலகில் அழிப்பதும் நான் மகனே
ஏகமாய் நிறைந்த பரன் இருந்துலகை ஆளுகிறார்.
கண்ணு மக்காள் என் சூத்திரத்தைக் கண்டறிந்து பாருங்கப்பா.
என் பெருமை எங்கும் அறிவாரில்லை.

மண்டலத்துப் பெண் மாய்கையாக மாலவனும் நானானேன்
ஆலிலைமேல் பள்ளி கொண்ட அருமை சற்றே சொல்வாரில்லை.
அண்டமெல்லாம் பிண்டமதாய் ஐந்தறைக்குள் அடக்கி விட்டேன்
கடலை அடைந்ததினால் உங்கள் கண் மயங்க லாச்சுதப்பா
நான் எந்நாளும் பள்ளி கொண்டிருப்பதை நீ யறியவில்லை.

அமிர்தமது தான் கடைந்த அதிசயத்தை சொல்மகனே
ஆயர்பாடி ஊர்தனிலே ஆயருடன் பட்டினத்தில்
என்னை அறியாமல் ஏதும் வகை உலகிலில்லை
தன்னை யறிந்து கண்டால் தலைவனை நீ யறிவாய்
கண்ணால் மனதுக் கண்ணாலே காணுமப்பா வழியது தான்
என்னை யறிந்தவர்க்கு ஈசன் மொழி சொல்லுகிறேன்
உங்களுக்கு மண்ணில் மூவாசையது மாற்றினாய் இருக்குதடா.

என்னைக் கண்ணாலே கண்டதுண்டால் கலிதீரும் என்மகனே
வட்டகோட்டை கட்டுக்குள்ளே நட்டுவனார் கொட்டுகிறார்
சொன்னேனென்று எண்ணாதே என் சொருப மறி வாயோ
சூத்திரக்கணக்கொன்று சொல்கிறேன் கேள் மகனே
பஞ்சவர்ணக் கிளியொன்று பறந்து போகக் கண்டேனடா
முப்பூவை தானெடுத்து முக்தி செய்தால் சக்தி யுண்டு
குருபுத்தி யார்க்கு சொல்வேன் உள்ளதை நீ கேள் மகனே.

அப்பூவை தானெடுத்து அணிந்திடுங்கோ கண்ணுமக்காள்
கருவூர் தனிலிருந்து கனவருத்தப்பட்டு வந்தேன்
பாலன் சிறுகுழந்தை வந்த பாதை யறிவீர்கள்
உங்களுக்கு வேலை செய்ய உலகில் வந்தேன் கண்ணாக

இருமனதாய் எண்ணாதே உத்திரம் நீ சொல்வாயோ
மருந்து வாழ் மாமுனிவன் மாயா சாலக்காரன்
நாடெல்லாம் பாடியாச்சே நாதனென்ன செய்வேனப்பா.

கடலதிலே தர்மஞ் செய்து கர்மவினை தீர்த்திடுங்கோ
கடலுக்குள் ஒரு பார்ப்பான் பல கர்மம் நடத்துகிறான்
வையகத்தில் கைலாசம் காவாளி ஒன்பது பேர்
கைலைமலை தனைக் கண்டு ஒரு தவசிருந்து வாடுகிறார்
தவத்தினுடன் அதிசயத்தை உங்களப்பன் சொல்லுகிறேன்
ஓடியோடிப் பார்த்தாலும் ஒருவனுக்கும் தெரியாது
காயாம்பு மேனியனார் கண்ணில் அது காணுமடா.

நம்முடைய சித்துவித்தை காணக்காண மூன்றானேன்
மாயனவன் கள்வன் குடி கொண்டால் உள்ளறிவான்
மாசி, வாசி யென்றும் மாமுனியான் சொல்லுகின்றேன்
ஒன்றுக்கொன்று பகையாச்சே உங்களுண்மை பகையானால்
விண்ணூரில் ஒருவனுண்டு பல வேடிக்கைக் காரனடா
நாட்டு முடியிறக்கி வைகுண்டர் ஆள வருகிறார்
நம்பிப் பிடித்திடுங்கோ அய்யா, சிவ சிவ அரகரா.

சிவகாண்ட
அதிகாரப் பத்திரம்.
முற்றிற்று.

நடுத்தீர்வை

பூமிதனில் நாராயணர்தன் புதுத்தீர்வை கேட்கிற நாள்
நேசமுடன் சீசருக்கு சொன்னகுறி நேசமுடன்
நடக்கும் குறிகள் தன்னை நான் சொல்லுகிறேன்
பஞ்சம் வரும் செழிக்கும் பாவத்தால் பகையாம்
வஞ்சப் பெருங்காற்றால் வையகத்தில் சஞ்சலநோய்
நாடு பிழையாது நற்காலம் போய் ஒழிக்கும்
கேடு செழித்துலகம் கெட்டுவரும் நாடுதனில்

மழை தழைத்து பொய்யாமல் வானம் சுருங்கி வரும்
களைகள் செழித்துவரப் பயிர் விளையாது
வெள்ளத்தால் நாசம் வரும், வெஞ்சா வியாகி விடும்
பள்ளத்தால் நெற்பயிர்கள் அழுகி நடுங்கும்
சனங்களுற்ற பட்டணங்களைப் பசி நோய் வாட்டும்

நாய் போல் சினந்திடுவார் ஊனக் கொலை புரிவார்
ஓயாமல் தினந்தீய திருட்டுப் பெருத்து வரும்.

பூமிதனில் போர் பகையாம் கூரான்மை அறிவு
இரக்கமாய் அண்ணனுடன் தங்கை முறைமை
தப்பிச் செல்வார் முழுதுமே தரணி தனிலே
தாயும் மகனும் சரச மிகப் பெருக்கி ஞாய வழிபாராமல்
புத்தியே நேசமுடன் சிற்றின்பம் செய்திடுவார்
முன்னாலே பெண் ரூபம் முக்கோணமாய் பிறக்கும்
பின்னாலே ஆண்பிள்ளை பிறந்து விடும்.

முன்னாலே ஆண்பிள்ளை பெண்பிள்ளை போலிருக்கும்
அறையின் கீழ்பிறக்கும் ஆண்பிள்ளை, மீசை
பெண்ணுக்கும் ஆகிவிடும் மட்டிகளாய் நஞ்சு தின்பர்
மூடிவரும் கோழி முட்டை ஒன்றிலே குஞ்சு இரண்டு
மூன்றுவரும் கோ என்று பெட்டை கூவி விடும்
கண்டதெல்லாம் தெய்வமெனக் கையெடுப்பார் சண்டாளர்
தேடி யடித்திடுவார் கொள்ளுவாள் கொண்டவனை

தாயை மகன் கொல்வான் கெட்டு விஷ நெஞ்சுடனே
மானிடர்க்கு காவலுருப் புண்ணியங் கசப்பாகும்
மேவரிய ஒருத்தனுடன் ஒன்பத்தெட்டு பேர்கள்
திருத்த மறவே திரிவார் பலர் பாரில்
மேலிருந்து மீனும் விழும் மழையிலே மேகமதாய்
மோசமாகி விடும் ஆகமதில் ஜனங்கள்
குன்றிவிடும் தாக்குப் பொறுக்காது
ஜனங்களுக்கு ஆயுள்தான் குறைவு - என்பதனை
மேற்பாக்களில் கூறியுள்ளார்

வைகுண்டராகிய, சாமிதோப்பு அய்யா அவர்களின் காலத்தில் சமுதாயத்தில் சமஸ்தான அரசர்களும், சமூகத்தில் ஒரு இனத்தாரும், மற்ற மக்களைத் தாழ்ந்தவர்களாக கருதி வந்தனர். மேலும் தாழ்த்தப் பட்டவர்கள் அணிகலன்கள் அணியும் உரிமையையும் மறுக்கப்பட்டுள்ளது. அய்யா அவர்கள் மனித சமுதாயத்தில் இது போன்ற கொடுமைகளைச் செயல்படுத்தும் அதிகாரவர்க்கத்தினரையும், சமூகத்தினரையும் வன்மையாகக் கண்டித்தார். மனித சமுதாயத்தில் சமதர்மக் கொள்கையினைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தினார்.

ஆன்மிகத்தில் அதாவது தெய்வ வழிப்பாட்டில் மக்கள், அறியாமையால் உருவவழிபாடு, பூசைகள், உயிர்ப் பலியிடுதல், ஆடம்பரமான

விழாக்கள் போன்ற தேவையற்ற செயல்களைக் களைந்து புதுமுறை காண மேற்படி நூல்களை எழுதினார்கள் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதனை எடுத்துரைத்தார்கள்.

கலியுகத்தில் இவ்வுலகம் அழியும் என்றும் அப்போது உலகுயிர்கள் எப்படியெல்லாம், நெறி தவறி, நீதி தவறி, ஒழுக்கம் கெட்டு அழியும் என்பதனை தாம் அறிந்த சொற்பன வித்தேசத்தினை 'நடு தீர்ப்பில்' உலக மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார். இதனை நாம் சிந்தித்தால் இந்நாட்களிலேயே அய்யா அவர்கள் கூறிய அற்புத அநீதிகளைக் காண்கிறோம் என்பதில் ஐயமில்லை.

ஆதலின் ஆறு அறிவினைப் பெற்ற மனிதர்களாகிய நாம் சாமி தோப்பு அய்யா அவர்கள் அருளைக்கூர்ந்து கவனிப்போமானால் இறைவன் ஒருவன்;அவன், ஜோதியாகவும், ஜீவர்களின் உள்ளத்திலே ஒளிர்கின்றான் என்பது புலனாகும். நாம் புறத்தே கண்ட கோயில் தெய்வம் என்று கையெடுப்பது அறியாமை என்பதனைக் கூறியுள்ளார். அன்பர்கள் அய்யா அவர்களின் அருளாசியினைப் பெற்று ஒளி வழிதொடர அய்யா அவர்களின் நூல்களிலிருந்து சிலவற்றினைத் தொகுத்து அளித்துள்ளேன். அன்பர்கள் கண்ணுற்று அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருளினைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.